162068

மாதர் மித்திரி

1912 - 13

1

# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௧௨ ௵ - ஜூலை மீ. இல. ௧

26 1912-13

## DIVINE ATTRIBUTES.

இராகம், போர்த்துகீஸ். திரிசுரதாளம்.

### பல்லவி.

வந்தனம், வந்தனமே! தேவ துந்துமி கொண்டிதமே—இது
வரையில் எமையே வளமாய்க் காத்த எமதுரையே மிகத் தந்தனம்.

1. சந்ததஞ்சந்ததமே எங்கள் தகு நன்றிக்கடையாளமே,—நாங்கள்
தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயை கூர், சுரர்பதியே.

2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுவே ;—எங்கள்
சாமி பணிவாய் நேமி துதி, புகழ் தந்தனமே நிதமே.

3. சருவ வல்லபமதும் எமைத் தாங்கினதும் பெரிதே :—
சத்ய சருவேசுரனே, கிருபாகரனேயுன் சருவத்துக்குந் துதியே !

4. உந்தன் சருவ ஞானமும் எங்களுள்ளிந்திரியம் யாவையும் பார்த்தல்—
ஒப்பேதருங்காவலே யுன்னருளுக்கோ தரும் புகழ், துதி, துதியே !

5. மாறாப் பூரணனே, எல்லா வருடங்களிலும் எத்தனை—உந்தன்
வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந் துதியே !

800 009.
162068

FLORENCE NIGHTINGALE.

## பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள்.

2-ம் அதிகாரம்.

### ஆரம்ப வருஷங்கள்.

நைற்றிங்கேல் அம்மாளுடைய ஸ்திதியில் இருக்கப்பட்ட வாலிப ஸ்திரீகள் சமுதாய வழக்கங்களில் பழக்கப்பட்டு பிரசித்தி அடையும்படியாக விசேஷ பயிற்சியடைவார்கள். இந்த அம்மாளும் அவ்விதமான கூட்டங்களில உறவாடி சந்துஷ்டி அடையும்படி பயிற்றப்பட்ட போதிலும் அது தனக்கு பிரியமாயிருக்கவில்லை. சிறிதுநேரம் அவர்களோடு கூடியிருப்பது உசிதமென்று தனக்கு தோன்றியமட்டும் சந்துஷ்டி அடைந்த பின்பு அவர்களை விட்டு பிரிந்து அந்த தோழிகளுடைய நடபடிக்கைக்கு முற்றும் வித்தியாசமான வழிகளில் பிரவேசித்து அதிலே ஊக்கமாயிருப்பாள்.

அவளுடைய குடும்பத்தார் யதார்த்தமாக விரோதங் காண்பிக்காதிருந்தபோதிலும் தான் தெரிந்துகொண்ட பிரயத்தனத்திற்கு சற்றாகிலும் தைரியம் காண்பித்ததில்லை. அவள் தெரிந்துகொண்ட பாதை புதிதும் இதற்கு முன் ஒருவராலும் பரீக்ஷிக்கப்படாததுமாயிருந்தபோதிலும் தனக்கு நலமென்று தோன்றின விஷயத்தில் விடாமுயற்சியாயிருந்ததைப் பார்க்கும்பொழுது, அவள் எவ்வளவு திடதைரிய குணமுள்ளவளென்று அறிந்துகொள்ளலாம்.

இந்த அம்மாள் தன் சொந்த குடும்பத்திலேயே தான் தெரிந்துகொண்ட வேலைக்கு முதல் முதல் பயிற்சி அடைந்தாள். தன் குடும்பத்திலுள்ள பலர் நெடுங்காலமாக மோசகரமான வியாதிக்குட்பட்டார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு சிகிற்சை செய்துவந்தபடியால் தான் எல்லாருக்கும் பிரீதிகரமாய் இருக்கிறதாக மாத்திரமல்ல, தான் தெரிந்துகொள்ளப்போகிற வேலைக்கு தான் தகுதியுள்ளவளென்றும் கண்டறிந்தாள்.

முதலாவதாக சிகிற்சா முறைமையில் எவ்வித வேலை நடந்திருக்கிறதென்றும், சிகிச்சை முறைமைக்கேற்ற ஒழுங்குகள் எத்தன்மையன என்றும் அறியப் பிரயாசப்பட்டாள். துவக்கத்தில் தன் வீட்டுக்கருகிலிருந்த வைத்திய சாலைகளை சந்தித்து அங்கே நடக்கும் வேலை ஒழுங்குகளைக் கற்றுக்கொண்டு, தன்னால் கூடிய மட்டும் அவைகளை அப்பியாசம் பண்ணினாள். அப்படி சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் கற்றுக்கொள்ளக் கூடியவைகளையெல்லாம் கற்றபின்பு, லண்டன் பட்டணத்திற்குப்போய் அங்கேயும் சிகிற்சை முறைமைகளை அப்பியாசம் பண்ணினாள். இதே நோக்கமாகவே, டப்லின், எடின்பரோ பட்டணங்களிலுள்ள வைத்தியசாலைகளையும் சந்தித்ததுண்டு.

இவைகளுக்குப் பின்பு ஐரோப்பா கண்டத்திலுள்ள அநேக பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வைத்திய சாலைகளையும் பார்க்கப் புறப்பட்டாள். இங்கிலாந்து தேசத்து ஆஸ்பத்திரிகளிலே காணப்பட்ட பற்பல குற்றங் குறைகளை லகுவில் கண்டு பிடித்தாள். அநேக வருஷங்களாக பற்பல குடும்பங்களில் வியாதியஸ்தரை வைத்து பராமரித்து வந்த அநேக குடும்பங்கள் இருந்தன. இங்கிலாந்து தேசத்திலோ அவ்வித குடும்பங்கள் காணப்படவில்லை. அது ஒரு குறைவு. ஊர் ஊராக அந்தம்மாள் சுற்றித்திரிந்து கூடியமட்டும் சகலத்தையும் கற்றறிந்து பிற்கால உபயோகத்திற்காக அவைகளைப்பற்றி குறிப்புகள் எழுதிவைத்துக்கொண்டு தன் சுயதேசந் திரும்பினாள். தான் வெகுநாள் செய்த கடும் பிரயாணத்தில் மிகவும் பெலவீனப்பட்டபடியால் தன் சுகத்தையும் பெலத்தையும் விர்த்தி பண்ணும்படியாக தன் சொந்த குடும்பத்தின் மத்தியில் சில காலம் தங்கியிருந்தாள்.



நல்ல குடும்பங்களில் பிறந்து, செம்மையாய் வளர்க்கப்பட்டு வியாதி சிகிற்சை முறைமையில் தக்கபயிற்சியடைந்த வைத்திய ஸ்திரீகள் மிகவும் அவசியமென்று பூராவாய் கண்டறிந்தபோதிலும் சட்டென்று அந்த வேலையை ஆரம்பித்து நடத்த தகுந்த சமயம் இன்னும் வரவில்லை. அநேக ஜனங்களுக்கு தங்கள் குமாரத்திகள் இவ்வித தொழிலில் பிரவேசிக்கிறதென்றால் மிகவும் இழிவாகக் காணப்படும். இப்பொழுதோ அவ்வித அபிப்பிராயங்களெல்லாம் மாறிப்போயிற்று. மிகவும் உயர்ந்த குடும்பத்து பிள்ளைகள்தாலும் இவ்விததொழில் தங்கள் அந்தஸ்துக்கு தாழ்வானதென்று எண்ணாமல் அநேகர் அந்த வேலையை சந்தோஷமாய் தெரிந்துகொள்ளுகிறார்கள். அக்காலத்தில் அது ஏற்றகாலமல்ல என்று அறிந்து நைற்றிங்கேல் அம்மாள் தன் சொந்த முன்மாதிரியினாலே தனக்கு அருமையாய்க் காணப்பட்ட இந்த சத்தியத்தை மற்றவர்களுக்கு விளங்கக் காண்பித்தாள்.

குண அழகைப்போலவே உருவத்திலும் நைற்றிங்கேல் அம்மாள் யாவராலும் விரும்பப்படத் தக்கவளாய் இருந்தாள். பிரகாசமான கண்களும், திட்ப நுட்பமாய் காரியாதிகளை கூர்ந்தறியும் புத்தியும், அமரிக்கையும் அடக்கமுமுள்ள நடபடிக்கையும், சுந்தர வடிவமுமுள்ளவளாயிருந்தாள். ஆகவே தன் மனதிற்கு அருமையாய்க் காணப்பட்ட இந்தத் தொழிலை, சமீபமான இடங்களில் செய்யத் துவக்கி, தன் தேசத்தவர்கள் நாளாவர்த்தியில் வியாதியஸ்தருக்கு உதவிசெய்வதில் போந்த அறிவடையும்படி உதவி புரியலாமென்று எண்ணினாள். ஆனால் தான் கொண்ட நோக்கத்தை முற்றுப்பெறச்செய்ய பிற்காலத்தில், எந்தெந்த நூதன வழிவகைகளை சூட்சித்து நடத்த நேரிடுமென்றும் முடிவில் தன்னுடைய பிரயத்தனம் இவ்வளவு முற்றாகக் கைகூடி வருமென்றும் அவள் சற்றாகிலும் நினைத்ததில்லை.

---

A CURIOUS RECORD.

## விநோத குறிப்பு சாதனம்.

அச்சிட்ட புஸ்தகங்களிலாவது, கையெழுத்து பிரதிகளிலாவது சாதனங்கள் எழுதிவைக்கிறதுண்டு. சில சமயங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு காலத்துக்கு காலம் வாய் விசேஷமாக தெரிவித்து வருகிற பாரம்பரை குறிப்புகளுமுண்டு.

புஸ்தகங்களிலும், வாய் விசேஷமாகவும் மனுஷர் எவராலும் எழுதப்பட்டிராத சரித்திரங்களும் உண்டு. அது பிரகிருதி இயற்கையால் அமைந்தது. சில வேளைகளில் அவைகள் பூமிக்குள் ஆழமாய் அமிழ்ந்திக்கிடக்கிற பாறைகளிலும் ஆகாயத்தில் ஓங்கிவளரும் மரங்களிலும் காணப்படுகிறது.

மரங்களினால் அறிவிக்கப்படுகிற சரித்திரசம்பந்தங்களை உற்றாராய்ந்து தேறின அமெரிக்கதுரை ஒருவர், ஒரு விநோதமான சரித்திரத்தை அறிவிக்கிறார். அவர்

ஒரு காட்டில் புகுந்து அங்குள்ள மரங்களை பரிசோதனை செய்தால் அந்த மரங்கள் எப்பொழுது நடப்பட்டனவென்றும், அந்த காட்டில் எக்காலத்தில் தீப்பற்றி எறிந்தது என்றும், அந்த மரங்கள் நெருப்பினால் வெந்து மறுபடியும் துளிர்க்கத் துடங்கி எத்தனை வருஷங்கள் ஆயினவென்றும் திட்டமாய் சொல்லக்கூடும்.

அவர் தமது வீட்டுக் கருகாமையிலிருந்த காட்டின் ஓரத்தில் நின்ற இரண்டு முதிர்ந்த தேவதாரு விருக்ஷங்களைக் குறித்து சில விசேஷங்களைத் தெரிவிக்கிறார். அவைகளை அவர் அடிக்கடி பார்த்தபொழுது அவைகளுக்கு என்ன வயதிருக்கலாம்? அவைகள் காட்டு நெருப்பில் அகப்பட்டு தப்பிப் பிழைத்தவைகளாய் இருக்குமா? என்று பலவாறு யோசனை பண்ணினார். ஒருநாள் அவைகளை சுற்றி நின்ற சில மரங்கள் காற்றினால் அடிப்பட்டு விழுந்துபோகவே அவைகளைக் கொண்டு தாம் கண்டுபிடிக்க கருதின சரித்திரங்களை திட்டமாய் அறிந்து கொண்டார். மரங்களை அவர் வெட்டி வீழ்த்தும்பொழுது, அவைகளிலிருக்கிற மோதிர வடிவமான விருத்தங்களை சூட்சமாய் கணக்கிடுகிறார்.: ஒப்புரவாய் வெட்டி சீவப்பட்ட மரங்களை நீ பார்த்தால், அவைகளிலே வெளிப்பக்கத்தில் பெரிதும், மையத்தில் போகப்போக சிறிது சிறிதுமாக காணப்படுகிற மோதிரவட்டங்களை நீ காணலாம். மரங்களில் ஒவ்வொரு வருஷமும அவ்விதமான ஒவ்வொரு வட்டமுண்டாகும். அவைகளைக் கொண்டு அந்த மரங்களின் வயதைக்கணித்து சொல்லுவார். சில மரக்கட்டைகளில் நெருப்பினால் வெந்த வடுக்களையும், பிற்காலத்தில் அவைகள் மறுபடியும் உயிர்த்து பட்டைகளாலும் நாருகளாலும் மூடப்பட்டிருப்பதையும் கண்டார். இந்த அக்கினி வடுக்கள் நூற்று இருபது வருஷங்களாக அப்படியே இருக்கிறதென்று அவைகளுக்குமேலாக வளர்ந்து கூடியிருந்த மோதிர வட்டங்களால் கணித்தார். அந்த மரங்களுக்கப்பால் வேறொருவகையான மரத்தைக்கண்டார். அது நெருப்புப் பிடித்து வெந்தபின்பு இரண்டு வருஷம்சென்று துளிர்விடும். ஆகையால் அந்த காட்டிலுள்ள மரங்களெல்லாம் நெருப்பினால் வெந்தழிந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பின்புதான் மறுபடியும் வளரத்துவக்கின என்று கணக்கிட்டார்.

அவர் ஒரு காட்டின் மண்வாசியையும் அவைகளில வளருகிற மரங்களின் இலக்ஷணங்களையும் ஆராய்ந்து பார்த்து அநேக நூறுவருஷங்களுக்கு முன்னே அந்த காடுகளிலுண்டான நெருப்பைக் குறித்தும், அதினால் அந்த காட்டில் எவ்வளவு தூரம் வெந்தழிந்தது எனபதைக் குறித்தும் திட்டமாய்ச் சொல்லுவார்.

ஐக்கிய மாகாணத்திலுள்ள காலிபோர்னியா நாட்டில் மிகவும் பிரமாண்டமான விருக்ஷங்களுள்ள காடுகள் இருக்கின்றன. அவைகளுக்கு சமானமானவைகளை உலகத்தில் வேறெங்கும் காண்பதரிது. அந்த மரங்கள் எல்லாம் செந்தேக்கு. சில வருஷங்களுக்கு முன்னே அவைகளில் ஒன்றைவெட்டி சாஸ்திரிகள் கூடி ஆராய்ச்சி செய்தார்கள். அந்தமரம் முன்னூறு அடி உயரமும் மிகபிரமாண்டமுமானது. அதிலுள்ள மோதிரவட்டங்களை கவனித்து எண்ணிப்பார்த்து அதின் வயது 2,171 வருஷம் என்று தீர்மானித்தார்கள். கிறிஸ்து பிறப்புக்கு 271 வருஷங்களுக்கு முன் அது முளைக்கத்துடங்கிற்று. ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்பு அது காட்டு



நெருப்பால் மிகுதியும் எரிந்துபோயிற்று. பட்டையும் வேரும் மறுபடியும் அதை மூடி நெருப்புக்காயம் முற்றும் நிவாரணமாக நூறுவருஷங்களுக்கு மேற்சென்றது. நெருப்பு சேதகுறிகளைக் கொண்டும், மரத்திலிருந்த மோதிரவட்டங்களைக்கொண்டும் இவ்வித தீர்மானங்கள் ஏற்பட்டன.

திட்டத்தட்ட பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு பின்பு இன்னொரு அக்கினி வாதை உண்டாகி காடு முழுவதையும் எரித்து இந்த ஆச்சரியமான மரத்தின் மேல் அடையாளமிட்டது. இந்த நெருப்பு வடு பூரணமாக மாறும் முன்னதிபாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இன்னொருதரம் நெருப்பு அந்த மரத்தை தாக்கி அதில் பன்னிரண்டடி நீளமுள்ள வடுவை உண்டாக்கிற்று. 1,900-ம் வருஷத்தில் அம்மரம் வெட்டி வீழ்த்தப்பட்டபோது, கடைசியான நெருப்புண்டாகி நூறு வருஷமானபோதிலும் அவ்வடுவிலே கொஞ்ச இடம் மாத்திரம் சுகமாகியிருந்தது.

இவ்விதமாக தேவன் தமது நடத்துதல்களை குறித்த சாதனங்களை எழுதிவைத்திருப்பதும், அந்த ரகசியங்களை ஆராய்ச்சி செய்து அறியும்படியான ஞானத்தை மனிதனுக்கு கொடுத்திருப்பதும் மிகுந்த ஆச்சரியமல்லவா?

## POTATOES.

## உருளைக்கிழங்கு.

ஏகதேசம் இந்தியாவின் எல்லா பாகங்களிலும், உலகத்திலுள்ள வேறு அநேக இடங்களிலும், உருளைக்கிழங்கு சாதாரணமான உணவுபொருள். ஆகையால் இதின் சரித்திரத்தைக் குறித்து சில வார்த்தைகள் சொல்வது யாவருக்கும் பிரீதியாயிருக்கலாம். அந்த சரித்திரம் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ளது.

உருளைக்கிழங்கு ஐரோப்பா கண்டத்திற்கு முதல் முதல் எப்பொழுது கொண்டுவரப்பட்டதென்று திட்டமாய் தெரியாது. பதினாறும் நூற்றாண்டின் பிற்பாதியில் வந்து சேர்ந்திருக்கலாம். 1565-ம் வருஷம், தேசாந்திர ஆராய்ச்சி செய்வோர் தென்னமெரிக்காவிலிருந்து ஐரோப்பா கண்டத்திற்கு அநேக பொருள்களை மாதிரிக்காகக் கொண்டுபோய் அங்கே ஜாக்கிரதையாய் வளர்த்து பயிராக்கினார்கள். அவ்விதமாக இந்த பிரயோஜனமான தின்பண்டமும் குணர்ந்த கோளத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த அற்பமான வேருள்ள இந்தசெடி உலகத்தில் இவ்வளவு விசேஷமான மகிமை அடையுமென்று ஒருவராவது அக்காலத்தில் முன்னறிந்துரைத்திருக்கக் கூடாது. ஐக்கிய மாகாணத்துக்கு சர். வால்றர் ராலீ என்றவர் போயிருந்தபொழுது அங்குள்ள நூதன குடியேற்ற நாடுகள் சிலவற்றில் பயிரிடப்பட்டுவந்த உருளைக்கிழங்குகளில் சிலவற்றை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து அயர்லாந்திலிருந்த தன் சிறியதகப்பனுக்கு கொஞ்சம் அனுப்பிவைத்தார். அவர் அதைத் தமது தோட்டத்தில் விளைவித்து அத்தீவு முழுவதும் பரவும்படி செய்தார். ஜனங்கள் தங்கள் பிழைப்புக்கு வெகுவாய் நம்பியிருந்த தானியதவசங்களுக்கு கருப்பு நேரிட்டபோது, இந்த பயங்கர பஞ்சத்தை நிவிர்த்திக்க இது அனுப்பப்பட்டது. இது மிகவும் செழித்தபடியால், இப்பொழுது அது தேசமெங்கும்முக்கிய உணவு பொருளாகிவிட்டது.

அமெரிக்கா கண்டத்தின் சில பாகங்களில் சிறிதுகாலம் உருளைக்கிழங்கு அவமதிப்பாய் எண்ணப்பட்டது. காரணம் யாதென்று தெரியாது. இதை எழுதுகிறவர் முதியோரிடத்தில் இதைப்பற்றி விசாரித்தபொழுது, அவர்கள் "ஒரு குடும்பத்தாருடைய சாப்பாட்டு வேளையில் அந்நியர் யாராவது வரும்படி நேரிட்டால் உடனே கிழங்குசட்டியை மறைத்துப்போடுவார்களாம், ஏனென்றால் அதை சாப்பிடுவது ஏழைமைத்தனமென்று இழிவாய் நினைப்பார்களாம்" என்று சொன்னார்கள்.

அப்படிப்பட்ட மதியினமெல்லாம் நீங்கி இப்பொழுது வெகு நாளாயிற்று. தற்காலத்தில் அநேக நாடுகளில் உருளைக்கிழங்கு அமோகமாக பயிரிடப்பட்டுவருகிறது. அதில் மிகுதியான பாகம் ஜர்மனி தேசத்தில் பயிராகிறது. உலகமெங்கும் பயிராகிற உருளைக்கிழங்குகளில் கால்வாசி ஜர்மனி தேசத்தில் மட்டும் விளைகிறது. எல்லா தேசங்களிலும் விளைவிக்கிற உருளைக்கிழங்கை கணக்கிட்டுப்பார்த்தால் 835 கோடி மணங்கு பாரமாகும்.

---

HOW PASTOR HSE SETTLED THE QUARREL.

## ஹிசி என்னும் போதகர் சண்டையை நிறுத்தின விதம்.

ஒரு காலத்தில் அபாயகரமான ஒரு கலகம் நேரிடப்போகிறதென்று கண்டு அதை அமர்த்தும்படியாக ஹிசி என்னும் போதகர் உடனே தானே புறப்பட்டு பண்டாலி நாட்டுக்கு வரவேண்டுமென்று தாபந்தமாய்க் கேட்டுக்கொள்ளப்பட்டார். வாடைக்காற்றும் புசலும் மழையும் அகோரமாயிருந்தபோதிலும் தடையின்றி அவர் உடனே புறப்பட்டார். உறைப்பான கம்பளி உடுப்புகளை போத்திக்கொண்டு காடுகள் மலைகளினூடே நடந்து தான் அமர்த்தப்போகிற கலகம் எவ்வளவு கடூரமானதோ? அது எவ்விதமாக முடியுமோ? தனக்கு ஏதேது மோசங்கள் நேரிடுமோ? என்று மனக்கலக்கமுள்ளவராய் நடந்துபோனார்.

சண்டைக்காரர் க்ஷாங் என்று பேருள்ள இரண்டு சகோதரர். அவர்களிருவரும் கிறிஸ்தவர்களுக்குத் தலைமையானவர்கள். அற்பமான விஷயத்திலிருந்து இந்த சண்டை ஆரம்பித்தது. மற்றவர்களில் அநேகரும் இதில் கைகலந்திருந்தார்கள். இந்த வாக்குவாதம் மும்முரமானபோது அயலாரும் சிநேகிதரும் இருபட்சத்திலும் கலந்தார்கள். ஊர் முழுவதும் ஏகோபித்து இதில் சம்மந்தப்பட்டார்கள். இந்த அலங்கோல காட்சியின் மத்தியில் இளைய சகோதரனாகிய க்ஷாங் என்பவன் கோபதீபனாகி பக்கத்தில் கிடந்த ஒரு கோடரியை எடுத்து தன் அண்ணனுடைய தலையின்மேல் எறிந்தான். அந்த ஆயுதம் கூர்மையும் பளுவுமுள்ளதாயிருந்தது. அந்த அடி இலக்கு பிசகாமல் நேராய்ப் படுமேயானால, நேரிடும் அபாயம் இலேசாய் இராதென்பதற்கு சந்தேகமில்லை. குறி பிசகிவிட்டதால் பக்கத்தில் இதை விசாரித்துக்கொண்டு நின்ற கோ என்ற இன்னொரு மனிதன்மேல் தாக்கி அவன் முழங்காலில் படுங்காயம் பட்டது.

அந்தசமயம் மிகுந்த ஆபத்து நிறைந்ததாயிருந்தது. கொன்றுபோடவேண்டுமென்பது அவன் கருத்து. அதிலும் குற்றவாளி தம்பி. அதினால் அவன் தப்பிதம் பதின் மடங்கு அதிகப்பட்டது. கோ என்ற அந்த மனிதனுக்கு சம்பவித்த



படுகாயத்தினிமித்தம் அவனுடைய உறவின் முறையாரெல்லாரும் ஏகோபித்து நின்றார்கள். சிறுநேரம் திகில்கொண்டு பேச்சுமூச்சற்று அமைதலாய் நின்ற கூட்டத்தார் மறுபடியும் வாக்குவாதம் செய்யத்தொடங்கி முன்னிலும் அதிக மும்முரமாய் கலகத்தை ஆரம்பித்தார்கள். சகோதரரை அமர்த்த ஒரு வழியும் இல்லாதிருந்தது. காயப்பட்டவனுடைய சிநேகிதர் வேண்டுமென்றே சண்டை மூட்டிக்கொண்டு நின்றார்கள். அப்பொழுதான் கிறிஸ்தவர்களில் சிலர் மிகவும் திகில் கொண்டவர்களாய், மேற்கு க்ஷாங் ஊருக்கு ஒருவனை தூதனுப்பி ஹிசி போதகர் வரவேண்டுமென்று வேண்டிக் கொள்ளப்பட்டார்.

ஹிசி போதகர் அங்குபோய் கலக காட்சியை பார்த்தபொழுது, தான் எண்ணியிருந்ததற்கும் மேலாக காரியங்கள் நடந்துவிட்டதென்று கண்டார். சகோதரர் இருவரும் சமாதானப்படமாட்டோமென்று சலஞ்சாதித்து நின்றார்கள். கோவுடைய சிநேகிதர் தங்கள் பட்சம் நியாயம் இருக்கிறதென்று கண்டு மிதமிஞ்சின அபராதம் காயப்பட்டவனுக்கு கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இவைகளெல்லாவற்றையும் விட அதிகமான மோசமென்னவென்றால் கிறிஸ்துவினுடைய நாமம் புறமதஸ்தர்களுக்கு முன்பாக வெளிப்படையாக அவமானப்படுத்தப்பட்டது. சாத்தான் ஜெயங்கொண்டான். இந்த கலகத்தினால் இன்னும் எவ்வளவு ஏராளமான தீமைகள் உண்டாகக்கூடுமோ என்று யாருக்கு தெரியும்?

எல்லாருடைய கண்களும் ஹிசிபோதகரை நோக்கின வண்ணமாய் இருந்தன. அவர் என்ன சொல்லப்போகிறாரோ? இந்த விஷயத்தை அவர் எப்படித் தீர்மானிப்பாரோ? என்று எண்ணமிட்டார்கள், எல்லாம் அவருடைய சாமர்த்தியத்தினாலும் திடதைரியத்தினாலுமே ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டியதாயிருந்தது. அவர் வாயிலிருந்து தப்பான வார்த்தை ஒன்று பிறந்துவிடுமேயானால் துபாக்கி மருந்திலே நெருப்புப்பொறி விழுந்தது போலிருக்கும். அவர் பயப்படுகிறாரென்றாவது, தைரியவீனமாயிருக்கிறாரென்றாவது விளங்குமேயானால், கலகம் முன்னிலும் அதிக கேடாய் முடியும். இவ்வித அபாயங்களெல்லாம் ஹிசிபோதகருக்கு நன்றாய் தெரிந்திருந்தது. பழைய பகைகளும், ஊர்க்கலகங்களும் மறுபடியும் உயிர்கொள்ளும். கோர்ட் வழக்கு தொடுத்து விடுவார்கள். கைக்கூலியினாலும் பலவந்தத்தினாலும் அநேகர் இருகட்சியிலும் சேர்ந்துகொள்ள நேரிடும். சீனாவிலே ஒன்றிலிருந்து இன்னொன்று உற்பத்தியாகி முடிவில்லாத சங்கிலித்தொடர்போல் தீமைகள் நேரிடும்.

இதற்கு மேற்பட்ட மோசமொன்றைக் குறித்து அவர் அதிகமாய்ப் பயப்பட்டார். ஜனங்களெல்லாரும் பிசாசுக்கு இடங்கொடுத்து விடுவார்கள். பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க, தனக்கு திராணியிருக்கமாட்டாது என்று நினைத்தார். ஆகவே, ஒருவரும் எதிர் பார்த்திராத ஒரு வேலை செய்தார். அவர் ஒரு வார்த்தையும் பேசாமல், அவர்களை விட்டு பிரிந்துபோனார். அவர்களைக் குற்றப்படுத்துவதோ கடிந்துகொள்ளுவதோ அபலமாய்ப்போகும். அவர்கள் மனசாட்சியைத் தொடத்தக்க எந்த நியாயம் சொன்னபோதிலும் அவர்கள் உள்ளத்தில் அப்பொழுது ஏறாது. அவர் பசியாகவும் இளைப்படைந்தவராகவும் இருந்தபோதிலும், தான் தனித்து ஜெபம் பண்ணக்கூடிய ஒரு இடத்தைத் தேடிப் போனார்.

(இன்னும் வரும்).

## CIGARETTES AND THE BLOOD.
## சிகரட்டும் இரத்தமும்.

"நீ நாளொன்றுக்கு முப்பது சிகரட் உபயோகிக்கிறாய்போலும்" "ஆம் சராசரிக்கு முப்பது இருக்கும்" "உன்னுடைய தேகம் வரவர மெலிந்துபோவதற்கு அதுதான் காரணமென்று நீ எப்போதாவது நினைத்ததில்லையா?" "ஒருக்காலுமில்லை. என்னுடைய வேலையின் கஷ்டந்தான் காரணமென்று நினைக்கிறேன்."

வைத்தியர் அப்பொழுது தன் தலையை அசைத்துக்கொண்டு வெறுப்புள்ள புன்சிரிப்போடே ஒரு கண்ணாடி ஜாடியிலிருந்து ஒரு நீரட்டையை எடுத்துக்கொண்டு, "நான் உனக்கு ஒரு விஷயத்தை ரூபித்துக் காண்பிக்கப் போகிறேன். உன்கையிலிருக்கும் சட்டையை நீக்கி வெறுங்கையைக் காண்பி" என்று சொன்னார்.

சிகரட் உபயோகிப்பவன் அப்படியே செய்து தன்கையைக் காண்பிக்க மற்றவர் மெலிந்திருந்த ஒரு கறுப்பு அட்டையை அவன் கையிலே விட்டார். அது உடனே இரத்தம் குடிக்கத் துவக்கி அதின் தேகம் உப்பிப்போயிற்று. சிறிது நேரத்திற்குள்ளாக அதற்கு ஒருவகை வலிப்புப்போல் கண்டு, செத்து தரையிலே விழுந்தது.

"உன்னுடைய இரத்தம் இந்த ஆபத்தை அட்டைக்கு வருத்திற்று" என்று சொல்லிக்கொண்டே, அந்த செத்த அட்டையை தன் இரண்டு விரல்களாலும் தூக்கிப்பிடித்து "இதைப்பார், உயிர் முழுவதும் அற்றுப்போயிற்று. உன்னுடைய இரத்தத்திலிருந்து அதற்கு விஷமேறி விட்டது" என்று வைத்தியர் சொன்னார்.

"அது முன்னதாகவே வியாதி பிடித்த அட்டை, அதினால் தான் அது செத்துப் போயிற்று என்று நினைக்கிறேன்" என்று அவன் சொன்னான்.

"வியாதி பிடித்ததென்று சொல்லுகிறாய்? இன்னும் சோதித்துப் பார்க்கலாம்" என்று வைத்தியர் சொல்லிக்கொண்டு வேறு இரண்டு அட்டைகளை பிடித்து அவனது மெலிந்த கரத்தின் மேல் விட்டார். அப்பொழுது மற்றவன் "இவைகள் இரண்டும் சாகுமேயானால், நான் இனிமேல் சிகரட் உபயோகிக்க மாட்டேன் என்று சத்தியம் பண்ணுவேன், அல்லது நாளொன்றுக்கு முப்பது சிகரட் பிடிக்காமல் பத்து சிகரட் மட்டும் பிடிப்பதாக வாக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

அவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, சின்ன அட்டை விறைத்துக்கொண்டு செத்து அவன் கால்மேல் விழுந்தது. ஒரு நிமிஷத்திற்கு பின் பெரிய அட்டையும் அப்படியே அதின் பக்கத்தில் விழுந்தது. உடனே அந்த வாலிபன், "இது மகாபயங்கரமானது. நான் இந்த அட்டைகளுக்கு மிகப் பெரிய கொள்ளை நோயாயிருக்கிறேன்" என்று பிரமிப்போடு சொன்னான்.

வைத்தியர் அப்பொழுது, "சிகரட் புகை உபயோகிக்கிற எல்லா மனிதருடைய இரத்தத்திலும் வியாபித்திருக்கிற ஓர்வகை நச்சு எண்ணைதான் இதற்குக் காரணம்" என்றார்.

அதற்கு அந்த வாலிபன் "நீர் சொல்லுவது நிசந்தான் என்று இப்பொழுது கிட்டத்தட்ட முழுவதும் நம்புகிறேன்" என்று செத்த அட்டைகளை உருக்கத்தோடு பார்த்துக்கொண்டு சொன்னான்.



## A ZENANA VISIT.
## அந்தர்புர சந்திப்பு.

"நான் உள்ளே வரலாமா?"

"யார் அது?"

"வேத போதகியாகிய, சுபாலா."

"நல்லது, உள்ளே வரலாம்."

வீட்டுக்குள்ளிருப்பதொன்றும், வெளியிலுள்ளவர்களுக்கு தெரியாதிருக்கும்படி, மறைவுக்காகப் போட்டிருந்த தடித்த திரைச் சீலையை ஒரு பக்கமாய் ஒதுக்கிக்கொண்டு சுபாலா உட்பிரவேசித்தாள். கதவு தாழ்வாயிருந்த போதிலும் சுபாலா குள்ளமாயிருந்தபடியால் துரைசானியம்மாள் வரும்போது, தலையைத்தாழ்த்திக்கொண்டுபோவதுபோல் இவள் குனிந்து போக அவசியமில்லாதிருந்தது.

அவள் உட்பிரவேசித்த வீடு மூன்று பக்கம் தாழ்வாரமும், நாலாவது பக்கத்தில் சமையலறையுமுள்ள ஒரு சிறு வெளி முற்றம். அந்த சமையலறையில் ஒருத்தி உட்கார்ந்து சமைத்துக்கொண்டு, சுபாலாவுக்குக் கண் மறைவாயிருந்தாள். ஒரு தாழ்வாரத்தில், வேறு இரண்டு வாலிப ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள். சுபாலா உட்காரும்படி அவளுக்கு ஒரு பாயை விரித்துப்போட்டார்கள்.

அவள் உட்கார்ந்தபொழுது, சமையலறையிலிருந்தவள் அவளைக் கூப்பிட்டு, "நீ உன்பாடத்தை நடத்து," நான் உட்கார்ந்த இடத்திலேயே இருந்து கேட்கக்கூடும் என்றாள்.

சுபாலா, மற்ற இரண்டு ஸ்திரீகளோடும் பேசத்துவக்கி, "கிரோடா என்ற குழந்தை இப்பொழுது எப்படியிருக்கிறது? நான் முந்தின தடவை வந்தபொழுது காய்ச்சலாய்ப் படுத்திருந்ததே," என்று கேட்டாள். குழந்தையின் தாய் இப்பொழுது அது சுகமாயிருக்கிறது என்று சொன்னாள். சுபாலா அவர்களுக்கு சிநேகிதியாயிருந்தபடியால அவர்களுடைய இன்பதுன்பங்களைக் குறித்து அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால், அவர்களைக் குறித்து வேறு சில விஷயங்களையும் பேசிமுடித்தாள்.

சிறிதுநேரம் சென்று அந்த நாளுக்குரிய பாடங்களைத் துவக்கினாள். முதலில் தன்கையில் பிடித்திருந்த வேதாகமத்திலிருந்து சில வசனங்களை வாசித்தாள். அவள் வாசித்த வசனம் "இயேசு அவனை நோக்கி, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்பதே. அவள் அவர்களை நோக்கி "அநேக தீர்க்கதரிகளிலும், உபாத்தியாயர்களிலும் 'நானே வழி' என்று சொல்லக்கூடிய ஒருவர் ஒரு காலத்திலும் காணப்படவில்லை" என்று விஸ்தரிக்கத் துவக்கினாள்.

தோறு என்னும் பெயருள்ள வாலிபப் பெண்களில் ஒருத்தி, ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று தடுத்தாள். சுபாலா, அந்த ஸ்திரீகள் கேள்வி கேட்கும் வழக்கத்தை உற்சாகப்படுத்தி தைரிய மூட்டி வந்தாள். ஏனென்றால், கேட்போருடைய மனதின் அபிப்பிராயத்தை அவள் அறிந்துகொண்டு அவர்களுக்கு தகுந்த விடையளிக்க அது அநுகூலமாயிருந்தது.

"ஒரு மனுஷன் எப்படி வழியாயிருக்கக்கூடும்? அதற்கு அர்த்தம் என்னவாயிருக்கலாம்?" என்று தோறு கேட்டாள். அதற்கு சுபாலா மறுமொழியாக: "நீ ஒரு வழிப்பிரயாணம் போனால், பாதையில்லாத திசைநோக்கிப் போகமாட்டாய். நீ போகும்வழி ஏதோ ஒரு இடத்திற்கு உன்னை நடத்திக்கொண்டு போகிறது.

அந்த வழியில்லாவிட்டால், நீ குறித்த இடம்போக தடையாயிருக்கும். நீ ஒரு அரசனைக் கண்டு பேச விரும்புவாயேயானால், உத்தியோக விஷயமாய் சம்பந்தப்பட்ட தகுதியுள்ள ஒரு மனுஷன் மூலமாயன்றி வேறுவகையாய் பிரயத்தனிக்க மாட்டாய். அப்படிப்பட்ட மனிதன் உனக்கு வழியாயிருப்பான். அப்படியே இயேசுவும் 'நான் வழியாயிருக்கிறேன்' என்று சொல்லுகிறார். அவர் மூலமாயன்றி பிதாவாகிய தேவனிடத்தில் ஒருவனும் போகமுடியாது. அவர் இந்த பூமிக்குவந்து மற்ற மனிதர் ஜீவிப்பது போலவே ஜீவித்து, மற்றவர்களைப்போலவே பாடனுபவித்து, அவர்களைப்போலவே சோதிக்கவும் பட்டார். அப்படியிருந்தும் அவர் பாவமில்லாதிருந்தார். நம்மைப்போலவே அவர் பாடனுபவித்தவராய் இருக்கிறபடியால் நம்முடைய பாடுகளைக்குறித்து அவர் பரிதாபப்பட்டு, நம்முடைய பெலவீனங்களில் உதவி செய்ய அறிந்தவராய் இருக்கிறார். நாம் மரித்தபின் உயிரோடெழுந்திருக்கும்படியாக அவர் மரித்து மறுபடியும் உயிரோடெழுந்திருந்தார். அவர் மரணத்தை ஜெயங்கொண்டபடியால் பிதாவின் வலது பாரிசத்தில் உயிரோடிருந்து, நமக்காக எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நானே வழியாயிருக்கிறேன் என்று அவர் சொன்னதின் தாற்பரியம் இதுதான்" என்று சொன்னாள்.

அப்பொழுது தோறு "சரிதான், இப்பொழுது அது மிகவும் தெளிவாய் விளங்குகிறது. இன்னும் ஒரு கேள்வி கேட்க நான் ஆசையாயிருக்கிறேன். இப்பொழுது சமையமாகிவிட்டபடியால் நீ அடுத்த முறை வரும்பொழுது கேட்பேன்," என்றாள்.

அப்பொழுது சுபாலா, "சரிதான், இப்பொழுது நேரமாகிவிட்டது, உன் கேள்வியைக் குறித்து அடுத்த வாரம் யோசித்துப் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது சலாம், நான் போய்வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டுப் போனாள்.

---

## NEWS AND NOTES.

## சமாச்சார திரட்டுகள்.

டய்டானிக் கப்பல் சேதம் :—அட்லான்டிக் சமுத்திரத்திலே நியுபவுன்ட்லான்டுக்கு சற்று தூரத்தில் கடந்த எப்பிரல் மாதம் 14-ம் தேதி மகா பயங்கரமான ஒருவிபத்து நடந்தது. ஒரே பரிமாணமுள்ளதாக செய்யப்பட்ட இரண்டு புது கப்பல்கள் முதல் தடவையாக கடல் பிரயாணம் செய்ய ஆரம்பித்தது. அவைகளில் ஒன்று அமெரிக்கா கண்டத்தை நோக்கிச் சென்றது. உலகத்திலுள்ள கப்பல்களிலெல்லாம் இவைகள் மிகவும் பிரமாண்டமானவைகளானபடியால் சகலரும் இதை மிகுந்த ஆச்சரியத்துடன் கவனித்தார்கள். ஞாயிற்றுகிழமை இரவு கால் மைல் தூரத்துக்கப்பால் உறைந்த ஜலக்கட்டி காணப்பட்டு சிறிது நேரத்துக்குள்ளாக கப்பலில் மோதிற்று. அந்த ஜலக்கட்டி மிகுந்த விஸ்தாரமும் கனதியுமுள்ளதாக இருந்தது. அந்த கப்பலில் 2,358 ஜனங்கள் பிரயாணிகளும் கப்பலாட்களுமாக ஏறி இருந்தார்கள். இவர்களில் 745 பேர் மாத்திரம் உயிர் தப்பி பிழைத்தார்கள். அப்படி தப்பினவர்கள் பெரும்பாலும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் தான். அநேக புருஷன்மார் கப்பல் சேதத்தில் அமிழ்ந்து போனபடியால் அநேக ஸ்திரீகள் விதவைகளானார்கள்.



கம்பியில்லாதந்தி (Wireless Telegraphy) யால் மற்ற கப்பல்களுக்கு சமாச்சாரம் தெரிவிக்கு முன்னதியாக இந்தகப்பல் சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்ந்துபோயிற்று. சேதமடைந்தவர்களில் பிரக்கியாதியான பேர்போன மனிதர் பலரும் இருந்தார்கள். அவர்களெல்லாரும் கப்பலோடு சமுத்திரத்தின் ஆழத்தில் புகுந்தார்கள். அவர்களில் (Review of Reviews) பத்திராதிபராகிய W. S. Stead ஒருவர். ஆள் நஷ்டத்தோடு திரளான சாமான்களும் சேதமடைந்தது. விலையேறப்பெற்ற அநேக ரத்தினங்களும் நஷ்டமாயிற்று. அந்தகப்பலின் நீளம் 882 அடி. அப்படி ஆறு கப்பல்களை ஒன்றின் பின் ஒன்றாய் நிறுத்தினால் ஒரு மைல் நீளத்துக்கு அதிகமாயிருக்கும். உயிர்தப்பி பிழைத்தவர்கள், கப்பலாட்களை குறித்து அவர்களெல்லாரும் கடைசி முடிவு பரியந்தம் தங்கள் ஸ்தானங்களில் மிகுந்த தைரியமாய் நின்று தங்கள் கடமைகளை நிறைவேற்றினார்கள் என்று சொல்கிறார்கள். கப்பல் தளகர்த்தன் இனிமேல் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லுமட்டும் அவர்கள் ஒருவராவது தப்பித்துகொள்ள எத்தனிக்கவில்லை. புருஷர்கள் யாவரும் பின் தாங்கி நின்றுகொண்டு ஸ்திரீகளும் பிள்ளைகளும் படவுகளில் ஏறி முதலாவது தப்பித்துகொள்ள வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் மற்றவர்களை படவில் ஏற்றி போகவிடும்படி உதவி புரிந்தார்கள். கடைசியட்டும் கீதம் பாடிக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் பாடின கடைசி பாடல் "உம்மண்டை தேவனே நான் சேரட்டும்" என்பதே.

சீனாவில் புது ஒழுங்கு :—சீனா குடிஅரசாட்சிக்கு பிரதிநிதியாயிருக்கிற யுவான-ஷி-காய் என்பவர் தமது நீண்ட வால் போன்ற குடுமியை கத்திரித்துவிட்டார். கடந்த பெப்ரவரி மாதம் 17-ம் தேதி இப்படி செய்தார். இதினால் முந்தின அதிகாரிகளாகிய மன்சுகளுக்கு மனஸ்தாபம் வருவிக்கவேண்டுமென்பது தமது நோக்கமல்ல. ஐரோப்பியருடைய பழக்க வழக்கங்களை அநுசரிக்கிறதினால் முந்தினபழக்க வழக்கங்களை நிராகரிக்க வேண்டுமென்பதே தமது நோக்கமென்று அறிக்கை செய்தார்.

ஆப்பிரிக்காவில் நேர்ந்த பெரிய பூகம்பம் :—கடந்த முப்பது வருஷங்களாக நேரிடாத அபாயகரமான ஒரு பூமி அதிர்ச்சி சமீப காலத்தில் ஆப்பிரிக்காவில் சம்பவித்தது. நூற்று கணக்கான மைல் தூரம் அந்த 'அதிர்ச்சியுண்டாகி போவர் யுத்தத்தில் நேரிட்ட மோசத்தை விட அதிக கஷ்டத்தை பூமி அதிர்ச்சி அதிகமாய் காணப்பட்ட கிம்பர்லி நாட்டில் உண்டுபண்ணிற்று.

கிளாரா பார்ட்டன் மிசி :—இந்த பேர்போன துரைசானி எப்ரில் மாதம் 13-ம் தேதி தேகவியோகமானதாக செய்தி வந்தது. செங் குருசு வகுப்பாரை (Red Cross) முதல் முதல் ஏற்படுத்தி யுத்த காலத்தில் பட்டாளங்களில் காயம் பட்டோருக்கு உதவி புரியும் தாதிகள் ஒழுங்கை ஸ்தாபித்தவர்கள் இந்த அம்மாள்தான். இங்கிலாந்து தேசத்தில் பிளாரன்ஸ் நைட்டிஙகேல் அம்மாள் செய்து வந்த சிறந்தவேலையைப் போல் அமெரிக்காவில இந்த அம்மாள் செய்தார்கள். இவர்களுடைய ஜீவியத்தையும் நடப்பித்துவந்த வேலையையும் குறித்து பின்னுமேல உங்களுக்கு விவாமாக தெரிவிப்போம்.

வாலிப ராணி :—விக்டோரியா ராஜாத்திமரணத்துக்கு பின் ஐரோப்பா கண்டத்தில் உல்லாந்து நாட்டு வில் எல்மினா ராணியே சிங்காசனம் ஏறினது. லக்ஸம்பர்க் வில்லியம் டியூக் பிரபு சிறிது நாட்களுக்கு முன்னதாக மரணமடைந்தபடியால் அவருடைய சிறிய மகள் அந்நாட்டுக்கு ராணியாக நேரிட்டது. பெல்ஜியம் தேசத்தின் தென் அற்றத்தில் பிரான்சு தேசத்துக்கு வடக்கே இந்த நாடு இருக்கிறது. இது ஏகதேசம் ஆயிரம் சதுர மைல் உள்ளது. இந்த அம்மாளுக்கு

இன்னும் பதினெட்டு வயதாகவில்லையாதலால் ராஜாங்க உத்தியோகத்தை உடனே கைப்பற்ற முடியாமல் அவர்கள் தாயார் பிரதிநிதியாக தற்காலம் ஆண்டுவருகிறார்கள்.

குடி வரி நிவிர்த்தியும் சிக்கனச் செலவும்:—(Co-operative Credit Movement) கூட்டுதொழில் உதவிக்காரர் குடிவரி நிவிர்த்திக்கு மிகவும் உதவி செய்கிறார்கள். புனாவோ பொனரிஸ் என்ற இடங்களில் இவ்வித கூட்டத்தார் லாகிரி பதார்த்தங்களை விற்கக்கூடாதென்று கட்டு திட்டம் செய்திருக்கிறார்கள். சார்பான்ச் என்பவர் அடிக்கடி குடித்து வெறித்திருக்க காணப்பட்டபடியால் பஞ்சாயத்தார் கூடி அதை விசாரணை செய்தபொழுது இனிமேல் நான் குடிக்கமாட்டேனென்று அவர் பிரமாணிக்கம் செய்து கொடுத்தபடியால் இன்னொரு தடவை அவருக்கு மாப்பு கொடுத்து சோதிக்கும் படியாக தீர்மானம் செய்தார்கள்.

வெள்ளி கட்டிகள் காணப்பட்டது:—மலபார் கரையோரம் பொன்னானி தாலுக்காவில் கிணறு வெட்டும்படியாக பூமியை தோண்டும் பொழுது ஒருவன்னான் களிமண்ணோடு கலந்த வெள்ளி துண்டுகளை கண்டுபிடித்தான். இந்த செய்தியை அவ்விடத்து கலக்டருக்கு தெரிவித்தபோது அந்த களிமண்ணில் கொஞ்சம் எடுத்து சென்னபட்டணத்திலுள்ள காட்சி சாலைக்கு கொடுத்தனுப்பியிருக்கிறார்கள்.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகமக்கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு .... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயநீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ரூன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |

# மாதர் மித்திரி.

புத். உகூ. கதகூஉ ஆகஸ்டு மீ. இல. உ.

ALL CLASSES MAY COME.

இராகம், உசேனி. ஆதிதாளம்.

பல்லவி.

வாரும், மனந்திரும்பி வாரும்; கிறிஸ்துவிடம்
சேரும்; இடமுடனே சேரும்.

அனுபல்லவி.

ஆரும் வரலாம், நித்திய பேறும் பெறலாம்; வந்தோர்
ஆரையும் தள்ளிவிடார்; தாராளமா யெளியோர்,— வா.

சரணங்கள்.

1. தெருக்கடோறுமலைந்த நியர்க்கு மிடமுண்டு;
சிதறிவேலிகடோறும் திரிந்தோரையும் பண்டு
உறக்க முடனழைத்தத் திருக்கருணையுங் கண்டு
உள்ளநோய் துயரோடு மெள்ளத் தள்ளாடிக்கொண்டு— வா.

2. தாழ்வோடமுது தியங்கும் நிர்பந்தமும்
தம்பவச் சேனையால் தத்தளித்தோர் ஆரும்,
நாளும் வருங்கோபாக்கினைக்கு வெருவினோரும்,
நானே பாவியென்றோரும் நடுநடுங்கினபேரும்,— வா.

3. பதினோராம் தாசில்வந்தாலும் உதறித்தள்ளார்
பரிதாபம் அன்பிரக்கம் திரு உளத்திலுள்ளார்;
கதித்த மோட்சத்திற் பங்கு கள்ளனுக் கீந்த நல்லார்
கனிந்து வருவோர் தம்மைச் சினந்து நில்லென்று சொல்லார்.—வா.

## FLORENCE NIGHTINGALE.

# பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள்.

### 3-ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

இங்கிலாந்து, பிரான்ஸோடு யுத்தம் செய்து முடித்தபிறகு, சுமார் நாற்பது வருஷகாலமாய் அத்தேசம், செல்வத்திலும் சமாதானத்திலும் நிறைந்திருந்தது. இதற்கிடையில் யுத்தமென்பதே அத்தேசத்தில் கிடையாது. இவ்வாறிருக்கையில் 1853-ம் வருஷத்தில் ஒளியை கார்மேகம் மூடுகிறதைப்போல் திடீரென்று ஒருயுத்தம் எழும்பினது. யுத்தம் என்கிற விஷயத்தை கேள்வியுற்ற அத்தேசத்தார் அதை நம்பாமல், நகைத்து இது கட்டுக்கதையாயிருக்குமென்று நினைத்தார்கள். இவ்வித சடுதியான யுத்தத்திற்கு இங்கிலாந்து ஆயத்தப்படுவது அத்தேசத்தின் சொந்தநன்மைக்காகவல்ல, ஆனால் ஒரு பெரிய ராஜ்யம், இன்னொரு சின்ன ராஜ்யத்திற்கு வரவேண்டிய உரிமைகளை காலால் தள்ளி மிதித்து கொடுமைப்படுத்தினதினால், இங்கிலாந்து அப்பலஹீனமுள்ள ராஜ்யத்திற்கு உதவி செய்யும்படி பிரவேசிக்க நேரிட்டது. இங்கிலாந்தும் பிரான்சும் அப்பலமுள்ள கொடியவர்களுக்கு, தகுந்த நியாயங்களை எடுத்துக் காண்பித்து, யுத்தத்துக்குக் காரணமானவைகளை நிறுத்தமுயன்றும், அக்குரூரமுள்ளவர்கள் அவ்வார்த்தைகளுக்கிணங்காமல்போனார்கள். அநிமித்தியமே இவ்விரண்டு ராஜ்யமும் ஒன்றாய்ச்சேர்ந்து அப்பலஹீனமுள்ள ராஜ்யத்தோடு சேர்ந்து அப்பலமுள்ள ராஜ்யத்தை எதிர்க்க நேரிட்டது. இந்த விஷயத்தில், இங்கிலாந்தும் பிரான்சும் ஒன்றாக சேர்ந்தது கவனிக்கப்படத்தக்க விஷயமே, ஏனென்றால் கடைசியாக இங்கிலாந்து இந்த பிரான்ஸோடுதான் யுத்தத்தை நடப்பித்தது.

இப்போது, யுத்தத்திற்கான எல்லா ஆயத்தங்களும் நடந்தேறிற்று. 1854-ம் வருஷம், மார்ச்சு மாதம் ஆங்கிலக்கப்பற்கூட்டம், யுத்தபீடமாகிய பால்டிக் சமுத்திரத்திற்கு புறப்பட்டது. காலஞ்சென்ற குயின் விக்டோரியா அம்மாளவர்கள் அச்சமயத்தில் இளமை பருவத்தை உடையவர்களாயிருந்தார்கள். அரசியவர்கள், சிறிதும் அழகும் பொருந்தியதுமாகிய ஒரு ராஜக்கப்பல் மீதேறி அக்கப்பற் கூட்டத்தாருக்கு வாழ்த்துதல்கூற போயிருந்தார்கள். இராணுவ உத்தியோகஸ்தர்களும் அரசியவர்களிடம் செலவு பெற்றுக்கொள்ள, அங்குள்ளப்பலகை பரவில் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது குயின் அவர்கள் அக்கப்பற் கூட்டத்தாரைப் பார்த்து "உங்களுக்கு ஜெயம்" என்று வாழ்த்துதல் கூறினார்கள். உடனே கப்பல்கள் புறப்படவேண்டுமென்கிற உத்திரவு பிறந்தது. ஆகையால் கப்பல்களெல்லாம் வரிசையாய் வெகு அலங்காரத்துடன் பிரயாணப்பட்டது. அச்சமயத்தில் அரசியவர்கள் அக்கப்பற் கூட்டத்தாரை அதிக தாபந்தத்தோடும், அங்கலாய்ப்போடும் வெகு நேரம் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள். இங்கிலாந்து இந்த சமயத்தில், ஆழ்ந்த கவலையிலும், கலக்கத்திலும் அமிழ்ந்து போயிருந்தது. அநேக வீரர்கள், நறுங்குண்ட இருதயத்தாரை தங்களுக்கு பின்னாலேவைத்து, அதிக வீரதீரமாய், தாங்கள் திரும்பவும் க்ஷேமமாய் வருவோமோ என்கிற நம்பிக்கையுமற்றவர்களாய்ப் பிரயாணஞ் செய்தார்கள்.



யுத்த ஆரம்பத்தில் ஆங்கில இராணுவத்திற்கு ஜெயமுண்டானதென்கிற சமாச்சாரம் எட்டினது. இதைக் கேள்விப்பட்ட இங்கிலீஷ் ஜாதியாரெல்லாரும் அளவில்லாத சந்தோஷமடைந்தார்கள். ஆனால் இந்த சந்தோஷம் நீடித்திருக்கவில்லை, வெகு சீக்கிரத்தில் யுத்தகளத்திலிருந்து மகா துக்ககரமான செய்திகள் வந்தெட்டின. அதாவது, யுத்தம் செய்த வீரர்கள் படுகாயப்பட்டு, கவனிப்பாரின்றி நிர்ப்பந்த நிலைமையிலிருக்கிறார்களென்றும், இரணகளத்திற் காயப்பட்டவர்களுக்கும், வியாதிப்பட்டவர்களுக்கும், தக்கப்பராமரிப்பில்லையென்றும், அவர்களை உபசரிப்பதற்கான நல்ல ஏற்பாடுகளும், வசதிகளுமில்லை என்றும், காயப்பட்டவர்களை பக்ஷமாய்ப் பராமரித்துச் சிகிச்சைசெய்ய நல்ல தாதிமார்கள் கிடையாதென்றும், பிணியாளிகளுக்கு நல்ல மருந்தும் தகுந்த ஆகாரமும் குறைந்து வேதனைப்பட்டு அதிக பசியால் மடிந்துபோகிறார்களென்றும் பரிதாபமான செய்திகள் வந்தன. இப்பரிதாப செய்தி இங்கிலாந்து தேசம் முழுவதும் பரவிற்று. இதற்கு மறுமொழியாக அத்தேசத்தார் உள்ளம் கொதித்து, கருணையும் பச்சாத்தாபமும் சுரந்து அப்பிணியாளிகளுக்கு உதவி செய்யும்படியாக ஏராளமான பணங்களை கொட்டினார்கள். ஆனாலும் என்ன? பணம் மாத்திரம்போதாது, அப்பிணியாளிகளுக்கு முக்கியத்தேவை தாதிமார்கள்தான். பராமரிப்பில்லாமல் கைவிடப்பட்டிருக்கிற பிணியாளிகளை கருணையோடும் தாபந்தத்தோடும் காப்பாற்றக்கூடிய தாதிமார்களே அதிக அவசியமாயிருந்தது. இப்படிப்பட்ட தாதிமார்களை கண்டுபிடித்து அவர்களுக்கு உதவிசெய்ய அனுப்பும் விஷயத்தில் அதிக கஷ்டமிருந்தது. பெண் மணிகள், யுத்தகளத்திற்கு போகவும், அங்கே வருந்தும் பிணியாளிகளை பராமரிக்கவும், இவ்வித ஊழியத்தை செய்ய அவர்களே துணிந்தார்கள். ஆனாலும் அப்பெண் மணிகள், இவ்வித ஊழியத்தைச்செய்ய பழக்கப்படாதவர்களும், தேர்ச்சியில்லாத் திறமையற்றவர்களுமாயிருந்தார்கள். இப்படிப்பட்டவர்களை அனுப்புவதால், அப்பிணியாளிகளுக்கு இவர்கள் அதிகப் பிரயோசனமாய் இருக்கமுடியாது. இவர்கள் உதவி செய்கிறதற்குப்பதிலாக தடைகளாகத்தானிருக்க நேரிடும்.

ஆனாலும் அக்காலத்தில் தாதிமார் வேலைக்கென்று தேர்ச்சியடைந்திருந்த சில பெண்மணிகளிருந்தார்கள். இவர்கள் நைற்றிங்கேல் மாதுசிரோன்மணியால் தேர்ச்சி அடைந்தவர்கள். இவர்களையன்றி மற்றயாரும் அவ்வூழியத்திற்குப் பயன்படார்கள். நைற்றிங்கேல் என்கிறமாது இக்கூட்டத்தாருக்கு தலைவியாய் இருந்தால்மட்டும், காரியங்களையெல்லாம் செவ்வையாய் நடத்தக்கூடிய அறிவும், திறமையுமுடையவர்களாய் இருந்தார்கள். இந்தம்மாள் இல்லாமல் அப்பிணியாளிகளுக்கு, அத்தாதிமார் கூட்டத்தால் அதிக பிரயோசனமிராது. யுத்தம் ஆரம்பித்து இரண்டு வாரத்திற்குப் பிறகு படுகாயப்பட்டிருக்கிற வீரர்களின் சங்கதி இங்கிலாந்துதேசம் முழுதிலும் எட்டினபோது நைற்றிங்கேல் மாது இந்த இக்கட்டான சமயத்தில் நமது தேசத்துக்கு உதவி செய்யவேண்டுமென்கிற எண்ணம் உதித்ததினால், உடனே தாம் அந்த ஊழியத்திற்கு போவதாக மனப்பூர்வமாய் தம்மை ஒப்படைத்து, அந்த சமயத்தில் யுத்த புரோகிதராய்

இருந்த கனம் ஹெர்பர்ட் துரையவர்களுக்கு அம்மாதுவின் விருப்பத்தைக் கடிதமூலமாய் தெரிவித்தார்கள். அதே சமயத்தில் அவர் இந்த இக்கட்டான காலத்தில் உதவி செய்யவும், அவ்வூழியத்திற்கு தலைவியாய் இருக்கும்படி வருந்தி அழைத்து ஒரு கடிதமெழுதி நைற்றிங்கேல் அம்மாளுக்கு தபால்மூலமாய் அனுப்பினார். இவருடைய கடிதம் இந்தம்மாளுக்கும், இந்தம்மாளுடைய கடிதம் இந்த மந்திரிக்கும் ஒரே சமயத்தில கிடைத்தது ஆச்சரியப்படத்தக்க விஷயமே. கனம் ஹெர்பர்ட் துரையவர்களுடைய கடிதம், நைற்றிங்கேல் அம்மாளுக்குக் கிடைத்தவுடனே, தாம் அந்த ஊழியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது மாத்திரமல்ல, ஆனால் துரைத்தனத்தாரே இவ்வூழியத்திற்கு வருந்தி அழைக்கிறார்களென்கிற விஷயத்தை அக்கடிதத்தின் மூலமாய் அந்தம்மாள் அறிந்துகொண்டார்கள்.

கனம் ஹெர்பர்ட் துரையவர்களும், இந்தம்மாளுடைய கடிதத்தைப் பார்த்தவுடன் அதிக சந்தோஷப்பட்டிருக்க வேண்டும்.

நைற்றிங்கேல் மாதுசிரோன்மணி, இவ்வூழியஞ் செய்வதினால் பேர் பிரஸ்தாபத்தையாவது, கீர்த்தியையாவது, வேறெந்த விஷயத்தையாகிலும் தேடினதில்லை. ஆனால் அந்தம்மாளுடைய அன்பு, தாபந்த முதலியவைகளைக் கொண்டே, மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும் அந்த யுத்தகளத்திலுள்ள பிணியாளிகளை பராமரித்து, அவர்களுடைய வேதனையை நிவர்த்திசெய்து உதவி செய்வதையே நாடினார்கள். அப்படியே அதன் பலனையும் அடைந்தார்கள்.

(இன்னும் வரும்.)

## THE BREAD OF LIFE
## ஜீவ அப்பம்.

ஒரு கூட்டமான கிறிஸ்தவ ஊழியர்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம் செய்யும்படி விசேஷித்த எத்தனத்தோடு ஒரு மாதம் புறப்பட்டு போனார்கள். அவர்கள் பற்பல இடங்களுக்கு பிரசங்க வேலையாய் பிரிந்துபோகுமுன், அவர்களுக்கு மத்திய ஒரு இடத்தை தெரிந்துக்கொண்டு அங்கே எல்லாரும் ஒன்றாய்க்கூடி கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவர்களுடைய ஊழியத்திற்கு பெற்றுக்கொள்ளவும், அவருடைய சித்தத்தை அறிந்து அதன் பிரகாரம் அவருடைய ஊழியத்தை செய்யத்தக்க விதமாய் கர்த்தர் அதை அவர்களுடைய இருதயத்தில் வெளிப்படுத்த வேண்டுமென்றும் ஜெபித்தார்கள். கிராமங்கள்தோறும் புறப்பட்டுப்போய் பிரசங்கித்து, "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்," என்று ரோமர் 10: 9-ல் சொல்லப்பட்ட வசனத்தை அந்த ஜனங்களுக்கு கற்பித்துக் கொண்டே போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஒரு நாள் காலை 8 மணிக்கு ஜனங்கள் எல்லாரும் ஒரு ஆலயத்தில் கூடி ஒரு ஆராதனை வைத்தார்கள். அந்த ஆராதனை முடிய ராத்திரி ஒன்பதரைமணியானது, அவர்கள் அவ்வளவு நேரம் அக்கூட்டத்திலிருக்கும்படி அவர்களுக்கு யாரும் சொல்லவில்லை. அங்கிருந்த குருவானவர் கூட அவர்களை சீக்கிரத்தில் அனுப்பிவிடவேண்டுமென்று பலமுறையும் பிரயத்தனப்பட்டார், ஆனால் ஜனங்களோ அக்கூட்டத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. இவ்வளவு நேரமாக, அவர்கள் யாரும் சாப்பிடவில்லை, அப்படியிருந்தும் அவர்கள் ஆகாரத்திற்காக எதிர்பார்க்கவில்லை, அவர்கள் இதுவரையிலும் சாப்பிடாமல் பட்டினியாய் இருப்பதைப்பற்றியும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை, பசி என்பதை உணராமலிருந்தார்கள். இப்படி அவர்கள் இருந்ததற்கு அக்கூட்டத்திலிருந்த விசேஷம் என்ன? கர்த்தருடைய பரிசுத்த ஆவியின் மகத்துவமான பிரசன்னம் அவர்கள் மத்தியிலிருந்தது, ஆகையால்தான் அவர்கள் யெல்லாரும் தங்கள் புதிய ஜீவியத்தைப்பற்றி சிறந்த சாட்சி கொடுக்க கர்த்தர் அவர்களை பரிசுத்தாவியினாலே நிரப்பி இருந்தார். எல்லாரும் சாட்சி கொடுத்தார்கள். "பாவத்திலிருந்து இரட்சிப்பு" என்கிற விஷயம் என்ன என்று இதுவரையிலும் அறியாமலிருந்தேன், ஆனால் இயேசு என் இருதயத்தில் பேசி என் பாவங்களையெல்லாம் கழுவி என் இருதயத்தை ஆநந்தத்தால் நிரப்பி இருக்கிறார்" என்று ஒவ்வொருவரும் அக்கூட்டத்தில் சாட்சி சொன்னார்கள். அவர்கள் யெல்லாரும் இரட்சிப்பின் சந்தோஷத்தை அடைந்தபடியால் அக்கூட்டத்தில் கொஞ்சமாவது தளர்ச்சி அடையாமலும், பசியின் கொடூரத்தை உணராமலுமிருந்தார்கள்.



ஒரு இடத்தில் ஒரு விருத்தாப்பியமுள்ள ஸ்திரீ தனிமையாய் ஜெபஞ் செய்ததை சிலர் கேட்டிருந்தார்கள். அந்த ஜெபத்தின் சுருக்கமாவது: "கர்த்தராகிய இயேசுவே நான் சிறுமியாய் இருக்கும்போதே இந்த நற்செய்தியை எனக்கு அனுப்பியிருப்பீரானால் நான் நன்றாய் வாசிக்கக் கற்றுக்கொண்டிருப்பேன், அதன் மூலமாய் உமக்கு சிறந்த ஊழியத்தைச் செய்து அநேகரை உம்மண்டை வழிநடத்தியிருப்பேன். இப்போ நானோ கிழவியாய் இருக்கிறேன், இனிமேல் வாசிக்க நான் கற்றுக்கொள்ள முடியாது. ஆனாலும் என்ன, என் முழு பலத்தை ஆண்டவரே, உமக்கு தத்தம் செய்து இரவும் பகலுமாய் உமக்கே ஊழியஞ்செய்வேன்" என்று சொல்லி உடனே பிரசங்கம் செய்யும்படியாய் வெளியே புறப்பட்டாள். அந்த நாளெல்லாம் வேலை செய்து இருட்டாயும் அநேக மணிநேரங்களாய் வேலைசெய்து திரும்பவும் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து தன்னுடைய வேலையைத் துவக்கி மாலை இரண்டுமணிவரையிலும் இயேசுநாதர் அவளுக்குச் செய்தகாரியங்களைச் சொல்லி அங்குள்ள ஜனங்களை கிறிஸ்தவர்களாகும்படி ஏவி அவர்களோடு ஜெபித்து போராடிக்கொண்டிருந்தாள். அவள் அந்த வேலையை நிறுத்தவேஇல்லை. இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஒரு குருவானவர் அவளிடம் போய் "அம்மா ஏதாகிலும் ஆகாரம் சாப்பிட்டாயா?" என்று கேட்டார். அதற்கு அவள்: "ஆம்" என்றாள். அதற்கு குருவானவர் அவளைப்பார்த்து: "அம்மா நீ இன்றுகாலையில் எழுந்ததுமுதல்கொண்டு இதுவரையிலும் பிரசங்கித்துக்கொண்டேயிருக்கிறாயே, அப்படியிருக்க நீ எப்போ சாப்பிட்டாய்"? என்றார்.

அதற்கு அந்த ஸ்திரீ: "ஐயா நான் கிறிஸ்துவின் ஊழியத்தை செய்வதே எனக்கு ஆகாரம், ஆகையால் எனக்குப் பசி இல்லை, ஆத்துமாக்களை என் இரட்சகரிடம் நடத்த எனக்கு அவர் உதவிசெய்தார்," என்று சொன்னாள். அப்போது அந்த குருவானவர், அவருடைய வேலைக்காரனிடம் அந்தம்மாளுக்கு ஆகாரம்

கொடுக்கும்படி உத்திரவு கொடுத்தார், அந்தம்மாள் அந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டே கர்த்தர் அவளுக்கு அந்த காலையில் செய்த நன்மைகளையெல்லாம் சொல்லி அவரை ஸ்தோத்திரித்தாள்.

“வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக்கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்” “நானே ஜீவ அப்பம்” என்று இயேசுநாதர் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

---

## RELIGION OF CHRIST.
## கிறிஸ்து மார்க்கம்.

கிறிஸ்து மார்க்கமானது பெரிதும், சிறப்பும், பிரகாசமுடையதும், அது மனுஷனுடைய ஜீவியத்தில் வரக்கூடியதும், எல்லாத்தீய வல்லமையிலிருந்து மனுஷனைத் திருப்பி அவனுடைய இருதயத்தில் ஊக்கத்தை எழுப்பி சமாதான முழுக்கின் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதுமாயிருக்கிறது.

கிறிஸ்துவின் வழி, சந்தோஷகரமான வழி, உலகம் அறிகிறதைவிட ஆழ்ந்த சந்தோஷமுடையது, ஏனென்றால், அது தன் சுயாதீனச்செல்வத்திலும், சுயாதீனக்குணத்திலும் பிறந்து தேவனுடைய அன்பிலிருந்தே உற்பத்தியானது. அறியாத அன்பின் நிச்சயத்தை அடைந்திருக்கிற கிறிஸ்தவர்களாகிய நம்மையல்லாமல் யார் சந்தோஷமாய் இருக்கக்கூடும்? பெருத்த சந்தோஷத்தின் செய்தியைக் கேட்டிருக்கிற நம்மையல்லாமல் யார் அச்சந்தோஷத்தை அறியக்கூடும்?

தேவனுடைய நித்தியக்கரத்தால் தாங்கப்பட்டு வருகிறோம் என்று அறிந்திருக்கிற நம்மையல்லாமல் யார் சமாதானத்தில் வளரக்கூடும்?

---

## A GREAT POTTERY MANUFACTURER.
## ஒரு பெரிய குயக்கலக் காருகன்.

ஒரு பெரிய குயக்கலகாருகன் ஏராளமான மட்கலங்களை வனைந்து விற்பனை செய்யும்படி ஒரு பெரிய கடை வைத்திருந்தான். அவன் தன் கடையை சோதிக்கச் சுற்றிப்பார்க்கும்போது அவன் எப்போதும் வழக்கமாய் தன் கையில் இரும்பினால் செய்த ஒரு சுத்தியை எடுத்துக்கொண்டு போவான். அவன் இவ்வாறு சோதித்து அக்கடையைச் சுற்றி வருகையில் அக்கடையில் ஏதாகிலும் கோணலும் பழுதுள்ளதுமான சாமான்களைக் கண்டானானால் உடனே அவன் தன் கை சுத்தியால் உடைத்துவிட்டு “ஜோசய்யா வெட்ஜ்வுட் கடை நல்லது என்று பேர் எடுப்பதுதான் முக்கியம்” என்று சொல்லுவான். நல்ல பேர் எடுப்பது ஒரு பெரிய ஆஸ்தி.

---

## CHILDREN'S COLUMN.
## சிறுவர்க்கேற்ற விஷயம்.

---

### A CHINESE STORY
### ஒரு சீனனுடைய கதை.

இந்த நேர்த்தியான கதை, சீனதேசத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தின் பாலர் வகுப்பைப்பற்றி சொல்லப்பட்டது. அதாவது, அந்த பாலர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த எல்லாப் பிள்ளைகளைப் பார்க்கிலும் சிறுவனாய் இருந்த ஒருவன் அவன் தன் பாடங்களை அதிக கஷ்டப்பட்டு நேர்த்தியாய்ப் படித்து எப்போதும்



முதல் இடத்தை மற்றவர்களுக்குக் கொடாமல் நியாயமாய் அவ்விடத்தை சுதந்தரித்துக் கொண்டுவர யோக்கியதையுடையவனாய் இருந்தான். தனக்கு மேலே யாரும் போகமாட்டார்கள் என்கிற முழு நம்பிக்கையையுடைய அந்தப் பையன், ஒருநாள் உபாத்தியாயர் நிட்டரென்று கேட்ட ஒரு வார்த்தையை எழுத்துக்கூட்ட ஒருதரம் தவறிப்போனான். உடனே அவனுக்கடுத்தாற்போல் நின்றுகொண்டிருந்த பையன் ஒருவன் அந்த வார்த்தையை சரியாய் எழுத்து கூட்டிவிட்டான். இதினாலே அந்த சிறுவனின் முகத்தில் ஜெயப்பிரகாசம் விளங்கிற்று. ஜெயம் பெற்ற இந்தப் பையனை எல்லாரும் பார்த்து அவனை அதிக உற்சாகப்படுத்தி “நீதான் முதல் இடத்திற்கே போகவேண்டும்” என்று பலவந்தப்படுத்தினார்கள். அதற்கு அந்த ஜெயம்பெற்ற பையன்: “இல்லை நான் அந்த முதல் இடத்திற்கு போகமாட்டேன்; ஏனென்றால், நான் அப்படி போவேனானால், இதுவரையிலும் முதல் இடத்தை விடாமல் கைப்பற்றி இருந்த அந்தப்பையனை மற்றவர்கள் பார்த்து நகைத்து மனநோவை உண்டுபண்ணுவார்கள், ஆகையால் மற்றவர்களுக்கு இழிவையும், ஆயாசத்தையும் கொடுக்கக்கூடிய எந்த காரியத்தையும் செய்யமாட்டேன்” என்று சொல்லி மறுத்துவிட்டான். இந்த சிறிய சம்பவம், ஒரு பெரிய சுயவெறுப்பை போதிக்கிறது.

இந்த சிறுவன் அவ்வளவு யோசனையோடும், அன்போடும் சொன்ன இந்த வார்த்தையைக்கேட்ட எல்லாரும் “அந்த சிறுவன் இயேசுகிறிஸ்துவைப்போல் செய்கிறான்” என்றார்கள்.

### *BETTER TO DIVIDE.*
### சரிபாகம் போடுவதே நல்லது.

“ஆ இந்த பேரிக்காய் எவ்வளவு நேர்த்தியாய் இருக்கிறது, அதனுடைய விலை என்ன”? “ஒரு காயினுடைய விலை நாலு காசு” என்று கடைக்காரன் சொன்னான். “இங்கே இருக்கிற பேரிக்காயின் விலை என்ன?” “அவைகள் நாலு காசுக்கு இரண்டு காய்கள் கிடைக்கும்.” ப்ரபா செலவு செய்ய தன் கையில் நாலு காசு மாத்திரம் வைத்திருந்தான். நாலு காசுக்கு விற்கிற காய்தான் எனக்கு பிரியம், ஏன் என்றால், அது பார்வைக்கு பெரிதும், சிவந்த மேனியுடையதாய் இருக்கிறது.” ஆனால் நாலு காசுக்கு ஒரு காய்மாத்திரம் வாங்கினால் என் சகோதரன் டெப்பினுக்கு எப்படி கொடுக்கமுடியும்” “நான் நாலு காசுக்கு இரண்டு வாங்கினால் ஒன்றை டெப்பினுக்குக் கொடுக்கமுடியும்.” கடைசியாக ப்ரபா என்னசெய்தான்? நாலு காசுக்கு இரண்டு பேரிக்காய் வாங்கி, ஒன்றை இவன் எடுத்துக்கொண்டு, இன்னொன்றை அவன் தன் சகோதரனுக்குக் கொடுத்தான். ப்ரபா, இதைப்பற்றி தன் தாயாரிடம் சொன்னதாவது: “அம்மா என்னுடைய பேரிக்காய், மிட்டாயைப் பார்க்கிலும் இரண்டு பங்கு தித்திப்பும், ருசியுள்ளதுமாய் இருந்தது, அது ஏன் தெரியுமா? நான் தம்பிக்கு ஒரு பேரிக்காயை கொடுத்துவிட்டேன்.”

இந்த வார்த்தைகளை ப்ரபாவின் சகோதரன், ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந்தான்.

தாயார் அவனைப் பார்த்து, “டெப்பின் ப்ரபா சொல்வது சரியல்ல என்று யோசிக்கிறாயா? இது உண்மை விளங்க வேண்டுமானால், நீயும் ப்ரபா செய்தது

போல் செய்துபார் என் பிள்ளையே. அப்போது உனக்குத் தெரியும்.

---

A ZENANA VISIT.

## அந்தர்புர மிஷன் ஊழிய சந்திப்பு.

---

தொடர்ச்சி.

அடுத்த சமயம், சுபாலா, தோறுவை சந்தித்தபோது சொன்னதாவது: "அம்மா நான் கடைசியாக உன் வீட்டிற்கு வந்தபோது நீ ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி கேட்கவேண்டுமென்று சொன்னாயே அது என்ன?" தோறு! "ஆம் நான் ஒரு விஷயத்தை உன்னிடத்திலிருந்து அறியவேண்டும், அதாவது, நீ கற்பித்துக்கொடுக்கிற விஷயங்களெல்லாம் மிகவும் நேர்த்தியானதுதான், அதை நான் விருப்பமாய் கவனிக்க ஆசை. ஆனால் அந்த விஷயத்தில் ஒருவாறு பலவந்தபடுத்துகிறதைப்போல் எங்களை ஏன் தொந்தரவுசெய்யவேண்டும்? எங்களுக்கு ஒரு மார்க்கம் உண்டு, அந்த மார்க்கம் எங்களுக்கு போதுமானதும் தகுந்ததாயுமிருக்கிறது, அதுமாத்திரமல்ல அது எங்களுடைய முன்னோர்களுடைய மார்க்கமானதினால் அது அதிக பழைய மார்க்கம், அதினாலேயே அது சரியான மார்க்கம் என்று தோன்றுகிறது, எங்கள் மார்க்கத்திலுள்ள படிப்பாளிகளும் அதையே பற்றிக்கொள்ள எங்களுக்குச் சொல்லி கொடுத்திருக்கிறார்கள். உங்கள் மார்க்கம் உங்களுக்குச் சரியாய்த்தோன்றும், எங்களுடைய மார்க்கம் எங்களுக்குச் சரியாய்தானிருக்கும் என்று நினைக்கிறேன்."

சுபாலா சொன்னதாவது! தோறு! ஒரு மனிதன் தப்பிதமான வழியில் நடந்துக்கொண்டே "தான் கல்கத்தாவுக்கு போகிறேன்" என்று சொன்னான். ஆனால் அந்த வழியோ மிட்னாபூருக்கு போகிற வழி என்று எனக்கு நன்றாய்த் தெரியும். அப்போது நான் அவனுக்கு செய்யவேண்டிய என்னுடைய கடமை என்ன?"

தோறு.—"அவன் அப்படி தப்பிதமான வழியில் செல்லும்போது அதை அவனுக்குச் சொல்லி சரியான வழியில் நடத்தவேண்டும்."

சுபாலா! "நான் அப்படி சொல்வேனானால்," ஒருவேளை அந்த மனுஷன் என்னைப்பார்த்து "இல்லை என்னுடைய ஜனங்கள் யெல்லாரும் இந்த வழியில் தான் கல்கத்தாவுக்குப் போனார்கள்; ஆகையால் இந்த வழி சரியாய்த்தானிருக்கவேண்டும், நான் இன்னொரு வழியை நாடிப் போவது பிரயோசனமற்றது" என்று சொன்னால் "நான் என்ன செய்யவேண்டும்."

தோறு!—"அப்படிச் சொல்லும் அந்த மனுஷனைப் பார்த்து நீ சொல்வது தப்பிதம், உன் ஜனங்கள் அந்த வழியாய் கல்கத்தாவுக்கு போகவே முடியாது என்று திட்டமாய் அவனுக்குச் சொல்லவேண்டும்."

சுபாலா!—"நீ சொன்னது சரி, அப்படியானால், நீ சொல்லுகிறதும் அப்படிதானிருக்கிறது. உன் ஜனங்கள் யெல்லாரும் ஒரு வழியாய் மோக்ஷம் போனார்களென்று சொல்லுகிறாயே, அந்த வழி மோக்ஷத்துக்கே அவர்களை நடத்தினதென்று உனக்கு நிச்சயமாய் தெரியுமா?"

தோறு.—"அது எனக்குத் தெரியாது, யாரும் மோக்ஷத்திலிருந்து திரும்பி வந்து எனக்கு சொல்லவில்லை."



சுபாலா.—"யாரும் திரும்பி வாராததினால் அந்த வழி ஒரு பெரிய பிளப்பாயும் ஆழமாயுமிருக்கவேண்டும், பிரயாணிகள் யெல்லரும் அதிலே விழுந்து திரும்பவும் எழுந்திருக்கக்கூடாதவண்ணம் பார்வையற்றவர்களாய் போயிருக்கவேண்டும், அப்படிப்பட்ட பிளப்புதான் மரணம்."

தோறு.—"ஆனால் நீ சொல்லுகிற சரியான வழியில் நடக்கிறவர்கள்கூட சாகிறார்களே, அவர்களில் யாரும் திரும்பி வரவில்லையே."

சுபாலா.—"ஆம் அவர்களும் மரிக்கிறார்கள், ஆனாலும் திரும்பவும் அவர்கள் உயிரடைகிறார்கள். ஏனென்றால் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த கிறிஸ்து அவரை விசுவாசிக்கிறவர்களை மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கிறார். சரீரமோ சாகும், ஆனால் ஆவியோ என்றென்றைக்கும் ஜீவித்திருக்கும். கிறிஸ்து திரும்பவும் உயிரோடு எழுந்ததுபோல், நாங்களும் உயிரோடு எழுந்திருப்போம் என்று அவரால் அறிந்திருக்கிறோம். கிறிஸ்துநாதர் எங்களுக்கு அப்படிச் செய்வதாக வாக்குக்கொடுத்திருக்கிறார்."

தோறு.—"இது அதிக நேர்த்தியான வார்த்தைகளாய் இருக்கிறது. நான் இன்னும் அதைப்பற்றி பூரணமாய் அறிய விரும்புகிறேன்."

சுபாலா.—"அம்மா நீ கிறிஸ்துவை விசுவாசித்தால் அவர் உனக்கு இவைகளை போதிப்பார், அவரே சத்தியம் என்று சொல்லுகிறார், நாம் அவரை அறிந்தால் சத்தியத்தை அறியலாம். அவர் நம்மிடத்தில் எதை விரும்புகிறார் என்றும், நம்முடைய இருதயம் எதை அவரிடத்தில் விரும்புகிறதென்றும் நாம் அறிந்துக்கொள்ளலாம், அவர் நமக்கு கற்றுக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். கிறிஸ்துநாதர் ஒரு குருடனுடைய கண்களை திறந்தார் என்று உனக்குச் சொல்லியிருக்கிறேனே, அதுபோல அவர் நம்முடைய அறிவாகிய கண்களை திறப்பார். நாம் எல்லாரும் குருடர்களாய்ப் பிறந்திருக்கிறோம், கிறிஸ்துநாதரின் அன்பின் சோபிதத்தை நாம் இந்த ஊனக் கண்ணினால் பார்க்கமுடியாது; ஆனால் அவர் தம்முடைய அன்பான கரத்தால் தொட்டு, நம்முடைய ஆத்துமகண்களை திறப்பாரானால் நாம் அவரை நன்றாய் அறிந்துக்கொள்ளுவோம். அவர் இன்னம் என்ன சொல்லுகிறார் என்றால் "நானே ஜீவனாய் இருக்கிறேன்" என்கிறார். நாம் அப்படிப்பட்ட அவரிடத்தில் வருவோமானால் நமக்கு அந்த ஜீவனை அளித்து அந்த ஜீவனினால் நம்மை நிரப்புவார். நாம் அப்போது நிச்சயமாய் பிழைப்போம், நாம் எதிர்பாராத ஆச்சரியவிதமாய் பிழைப்போம், அவருடைய ஜீவன் நமக்குள் வந்து நாம் அதினாலே பிழைக்கும்போது, நம்முடைய பழைய பாவ கசடுகளெல்லாம் ஒழிந்து துப்புரவாக்கப்பட்டு புது சிருஷ்டியாய்க் காணப்படுவோம்.

தோறு.—"அம்மா, நீ சொன்ன இந்த விஷயங்கள் யெல்லாம் எனக்கு அதிகப் பிரியத்தைக் கொடுக்கிறது, இதைப்பற்றி அறிய எனக்கு இன்னும் ஆசை, ஆகையால் நீ திரும்பவும் வரவேண்டுமென்று விரும்புகிறேன்."

சுபாலா.—"ஆம் அது மெய்தான். நான் திரும்பவும் உன்னிடம் சீக்கிரம் வருவேன். நான் போய்வருகிறேன் அம்மா, உனக்கு என் வந்தனம்."

(இன்னும் வரும்).

A MORNING SONG.

## காலையில் கீதம் பாடுதல்.

பாருள் என்பவள் ஒரு நாள் காலையில் நித்திரை விட்டு எழுந்திருக்கும்பொழுது ஒரு மரத்தின் மேலிருந்து குயில் பாடும் சத்தம் கேட்டாள். அது இன்பமாய் பாடினபடியால் காதுக்கு வெகு இனிமையாயிருந்தது. அடுத்த நாள் காலையிலும் அந்த பறவை அங்கே உட்கார்ந்து கொண்டு கீதம் பாடுவதுதான் தனக்கு உலகத்தில் சந்தோஷம் என்பதுபோல பாடிக்கொண்டே இருந்தது. சமீபத்திலிருந்த தன் கூண்டிலே படுத்திருந்த தன் குஞ்சுகளுக்கு இரைபொறுக்கும் வேலைக்கு இரண்டாவது வேலை பாட்டு பாடுவதுதான் என்று காணப்பட்டது. பாருள் இதை உற்று கேட்டுக்கொண்டு இருக்கும்பொழுது ‘ஒரு நாளை துவக்குகிறதற்கு இது எவ்வளவு உசிதமான மாதிரி. இந்த சிறு குருவி செய்வதுபோலவே நானும் செய்வது நலமாயிருக்குமல்லவா’ என்ற யோசனை அவள் மனதில் பட்டது.

இவ்வித யோசனையோடு அவள் தனக்கு பிரியமான ஒரு சிறு பாடலைப் பாடினாள். அவள் உடை தரித்துக்கொண்டே ஒன்றின்பின் ஒன்றாக அநேக பாடல்களைப் பாடிக்கொண்டே இருந்தாள். அவள் தனக்குள்ளே தானே பாடிக்கொண்டபடியால் அவளுடைய சத்தம் வேறொருவருக்கும் கேட்கப்படவில்லை.

சகலமும் அவளுக்கு அந்த நாளிலே எவ்வளவு மன உற்சாகமாயிருந்தது என்பது நமக்கு தெரியாது. பாட்டு பாடாத மற்ற நாட்களிலே விசனத்தையும் எரிச்சலையும் கொடுக்கக்கூடிய பல விஷயங்கள் அந்த நாளிலே விசனத்தை மூட்டவில்லை. அவளுக்கு உண்டான சந்துஷ்டியிலே ஒவ்வொரு நாளும் நித்திரை தெளிந்து எழுந்தவுடன் ஒரு பாடலாவது பாடவேண்டுமென்று உறுதியாய் தீர்மானம் பண்ணினாள்.

அவளுடைய தாயார் தன் மகள் முன்னிருந்ததைவிட அதிக சந்தோஷமும் பொறுமையும் உள்ளவளாய் இருப்பதை கவனித்தாள். இந்த மாறுதலுக்கு காரணம் என்னவென்று அவளுக்குப் புலப்படவில்லை. ஒரு இரவில் நித்திரையின்றி ஆயாசத்துடன் எழுந்து வீட்டு வேலையைச் செய்ய மனமின்றி இருக்கும்பொழுது பாருளுடைய இனிமையான சத்தம் மெதுவாக அவள் காதில் தொனித்தது, அந்த பாடல் அவளுடைய தாயாருக்கு மிகவும் பிரியமுள்ளதாயிருந்தது. தன்னை அறியாமலே அவள் சற்று உரக்கப்பாடினாள். அவளுடைய தாயார் காதில் இவ்வளவு இனிமையான ஒன்றும் இதற்கு முன் தொனித்ததில்லை. அவள் கேட்டுக்கொண்டு இருக்கும்பொழுதே அவளுடைய ஆயாசம் அவளை விட்டு நீங்கி புதுப்பெலன் அடைந்ததுபோல் காணப்பட்டாள். சிறிது நிமிஷங்களுக்குப் பிறகு அவள் பாருளைப் பார்த்து ‘நீ இன்று காலையில் பாடின சங்கீதம் எனக்கு மிகுந்த நன்மையை உண்டாக்கிற்று’ என்று சொன்னாள்.

பாருள் அதற்கு மறுமொழியாக ‘அம்மா அதற்காக எனக்கல்ல, குருவிக்கே நீ நன்றியுள்ளவளாய் இருக்கவேண்டும்’ என்று நடந்த காரியங்களை சவிஸ்தாரமாய் சொல்லி காண்பித்தாள்.



HOW PASTOR HSI SETTLED THE QUARREL.

## போதகர் ஹிசி சண்டையை எப்படி நிறுத்தினார்.

(தொடர்ச்சி.)

ஹிசி போதகர் ஜெபம் செய்யும்படி ஒரு தனித்த இடத்திற்கு போனபடியால் அவர் திரும்பிவர கொஞ்சம் நேரம் ஆனது. அப்போது அந்த ஜனங்கள் போதகர் இன்னும் என்ன செய்துக்கொண்டிருப்பார் என்று பிரமித்து அவர்களுக்குள் ஆச்சரியமும் சந்தேகமும் உண்டானது. அதன் பிறகு போதகர் அந்த கூட்டத்தின் மத்தியில் வந்து சேர்ந்தார். அவர் வந்த பிறகுக்கூட அக்கூட்டத்தாருடைய ஆச்சரியம் அதிகரித்தது, ஏனென்றால் சண்டைசெய்து கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து ஏதாவது பேசவாவது அல்லது கோவினுடைய பந்துக்களின் மூர்க்கத்தை அடக்கவாவது, இப்படிப்பட்டதை ஒன்றும் அவர் செய்யாமல், அதற்கு பதிலாக அவர் வந்தவுடன் கோ என்கிறவன் காயப்பட்டு உட்கார்ந்திருக்கிற பக்கமாய் போய், அவனை யாரும் கவனியாமல் கைவிடப்பட்டிருப்பதைக் கண்டு அவனுடைய காயங்களை கட்டும்படி உத்திரவு கேட்டார். இச்சமயத்தில் ஜனங்கள் யெல்லாரும் கோபதீபத்தினால் பகை சாதித்து சண்டை போட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் யெல்லாரும் இவரை சூழ்ந்துவரவே, போதகர் கோவுடன் பேசின அன்பான வார்த்தையானது ஒருவாறு அச்சனங்களுடைய கோபங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் தணிந்தது. ஹிசி என்ற போதகர், தாம் கொண்டுவந்த மருந்தினால், கோ என்பவனுடை முழங்காலில்பட்ட காயங்களை கட்டிக்கொண்டு அவனோடு அதிக பட்சமாய் பேசினார். இதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள், தங்களுடைய கோபத்தையல்ல, தங்களுடைய தப்பிதங்களையே உணரும்படி போதகருடைய வார்த்தைகள் அவர்களுடைய இருதயங்களில் கிரியை செய்தது.

ஹிசி என்பவர் கோவினுடைய காயத்தை கட்டுவதில் அதிக வேலையாய் இருந்தார். அவர் இப்படிக் கட்டிக்கொண்டே அங்கு சூழ்ந்து நின்ற ஜனங்களைப் பார்த்து அவர்கள் அறிந்துக்கொள்ளத் தக்க விதமாய் சில வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தார். “இப்படிப்பட்ட கலகத்தை உண்டுபண்ணின இந்த சம்பவம் தமக்கு அதிக துக்கமானதென்றும், கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற அவர்களுக்கும், போதகருக்கும், அதிக அவமானமென்றும் சொன்னார். இவ்விதமாய் அங்குள்ளவர்களுடைய மனதை நோகவொட்டாமல் பேசிக்கொண்டே, குற்றவாளிகளைப் பார்த்து, நீங்கள் இப்படி செய்தது, ஒருவருக்கொருவர் விரோதமாய் செய்த பாவமாத்திரமல்ல, ஆனால் உங்களை நேசிக்கிறவரும் நீங்கள் நேசித்து வருகிறவருமாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தீர்கள்” என்றார்.

ஹிசி போதகர் சுஷாங் என்ற இரண்டு சகோதரர்களையும் பார்த்து: “நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை அவமானப்படுத்தினீர்கள். உங்கள் பாவத்தினால் மறுபடியும் அவரை சிலுவையில் அறைந்து, இதினால் இனிவரும் தேவகோபாக்கினைக்கு இடம் கொடுத்தீர்கள்.”

சுஷாங், அதாவது சிறியவனைப் பார்த்து “நீ உடனே முழங்கால்படியிட்டு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்து, ஏனென்றால் உனக்கு வரக்கூடிய ஒரு பெரிய பொல்லாங்கிலிருந்து கர்த்தர் உன்னை ரக்ஷித்தார். நீ உன் சகோதிரன் மேல் எறிந்த கோடாரி குறியாய் அவன் மேல் பட்டிருக்குமானால் இந்நேரம உன் சகோதிரனுடைய பிணம் உன் வீட்டிலிருக்கும். கர்த்தர் எவ்வளவு ஆச்சரியமாய் அந்த கோடாரி உன் சகோதிரன் மேல் படாமல் தடுத்திருக்கிறார், கர்த்தர் உனக்கு அந்த பெரிய நன்மையை செய்திராமல் இருப்பாரானால் உன் வீடு இப்

பொழுது எவ்வளவு கலக்கத்திலிருக்கும் என்று சொன்னார்."

ஹிசி போதகர் அந்த ஜனக்கூட்டத்தில் கோவைப்பற்றி சொன்னதாவது:—

கோ.—"நீ ஒரு பெரிய காரியம் செய்தாய், அந்த அடிமாத்திரம் உன் காலில் தாங்கி இராமல் போயிருந்தால், பெரிய க்ஷாங்கினுடைய கதி என்னமாய் இருக்கும், அவன் அதிக படுகாயப்பட்டு அவனுக்கு பெரிய மோசம் நேரிட்டிருக்கக்கூடும், ஆனால் அந்த அடியை நீ பெற்றுக்கொண்டபடியால் உன் சிநேகிதனுடைய உயிரைக் காப்பாற்றினாய், ஆகையால் நீ அவனுக்கு நன்மை செய்தவனாக காணப்படுகிறாய் என்றார். இவ்விதமான நல்ல வார்த்தைகளை ஹிசி போதகர் பேசினபோது, கோவினுடைய பந்துக்களுடைய உக்கிர கோபமெல்லாம் தணிந்து வந்தது. இதினால் க்ஷாங் என்கிற இரண்டு சகோதரர்களும் அவர்களுக்கு கோவின் பந்துக்களால் உண்டாகும் தீமையிலிருந்து காக்கப்பட்டார்கள். ஹிசி போதகருடைய வார்த்தைகளெல்லாம் அவர்கள் தள்ளக்கூடாமல் எல்லாரும் அங்கிகரிக்கக்கூடியதாய் பேசினார். அந்த கலகக்காரருக்கு எந்த விஷயத்திலும் மனநோவை உண்டாக்காமல், அதிக தாழ்மையோடும் கனிவோடும் அவர் அவர்களோடு சம்பாஷித்தார்.

(இன்னும் வரும்.)

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனா என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயநீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சீமானானது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ருன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்தாக்கொண்டு உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 12 |

13

# மாதர் மித்திரி.

புத். உசு. ககூ௰உ ௵ - செப்டெம்பர்௴. இல. ௩.

COMING TO THE LAMB OF GOD.

இராகம், மலையாமி. திரிசரதாளம்.

பல்லவி.

ஐயையா, நான் வந்தேன்;—தேவ
ஆட்டுக்குட்டி, வந்தேன்.

சரணங்கள்.

1. துய்யன் நீர் சோரி பலி எனக்காய்ச் சிந்தி,
துஷ்டன் எனை அழைத்தீர்,—தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்;— ஐயையா

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்ப்
ஒழிந்தால் வருவேன், என்று—நில்லேன்;
தேன் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்;— ஐயையா

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை எத்தனையோ!—இவை
திண்ணம் அகற்றி எனிருளை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்;— ஐயையா

4. ஏறுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை ஆதரியும்;—மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தன் வாக்குத்தத்தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்;— ஐயையா

5. மட்டற்ற உம் அன்பினாலே தடை எதும்
மாறி அகன்றதுவே;—இனி
திட்டமே உந்தன் உடைமை யான் என்றென்றும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்;— ஐயையா

FLORENCE NIGHTINGALE.

# பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள்.

---

## 4-ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

(நர்ஸ்வேலை செய்யும்படி இங்கிலாந்து தேசத்தை விட்டு புறப்பட்டுபோனது).

யுத்தகளத்தில் படுகாயத்துடன் அகோர நிலைமையில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற வீரர்களின் மத்தியில் ஊழியஞ் செய்யும்படி, நைற்றிங்கேல் அம்மாள் தங்கள் சொந்த தேசத்தை விட்டு அந்நிய நாட்டுக்குபோக ஒழுங்கு செய்து கொண்டார்கள். ஆனால் அந்தம்மாள் போகும்போது சில தாதிமார்களையும் தெரிந்துகொண்டு அவர்களோடுபோகவேண்டுமென்று சர்க்காரால் ஒரு ஏற்பாடிருந்தபடியால் அதன் பிரகாரம் தாதிமார்களை தெரிந்துகொள்ளுகிற விஷயத்தில் கொஞ்சம் கஷ்டமிருந்தது; அதனால் உடனே பிரயாணப்படுவதற்கு பதிலாக காலதாமதம் நேரிட்டது. ஆனாலும் இக்காலதாமதம் நீடித்திருக்கவில்லை. இவ்வூழியத்திற்கு அந்தம்மாள் தன்னை ஒப்புக்கொடுத்த நாளிலிருந்து சுமார் ஒருவாரத்திற்குள்ளாக எல்லாக்காரியங்களும் ஒழுங்காய் விட்டது. இவ்வித தாதிமார்களை சேர்க்கிற விஷயம் சுலுவாக இராமல் அதிலே அதிக கஷ்டம் நேரிட்டது. அதேனென்றால், நைற்றிங்கேல் அம்மாளோடேகூட போகப்போகிற தாதிமார்களுக்கு ஒரு சட்டம் ஏற்பட்டிருந்தது. அச்சட்டமாவது, "நைற்றிங்கேல் அம்மாளோடு கூடப்போகிற எல்லாத்தாதிமார்களும், நைற்றிங்கேல் அம்மாளை தங்கள் தலைவியாக ஒப்புக்கொண்டு அந்தம்மாளுடைய கட்டளைக்குகீழ்ப்படியவேண்டுமே என்பதே." இவ்விதமான சட்டம் அத்தாதிமார்களுக்கு அதிக கடினமாயிருந்தது. ஆனால் உண்மையிலே, அவ்விதமான சட்டம் அதிகாரம் ஒன்றையே செலுத்தவேண்டும் என்கிற நோக்கத்தையுடையதல்ல, ஆனால் அவ்விதமான சட்டம், அவர்கள் எடுத்துக்கொண்ட இப்பெரிய ஊழியத்தைச்செய்ய அநுகூலமாய் இருந்தபடியால் அச்சட்டம் அதிக அத்தியாவசியமாயிருந்தது. ஒற்றுமையில்லாமல் இப்பெரிதும், கஷ்டமும் நிறைந்த ஊழியத்தைச்செய்ய ஆரம்பித்தால் அபஜெயம் உண்டாகும் என்பதற்கு சந்தேகமில்லை.

அதோடுக்கூட பலவீனப்பாண்டங்களாகிய ஸ்திரீகள் தங்களுக்கு முன் அதிக முலைப்பாகக் காணப்படுகிற வேலைக்குள் பிரவேசிக்க பின்வாங்கிப் போவார்கள் என்பது அதிசயமல்ல. ஆனால் அநேகர் இதை அறிகிறதில்லை. பெண்கள் யுத்தகளத்திற்குப்போய் அவர்களுடைய சுபாவத்திற்கு விரோதமான பரிதாப காக்ஷியையும், பயங்கரமான கூக்குரலையும் அவர்கள் கேட்கும்போது அவர்களுக்கு எப்படித்தோன்றும்? இப்படிப்பட்ட காக்ஷி நிறைந்த இடத்தில் ஸ்திரீகள் தைரியமாய்ச்சென்று, அங்குள்ள நோயாளிகளுக்கும், காயப்பட்டவர்களுக்கும் உதவி செய்து அவர்களைக் காப்பாற்றவேண்டுமென்றால் ஸ்திரீகள் விஷயத்தில் அது அதிக வியக்கப்படத்தக்கது என்பதற்கு சந்தேகமென்ன? இத்தேசத்தில் ஸ்திரீகள் தங்கள் வீட்டை விட்டு வெளியேறிப்போய், ஏதாகிலும் ஒருவேலை செய்வதும், அல்லது வெளியேறிப்போய் படிப்பதும் ஸ்திரீகளுக்குத்தகாது என்கிற எண்ணம் உண்டு. அப்படியிருக்க



அந்த ஸ்திரீகள் தங்கள் சொந்த நாட்டை விட்டு அந்நியவிடம் சென்று இப்பெருத்த ஊழியத்தைசெய்ய முயன்றது அதிக ஆச்சரியமான விஷயமே.

இவ்வாறு இக்கஷ்டங்களெல்லாம் ஒரு வாரத்துக்குள் முடிவுக்கு வந்தவுடன், 38 தாதிமார்களுடன், நைற்றிங்கேல் அம்மாள் பிரயாணஞ்செய்யத் தீர்மானித்தார்கள். இவ்வூழியத்திற்கு முற்றிலும் தங்களை ஒப்புக்கொடுத்த இந்த 38 தாதிமார்களும் நைற்றிங்கேல் அம்மாளை தலைவியாக ஏற்றுக்கொண்டு 1854-ம் வருஷம் அக்டோபர் மாதம் 21-ம் தேதி துரிதமாய் ஓடக்கூடிய ஒரு கப்பலில் ஏறி, பிரான்சு கப்பற்றுறையை விட்டு அதிக துரிதமாய் பிரயாணஞ் செய்தார்கள். நவம்பர் மாதம் 4-ம் தேதி அவர்கள் குறித்த இடத்திற்கு சேரவேண்டுமென்று அதிக துரிதமாய் பிரயாணஞ் செய்தபோதிலும் கடைசியாக நவம்பர் மாதம் 5-ம் தேதிதான் அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.

இத்தாதிமார்கள் கப்பல் பிரயாணஞ் செய்ததோடுக்கூட ரயில் வண்டி பிரயாணமும் செய்ய நேரிட்டபடியால், இவர்கள் யெல்லாரும் ரயில் வண்டி ஏறி ஒரு பட்டணம் வந்து சேர்ந்தார்கள். திரும்பவும் இவர்கள் யெல்லாரும் இன்னொரு வண்டி மாற்றவேண்டியதாய் இருந்தது. அந்த இடத்தில் அப்பட்டணத்திலுள்ள அநேக செம்படவ ஸ்திரீகள், இத்தாதிமார்கள் ரயில் வண்டி மூலமாய் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களை பார்க்கும்படியாக அந்த ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருந்தார்கள். அந்த செம்படவ ஸ்திரீகள் இவ்விதமாய் அத்தாதிமார்களைப் பார்க்கவேண்டுமென்கிற அவசியம் என்னவென்றால், இவர்களுடைய பிள்ளைகளும்; புருஷன்மார்களும், சிநேகிதர்களும், பந்துக்களும் யுத்தத்திற்கு போயிருந்தார்கள். ஆகையால் அத்தாதிமார்கள் மூலமாய் இவர்களுடைய க்ஷேமத்தை சொல்லி அனுப்ப ஆவலாய் காத்துக் கொண்டிருந்தார்கள். இத்தாதிமார்கள் யெல்லாரும் வண்டியை விட்டிறங்கி இன்னொருவண்டியை மாற்ற வேண்டியதாய் இருந்தபடியால் இவர்களுடைய மூட்டை முடிச்சுகளை இறக்கவும் வண்டியில் ஏற்றவும் கூடிய உதவி ஆட்கள் அவசியமாய் இருந்தது. உடனே இச்செம்படவ ஸ்திரீகள் யெல்லாரும் அவர்களுடைய மூட்டைகளை இறக்கவும் ஏற்றவும் பலவிதமான உதவிகளை செய்தார்கள். அவர்கள் செய்த உதவிக்கு தக்க கூலியை அத்தாதிமார்கள் கொடுத்ததற்கு அவர்கள் ஒரு தம்படியையும் பெற்றுக்கொள்ளாமல் மறுத்து விட்டார்கள். இவர்களுடைய சொந்த ஜனங்களுக்கே உபகாரஞ் செய்யப்போகிற அவர்களிடம் கூலி ஒன்றும் வாங்காமல் தங்கள் நன்றியை அவ்வுதவியின் மூலமாய் காண்பித்தார்கள். இச்செம்படவ ஸ்திரீகள் தங்களுடைய க்ஷேமசமாச்சாரத்தை மட்டும் அத்தாதிகள் மூலமாய் சொல்லி அனுப்பினார்கள். கடைசியாக இத்தாதிமார்களெல்லாரும் தங்கள் பிரயாணத்தை வெகு துரிதத்துடன் முடித்து, தாங்கள் போய் சேரவேண்டிய இடமாகிய ஸ்கியுடரி என்கிற இடம் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் அந்த இடத்திற்குப்போய் சேர்ந்த சில தினங்களுக்குள் 600 வீரர்கள் படுகாயப்பட்டு அங்குள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார்கள். உடனே நைற்றிங்கேல் அம்மாளும், மற்ற உதவி தாதிமார்களும் தங்களால் கூடியமட்டும் அக்காயப்பட்ட வீரர்

களுக்கு நேரத்திற்கு தக்க ஆகாரம் கொடுக்கவும், தக்க சமயத்தில் மருந்து கொடுக்கவும், அவர்களை காப்பாற்றவும், ஆற்றவும், தேற்றவும் இவ்விதமாய் அவர்களுடைய வேலையை அதிக சிறத்தையோடும் கவனத்தோடும் ஆரம்பித்தார்கள். அந்த ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்மார்களும் அதிக பிரயாசையையும் அக்கரையும் எடுத்துக்கொண்டார்கள். ஆகிலும் என்ன? அந்நோயாளிகளை கவனிக்கத் தக்க தாதிமார்களுடைய உதவிதான் அதிக அவசியமாயிருந்தது. டாக்டர்மார்கள் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டபோதிலும், இத்தாதிமார்களுடைய உதவி இல்லாவிட்டால் டாக்டர்மார்களுடைய பிரயாசையெல்லாம் வியர்த்தமாய்த்தான் போயிருக்கும். இந்த விதமாக அத்தாதிமார்கள் நைற்றிங்கேல் அம்மாளோடு சேர்ந்து, அந்நோயாளிகளுக்காக அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை கொஞ்சமல்ல, இந்த ஊழியமோ மகா கஷ்டமும் பொறுப்பானதாயுமிருந்தது. இவைகளிலெல்லாம் மனஞ்சலியாமல் தாங்கள் முன்வைத்தக் காலை பின்னுங்கு வாங்காமல் ஊக்கமாய் உழைத்தார்கள். இவர்கள் இப்படிக்கெல்லாம் உழைத்து வரும்போது, இச்சிறந்த ஊழியத்திற்கு பங்கம் வரதக்கதாய் அங்குள்ள ஜனங்களால் சில தடைகள் நேரிட்டது. அதாவது இவர்கள் ஸ்திரீகளாய் இருப்பதால் இப்படிப்பட்ட ஊழியத்திற்கு ஸ்திரீகள் தகுதியற்றவர்கள் என்கிற எண்ணம் சிலருக்குள் இருந்தது. அதினாலே, இத்தாதிமார்கள் எவ்வளவு நல்ல ஊழியத்தைச் செய்தபோதிலும் அவைகளை உற்சாகப்படுத்துகிறதற்கு பதிலாக இவர்களையும் இவர்களுடைய ஊழியத்தையும் அசட்டைசெய்ய ஆரம்பித்தார்கள். இத்தப்பெண்ணத்தினால் உண்டான இக்கொடிய செய்கையினால் இத்தாதிமார்களுடைய சிறந்த ஊழியத்திற்கு பலவிதத்திலும் பல கஷ்டங்களும் தடைகளும் நேரிட்டது. சில சமயங்களில் இவர்களிடத்தில் உதவிகளை பெற்றுக்கொண்டுவருகிற நோயாளிகளே இவர்களுக்கு எதிரிடையாய்க் காணப்பட்டார்கள். இத்தாதிமார்கள் அடிக்கடி உள்ளே பிரவேசித்து நோயாளிகளுக்கு உதவிசெய்வதை பார்த்து வந்த சில டாக்டர்மார்களுக்குக்கூட அதிக வெறுப்பாய் இருந்தது. ஐயோ பரிதாபம்! இந்த ஏழை ஸ்திரீகள் என்ன செய்வார்கள். ஆனாலும் தாங்கள் எடுத்த ஊழியத்தை விடாமுயற்சியோடு செய்து வந்தார்கள். இவ்விதமாய் இத்தாதிமார்கள் இச்சிறந்த ஊழியத்தை செய்துக்கொண்டு வர வர அச்சனங்களுடைய தப்பெண்ணங்களெல்லாம் படிப்படியாய் குறைந்துக்கொண்டே வந்தது. ஆனாலும் இந்தப்பெண்ணங்கள் ஒழிய சில நாள் ஆனது. அந்த இடத்தில் இன்னொரு வகையான மனிதர்கள் இருந்தார்கள்; அவர்கள் இத்தாதிமார்களுக்கு எதிரிடையாக இருக்கவில்லை, இவர்கள் உதவிசெய்யும்போது தடைசெய்யவுமில்லை. இவர்கள் ஸ்திரீகளாச்சதே, இப்படிப்பட்டவர்கள் இவ்வூழியத்திற்கு தகுதியாவென்று யோசிக்கவுமில்லை, இத்தாதியார்கள் செய்கிற உபகாரங்களையெல்லாம் நன்றியறிதலான குணத்தோடே அங்கிகரித்து வந்தார்கள். ஒருநாள் ஒரு நோயாளியான வீரன் ஒருவன் இத்தாதிமார்களைப் பார்த்து கண்ணீர் சொறிந்தவனாய் "நான் இந்தாதிமார்களை பார்க்கும்போது, பேசாமலிருக்கவும், அவர்கள் செய்கிற நன்மைகளை மனதில் அடக்கிவைக்கவும் முடிகிறதில்லை என்று உண்மையாகவே சொல்லுகிறேன். இந்த ஆங்கில தாதைசாமி மார்கள் செய்கிற உதவியோ என்சொந்த வீட்டில் கிடைக்கிற உதவிக்கும், பராமரிப்புக்கும் சமானம்" என்று சொன்னான்.



ப்ளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள் தங்களால் இயன்றமட்டும் நோயாளிகளை பாதுகாப்பதிலும், பராமரிப்பதிலும் அதிக கவலை எடுத்துக்கொண்டு வெகுஜாக்கிரதையாய் அந்நோயாளிகளுக்கு உதவி செய்துக்கொண்டு வந்தார்கள். இந்த ஊழியத்தை செய்கிறதோடுகூட மற்ற தாதிமார்கள் செய்கிற வேலைகளையும் மேல்பார்வையிடுகிற விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருந்தார்கள். இந்தம்மாள் எப்போதும் பார்வைக்கு அதிக மெலிவும் நோய்ந்தவர்களுமாய்க் காணப்பட்டார்கள். இவ்வித கஷ்டமான ஊழியத்தை செய்வதினால் ஒருவேளை இந்தம்மாள் வியாதியில் விழுந்து விடுவார்களோவென்கிற பயம் அங்குள்ள அநேகருக்குள் இருந்தது. ஆனால் அப்படிக் கொன்றும் அபாயம் நேரிடவில்லை. வேலைக்கு எந்த விதத்திலும் குந்தகம் நேரிடத்தக்கதாக இந்த அம்மாள் வியாதியில் விழவும் இல்லை. நைற்றிங்கேல் அம்மாள் வேலையை செய்துவந்தகாலத்தில் சில குறிப்பான நல்மாதிரிகள் காணப்பட்டது. அதாவது, அந்தம்மாள் வேலை செய்யும்போது மற்ற தாதிமார்களோடு அதிகார சத்தத்தோடல்ல, மகா அன்போடும், பொறுமையோடும் செய்து வருவார்கள். நோயாளிகள் விஷயத்திலும் அந்தம்மாள் அப்படியே நடந்துக் கொண்டார்கள். ஆஸ்பத்திரியை சுத்தம் செய்கிறதில் பலவித ஏற்பாடுகளை மிகவும் யுக்தியோடு செய்து, அந்த ஆஸ்பத்திரி எப்போதும், குறைவில்லாமல் சுத்தமாய் இருக்கும்படி செய்வார்கள். இந்த ஆஸ்பத்திரிக்கு நான் செய்யவேண்டியது இன்னும் ஏதாவது உண்டா என்று யோசித்தும் தன் மனதிற்கு யாதும் தென்படாத விதமாய் அவ்வளவு சுத்தமாய் ஒழுங்கு செய்வார்கள். சுகாதார விஷயமாய் இந்தம்மாள் எடுத்துக் கொண்ட அரும்பிரயாசத்தினால் நோயாளிகள் மரிக்கிற தொகை நாளுக்குநாள் குறைந்துக்கொண்டே வந்தது. சுமார் 6 மாதத்திற்குள்ளாக அந்த ஆஸ்பத்திரியில் பெரிய மாறுதல் உண்டானது. சுத்த ஆகாயம் அந்த இடங்களிலெல்லாம் பிரவேசிக்க அதற்கு தகுந்த முறைகளையெல்லாம் அநுசரித்து வந்தார்கள்.

நைற்றிங்கேல் அம்மாள், நோயாளிகளை எப்படி பாதுகாப்பது என்கிற விஷயத்தைப்பற்றி தான் வெகு காலமாய் அதிக பொறுமையோடு கற்றுக்கொண்ட அறிவை இச்சமயத்தில் பிரயோசனப்படுத்தும்போது அதை கவனிக்கிறவர்களுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணினது மாத்திரமல்ல, ஆனால் உண்மையிலே அந்த அறிவு நல்ல பலனையும் கொடுக்கக்கூடியதாய் இருந்தது.

சாஸ்திர பயிற்சி அநுபவ தேற்சியுள்ள அநேக மனிதர்களைவிட இந்தம்மாளுடைய அறிவு மிகவும் சிறந்திருந்ததென்று அநேக வைத்திய சாஸ்திர பண்டிதர்கள் சொன்ன சாக்ஷிகள் அதிகம் உண்டு.

இந்தம்மாளுடைய ஊழியத்தை சரியாய் கவனித்த ஒருவர் சொல்லுகிறதாவது, "வியாதியின் அகோரத்தன்மை எங்கே அதிகமோ, அங்கே இந்தத் துரைமகளைப் பார்க்கலாம், அந்த இடத்தில் ஊழியஞ்செய்யும் தேவத்தூதிகையாய் துலங்கினார்கள்." இது ஒரு வீணான விஸ்தரிப்பல்ல, ஆனால் உண்மையிலே அந்தம்மாள் அப்படியே அவ்வியாதியஸ்தர்கள் மத்தியில் காணப்பட்டார்கள். இம்

மாது சிரோன்மணி தன் மெலிந்த ரூபத்தோடு அப்பிரகாரத்தைச் சுற்றி அங்குள்ள நோயாளிகளை வெகு கரிசனையோடு பார்த்து அவரவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்துகொண்டு வரும்போது, இம்மாதைக் கண்ணுற்ற ஒவ்வொரு நோயாளியும் முகமலர்ச்சியோடு நன்றி செலுத்துவான். இராக்காலத்தில் டாக்டர்மார்கள் யெல்லாரும் இளைப்பாறும்படி அவரவர்கள் தங்கள் தங்கள் இடங்களுக்குப் போய்விடுவார்கள். பிறகு சந்தடியெல்லாம் அடங்கின பிறகு நைற்றிங்கேல் மாது இரவெல்லாம் தூங்காமல் கண்விழித்து அதிக அன்போடு ஊழியஞ் செய்வார்கள். அந்த வியாதியஸ்தர்களை போட்டிருக்கிற ஆஸ்பத்திரி சில மைல் தூரமுடையது. அப்படியிருந்தும் இம்மாது தன் கையில் ஒரு லாந்தரை பிடித்துக்கொண்டு, வியாதியஸ்தர்கள் முகத்தில் படாதபடி வெகு ஜாக்கிறதையாய் மறைத்துக்கொண்டு அவ்வளவு தூரமும் நடந்துபோய், ஒவ்வொரு நோயாளியையும் தனித்தனியாகப் பார்த்து உதவி செய்வார்கள்.

இம்மாதுசிரோன்மணி ஊழியஞ் செய்கிற அவ்விடத்தில் எல்லாருடைய மதிப்பிலும், பதிவிரதாதனத்தோடுக்கூடிய சுத்த இருதயத்தோடும், கனிவான மனதோடும், ஒரு ஸ்திரீக்கு இருக்கவேண்டிய மரியாதையில் எள்ளளவும் குறைவுபடாமல் தன் நடத்தையை காத்து நடந்து வந்தார்கள். எப்போதும் வியாதியஸ்தர்களிடம், அன்பான வார்த்தையும், பக்ஷமான உபசரிப்பும், ஆத்திரப்படாத குணமும், ஊழியஞ் செய்வதில் சுறுசுறுப்பும் விழிப்பும் ஆவலுமுள்ளவர்களாய் நடந்து வந்தார்கள். நைற்றிங்கேல் அம்மாள் இங்கிலாந்தைவிட்டு, யுத்தகளத்திற்கு பிரயாணப்பட்டபோது அம்மாதுவோடு புறப்பட்டு வந்த தாதிமார்களின் தொகை 38 பெயர். இவர்களில் அநேகர் சுகவீனத்தினாலும், இன்னும் பல காரணத்தினாலும் அதிக பலவீனப்பட்டு போனார்கள். ஆகையால் இவ்வித பலவீனமுள்ள தாதிமார்களால் வேலையை நடத்த வகையில்லாமல் போனது. அதினிமித்தியமே இவர்களில் அநேகரை அவர்களுடைய சொந்த வீட்டுக்கு அனுப்பும்படி நேரிட்டது. இவர்கள் இவ்விதமாய் இவ்வூழியத்தை விட்டுபோக நேரிட்டபடியால், இங்கிலாந்து தேசத்திலிருந்து, திரும்பவும் 85 தாதிமார்களை, இவ்வூழியஞ் செய்யும்படியாக டிசம்பர் மாதம் அனுப்பினார்கள். இப்புது தாதிமார்களுக்கு இப்படிப்பட்ட வேலையின் தன்மையைப்பற்றி சரியான அறிவில்லாததினால், நைற்றிங்கேல் மாது அப்படிப்பட்டவர்களுக்கு வேலைகளையெல்லாம் தகுந்த பிரகாரம் கற்றுக்கொடுத்து அவர்களை சரிப்படுத்தி, அவர்களைக்கொண்டே நல்ல வேலையை செய்யும்படி அவர்களை பலவிதத்திலும் பழக்கி வைத்தார்கள். கடைசியாக இம்மாதுசிரோன்மணி தான் எடுத்துக்கொண்ட ஊழியத்தில், சகல விதத்திலும் கீர்த்தியையும், ஜெயத்தையும் அடைந்துக்கொண்டே வந்தார்கள்.

இம்மாதுசிரோன்மணியின் இச்சிறந்த ஊழியத்தைப் பற்றி கேள்வியுற்ற இங்கிலாந்து தேசத்து ஜனங்கள் அதிக ஆச்சரியப்பட்டு, இம்மாதுவின்மேல் அதிக விசுவாசமுள்ளவர்களாய், கீர்த்தியான வார்த்தையை அடிக்கடி பேசிவருவார்கள். இவ்வித பேர்பிரஸ்தாப புகழ்ச்சியைத் தரக்கூடிய வார்த்தைகளுக்கு இம்மாது செவிகொடாமல் "நான் உண்டு, தன் வேலை உண்டு." என்கிற



விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். பேர்பிரஸ்தாபத்தையும் புகழ்ச்சியான வார்த்தைகளையும் இம்மாது விரும்பவே இல்லை. "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே கண்ணா" என்கிறதைப்போல் மற்றவர்கள் சொல்லுகிற வார்த்தைக்கு செவிகொடாமல் தன் வேலையிலே கவனமாயிருந்தார்கள்.

---

## CHILDREN'S COLUMN.

## சிறுவர்க்கேற்ற விஷயம்.

---

### *JIMMIE'S BIRDS.*

### ஜிம்மி என்பவனுடைய பக்ஷிகள்.

சூரியன் உதயமாகி தன் ஒளியுள்ள கிரணங்களை வீசி மனதை பரவசப்படுத்தக்கூடிய ஒருநாள் காலையில் ஜிம்மி என்கிற சிறுவன் தன் பாடசாலைக்குப் போகப்புறப்பட்டான். அப்போது அவன் வீட்டிற்கு எதிரே இருந்த உயரமான ஒரு மரத்திலிருந்து அதிக இனிமையான சீக்கார சத்தத்தைக் கேட்டான். இதென்ன அதிசயம்! இவ்வழகான சத்தம் எங்கிருந்து வருகிறதென்று மரத்தை அண்ணாந்துப் பார்த்தான். அநேகர் அங்கே சில பையன்களிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மரத்தை நோக்கி வழி ஒரு பக்கமாய் ஒளிந்துக்கொண்டிருந்தான். மரம் அதிக உயரமும் பெரிதுமாய் இருந்தபடியால் அப்பையனால் ஏற முடியவில்லை. ஒரு சரியான ஏணியில்லாமல் அந்த மரத்தில் ஒருவராலும் ஏற முடியாது. ஒருவேளை அந்தப் பையன்தான் அவ்வித இனிமையான சீக்கார சத்தத்தை செய்திருப்பான் என்று ஜிம்மி நினைத்தான். ஆனால் அப்படியல்ல, திரும்பவும் அந்த மரத்திலிருந்து அதேமாதிரியான சத்தத்தைக் கேட்டு மரத்தை உற்றுப் பார்த்தபோது அங்கோர் அழகான பட்சி அம்மரத்தில் உட்கார்ந்துக்கொண்டு காதுக்கினிமையான சீக்காரமிட்டதை கவனித்தான். ஜிம்மி பள்ளிக்கூடம்போய் மத்தியான வேளையில் திரும்பவும் வீட்டுக்குவரும்போது காலையில் அவன் பார்த்த பக்ஷியைத் திரும்பவும் பார்க்கும்படிக்கு அம்மரத்தடியில் நின்றான். இவன் நின்ற கொஞ்சநேரத்திற்குள்ளாக, அந்த அழகான பக்ஷி தன் அலகினால் ஒரு நீண்ட நாரை கொண்டுவந்தது. இந்த சமயத்தில் அந்த பக்ஷி தனிமையாய் இராமல் அதினுடைய ஜதையான பக்ஷியுங்கூட இருந்தது. இந்த பக்ஷிகள் அந்த உயரமான மரத்தின் நுனியில் காற்றினால் அசையக்கூடிய ஒரு கறுக்கிளையில் கூட்டை கட்ட ஆரம்பித்தது. இவைகளையெல்லாம் ஜிம்மி என்றவன் கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நின்றான். இனிமையான சீக்கார சத்தமிட்ட பக்ஷி ஆரஞ்சி நிறமுள்ளதாயும், செட்டைகள் கருப்பு நிறமுள்ளதாயும், பார்க்கிறதற்கு அதிக அழகுள்ளதாயுமிருந்தது. அதனோடிருந்த பெண்பக்ஷி மஞ்சளும் கபில நிறமுள்ளதாயும், ஆண் பக்ஷியைப்போல் அவ்வளவு அழகுள்ளதாயிராமல் காணப்பட்டது. இவ்விரண்டு பக்ஷிகளும் கூடி அம்மரத்தில் கட்டின கூடு அதிக அதிசயப்படத்தக்கது. கயிறுகளாலும், குதிரை மயிர்களாலும், நூல் சிம்பல்களாலும், பலவர்ண துண்டுகளாலும் தோற்றத்திற்கு ஒரு பை அல்லது சிறு கூடை போன்றதாக மரத்தின் கறுக்கிளையின் ஓரத்தில் தொங்கவிட்டு, காற்றடிக்கும்போது ஊஞ்சலைப்போல் ஆடிக்கொண்டிருக்கத்தக்கதாக அவ்வளவு நேர்த்தியாக கட்டும்படி முயன்றது. அந்தக்கூட அப்பக்ஷிகளின் புத்திசாலித்தனத்தைப் பார். ஒருவரும்

அக்கூண்டண்டை ஏறி வராமலும், பூனை முதலானவைகள் அதன் குஞ்சுகளை திருடிக்கொண்டு போகாமலும் இருக்கும்படி வெகு யுக்தியாய் அடிமரத்திற்கப்பால் வெகு தூரத்தில் தனியாய் நிற்கிற ஒரு மெல்லிய கிளையில் தங்கள் வீட்டை கட்ட ஆரம்பித்தது. இப்பக்ஷிகள் தங்கள் கூண்டை சுமார் மூன்று, நான்கு நாளாய் கட்டிக்கொண்டிருந்தது, திடீரென்று, யாதொரு வேலையும் செய்யாமல் வேலையை நிறுத்திவிட்டது.

தாய்பக்ஷி மஞ்சளும் கபில நிறமுள்ள உடையோடு மரத்தின்மேல் சும்மா உட்கார்ந்திருந்து பிறகு கொஞ்சம் பயந்ததைப்போல் இங்குமங்கும் பறந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆண்பக்ஷியோ வென்றால் தன் அலங்கார ஆரஞ்சு கருப்பு நிறமுள்ள உடுப்போடு கண்ணுக்கு தென்படவே இல்லை. ஒருநாள் சனிக்கிழமை மத்தியானத்தில், ஜிம்மி தன் வீட்டு ஜன்னலிலிருந்து தெருப்பக்கமாய் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது சில பையன்கள் தங்கள் கைகளில் கவண்டை வைத்துக்கொண்டு, அத்தெருவிலுள்ள ஓர் மாமரத்தடியில் நின்றுகொண்டு கவணால் எறிய எதையோ குறிப்பாய் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கவனித்த ஜிம்மி அவனும் தன்னுடைய கவண்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்து அந்த பையன்களைப்பார்த்து "எதை கவணால் அடிக்கப்பார்க்கிறீர்கள்" என்றான். அதற்கு அப்பையன்கள், "அதோ பார், அங்கே ஒரு நேர்த்தியான பக்ஷி கயிற்றில்மாட்டிக்கொண்டு போகவழியில்லாமல் கிடக்கிறது. மூன்றுநாளாய் அது அப்படிதான் கிடக்கிறது, இதை ஜானி பார்த்துக்கொண்டுவருகிறான், அது எப்படியும் செத்துபோகும், ஆகையால் நாங்கள் அதை கொன்றுபோட பிரயாசைபடுகிறோம்" என்றார்கள். அச்சிறுபையன்கள் குறிப்பாய்க்காட்டின இடத்தை ஜிம்மி உற்றுபார்த்து அங்கே கொப்பில் மாட்டிக்கொண்டிருந்த ஆரஞ்சு நிறத்தையுடைய அழகான பக்ஷி தன்னுடையதுதான் என்று அறிந்துகொண்டான். அப்பக்ஷியின் காலில் ஒரு கயிறு சிக்கிக்கொண்டு அம்மரத்து கொப்பில் மாட்டிக்கொண்டிருந்தது. அதனுடைய செட்டைகள் விரிக்கப்பட்டு மூடுகிறதற்கும் சக்தியற்றதாய் இரண்டொருதரம் மாத்திரம் செட்டைகளை மெதுவாய் அடித்துக்கொண்டு அதிக இளைப்பாய்க் காணப்பட்டது! ஜிம்மி அதை பார்த்தவுடன், "சிநேகிதர்களே! அதை கவண்டு கல்லால் அடிக்கவேண்டாம், நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்; அதை கொல்லவேண்டாம்! அந்தபக்ஷி என் வீட்டின் முற்றத்திலுள்ள ஆலமரத்தில் இப்போதுதான் ஒரு கூண்டை கட்டிக்கொண்டுவருகிறது, நான் அந்தபக்ஷியை ஒருவாரமாய் கவனித்துக்கொண்டுவருகிறேன். நல்லது நாம் எப்படியாகிலும் அந்தபக்ஷியை விடுதலை செய்யவேண்டும், அதற்கு என்ன உபாயஞ் செய்யலாம்?" என்று கேட்டான். அதன் பிறகு ஜிம்மி அந்தபையன்களைப் பார்த்து, "என் வீட்டில் ஒருபெரிய ஏணி இருக்கிறது, அதை கொண்டுவந்து அதன் மூலமாய் மரத்தின்மேல் ஏறி அந்த பக்ஷியை விடுதலை செய்யலாமா? என்று கேட்டபோது எல்லாரும் அதற்கு சம்மதித்து அப்படியே அந்த ஏணியை நாலுபேர்போய் சுமந்துகொண்டு வெளியே கொண்டுவந்தார்கள். ஏணி அதிக பெரியதாய் இருந்தபடியால் அதைதூக்கி மரத்தின்மேல் நேராய் நிறுத்த முடியவில்லை. இதைப்பற்றி அவர்கள் யோசித்துக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு மனிதன் அப்பக்கமாய்ப்போனான். அவனை இவர்கள் கூப்பிட்டு, இவர்களுடைய காரியங்களையெல்லாம் சொல்லி அவனுடைய உதவிக்காக கெஞ்சி கேட்டார்கள். அப்போது அந்த மனிதன் அந்த ஏணியை மரத்தின்மேல் சாய்த்து வைத்தான். உடனே ஜிம்மி என்பவன் ஏணியின் மூலமாய் மரத்தின்மேல் ஏறினான். ஜிம்மி ஏணியின் மூலமாய் மரத்தைப்



பிடித்துக்கொண்டாலும் மரம் அதிக பெரிதும் உயரமுமாய் இருந்தபடியால் இவன் அம்மரத்தில் ஏறுகிறதற்கு அதிக கஷ்டப்பட்டான். ஆனாலும் ஜிம்மி தைரியத்தை விடாமல் அதிக பிரயாசையோடு ஏறி அப்பக்ஷியின் காலில் சுற்றிக்கொண்டிருந்த கயிற்றை அறுத்தான். ஐயோ பரிதாபம், அந்த ஏழை குருவி சத்தம் போடக்கூட சக்தியில்லாமலிருந்தது. ஜிம்மி மரத்தை விட்டு கீழே இறங்கி வருகிற வரையிலும் அது ஓடக்கூடாமல் அவன் கையில் தானிருந்தது. அப்பக்ஷியின் காலில் கயிறு திரும்பவும், அதிகமாய் சுற்றிக்கொண்டிருந்தபடியால் அதை முற்றிலும் எடுக்க கொஞ்சம் நேரம் சென்றது. இவ்வாறு இப்பக்ஷியின் காலில் கயிறு எப்படிவந்ததென்றால், அது தன்னுடைய கூண்டை கட்டுவதற்கு கயிறு சம்பாதிக்கப் பிரயாசைப்பட்டபோது எப்படியோ அதற்கும் தெரியாமல் ஒருமுனை கொப்பிலும்; மறுமுனை காலிலும் சிக்கிக்கொண்டது. அது எவ்வளவுதரம் அதிலிருந்து விடுதலையடைய பிரயாசைப்பட்டதோ அவ்வளவுக்கதிகமாய் கயிறு அதன் காலில் சுற்றிக்கொண்டு மேலே எழுந்திருக்கக் கூடாமலிருந்தது. கடைசியாக அப்பக்ஷி விடுதலையடைந்த பிறகு கொஞ்சநேரம் ஜிம்மியினுடைய கையிலிருந்து பிறகு அது தன் செட்டைகளை அடித்துக்கொண்டு, அதிக சந்தோஷமாய் மேலே பறந்து, ஜிம்மி வீட்டின் முற்றத்திலிருக்கிற ஆலமரத்தில் உட்கார்ந்தது. அந்த சாயந்திரம் ஜிம்மி தாய் பக்ஷியையும் ஆண்பக்ஷியையும் ஜதையாய் அந்த மரத்தில் பார்த்தான், அவைகள் இரண்டும் வெகு சந்தோஷமாயிருந்தது. அடுத்த நாள் காலையில் திரும்பவும் இவ்விரண்டு பக்ஷிகளும் தங்கள் கூண்டைகட்ட ஆரம்பித்து வெகு சீக்கிரத்தில் முடித்தது. நல்ல வேனிற்காலத்தில் சந்தோஷமுள்ள ஒருகுடும்பமாக நாலு குஞ்சுகளோடு அவைகளுடைய அலங்காரம் பொருந்திய கூட்டில் வசித்து, மெல்லிய காற்று வீசும்போதெல்லாம் ஊஞ்சல் ஆடிக்கொண்டு சந்தோஷமாய் ஜீவித்திருந்தன. ஜிம்மி என்பவன், அப்பறவைகளை பார்க்கும்போதெல்லாம் அவைகள் தன்னுடையதென்று சொந்தம் பாராட்டுவான். இச்சவிஸ்தாரங்களையெல்லாம் நன்றாய் அறிந்தவர்கள் ஆம் அது மெய்தான், ஜிம்மி சொல்வது சரி என்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

---

1. சில காலத்திற்குமுன் அரசியாய் இருந்த ஒரு மாதுவின் மரணம்.—

20 வருஷங்களுக்குமுன் பர்மா தேசத்தை அரசாண்ட கடைசி ராஜனாகிய தீபா தன்னுடைய அநீதியுள்ள செய்கையினாலும், கொடூரமாய் அரசு புரிந்ததினாலும், ராஜ்ஜியபாரத்திலிருந்து தள்ளப்பட்டார். அதன் பிறகு அவரையும், அவருடைய அரசியையும் இந்தியாவுக்கு கொண்டுவந்து கவர்ன்மென்டாரின் பாதுகாப்பில வைத்தார்கள். அந்த ராஜனுடைய கடைசியான அரசி காக்காய் வலிப்பினால் மேல் இந்தியாவில் சமீபமாய் மரித்து போனார்கள். அப்பிரேதத்தை நல்அடக்கம்செய்ய பர்மா தேசத்துக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள்

2. பெயர்பெற்ற ஒரு இந்திய தனவானின் நன்கொடை.—

மிஸ்டர் ரதன் ஜெ, டாட என்கிற தனவான் லண்டன் பட்டணத்து சர்வகலா சபைக்கு வருஷம் 21,000 ரூபாய் வீதமாக 3 வருஷத்திற்கு தானம் கொடுப்பதாக உறுதிப்படுத்தியிருக்கிறார். அத்தொகையைக் கொண்டு அச்சர்வகலாசபையார், தரித்திரம் வறுமை என்கிற விஷயத்தை எப்படி தொலைக்கிறதென்று ஆராய்ச்சி செய்யவும், தரித்திரத்திலிருந்து விடுதலை செய்யவேண்டிய முறைகளை ஏற்படுத்தவுமே இத்தனவான் அப்பெருந்தொகையை கொடுத்ததின் நோக்கம்.

3. சிறைச்சாலையில் கடிதம் செய்கிறது.—

பஞ்சாப் தேசத்திலுள்ள சிறைசாலையில் முக்கியமான கைத்தொழில் கடிதம் செய்வதுதான். அவ்விடத்தில் செய்யப்படுகிற கடிதங்களெல்லாம் சர்க்கார் ஆபீசுகளுக்கே செலவாகிறது. கடிதாசி செய்வதினால் சென்ற வருஷம் உண்டான லாபம் மாத்திரம் 31,444 ரூபாயாம். கணக்காய் ஆபீசுகளுக்கு அனுப்புகிற கடிதாசிகளின் தொகையைவிட இன்னும் அதிகம் தேவையாயிருக்கிறபடியால், சில சமயங்களில் வெகுய் துரிதமாய் அந்த கடிதங்களைசெய்து அனுப்பவேண்டியதாய் நேரிடுகிறது.

4. இருபத்தைந்து நூற்றாண்டு வயதையுடைய பழையப் படங்கள். —

தெசலி (Thessaly) என்கிற இடத்தில் வெள்ளை கற்களில் எழுதப்பட்ட பெருந்தொகையான படங்களை சமீப காலத்தில் கண்டு பிடித்தார்கள். அப்படங்கள் அதிக பழமையானவைகள். அந்தப் படங்கள் எழுதப்பட்டு ஏறக்குறைய 2,500 வருஷங்கள் ஆனதாம். ஆனாலும், அப்படங்களின் நிறங்கள் கலையாமல் அவ்வளவு நேர்த்தியாய் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இது ஒரு அதிசயமான விஷயம்தான்.

5. விலையுள்ள தபால் முத்திரை.

இந்தியாவிலுள்ள அநேகருக்கு தபால் முத்திரைகளைச் சேகரிக்கிற விஷயத்தில் அதிக சந்தோஷம். சிலர் அதினாலே நல்ல லாபத்தையும் அடைந்திருக்கிறார்கள். இவ்வித குசாலான பழக்கம் எல்லா இடங்களிலும் சிலகாலமாய்த்தான் பரவியிருக்கிறது. சில உயர்ந்த வகுப்பாருக்கும், ராஜாக்களுக்குங்கூட இவ்விஷயத்தில் உற்சாகமுண்டு.

ஐரோப்பாவில் ஒருவன், 7,500,000 முத்திரைகளை சேகரித்திருக்கிறான். அதில் ஒரு முத்திரையை 1,200 ரூபாய்க்கு விலையாக கேட்டும், கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டான்.

6. உயில்பர் றைட் என்பவருடைய மரணம் —

இவர் மரணமடைந்து சுமார் பத்து வருஷ காலமாகிறது. உலகத்தில் இவரைப்பற்றி செவ்வையாய் அறிந்தவர்கள் மிகக்கொஞ்சம் பேராய்த்தானிருக்க வேண்டும். சிலகாலத்திற்கு முன் இவர் மரித்தபோது சமாச்சார பத்திரிகையில் இவருடைய பேர் வெளியிடப்பட்டது. ஆனால இவரைப்பற்றி திட்டமாய் அறியாத சிலர்தான் இவரைப்பற்றி வாசித்திருப்பார்கள். இவர் தம்முடைய சகோதரனோடு, முதலாவது மேலே பறக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர். இது விஷயத்தில், உயில்பர் றைட் என்பவரும் அவருடைய சகோதரனும் உலகப்பிரசித்தி அடைந்தவர்கள். தற்காலத்தில் இவ்வித இயந்திரத்தினால் மேலே பறக்கிற அநேகர், கீழ்விழுந்து சாகிறதையும், இன்னும் பல காரணத்தினால் அதற்கு சம்பந்தமாகவே மரித்துப்போகிறதையும் பார்க்கிறோம். ஆனால், உயில்பர் றைட் என்பவர் அப்படி மரிக்கவில்லை. யாதொரு ஆபத்தும் இயந்திரத்தினால் அவருக்கு உண்டாகவில்லை. இவர் அமெரிக்காவில் டேடன் என்கிற இடத்தில் விஷஜுரம் கண்டு தம்முடைய வீட்டிலேயே மரித்துப்போனார்.

உலகம் புகழ்க்கூடிய விதமாய், இவரும் இவருடைய சகோதரனுந்தான் முதலாவது மேலேபறக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர்கள்.

7. ஒரு பெரிய கல்விமான். —மிகேஷான் என்கிற பண்டிதர் பம்பாய் தேசத்தாராலும், அதற்கடுத்த இடங்களிலுள்ளவர்களாலும், சொல்லவேண்டுமானால் இந்தியாவில் எல்லா பாகத்திலுள்ள ஜனங்களாலும் அதிகமாய் நேசிக்கப்பட்டு கனம் பெற்றவர்.

இந்த கல்விமான், விசேஷமாய் இந்த ஜனங்கள் மத்தியில் 35 வருஷகாலமாக சிறந்த ஊழியஞ்செய்து கொண்டாடிக்கப்பட்டவர். பம்பாயிலுள்ள உயில்சன் கல்லூரியில் தலைமை பட்டத்தை வகித்து சிறந்த கல்விமானாய்த் துலங்கினார். இவர் சமஸ்கிருதம், மார்ட்டி பாஷைகளில் மிகவும் தேர்ந்தவர், அக்கல்லூரியில் முதல் இடத்தை வகித்து அநேக வருஷங்களாய் சிறந்த ஊழியஞ்செய்ததினாலேயே, அவர் அதிகமாய் மற்றவர்களால் மதிக்கப்பெற்றார்.



---

THE STAR.

## நக்ஷத்திரம்.

---

சில நாட்களுக்கு முன்னே கிழக்கிலே அதிகாலையில் ஒரு அழகான வால் நக்ஷத்திரம் பல நாட்களாய் காணப்பட்டுக்கொண்டிருந்தது. அது சாதாரண வால் நக்ஷத்திரம் போலிருக்கவில்லை. ஏனென்றால் வால் அல்லது துடைப்பம் அதில் காணப்படவில்லை. பார்வைக்கு அதிசயிக்கப்படத்தக்க விதமாய் பெரிதும் பிரகாசமுமான நக்ஷத்திரம்போல் விளங்கிற்று.

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே இன்னொரு நக்ஷத்திரம் கிழக்கிலே காணப்பட்டது. அதைப் பார்த்தபொழுது விசேஷித்த ஒரு சம்பவம் நடக்குமென்று எதிர் பார்த்துக்கொண்டு அதின் அடையாளத்திற்காக காத்திருந்த சாஸ்திரிகள் இந்த நக்ஷத்திரந்தான் அந்த அடையாளமென்று நம்பி பிரயாணப்பட்டார்கள். மிகுந்த ஆவலோடு தாங்கள் எதிர்பார்த்திருந்ததை கண்டு சந்தோஷிக்கலாமென்று போகும்பொழுது அந்த நக்ஷத்திரம் அவர்கள் போகப்போக அவர்களுக்கு முன்னாலே வழிகாட்டிக் கொண்டுபோயிற்று.

இந்த சாஸ்திரிகள் அல்லது ஞானிகள் எத்தேசத்தாரென்று நாமறியப்படவில்லை. அவர்கள் கிழக்கிலிருந்து வந்தார்களென்று மாத்திரம் சொல்லியிருக்கிறது. பூர்வீகத்தில் அநேக ஞானிகள் வாசஞ்செய்த இந்த தேசத்திலுள்ளவர்களாயிருந்தாலுமிருக்கலாம். எப்படியிருந்தபோதிலும் அதைப்பற்றிச் சொல்வது அனாவசியமென்று கருதப்பட்டது. அவர்களுடைய பிரயாணத்தைப்பற்றி அல்ல அவர்கள் தேடிப்போன பொருளைப்பற்றிச் சொல்வதே விசேஷமாக விளங்குகிறது.

அவர்களுடைய பிரயாணம் முடியப்போகிற சமயத்தில் பிறந்திருக்கிற ஒரு பிள்ளையைக்குறித்து விசாரணை செய்தார்கள். அந்தப்பிள்ளை ஒரு ராஜாவென்றும் அவர் ஆளப்போகிற ஜனங்கள் யூதரென்றும் ஜாதியாரென்றும் சொன்னார்கள். அவர்கள்போய் விசாரித்த பட்டணம் யூதரென்னப்பட்ட ஜனங்களை ஆண்ட ராஜாவின் தலைநகரமாயிருந்தது. அப்படிப்பட்ட யாதொரு சம்பவத்தைக் குறித்தும் அவ்விடத்தவர்களுக்கு யாதொன்றுந் தெரியவில்லை.

அத்தேசத்தை ஆளும் ஒரு ராஜா அங்கேயிருந்தான். இராஜாவாகும்படி ஒருபிள்ளை பிறந்திருக்கிறதென்று அவன் கேள்விப்பட்டபோது மிகவும் பயந்து அந்தக் குழந்தையைத்தேட ஆரம்பித்தான். அதை அவன் கண்டுபிடிக்கக்கூடாதபொழுது அங்குள்ள சிறு குழந்தைகளையெல்லாம் கொலைசெய்ய உத்தரவு பண்ணினான். தன் இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டுத் தன்னைத் துரத்திவிடுவானென்று பயந்து இவ்வித முயற்சியினாலாவது தான் தப்பித்துக்கொள்ளலாமென்று நினைத்தான். ஆனால் தேவன் அந்தக் குழந்தையை ஒளித்துவைத்தார். அதற்கு யாதொரு தீங்கும் நேரிடவில்லை.

இராஜா தன் முழு பிரயத்தனத்தினாலும் தேவன் ஒளித்து வைத்தபிள்ளையைக் கண்டுப் பிடிக்கக் கூடாமற் போயிற்று. அந்த சாஸ்திரிகள் நக்ஷத்திரத்தினால் வழி நடத்தப்பட்டு குழந்தையைக் கண்டுபிடித்தார்கள். அப்படியே இவ்வுலகத்தில் தாழ்ந்த சிந்தையோடு அவரைத் தேடுகிற எவர்களுக்கும் அவர் காணப்படுவார்; அவர் இன்னும் உயிரோடிருக்கிறார்.

சாஸ்திரிகள் அவரைப் பார்த்தபோது அவர் ஒரு இராஜ அரண்மனையிலல்ல ஏழ்மையான ஒருமாட்டுத் தொழுவத்தில் படுத்திருந்தார். அவர் இராஜா மகிமை பொருந்தினவராய்க் காணப்படாவிட்டாலும் இந்த ஞானிகள் தாங்கள் தேடின இராஜா இவர்தான் என்று அறிந்து அவருக்கு முன்பாக முழங்காற்

படியிட்டு இராஜாக்களுக்குத் தகுந்ததாக தாங்கள் கொண்டுவந்திருந்த விலைபெற்ற பொருள்களை அவருக்குப் படைத்து அவரை வணங்கினார்கள்.

யூதரை ஆண்ட அந்த இராஜா பயப்படயாதொரு நிமித்தமுமில்லை. இந்தக் குழந்தை உலக ராஜ்யத்தை ஆள அல்ல மனுஷருடைய இருதயமாகிய இராஜ்யத்தை ஆளவே பிறந்தது. அவர் தேவனிடத்திலிருந்து வந்தார். அவர் மனுஷரை அவர்களுடைய பாவத்தினின்று இரட்சிக்கும்படியாக வந்தார். ஆகையால் அவருக்கு இயேசு என்று பெயரிடப்பட்டது. அதற்கு இரட்சகர் என்று அர்த்தம். அவருடைய ராஜ்யம் வல்லமைபொருந்திய எந்த ராஜ்யத்தையும் விட மஹா விஸ்தாரமும் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதுமானது. ஏனென்றால் அது நித்திய ராஜ்யம்.

அவருடைய ஜீவியத்தினாலும் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் அவர் நமக்குச்செய்த பெரிய நன்மைகளினிமித்தம் அவருடைய அதிசயப் பிறப்பை ஞாபகப்படுத்தும்படியாக அவருடைய பிறந்த நாளை கிறிஸ்மஸ் என்கிற பெயரால் வருஷா வருஷம் நாம் கொண்டாடி வருவதற்கு காரணமிதுதான். அவர் இன்றைக்குமுயிரோடிருக்கிறார். விசுவாசத்தோடு அவரிடம் வருகிற யாவரையும் அவர்கள் பாவத்தினின்று எப்பொழுதும் இரக்ஷிக்கிறார்.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | | |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | ரூ. 0 | அ. 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100 க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகமக்கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனா என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயநீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனநாது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ஜூன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லஹரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |


19 MADRAS 28 NOV 1912 36

# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௧௨ ௵ - அக்டோபர் ௴. இல. ௪.

### GOD'S PRESENCE.

இராகம், புன்னாகவராளி. அடதாளம்.

**பல்லவி.**

ஆதி பரம் மகா ராஜனே,— எந்த வேளையும்
அடியனோடிரும், ஈசனே,

**அநுபல்லவி.**

நீதியில்லா சருவேசா, தேசுறும் பிரகாசா,
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால்,— ஆதி

**சரணங்கள்.**

1. பாவி பெலனால், ஐயனே,—நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார், மெய்பனே.
தேவா, துணை நீர், ஐயனே;—சிறியனிடம்
சேர்ந்தே வசியும், துய்யனே,
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும், காவலன் நீரே;
யாவரையும் என்னைத் தாங்கி அரவணையும்,— ஆதி

2. இரக்கம் பொழிய வாருமே,—கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே—அனவரதம்
உந்தன் அருளைத் தாருமே;
செருக்காய் எம்மீ திகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள்புரியும்.— ஆதி

3. என்தன் மரண மட்டுமே—அருகில் நீரே
இருந்தால் மகா இஷ்டமே,
எந்த அதிதர் கெட்டுமே—இமைப் பொழுதில்
ஏகிப் போவார் திட்டமே;
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறொரும் இல்லை;
விந்தை மேவும் கதியில் மேன்மையுடன் வாழ்கவே!— ஆதி

## PREVENTION AND TREATMENT OF CHOLERA.

## விஷபேதியை தடுத்தலும் அதற்குரிய சிகிச்சையும்.

---

விஷபேதி பரவாமல் அதை தடுக்க அநேகக் காரியங்களைச் செய்யலாம். ஒரு காலத்தில் இங்கிலாந்து தேசத்திலும், ஐரோப்பியருடைய நாடுகளிலும், விஷபேதி மும்முரமாய் இருந்தது, ஆனால் தற்காலத்திலோ அப்படிக்கொன்றுமிராமல் சில சமயங்களில் மாத்திரம் அங்குமிங்கும் வெகு அரிதாய்க் காணப்படுகிறது. இதற்குக் காரணம், கீழ்நாட்டு பிரயாணிகளின் வரத்துபோக்கினால் விஷபேதியின் நுண்ணிய பூச்சிகள் அங்கு தலைகாட்ட நேரிடுகிறது.

விஷபேதி ஒருவித சிறு பூச்சிகளினால் உண்டாகிறது. அப்பூச்சிகள் நம்முடைய கண்களுக்கு தென்படக்கூடாத அவ்வளவு சிறியதாயிருக்கிறது. அதை ஒருவித பூதக்கண்ணாடியின் மூலமாய்தான் அறிந்துக்கொள்ளக்கூடும். துலாம்பரமாகவும், சுத்தமாகவும் காணப்படுகிற தண்ணீரிலும் லக்ஷம் கணக்கான பூச்சிகளிருக்கக்கூடும். ஒரு சின்ன செம்பு நிறைந்த ஜலத்திலும், அல்லது ஒரு இலையின்மேல் போட்டிருக்கிற சாதத்திலும், உயிரை கொல்லக்கூடிய இவ்வித பூச்சிகளின் தொகை, சென்னையிலுள்ள ஜனங்களின் தொகையைப்பார்க்கிலும் அதிகமாய் இருக்கும்.

இவ்வித பூச்சிகள்; நம்முடைய ஆகாரத்தின் மூலமாயும் நாம் குடிக்கும் தண்ணீர் மூலமாயும் உள்ளுக்கு போகிறது. பூச்சிகள் உள்ளுக்கு சென்றவுடன் வெகு துரிதமாய் நம்முடைய வயிற்றிலும், குடலிலும் ஏராளமாய் பெருகி நோயாளியின் மலபாதையிலும், வாந்தியிலும் திரள்திரளாய்ப் பெருகிப்போகும். இவ்விதமாய் நோயாளிகளிடத்தில் உண்டாகிற எல்லாப் பூச்சிகளையும் ஒன்றையும் மீதிவிடாமல் கொன்றுவிடுவோமானால், இனி இந்தியாவில் விஷபேதி இல்லாமல் ஒழிந்துவிடும். விஷபேதியினால் வருந்தும் நோயாளியினுடைய மலத்தையானாலும் சரி, அல்லது அவன் வாந்தி செய்யும் எந்த வஸ்துவையானாலும் சரி, அவைகளை குளத்தண்டை எடுத்துபோகலாகாது. ஊரில் விஷபேதி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எந்த சமயத்திலும் ஊரண்டை சாப்பிடத்தக்க ஜலமிருக்கும் குளத்தில்போய் அசுத்தமான சாமான்களைக்கழுவவாவது, பானை, சட்டி முதலியவைகளை அக்குளத்தில் போடவாவது, அல்லது வஸ்திரங்களை துவைக்கவாவது, அசுத்தமான கால்கைகளைக் கழுவவாவது, குளிக்கவாவது கூடாது. விஷபேதி நடமாடுகிற சமயத்தில் எப்போதும், தண்ணீரை நன்றாய்க் காய்ச்சி வடிகட்டி சாப்பிடவேண்டும். தண்ணீரை அடுப்பில் ஏற்றி காய்ச்சும்போது நன்றாய் கொதி கிளம்பவேண்டும். கொதி கிளம்பினபிறகுகூட தண்ணீரை உடனே இறக்கிவிடாமல் ஐந்து நிமிஷம் வரையிலும் அடுப்பிலேயே தண்ணீர் நன்றாய் கொதித்துக்கொண்டேயிருக்கவேண்டும். அதன்பிறகு அதை இறக்கிவைத்து இன்னொரு சுத்தமான ஜாடியை எடுத்து அதை கொதிக்கவைத்த தண்ணீரால் நன்றாய் துலக்கி கழுவி அதன்பிறகு கொதிக்கவைத்த தண்ணீரை ஊற்றி ஆறவைத்து சாப்பிடவேண்டும்.

குளிர்ந்துபோன சாதத்தை சாப்பிடக்கூடாது. எப்போதும் சமைத்த சாப்பாட்டை சுடும்போதே சாப்பிடவேண்டும்.



நன்றாய்ப் பழுக்காதக் காய்களைச் சாப்பிடுவதும், முற்றின காய்களை சமைத்து சாப்பிடுவதும், ஜீரணிக்கக்கூடாத வஸ்துகளை அருந்துவதும் கூடாது. குளிர்ந்துபோன பாலையாவது, பழத்தையாவது சுடவைக்காமல் அருந்தக்கூடாது.

வயிற்றுப்போக்கை உண்டுபண்ணக்கூடிய எந்தவித மருந்தையும் உட்கொள்ளக்கூடாது.

கள்குடிப்பதினால் குடல்களெல்லாம் வெந்துபோயிருப்பதால், கள்ளுண்பவர்களுக்கு விஷபேதி வெகு லேசாய் வரக்கூடும். ஆகையால் கள்ளை அருந்தாமல் விட்டுவிடுவது அதிக அவசியம்.

சுத்தம் அதிக அவசியம். நாம் சாப்பிடப்போகுமுன் நம்முடைய சாப்பாடு, தண்ணீர், ஏனங்கள், கைகள், எல்லாம் சுத்தமாய் இருக்கவேண்டும்.

விஷபேதியினால் வருந்தும் நோயாளியிடம் ஒரே ஒரு ஆள்மாத்திரமிருந்து உதவி செய்யவேண்டும். அந்த ஆள் வேறெந்த வேலைகளையும், முக்கியமாய் சமையலுக்கடுத்த வேலைகளைச் செய்யக்கூடாது. ஆறு டிராம் கர்பாலிக் சொலுஷனை (Carbolic Solution) ஒரு படி தண்ணீரில் கலந்து எப்போதும் தயாராய் ஒரு பாத்திரத்தில் வைத்திருக்கவேண்டும். நோயாளியிடம் நர்ஸ் வேலைசெய்கிற ஆள் வெளியே போகும் பட்சத்தில் கைகளை நன்றாய் மேல்படி கர்பாலிக் மருந்தில் துவைத்து கழுவி பிறகு வெளி ஏறவேண்டும். நோயாளியினுடைய வாந்தி, மலம்படும் தரைகளையும் சுவர்களையும், இன்னும் பல சாமான்களையும், நன்றாய் மேற்படி கர்பாலிக் தண்ணீரினால் சுத்தமாய்க் கழுவவேண்டும். இவ்வித பிரயோசனத்திற்கென்று கர்பாலிக் சொலுஷன் (Carbolic Solution) எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டும். நோயாளிக்கென்று உபயோகப்படுத்துகிற வஸ்திரங்கள், ஏனங்கள், ஜலம் மலம் பிடிக்கும் பாண்டங்கள், இவைகளையெல்லாம் கர்பாலிக் சொலுஷனால் குறையாமல் ஒன்றரைமணி நேரம் அதிலேயே ஊறவைக்கவேண்டும்.

கர்பாலிக் திராவகத்திற்குப் பதிலாக, பொட்டாசிம்பர்மங்கனேட் (Potasseum Permanganate) என்ற மருந்தை உபயோகிக்கலாம். தண்ணீர் சுத்த சிவப்பாய் மாறுகிறவரையிலும் பர்மங்கனேட்டை உபயோகிக்கவேண்டும். வாந்தி, ஜலம் மலம் செய்யும் பாண்டங்களை இவ்வித மருந்துகளினால் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். இவ்வித சொலுஷனை இன்னொரு சுத்தமான பாண்டத்தில் வைத்து, சமையல் அறையில் வேலைசெய்கிறவர்கள்கூட கைகளை முன்னடியாக தோய்த்துக்கொள்வது அதிக நலம். அப்படியே சாப்பிட போகும்முன்கூட கைகளைத் தோய்த்துக் கழுவவேண்டும்.

சில சமயங்களில், ஒரு கிளாஸ் தண்ணீரில் 4 அல்லது 5 துளி அரமாட்டிக் சல்பூரிக் திராவகம், (Aromatic Sulphuric Acid) விட்டு உட்கொள்வதால், வயிற்றை சரிப்படுத்தி விஷபேதி பூச்சிகள் உள்ளுக்குப் போயிருந்தாலும் அவைகளை கொன்றுவிடும்.

நோயாளி சுகமடைந்தவுடன் ஸ்நானம் செய்விக்கவேண்டும். தேகம், தலைமயிர் முழுதும், கர்பாலிக் சொலுஷனால் கழுவி சுத்தம் செய்யவேண்டும். சுத்தமான வஸ்திரத்தை உடுத்தி வேறு அறைக்கு மாற்றவேண்டும்.

நோயாளிக்கென்று உபயோகப்படுத்தின பழைய வஸ்திரங்களையும், பாய்களையும் கொளுத்திவிடவேண்டும். சுவர், வீடு

முழுவதும், கர்பாலிக் சொலுஷனால் கழுவவேண்டும். கூடுமானால் வீட்டை முழுவதும் வெள்ளை அடிப்பது உத்தமம். நோயாளியின் அருகாமையிலிருந்து உதவிசெய்த நர்ஸ், கர்பாலிக் சொலுஷனால் தேகத்தையெல்லாம் கழுவி ஸ்நானஞ்செய்து, தன் வஸ்திரங்களை சொலுஷனில் தோய்த்து அதிக நேரம் ஊறவைத்து சுத்தம் செய்யவேண்டும்.

நோயாளி மரித்துபோனால், பிரேதத்தை அறையிலிருந்து கொண்டுவருகிறதற்குமுன் சொலுஷனால் நனைக்கப்பட்ட வஸ்திரத்தால் சுற்றிவைக்கவேண்டும்

இந்த அகோர வியாதியிலிருந்து நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் காப்பாற்ற நாம் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

CARE OF INFANTS.

## குழந்தைகளை பத்திரமாய் பேணுவதைப் பற்றியது.

---

இந்தியாவில் அநேக சிறு குழந்தைகள் மரித்துப்போகிறதற்குக் காரணம் என்னவென்றால் அக்குழந்தைகளின் பெற்றோர்களுடைய அறிவீனமும் அவர்கள் அநுசரித்து வருகிற சடங்காச்சாரமுமே. குழந்தைகள் பிறந்த நாளிலிருந்து சிலவாரம் அவர்கள் பெறக்கூடிய சரியான பார்வை இல்லாததினால் அநேகக் குழந்தைகள் மரித்து போகிறார்கள். அநேகக் குழந்தைகளுடைய ஜீவன் சரியான முகாந்திரமில்லாமல் வியர்த்தமாய் நாசமாகிறதாயும், அதனால் அக்குழந்தைகளின் தாய்மார்கள் துக்கசாகரத்தில் முழ்கிப்போகிறதையும் நான் அடிக்கடி அதிவிசனத்தோடு காண்பதுண்டு. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் விஷயத்தில் கொஞ்சம் அறிவை உபயோகித்து கவனத்தை செலுத்துவார்களானால் இவ்விதமாய் குழந்தைகள் சாகவேண்டிய அவசியமில்லை. முக்கியமாய் தாய்மார்களுடைய அறிவீனத்தினாலேயே, குழந்தைகள் சாகும்படி நேரிடுகிறது. அப்படியிருக்க, "கடவுள் ஏன் இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டார்." "கண்கெட்ட தெய்வம் அப்படிச் செய்தாரே" "இதெல்லாம் தலைவிதி" என்கிற இவை முதலான வார்த்தைகளைச் சொல்லி தாய்மார்கள் கடவுளை நிந்திக்கிறார்கள். தங்களுடைய சொந்த அறிவீனத்தினாலும் தாங்கள் மூடத்தனமாய் அநுசரித்து வருகிற சடங்காச்சாரத்தினாலும் விளைந்த தீமையை அறிந்து தங்கள் அறிவீனத்தையும் சடங்காச்சாரத்தையும் நிந்திக்கிறதற்குப் பதிலாக கடவுளை நிந்திப்பது சரியல்ல.

கிராமவாசிகளில் சிலருக்குள்ளே ஒருவித தப்பெண்ணமிருக்கிறது. அதாவது, குழந்தை பிறந்தவுடன் எட்டுநாள்வரையிலும் தாய்ப்பாலைக் கொடுக்கக்கூடாது என்பதே. இவ்வித கோட்பாடுகளினால் குழந்தை தாயிடம் பால் அருந்தாமல் விலக்கிவைக்கிறார்கள். இப்படி குழந்தையை சில நாள் நீக்கிவைப்பதால், தாயினுடைய பால்சொறியும் மார்கள் கடினப்பட்டு, பால் தயிரைப்போல உறைந்துபோகும். குழந்தையை அதன் தாய்ப்பாலை குடிக்காமல் விலக்கிவைக்கிற நாள்மட்டும் பசும்பாலினாலே குழந்தையை போஷிக்கிறார்கள். அப்படி பிள்ளைக்கு உபயோகிக்கும் பாலை சரியாய் கலக்காமல் குழம்பாய் கொடுப்பார்கள். இன்னும் அழுக்கான கந்தைத் துணிகளால் முலைக்காம்பைப்போல்செய்து பாலை துவைத்து குழந்தையை உரியும்படி செய்வார்கள். இதினால் போதுமான பாலை உட்கொள்ள சக்தியில்லாமல் குழந்தை பலஹீனத்தினாலும் பட்டினியினாலும் செத்துப்போகும். தாய்ப்பாலை உடனே ஊட்டாமல் விலக்கிவைக்கிற பிள்ளைகள், பட்டினியினாலாகிலும், அல்லது பாலை சரியாய் கலக்காமல் கொடுப்பதால் அஜீரணமுண்டாகி அதன்மூலமாய் வயிற்று போக்கு உண்டாவதினாலும், அல்லது பாலை உபயோகிக்கும் பாண்டங்கள் சுத்தமில்லாமலும், அழுக்கான கந்தை துணிகளை முலைக்காம்பாக உபயோகப்படுத்துவதினாலும் வயிற்றில் பலவித கோளாறுகள் உண்டாகி குழந்தை எப்படியும் வியாதிப்பட்டு மரித்துபோகும். குழந்தைகளுக்கு இன்னொரு வகையாய் வயிற்றில் உண்டாகக்கூடிய உபத்திரவம் உண்டு. அதாவது, குளிர்ந்துபோனப் பாலை கொடுப்பதுவும் அல்லது ஜீரணிக்கக்கூடாத விதமாய் பாலை திரும்பத்திரும்பவும் காய்ச்சுவதும்தான். இவ்விதமான ஒழுங்கீனங்களினாலும் அறிவீனங்களினாலும் குழந்தைகளுக்கு மோசம்நேரிட்டு மரணம் உண்டாகிறது.



குழந்தையினுடைய ஜீவன் ஒரு நுண்ணிய நூலின்மேல் தொங்குகிறதைப்போல் அவ்வளவு நுட்பமாய் இருக்கிறதென்பதைப்பற்றி இந்திய தாய்மார்கள் அறிந்துக்கொள்ளுகிறதில்லை. ஒரு இடத்தில் சில நிமிஷங்களுக்கு முன்னே பிறந்த ஒரு குழந்தையைப் பார்த்தேன். அந்த குழந்தைக்கு சூடு உண்டாக்கும்படி நெருப்பின் பேரிலிருந்து கிளம்பி வருகிற புகைக்குமேலே தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த அறை நிறைய புகையால் மூடப்பட்டிருந்தது. நான் அந்த அறைக்குள் பிரவேசித்த போது மூச்சுவிட கஷ்டப்பட்டேன். அப்படியிருக்க அச்சிறுக் குழந்தையை புகையின்மேல் பிடிக்கும்போது மூச்சுவிட எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கவேண்டும்.

இன்னும் சில சமயங்களில் குழந்தைகளுக்கு சூடு உண்டாக்குகிற விஷயத்தில் கவனஞ் செலுத்தாமலேயே சும்மா போட்டுவிடுகிறார்கள்.

சில வாரங்களுக்கு முன் வியாதியாய் இருந்த ஒரு சிறு குழந்தையை பார்வையிடும்படி அழைக்கப்பட்டேன். அந்த குழந்தை பிறந்து ஐந்துநாள்தான் ஆனது. ஆனால் அக்குழந்தை தன் தாடையை திறக்கக்கூடாமல் கிட்டிக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தை அப்படிக் கிட்டிக்கொண்டிருப்பதைப் பற்றி அக்கிராமத்திலுள்ளவர்கள் இது "கண் திருஷ்டி" என்று சொன்னார்கள். நானோ அது அப்படி அல்ல, இது குளுமையினால் உண்டானதென்று சொன்னேன். மண் தரையின்மேலே ஒரு சிறு பாயைப்போட்டு, சில மெல்லிய கந்தை துணிகளின்மேல் அந்தக் குழந்தையை நிர்வாணமாய் போட்டிருந்தார்கள். அந்த சமயம் மழைகாலமாய் இருந்தது. இதினாலே அக்குழந்தைக்கு குளுமை உண்டாகி, தாடைக் கிட்டிக்கொண்டது.

நான் அந்த வியாதியைப்பற்றி கண்டுபிடித்த குறிப்பை அங்குள்ளவர்களுக்கு சொன்னபோது, அங்குள்ளவர்களுக்கு திருப்தி உண்டாகவில்லை. அதினாலே, அவர்களுடைய சொந்த வைத்தியன் ஒருவனை அழைத்து காண்பித்தார்கள். அவன் சில மந்திரங்களை முணுமுணுவென்று சொல்லி அந்த பிள்ளையின் பேரில் ஊதி அக்குழந்தையின் கழுத்திலும், கைகளிலும், கயிறுகளினால் குளிசங்கட்டினான். குழந்தை நல்ல சுகமுள்ளதும், பலமுள்ளதாயிருந்தாலும் கடைசியாக இரண்டொரு நாளைக்குள் மரித்துப் போனது.

இத்தேசத்தில் சிறு குழந்தைகளுக்கு சிற்றுமணக்கெண்ணை கொடுக்கக்கூடா தென்கிற ஒருவித தப்பிதமான எண்ண மிருக்கிறது. ஆனால் சிற்றுமணக்கெண்ணை வெகு அருமையானதும், குழந்தைகள் கஸ்திபடுகிற அநேக வியாதிகளுக்கு நல்ல குணத்தைக் கொடுக்கக்கூடியதுமாயிருக்கிறது. குழந்தைகளுக்கு மலச்சிக்கல், அஜீரணபேதி, ஜுரம், குளுமை, வயிற்று வலி, இசிவு அல்லது ஜன்னி இவைமுதலானவைகளுக்கெல்லாம் சிற்றுமணக்கெண்ணை அதிக நல்லது. பின்வரும் சில பிரமாணங்களை கவனிப்பதால் பிள்ளைகளை வளர்க்கும் தாய்மார்களுக்கு அதிகப் பிரயோசனப்படும்.

1. பிள்ளையை சூடாய் வைக்கவேண்டும். ஆனால் முகத்தையும் தலையையும் மூடவேண்டாம். முக்கியமாய் கைகளும் பாதங்களும் சூடாயிருக்கும்படி செய்ய வேண்டும்.

2. சுத்தமுள்ள ஆகாயத்தை நன்றாய் சுவாசிக்கத்தக்க இடத்தில் வைக்கவேண்டும்.

3. குழந்தை பிறந்த அந்த மணிநேரத்திற்குள்ளாக தாயின் பாலையே கொடு, மற்றபடி வேறொன்றையும் கொடாதே.

4. குழந்தையினுடைய தாய் மரணமடைந்திருந்தால், அல்லது ஏதோ ஒரு முகாந்தரத்தினால் தாயினுடைய பாலை கொடுக்கமுடியாவிட்டால், குழந்தையை கைபாலினாலே போஷிக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது, குழந்தைக்கு உபயோகப்படுத்தும் புட்டியும், ரப்பரும் எப்போதும் சுத்தமாய் இருக்கும்படி அடிக்கடி நன்றாய் கழுவவேண்டும். ஒரு பங்கு பாலில் இரண்டு பங்கு தண்ணீர் விட்டு அதில் கொஞ்சம் உப்பு கலந்து கொடுக்கவேண்டும். ஆனால் சர்க்கரை கலக்கவேகூடாது.

5. குழந்தைக்குக் கொடுக்கும் பசுப் பாலை, பால்காரனிடமிருந்து வாங்கினவுடன் அடுப்பிலேற்றி மூன்று நிமிஷத்திற் கதிகப்படாமல் காய்ச்சி கொடுக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் இப்படியே குழந்தை குடிக்கும் அளவானப் பாலை எடுத்து சூடாக்கி கொடுக்கவேண்டும்.

6. குளிர்ந்துபோன பாலை குழந்தைகளுக்குக் கொடுக்காதே.

7. குழந்தைக்கு சுகவீனம் உண்டானவுடனே, ஒரு நல்ல டாக்டரை அழைத்து காண்பி, அவர் சொல்லுகிற பிரகாரம் தவறாமல் செய்.

அயலகத்தாரும் பந்துக்களும் சொல்லுகிற வீணான வார்த்தைகளுக்கெல்லாம் செவிகொடுக்காதே.

8. டாக்டர் முதல்தரம் கொடுக்கும் மருந்தினாலேயே குழந்தைக்கு சுகம் உண்டாகாவிட்டால், அதினால் உன் டாக்டரை மாற்றவேண்டாம். பொறுமை, விசுவாசம், விடாமுயற்சி, அறிவு இவைகளில் உறுதியாய் நில்.

MISS S. BECKINGSALE,
*Brahminbaria.*

S. பக்கிங்சேல் அம்மாள்,
பிராமின்பரியா.

---

## THE HABIT OF GIVING.

## கொடுக்கும் வழக்கம்.

ஒரு காலத்தில் உலகபிரசித்தியடைந்த ஒரு ஜனோபகாரி இருந்தார். அவரைப் பற்றி ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஜனோபகாரி, அநேக ஜனங்களுக்கு உபகார புருஷனாக துலங்கி அதிக உதாரத்துவத்தோடு நன்மை செய்துக்கொண்டு வந்தபோது, ஜனங்கள் அவரைப் பார்த்து: "ஐயா நீர் அதிக உதாரத்துவமுள்ள ஜனோபகாரி, நீர் அநேகருக்கு நன்மை செய்கிறீர்." என்று புகழ்ந்து பேசினார்கள். அதற்கு அந்த ஜனோபகாரி அவர்களைப் பார்த்து: "நீங்கள் தப்பிதமாய்ச் சொல்லுகிறீர்கள், நான் உதாரத்துவ குணமுள்ளவனல்ல, சுபாவமாய் நான் அதிக பொருளாசைக்காரன்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

பின்னும் அவர் சொன்னதாவது: நான் சிறுவனாக இருக்கும்போது எனக்கு போதுமான அறிவு இருந்தது. அதனால் நான் எவ்வளவு பிசினித்தனமும், கேவலமான குணமுள்ளவனாய் இருக்கிறேன் என்று அறிந்துக்கொண்டேன். அதினிமித்தம் அக்கேவல பொருளாசையை விட்டு பிறருக்கு கொடுக்கும் குணம் வர முயற்சி செய்தேன். ஒரு தம்படி மற்றவர்களுக்கு கொடுப்பது எனக்கு அதிக வேதனையாய் இருந்தது. அப்படியிருக்க, உதாரத்துவ குணம் என்னிடத்தில் சரியாய் படிகிறவரையிலும் அதிகமாய் முயற்சித்தேன். உதாரத்துவ குணத்தை பழகுகிற விஷயத்தில் எனக்கிருந்த கஷ்டம் கொஞ்சமல்ல, எனக்கு எதிலும் அவ்வித கஷ்டம் இருந்ததில்லை. ஆனால் இப்போதோ, நான் பிறருக்கு கொடுக்கிற விஷயத்தில், மகிழ்ச்சி அடைகிறேன். அதையே நான் அதிகமாய் விரும்புகிறேன் என்று சொன்னார்.

---

## HIS LOVE FOR ANIMAL.

## ஜீவப்பிராணிகளின்மேல் வைத்த அன்பு.

ராபர்ட் பிரௌனிங் என்றவர் நூறு வருஷத்திற்குமுந்தி மே மாதத்தில் பிறந்தவர். ஆங்கில பாஷையைப் பேசும் எல்லா இடங்களிலும் அவருடையப் பிறப்பின் நாள் கொண்டாடப்பட்டது. அவ்விதமாய் அவருடையப் பிறப்பின் நாளை கொண்டாடுவதற்குக் காரணம் என்னவென்றால், இவர் அதிக நல்ல மனுஷனும், இங்கிலாந்து தேசத்தில் பிறந்த பெரிய கவிஞர்களில் ஒருவராகவும் இருந்தார். இவருடையத் தாயார் விசேஷித்த விதமாய் புஷ்பங்களின்பேரிலும் ஜீவப்பிராணிகளின்பேரிலும் அதிக பிரீதியுடையவர்கள். இக்குணத்தை இவரும் இவருடைய தாயாரிடத்திலிருந்து சுதந்தரித்துக்கொண்டார். அவரிடத்தில் ஒரு விபரீதமான வல்லமையிருந்தது. அதனால் அவர் மறைவிடங்களிலுள்ள பல்லிகளையும், சிலந்திப்பூச்சிகளையும் ஒருவித மௌன பாஷையின் மூலமாய் நயப்படுத்தி, அவைகளை தமக்கு வசப்படுத்தக்கூடியவராய் இருந்தார்.

மண்டூகங்களைக்கூட வசப்படுத்தவும், தோட்டத்திலுள்ள பாப்பாத்தி பூச்சிகளையும் தமக்கு இணங்கி வரும்படி செய்வதில் பேர்பெற்றவராய் இருந்தார். இவருடைய ஜீவகாலமெல்லாம், இவ்விதப் பிராணிகளின்பேரில் அவருடைய அன்பு பெருகிக்கொண்டே வந்தது.

இவர் பேர்போன ஒரு கவிஞனாய்த் தேறியிருந்தபோது, இவருடைய வீட்டில் சிநேகிதர்கள் பலவிஷயத்தின்பேரில் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, அச்சம்பாஷணைகளுக்கு தடை உண்டாகத்தக்கவிதமாய் இவருடைய வீட்டின் பின்புறத்திலிருந்து கீச் கீச் என்கிற சப்தம் கேட்கும். அப்போது பிரௌனிங் என்பவர்: "அதோ அங்கே என் செல்லங்களிருக்கிறது, அவைகள் அதிக பக்ஷமுள்ள பிராணிகள்" என்று சொல்வார். அந்த செல்லங்கள் எவையென்றால்: அவலக்ஷணம் பொருந்திய இரண்டு வாத்துகள்தான்.

## A LITTLE GIRL'S DEED.

## ஒரு சிறு பெண்ணின் செய்கை.

ஒரு வாரத்திற்கொருமுறை பிரசுரஞ்செய்யப்படுகிற ஒரு பத்திரிகையுண்டு. அதன் விசேஷம் என்னவென்றால், உலகத்தில் நன்மைக்கென்று செய்யப்படுகிற ஊழியத்தில், சிறு பையன்களும் சிறு பெண்களும் எவ்வளவுதாம், அவ்வூழியத்திற்கு உதவிக் கருவிகளாய் இருக்கிறார்களென்கிற விஷயத்தை தெரிவிக்கும் பொருட்டு, அதற்கென்று அந்த பத்திரிகையில் ஒரு பிரத்தியேகமான இடம் குறித்து விடப்பட்டிருக்கிறது. அப்பத்திரிகையில், ஒரு சிறுபெண் செய்த ஒரு பெரிய நன்மையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணின் பெயர் ராகேல். சாதாரணமாய் அப்பிள்ளையை "குருட்டு ராகேல்" என்று அழைப்பது வழக்கம். ஏனென்றால் அந்தப்பெண் இரண்டுக் கண்ணும் தெரியாத குருடி. நியாய சட்டங்களை உண்டுபண்ணும்பட்டணமாகிய ஆல்பனியென்றொரு பட்டணம் உண்டு. அங்கேதான் நியாயசாஸ்திரங்கள் உண்டுபண்ணுகிறது. அந்த இடத்திற்கு இக்குருடியான இச்சிறுபெண் பிரயாணப்பட்டு போனாள். அதன்பிறகு அங்குள்ள நியாயசாஸ்திரத்தை உண்டுபண்ணுகிற சாஸ்திரிகளைக் கண்டு உலகத்தில் குருடர்களாய் பிறந்திருக்கிற குழந்தைகளுக்கு கவர்ண்மெண்டார் நன்மைசெய்ய வேண்டுமென்று அவர்களோடு அதிகமாய் வழக்காடினாள். இவள் இவ்விதமாய் வழக்காடுகிறதற்கு முந்தி சர்க்கார் எட்டு வயதுக்குக் கீழ்பட்ட பிள்ளைகளை, அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆனால் இந்தக் குருடியான சிறு பெண் அந்த நியாயசாஸ்திரிகளிடம் அதிகமாய் தர்க்கித்து, குருடர்களாய் பிறந்திருக்கிற சிறுபிள்ளைகளுடைய நிர்ப்பந்த நிலைமையை வெகு நேர்த்தியாய் அவர்களுக்கு எடுத்துக்காட்டினபடியால், இவளுடைய கனிவான நியாயம் அங்கிகரிக்கப்பட்டது. இவள் இவ்விதமாய்ப் பேசி தன் சொந்த இடத்திற்கு வந்தவுடன், இவளுக்கு சர்க்காரிடமிருந்து ஒரு தந்தி சமாச்சாரம் வந்தது. அதிலுள்ள விஷயம் என்னவென்றால்: "குருடர்களாய்ப் பிறந்திருக்கிற பாலர்கள் எல்லாரும், அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற பாடசாலையில் வந்து சேரலாம்" என்பதே. இவ்வளவு பெரிய நன்மை உண்டானதற்குக் காரணம், குருடியாய் இருந்த அச்சிறுபெண்ணின் செய்கையே.

## THE BEAUTY OF HOLINESS.

## பரிசுத்தத்தின் இலக்ஷணம்.

ரோமபுரி பட்டணம் சித்திரம்வரையும் தொழிலுக்கு பேர்போன இடம். அதனால் பற்பல இடங்களிலிருந்து ஜனங்கள் இத்தொழிலை கற்றுக்கொள்ள அவ்விடத்திற்குப்போவது சகஜம். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் ஒரு வாலிபன் சித்திரம்வரையும் தொழிலை கற்றுக்கொண்டுவர ரோமைக்குப் போனான். அவனைப்பற்றி ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த வாலிபன் அப்பட்டணத்திற்குப் போய் தன் தொழிலை கற்றுக்கொண்டு அங்கு தரித்திருந்தான். அதன் பிறகு சில நாள் பொருத்து, தூரதேசத்திலிருக்கிற அந்த வாலிபனுடைய தாயாருக்



கும், சகோதரிக்கும் இவனைப்பற்றிய சமாச்சாரம் வந்தெட்டியது.

அதாவது அந்த வாலிபன் அந்த இடத்தில் தன்னை காத்துக்கொண்டு நல்ஜீவியம் செய்யாமல் தன் பெயரை அதிகமாய் கெடுத்துக்கொண்டான் என்பதே.

இந்த துக்ககரமான செய்தி அந்த ஏழை தாய்க்கும் சகோதரிக்கும் அதிக மனநோவை உண்டுபண்ணினது. கடைசியாக இவனுடைய தாயும், சகோதரியும் அதிகமாய் யோசித்து, இவனை எப்படியாகிலும் போய்ப்பார்த்து, அவனுக்கு எந்த விஷயத்திலாகிலும் நன்மை செய்து அவனுடைய தீயபழக்கத்திலிருந்து அவனை திருப்பவேண்டுமென்று இந்த இரண்டுபேரும் பிரயாணப்பட்டு அவ்வாலிபனிருக்கும் இடத்திற்கு போய்ச் சேர்ந்தார்கள்.

அந்த வாலிபன் தன் தாயாரை கிட்டென்றுப் பார்த்தவுடனே அதிக ஆச்சரியத்துடன், "அம்மா, இது என்ன உங்களைப் பார்க்கும்போது ஆச்சரியமான முகம் காணப்படுகிறதே இதற்குக் காரணம் என்ன? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்கிறதைப்போல் உங்கள் இருதயத்தில் உள்ள சந்தோஷம், முகத்தில்விசி காட்டுகிறதே," என்று சொன்னான், அதற்கு அவனுடைய சகோதரி, தன் சகோதரனைப் பார்த்து "அம்மா அதிக ஊக்கத்தோடு சிலநாளாய் ஜெபம் செய்து வந்தார்கள்" என்று சொன்னாள். அதற்கு அந்த வாலிபன், "அப்படியா, ஜெபம் முகத்தை அழகுப்படுத்துகிறது. பார்க்கிறதற்கு அதிக விருப்பத்தை கொடுக்கக்கூடிய பதிவான முகம் அம்மாளுக்குக் காணப்படுகிறதே இதற்குக் காரணம்ஜெபந்தானோ?" என்று வாலிபன் சொன்னான். அந்தம்மாளுடைய முகம் அவ்வித வித்தியாசமுள்ளதாய் காணப்பட்ட இரகசியம் என்னவென்றால், மகனுடைய ஜீவியத்தைக் கேள்விப்பட்ட நாள்முதற்கொண்டு அவனுக்காக கர்த்தரோடு அதிக தாபந்தத்தோடு ஜெபித்து போராடிக்கொண்டு வந்தாள். இவ்விதமாய் ஜெபம் செய்துவந்ததினால் அந்தம்மாளுக்கு முகத்திலே அதிக அழகானகளை காணப்பட்டது. உண்மையான ஜெபம் மனுஷர்களை மறுரூபப்படுத்துகிறது. ஜெபத்தின் மூலமாய், கர்த்தரோடு ஐக்கியப்படும்போது சுத்த இருதயத்தை மாத்திரமல்ல, ஆனால் நம்முடைய ஜீவனையும் சுத்தப்படுத்தி நல்ல தேஜசையும், முகக்களையையும் கொடுக்கிறது. பாவமும் ஜெபமும் ஒன்றாய் போக முடியாது." பாவஞ் செய்துக்கொண்டே ஜெபம் செய்வது பயன்படாது. நாம் இவ்விடத்தில் பேசிக்கொண்டு வருகிற பரிசுத்தத்தின் இலக்ஷணம் எதுவென்றால், பரிசுத்தத்தோடு கூடிய அழகை பிறப்பிப்பதுதான்.

நாம் உண்மையான ஜெபத்தோடு இயேசுவின் முகத்தை பார்க்கும்போது அவருடைய மகிமை நம்மேல் உதிக்கிறது. அந்த மகிமை நம்மூலமாய் நம்மை சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்கு பிரதிபிம்பிக்கச் செய்கிறது. இயேசுநாதர் உலக சஞ்சாரம் செய்தபோது அவர் அடைந்த பரிசுத்த ஜீவியத்தை நாம் பெற்றிருந்தால் அதை மற்றவர்களுக்கு பிரதிபிம்பியாமலிருக்கமாட்டோம். அந்த மகிமையான ஜீவியம் நமக்கு எப்படி வருகிறதென்றால் இயேசுநாதரோடு அதிகமாய் பழகி அவரை அடிக்கடி தனித்து சந்தித்து, அவருடைய வழிகளை பின்சென்று அவருக்கென்று ஜீவிக்க நம்மை ஒப்புக்கொடுப்பதினாலேதான். மரணம், வந்தா

லும், முகத்தில் ஒளிதங்கும். அதைப் பார்க்கும் மற்றெல்லாரும் ஆச்சரியத்தால் நிறப்பப்படுவார்கள்.

## A NEW NATION.
## ஒரு புதியக் கோத்திரம்.

சமீபமாய் சீனராஜ்யத்திற்கு உண்டான பிரஜாதிபத்திய உற்பத்திக்கு நிகரான விஷயம் வேறெங்கேயாகிலும் நடந்ததாக, ஒருவேளை உலகச் சரித்திரத்திலும் இருக்காது.

1912-ம் வருஷத்தில் அக்கீழ் நாட்டாருக்கு நேரிட்ட சம்பவங்களினாலும், அவர்களுக்கு பிரஜாதிபத்தியம் உண்டானபடியினாலும், அந்த வருஷம் முதற்கொண்டு ஒரு பேர்போன காலசந்திபாக சரித்திரத்தில் குறிக்கப்படும் என்பதற்கு சந்தேகம் என்ன ?

உலகத்தில் அதிக பழமையாகவும், பின்னுக்குப் போகக்கூடிய அவ்வளவு மந்த நிலைமையில் நேற்றையதினம் காணப்பட்ட இச்சீன ராஜரீகம் இன்றைக்கோ அது தன் பிரஜாதிபத்தியத்தை உடைத்தாயிருக்கிறது. இவ்வித ஆளுகையைக் குறித்து அமெரிக்கா நாட்டில் பிரஜாதிபத்தியம் வருகிறவரையிலும், தற்காலத்திய நவீன அறிவும் அறிந்துகொள்ளக்கூடாமலிருந்தது.

இந்தாதன மாறுதலைப் பிறப்பித்ததற்குறிய சில காரணங்களும், அதற்கு சம்பந்தப்பட்ட சில சம்பவங்களும் நம்முடைய காதுகளாற் கேட்பதற்கு விருப்பத்தை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இப்பழமையான இச்சீனராஜ்ஜியத்தில் இந்தவிதமான மாறுதல் உண்டானதற்குக் காரணம் எதுவென்றால், அச்சீன வாலிபர்கள் வெளியேறி சில வருஷங்களாய் இதரதேசத்தில் கல்வி தேற்றி அடைந்ததினால்தான் என்றும், முக்கியமாய் அநேக சீனவாலிபர்கள் அமெரிக்கா ஐக்கிய நாட்டிற்குச் சென்று அங்கு கல்விதேற்றி அடைந்ததினால்தான் இம்மாறுதல் உண்டானதென்று சீனர்கள் சொல்லுகிறார்கள்; வெளியேறி இதர நாட்டில் கல்வித்தேற்சியடைந்த வாலிபர்களில் அநேகர் கிறிஸ்து சமயத்தை தழுவினவர்கள்.

பழைய ராஜரீகத்திற்கு விரோதமாய் எதிர்த்து நின்ற இவர்களெல்லாரும், அமெரிக்கா நாட்டின் பிரஜாதிபத்திய ஆளுகையையே முன்மாதிரியாக வைத்து, “இனி நாங்கள் யெல்லாரும் அடிமைகளாய் இருக்கமாட்டோம்” என்று சொன்னார்கள். பழைய ராஜரீக அரசாட்சியில் அநேக தப்பிதங்கள், தாங்கக்கூடாமலிருந்தது உண்மை.

இச்சீனத் தேசத்து ஜனங்களுக்கு நேரிட்ட போரில் கிறிஸ்தவ மிஷனெரிமார்கள்தான் அவர்களுடைய சிநேகிதர்களாகக் காணப்பட்டார்கள். அதினிமித்தமே, யுத்தகாலத்தில், மிஷனெரிமார்களுக்கு ஒரு அபாயமும் நேரிடாமல் காப்பாற்றினார்கள். சில வருஷங்களுக்குமுன் பாக்ஸர் என்கிற வகுப்பார் எழும்பினபோது, அந்நிய நாட்டாரை கொலைசெய்யவேண்டும் என்பதே அவர்களுடைய சத்தம். அந்நாடு முழுவதும் பரவியிருந்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஆனால் இப்போது உண்டான கலகத்திலோ நேர்விரோதமாய் நடந்தது. அதாவது, அந்நிய நாட்டாருக்கு ஒரு தீமை செய்யாமல் அவர்களை காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சியே.

(இன்னும் வரும்).



## CHILDREN'S COLUMN.
## சிறுவர்க்கேற்ற விஷயம்.

ஒரு தேசத்தில் ஒரு பையனிருந்தான். அவன் தன் தாயாரால் அதிக செல்லமாய் வளர்க்கப்பட்டுவந்தான். ஒரு நாள் அச்சிறுபையன் தன் வீட்டைவிட்டு வெளியேறி விளையாடிக்கொண்டிருந்தபோது ஒரு புதரிலிருந்து ஐந்து சிறு முட்டைகளை கண்டு எடுத்தான். அவைகளைக் கொண்டுபோய் தன் தாயினிடம் காண்பித்தான். தாய் அம்முட்டைகளை அதிக கவனத்தோடு சோதித்துப் பார்த்து, இம்முட்டைகள் பக்ஷிகளின் முட்டைகளல்ல, ஆனால் இவைகள் பாம்பின் முட்டைகள் ஆகையால் அவைகளை கையில் வைத்து விளையாடவேண்டாம், உடனே எறிந்துவிடு என்றுச்சொன்னாள். ஆனால் அந்தப் பையனோ அம்முட்டைகளை எறிந்துவிட பிரியமில்லாமல், அவைகளைத் தன் கையில் வைத்துக்கொண்டு விளையாட விரும்பினான். அவனுடைய தாயாரோ அவனை எவ்வளவு வருந்திக் கேட்டாலும் அவைகளைப் போடாமல் அழுதுக்கொண்டிருந்தான். கடைசியாய், அவன் அழுகிறதைப் பார்த்தத் தாயார், திரும்பவும் பலவந்தம் செய்யாமல் சும்மா விட்டுவிட்டாள். இம்முட்டைகளை வைத்துக்கொண்டு இச்சிறுபையன் ஒருநாளெல்லாம் விளையாடிக்கொண்டிருந்து பிறகு இராத்திரி அவன் படுக்கைக்குப் போகும்போது, அவன் போர்த்துக்கொள்ளும் கம்பளியினால் அம்முட்டைகளை சுற்றி தன் தலைமாட்டில் வைத்து நித்திரை செய்தான். பிறகு அவன் காலையில் எழுந்து அக்கம்பளியில் சுற்றி வைத்த முட்டைகளை பிரித்து பார்த்தபோது, அம்முட்டைகள் எல்லாம் வெடித்து அதிலிருந்து புழுவைப்போல், பாம்புக்குட்டிகள் நெளிந்துக்கொண்டிருந்தது. இவைகளைக்கண்ட அந்தப் பையன் அதிக சந்தோஷத்தால் பூரித்து, தன் தாயிடம் காட்டினான். தாய் அவனை எவ்வளவுதூரம் வருந்திக்கேட்டும், அக்குட்டிகளைப் போடாமல் வைத்து வளர்த்துக்கொண்டு வந்தான். தினந்தோரும் இவன் இவ்விதமாய் இக்குட்டிகளோடு விளையாடி படுக்கைக்கு போகும்போதெல்லாம், தன் தலைமாட்டில் வைத்து தூங்குவான். இவன் இப்படியே சில நாள் செய்துக்கொண்டு வந்தான். ஒருநாள் காலையில் இவன் வெகுநேரம் படுக்கையைவிட்டு எழுந்திராமலிருந்தான். அப்பொழுது அவனுடைய தாய் அவன் இன்னும் நித்திரை செய்கிறான் என்று நினைத்து அவன் பெயரைச்சொல்லி கூப்பிட்டு எழுப்பினாள். பையனோ ஒரு சத்தமும் செய்யாமல் மௌனமாய் இருந்தான். அப்பொழுது அவனுடைய தாய் அப்பையனிடம் போய் தட்டிப் பார்த்தபோது அவன் செத்துப்போயிருந்தான். தலைமாட்டில் வைத்து வளர்த்துவந்த பாம்புகுட்டிகள் பெரிதாய் வளர்ந்துவந்தபடியால் விஷமுண்டாகி, ராத்திரியில் அவன் நித்திரை செய்யும்போது தீண்டிவிட்டது. கடைசியில் பையன் செத்துபோனான். இதைப் பார்த்த தாய் கதறிகதறி அழுதாள். அழுவதினால் என்னப் பிரயோசனம். “அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வருமா.”

பாவத்தோடு நெருங்கி, பாவத்தோடு விளையாடி சந்தோஷப்படுகிறவர்களுடைய கதியும் அப்படித்தான். சந்தோஷ

மாகக் காணப்படுகிற பாவம், கடைசியில் ஆராத வேதனையையும், தீராத சஞ்சலத்தையும் உண்டுபண்ணி இருதய சமாதானத்தைக் கெடுத்து மானத்தை உண்டுபண்ணுகிறது. இத்தேசத்தில் அநேக குடியர்களும்; மதுபானத்தின்மேல் பிரியம்வைத்து அப்படியே அதற்கிரையாய்ப் போகிறார்கள்.

ஆகையால், நாம் அதிக விழிப்புள்ளவர்களாய் பாவம் நம்மை ஆண்டுகொள்ளாதபடிக்கு பாவநாசராகிய கிறிஸ்து நம்மை ஆண்டுகொண்டு, நம்முடைய பாவம் நீக்கிரகமாகவேண்டிய வழியைத் தேடிக்கொள்ளவேண்டும்.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | | |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ரூ. அ. ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனுன தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைமையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100 க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஞுசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசித்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனுனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு .. ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ரூன்-இல்-வானைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |

25

# மாதர் மித்திரி.

புத். உக. கக௯௧உ ௵ - நவம்பர்மீ . இல. ரு.

COME TO THE SAVIOUR.

இராகம், சமாசு. அடதாளசாப்பு.

பல்லவி.

வா, பாவி! கர்த்தரின் அண்டைக்கு வா.

சரணங்கள்.

1. பாவியே, இன்னும் பயமின்றிப் பாவத்தில் நிலைத்திருக்காதே ;—இப்போ
தாவியே யேசுபெருமானை அழைக்கிறார், தாமதஞ் செய்யாதே.— வா

2. பாவநாசர் உனக்கென்று சிந்தின ரத்தம் அதோபாராய் ?—உலை
யாசையை விட்டகன் யேசுவின் பந்தியில் இச்சணமே சேராய் ?— வா

3. ஆபத்துக்குந் தேவ கோபத்துக்குந் தப்பத் தீவிரமாயோடிவா ;—உன்
பாவத்தின் சாபத்தை நீக்க வந்த பரிசுத்தரின் அண்டைக்குவா.— வா

4. காலத்தை வீணாய்க் கழித்துவிட்டால் இனி யெப்போ குணப்படுவாய் ?—நீ
ஜாலம்பண்ணித் தேவ சாபத்தைத் தேடாமல் இப்போ குணப்படுவாய்.— வா



THE LATE MISS KRUPABHAI CHOWEY.

கிருபாபாய் சோவீ.

## A BEAUTIFUL LIFE.

## ஓர் சிறந்த ஜீவியம்.

கிருபாபாய் சோவீ பம்பாய் பட்டணத்தில் வசித்த ஓர் மாது. அவளுடைய தகப்பனார் வாலிபத்தில் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்; ஆகையால் அவள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாள். பெற்றோர் கிறிஸ்தவர்களாக இருப்பதால், பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள்தான் என்பது சாதாரணமான வழக்கச்சொல். கிருபாபாய் சோவீயினுடைய விஷயம் மிகவும் விசித்திரமானது. அவள் தன் முழு இருதயத்தோடும் தன் தேவனை நேசித்தாள். தன் விளையாட்டுத் தோழர் தோழிகளையும் அவள் மிகவும் நேசித்தபடியால், அயலகங்களிலுள்ள பிள்ளைகளையெல்லாம் ஒன்றாக சேர்த்துக்கொள்வாள். அவர்களில் அநேகர் தன் தகப்பனுடைய குமஸ்தாக்களின் பிள்ளைகளும், அக்கம்பக்கங்களிலே குடியிருந்த பட்டாளத்தார்களுடைய பிள்ளைகளுமாய் இருந்தார்கள். அவர்களைக் கூட்டிவைத்து கிறிஸ்தவ பாடல்களை பாடி இயேசுவைப்பற்றி அவர்களிடத்தில் பேசுவாள்.

அந்த அம்மாள் பெரியவளாய் வளர்ந்தபோது அவர்களுடைய கிறிஸ்தவ ஜீவியமும் வளர்ந்துகொண்டே வந்தது. அவள்



உறுதியான தீர்மானமும், சந்தோஷமும், உத்தம குணமும் உடையவளாயிருந்தாள்.

பம்பாய் பட்டணத்து வீடுகளிலுள்ள ஸ்திரீகளுக்கு தேவனுடைய வசனத்தை போதிப்பது அவள் தான் அழைக்கப்பட்ட ஊழியம் என்று உணர்ந்து, அதற்குத் தன்னை தகுதியுள்ளவளாக்கும்படி அமெரிக்கா கண்டத்திற்குப் போய், அங்குள்ள போதனைப்பியாச பாடசாலையில் சேர்ந்து ஒரு வருஷம் படித்து வந்தாள்.

இந்தியாவுக்குத் திரும்பி வந்தபோது ஊக்கத்துடன் தன் வேலையை ஆரம்பித்தாள். ஆனால் சீக்கிரத்திற்குள்ளாக லக்னௌ பட்டணத்தில் விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டிருந்த தன் இளைய சகோதரிக்கு உதவிபுரியும்படி அழைக்கப்பட்டாள். தன் சகோதரியின் கொடிய வியாதி இலகுவாகுமட்டும் அவளோடுகூடவே இருந்து உதவிசெய்து, பூரணசுகம் வந்தவுடன் இருவரும் பம்பாய்க்குத் திரும்பி வந்தார்கள்.

ஆனால் சகோதரியைப் பிடித்திருந்த வியாதி இப்பொழுது கிருபாபாயையும் தாக்கிற்று. அவளுடைய வேண்டுகோளின்படி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டாள். துவக்கத்தில் அவள் சீக்கிரம் சுகப்படுவாளென்ற நம்பிக்கை காணப்பட்டபோதிலும் பத்தொன்பதாம் நாளில் சடுதியாக ஜுரம் அதிகரித்தது. அந்த ஜுரத்திலிருந்து அவள் சௌக்கியப்படவேயில்லை.

அவளுடைய வியாதி காலத்தில் தன்னையும் தன் நோவையும் குறித்து சிந்தனை கொள்ளாமல் மற்றவர்களைக்குறித்தே எப்பொழுதும் எண்ணமுள்ளவளாய் தான் நேசித்த இரட்சகரண்டை மற்றவர்களை எப்படிக் கொண்டுவந்து சேர்க்கலாம் என்றே ஏக்கமுள்ளவளாய் இருந்தாள். தனக்கு சிகிச்சைசெய்த தாதிகளைப் பார்த்து, "நான் கிறிஸ்தவள், எனக்கு அருமையாயிருக்கிறவரும், இவ்வளவு நன்மைகளை எனக்கு செய்தவருமாகிய என் இரக்ஷகரை நீங்களும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று சொல்வாள். துவக்க முதலே தன் முடிவு சமீபமாய் இருக்கிறதென்பதை உணர்ந்ததுபோல் காணப்பட்டாள். தன் மகளை இறக்கக்கொடுத்த ஒருவர் அவளை வந்து பார்த்தபோது அவள் "நான் சீக்கிரத்திற்குள் ஆலிஸைப் பார்ப்பேன்" என்று சொன்னாள்.

அடிக்கடி தன் இனிய குரலால் கீதங்களைப் பாடிக்கொண்டிருப்பாள். ஒருநாள் அவளுடைய சகோதரி அவளைப் பார்க்க வந்தபோது, தன் கண்களை மூடிக்கொண்டு "என் ஆண்டவரும் நானும்" என்கிற பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள். சட்டென்று தன் கண்களைத் திறந்து "ஆம் அக்கா, என் சுகத்திலும், சந்தோஷத்திலும், என் ஊழியத்திலும், எல்லா இடங்களிலும், என் வியாதியிலுங்கூட "என் ஆண்டவரும் நானும், என் அருமை ஆண்டவரும் நானும்" என்று சொன்னாள். ஜுரம் அதிக மும்முரமானபொழுது இருபத்து மூன்றாம் சங்கீதத்தை அவள் எடுத்துக்கூறி இந்த சங்கீதம் எனக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது, மரணத்தைப்பற்றி எனக்கு பயமில்லை, நான் சீக்கிரத்தில் இயேசுவுடன் இருப்பேன்" என்று சொன்னாள்.

அவள் தன் சிநேகிதருக்காக அதிகமாக ஜெபித்தாள். முக்கியமாய் தன் சகோதரருக்காக, அவர்கள் உலகவிஷயமாக செல்வமும் சிறப்பும் அடைய

வேண்டுமென்றல்ல, தப்பிதமும் பாவமுமான வழிகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று ஜெபித்துவந்தாள். அவள் சந்தித்து வந்த அந்தப்புர ஸ்திரீகளைப்பற்றி அவளுக்கு மிகுந்த வாஞ்சையிருந்தது. அவர்களைப் பெயர் பெயராகச் சொல்லி ஜெபம்பண்ணி "அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், மெய்யாய் அவர்கள் இரட்சிக்கப்படுவார்களென்ற நிச்சயம் எனக்கிருக்கிறது" என்று சொல்லுவாள். அவளுடைய உயிர் பிரிகிறதற்கு முன்னே, தன்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சகோதரியைப் பார்த்து: "அக்கா நான் உன்னை நன்றாய் உற்றுப் பார்க்கட்டும்" என்று சொல்லி சிறிது நிமிஷங்கள் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்து: "நீ என்னுடைய அருமையான சொந்த அக்காள்" என்று சொன்னாள். அப்புறம் தன்னுடைய அத்தானைப் பார்த்து: "நான் மகாராஜாவுக்கு முன் இப்பொழுது நிற்கிறேன்" என்று சொன்னாள் கடைசியாக "இயேசுவே, இயேசுவே" என்று சொல்லி, சிறிது நிமிஷங்களுக்குள் குழந்தை நித்திரை செய்வதுபோல், மரண நித்திரை அடைந்தாள்.

இருபாயாய் விருதாவாக பிழைக்கவுமில்லை, விருதாவாக இறக்கவுமில்லை. அவள் தன் ஆண்டவரை மகிமைப்படுத்தவும், தான் நேசித்து தன்னை ஆட்கொண்டவரண்டைக்கு மற்றவர்களை கொண்டுவந்து சேர்க்கவுமே அவளுடைய இளிய தொண்டை எப்பொழுதும் திறக்கப்பட்டிருந்தது. அவள் பிறர்நேசமுள்ளவளாய், அவர்களுக்கு எப்பொழுதும் நன்மைசெய்யவே கருத்துள்ளவளாயிருந்தாள். அவள் கட்டாயத்திற்காக ஊழியம் செய்தவளல்ல. சந்தோஷமாகவும் மனப்பூர்வமாகவும் தனக்குள்ளதையெல்லாம் அவள் ஒப்புக்கொடுத்தாள். இந்த ஜீவியத்திலும் அவளுக்கு பிரதிபலன் வெகுவாய்க் கிடைத்தது. இனிவரும் ஜீவியத்தில் கிடைப்பது எவ்வளவு அதிகமோ யாருக்குத் தெரியும்!

அநேகருடைய ஜீவியம் யாதொரு நோக்கமுமற்றதாய் இருக்கிறது. அவளுடைய ஜீவியத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கமிருந்தது. அநேகருடைய ஜீவியம் பயனற்றதாயிருக்கிறது. ஆனால் அவளுடைய ஜீவியத்தில் திரளான பலனுண்டாயிற்று. நாமும் நமக்கு இஷ்டமானால் நம்முடைய ஜீவியத்தை அவளுடைய ஜீவியத்தைப்போலவே சிறப்பும் பிரயோஜனமுமுள்ள ஜீவியமாக்கி கொள்ளலாம்.

---

## GENERAL BOOTH.
## பூத் சேனாதிபதி.

எவரும் கவனித்து மதிக்கத் தகுந்த அருங்கிரியைகளை நடப்பித்தவர்களும், அபரிமிதமான நன்மைகளை உலகத்திற்கு விளைவித்தவர்களுமான ஆங்கிலேய துரைமக்களும், பெருமாட்டிகளும் மரிக்க நேரிடும்போது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு தந்தி சமாச்சாரங்கள் எப்பொழுதும் வருவது சகஜம்.

சமீபகாலத்தில் ஒருவருடைய மரணத்தைக் குறித்து இங்குள்ள சகல பத்திரிகைகளிலும் தந்தி சமாச்சாரம் பிரசுரிக்கப்பட்டது. அதுவழக்கம்போல் இரண்டொரு வரிகளில் வரையப்படாமல், பத்திரிகையின் இரண்டு மூன்று பிரிவுகள் (column) நிறைய எழுதப்பட்டிருந்ததோடு, அவ்விஷயத்தைக் குறித்து பத்திராதிபர்களும் நீண்ட பிரபந்தங்களை எழுதியிருந்தார்கள். அதினால் மரணமடைந்தவர் சாதாரணமான மனிதனல்ல, மிக்க பிரக்கியாதி உள்ளவர் என்று அறிந்துகொள்ளலாம்.

அவருடைய பெயர் சேனாதிபதியாகிய பூத். அவர் இந்த உலகத்தில் அவ்வளவாய் சிரேஷ்டிக்கப்பட்டதற்கு காரணமென்ன? அவருடைய செல்வமல்ல, ஏனென்றால் அவருக்கு செல்வமிருந்ததில்லை. எப்படியென்றால், அவர் மரிக்கும்பொழுது, ஆயிர ரூபாய் தானும் அவரிடத்தில் இருந்ததில்லை. மேலும், அவர் பெரிய கல்விமானாயிருந்ததினாலுமல்ல. ஏனென்றால், வில்லியம் பூத் என்பவர், ஏழைகளான பெற்றோருக்கு பிறந்தவர். சிறு பிராயத்தில் வயிற்றுப் பிழைப்புக்காக மிகுந்த கஷ்டவேலை செய்ய நேரிட்டது. அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறதற்கும் சக்தியில்லாதிருந்தது. அப்படியானால் அவருடைய மரணத்தில் அவரைக் குறித்து நீண்ட தந்தி சமாச்சாரங்கள் அனுப்பப்பட அவரை தகுதியுள்ளவராக்கினதெது? ஜனங்கள் நல்லவர்களாக ஜீவிக்கும்படி உதவி புரிவதற்கு, தம்முடைய ஜீவனைத் தத்தம் செய்ததே காரணம். வேறு அநேக ஜனங்கள் பிறர் நன்மையை விரும்பி உழைத்திருக்கிறார்கள். ஆனால் இவர் செய்ததோ நூதனமும் வித்தியாசமுமான வழி.



அவர் போதக உத்தியோகம் பெற்றார், மற்ற போதகன்மார் வேலையைப் போலவே இவருடைய வேலையும் இருந்தது. ஆனால் லண்டன் பட்டணத்தில் ஓர் பாகத்தில் மிக்க ஏழைகளும் தீழ்ப்பானவர்களுமான ஜனங்கள் மத்தியில் தான் ஊழியம் செய்யவேண்டுமென்று தேவன் நியமித்திருப்பதாக அவருடைய மனதில் உணர்வு உண்டாயிற்று. ஆகையால் அவர் தமக்கு இருந்த வேலையை விட்டுவிட்டு இந்த ஜனங்கள் மத்தியில் போய்க் குடியிருந்து அங்கே ஒரு மிஷனை ஸ்தாபித்தார். அந்த பொல்லாத ஜனங்களை பாவத்தினின்று விடுவிக்கும்படியாக விசேஷ பிரயாசை எடுத்து அதில் சித்தி பெற்றார். தான் நினைத்த வண்ணம் வேலை நடப்பிக்கவேண்டுமானால், நூதன ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டுமென்று காலக்கிரமத்தில் தமக்கு தோன்றியபடியால் தம்முடன் ஊழியம் செய்கிறவர்களை, மார்க்க யுத்த சேனையாக ஒழுங்கு ஏற்படுத்த வேண்டுமென்று கண்டார். தாமே அதற்கு பிரதான சேனாதிபதியாகவும் மற்றவர்கள் சாதாரண யுத்தப்பட்டாள முறைமைப்படி படைத்தலைவர் (Captain), உதவிப்படைத்தலைவர் (Lieutenant), முதலிய அந்தஸ்துள்ளவர்களாகவும் நியமித்துக்கொண்டார். இந்த உத்தியோகஸ்தர் தங்கள் சைநியங்களோடு மேளங்கள் கைத்தாளங்கள் கீதங்கள் ஆர்ப்பரிக்க, ஏழைகளும் இழிவானவர்களுமான ஜனங்கள் குடியிருந்த தெருக்களின் வழியாக ஆரவாரத்துடன் புறப்பட்டுப்போய் தாங்கள் பிரசங்கிக்கப்போகிற கட்டடத்திற்காவது, மைதானத்திற்காவது, ஜனங்கள் வரும்படி தூண்டுவார்கள். சேனையில் சேர்ந்த உத்தியோகஸ்தரில் பலர், இவ்வித ஏழைகள் கூட்டத்திலிருந்தே விடுவிக்கப்பட்டவர்களாயிருந்தபடியால் இவர்கள் கொடுத்த சாட்சி மிகுந்த பலமுள்ளதாயிருந்தது. பிரசங்கத்தின் முக்கிய தோரணைகளிலொன்று: முன்னதாக இரட்சிக்கப்பட்டவர்கள் கூட்டத்தின் மத்தியில எழுந்து நின்று தாங்கள் இரட்சிக்கப்பட்ட விதத்தைக் குறித்தும், கிறிஸ்து தங்களுக்குச் செய்த நன்மைத்

லைக் குறித்தும் வெளிப்படையாகச் சாட்சி கொடுப்பதே. ஒவ்வொரு கூட்டத்திலும் இவ்வித சாட்சி கொடுப்பார்கள். குணப்பட்ட ஒவ்வொருவரும் புறப்பட்டுப் போய் மற்றவர்களையும் குணப்படுத்த வேண்டுமென்று ஒழுங்கு செய்திருந்தது. குடியரும், திருடரும், துர்த்தத்தனமுள்ளவர்களுமான இவர்களுடைய ஜீவியமானது மாறுதல் அடைந்து, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளான ஸ்திரீ புருஷர்களாக விளங்கியதே அவர்கள் வாயினால் கொடுத்த சாட்சிக்கு பலத்த திருஷ்டாந்தங்களாயிருந்தன.

நாளடைவில் இரக்ஷணிய சேனை பெருமிதமாக வளர்ந்து விட்டது. அவர்களுடைய விபரீத வழிவகைகளால் விசப்பும் விரோதமும் உண்டாயிற்று. இந்த இரண்டுமே சேனையின் வேலைகள் அதிகமாய் சித்தியடைவதற்கு மிக்க அநுகூலங்களாய் இருந்தன. முதல் முதல் இவர்களுடைய வேலை லண்டன் பட்டணத்திலுள்ள நிர்ப்பந்த குடிசைப் பாளயங்களிலே துவக்கிற்று. இப்பொழுதோ இவர்களுடைய வேலை நடக்கேறாத ஒரு தேசமும் இடையாது. இத்தேசத்திலும் திரண்ட சேனை வேலை நடந்து வருகிறது. அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள எல்லா தேசங்களிலும் அவர்கள் போய் எங்கும் ஒரேவிதமாகவே தங்கள் வேலையை நடப்பித்து வருகிறார்கள். உலகமெங்குமுள்ள சர்வ சேனைக்கும் பூத் சேனாதிபதியே எப்பொழுதும் தலைமையாகயிருந்தார். சுய இஷ்டமாய் வேலை துவக்கின வேறு யாருடைய பெயரும் இவருடைய பெயரைப்போல இவ்வளவு உலக பிரசித்தி பெறவில்லை. அவருடைய பெயரை அறியாத ஒரு வீடும் இடையாது, இரக்ஷணிய சேனையென்ற அவருடைய சேனை அறியப்படாத நாடும் கிடையாது.

இந்த வேலை விருத்தியடைந்தது மாத்திரமல்ல, சேனையின் விருத்திக்கு அவசியமென்று காணப்பட்ட பற்பல வகையான தொழில் சாலைகள் முதலியவைகளையும் ஏற்படுத்தவேண்டிய அவசியம் நேரிட்டது. அப்படி ஏற்படுத்தப்பட்ட பிரிவுகள் பற்பல விதமாகவும் ஒவ்வொன்றும் மிக்க பிரயோஜனமுள்ளவைகளுமாய் விளங்குகிறது.

பூத் சேனாதிபதி இந்தியாவுக்கு இரண்டு தடவை வந்தார். அவர் மிகவும் அதிசயமான மனிதன், மிகவும் நல்லவர், புத்தியிலும் சாமர்த்தியத்திலும் மகா சிறந்தவர், திரள் ஜனக்கூட்டத்திற்கு தலைமையாயிருந்து நடத்துவதற்கு சிரேஷ்ட சாமர்த்தியம் பொருந்தியவர். இவ்வித இலக்ஷணங்களும், தேவனுக்கென்று தமது ஜீவியத்தை முழுவதுமாய்ப் பிரதிஷ்டை செய்ததுமே இரக்ஷணிய சேனையென்னும் இந்த திரளான கூட்டத்தை ஏற்படுத்தி நடத்தி வருவதற்கு அவருக்கு வல்லமையைக் கொடுத்தது.

பூத் அம்மாள் தன் கணவனைப் பார்க்கிலும் பலவிதத்திலும் மிகவும் அதிசயமான வண்ணம் சுறுசுறுப்புடன் வேலை செய்து வந்தார்கள். அந்தம்மாளுடைய முன்மாதிரியை அநுசரித்து அநேக ஸ்திரீகள் வேலையில் உதவி புரிந்தார்கள். இரக்ஷணிய சேனையில் ஸ்திரீகள் யுத்தத் தலைவர்களாக இருந்து வேலை நடப்பித்து வருகிறது மிகவும் வியக்கப்படத்தக்க காட்சி.

இரக்ஷணிய சேனையில் உத்தியோகஸ்தர்கள் அல்லாத அங்கத்தார் பலர். உத்தியோகம் வகித்திருப்பவர்கள் மாத்திரம் உத்தேசம் 21,000 பேர். இந்த சேனை



34 வருஷங்களுக்கு முன் ஆரம்பமாகி அதிசயமான விதமாய் விஸ்தீரணமாயிற்று. ஜெனரல் பூத்துடைய ஸ்தானத்தில் அவருடைய மகன் பிராம்வல் பூத் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வில்லியம் பூத் சேனாதிபதியின் ஜீவியம் தேவனுக்கென்று முழுவதும் ஒப்புவிக்கப்பட்டு அவராலேயே நடத்தப்பட்டு வந்தது. ஆகையால்தான் அவருடைய வேலை இவ்வளவு விருத்தியும் பிரயோஜனப்பட்டதுமாயிருக்கிறது.

---

A GOOD EXAMPLE.

## ஒரு நல்ல முன்மாதிரி.

---

மிருககாக்ஷிகளுக்காக ஜப்பான் தேசத்தில், விலங்கினங்களைவைக்கும் ஒரு நேர்த்தியான தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில் பழகாத ஒரு காட்டுயானையிருக்கிறது. அது தன்னுடைய சிநேகிதர் இன்னாரென்று அறிந்துகொள்ளக்கூடிய அறிவுள்ள மிருகம். தனக்கு யாராகிலும் தீங்கு செய்கிறவர்களென்று அறியும்போது அவர்களைப்பிடித்து தீங்கு செய்யும். அந்தத் தோட்டத்தில் ஒரு மனுஷன் உண்டு. அவன் அந்த யானையை தன் இஷ்டப் பிரகாரம் தொட்டும், அவனுக்கு அந்த யானை யாதொரு தீங்குச் செய்யாமல் காத்துக்கொள்வான். அந்த மனுஷன் யாரென்றால் விலங்கின் நோயை ஆற்றக்கூடிய ஒரு இரணவைத்தியன். அந்த யானை தனக்கு உண்டான ஒரு கொடிய நோயால் ஆயுத பிரயோக சிகிச்சைக்காக இந்த இரணவைத்தியனிடம் வந்தபடியால், இந்த இரணவைத்தியன் அந்தயானைக்குசிநேகிதனானான். ஒருநாள் இந்த யானை தரையில் படுத்து எழுந்திருக்கும்போது அதனுடைய கண் ரெப்பை ஒரு ஆணியில் மாட்டிக்கொண்டு அந்த இடத்தில் ஒரு அவலக்ஷணமான காயம் உண்டாகி அதிலிருந்து கண் ரெப்பை கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தது. அந்த யானைக்கு இந்த இரணவைத்தியன் எப்படி சிகிச்சைசெய்தான் என்று அவனே சொல்லுகிறதாவது:

"ஒருநாள் இந்த யானைக்கு சிகிச்சை செய்யும்படி அழைக்கப்பட்டேன். ஆனால், அந்த யானை அதிக கொடியதென்று கேள்விப்பட்டு அதற்கு எப்படி நான் சிகிச்சை செய்யக்கூடும் என்று அதிகமாய் பயப்பட்டேன். ஆனாலும், அதற்கு எப்படியாகிலும் சிகிச்சை செய்தே தீரவேண்டுமென்று தீர்மானித்தேன்.

முதலாவது அந்த யானையினுடைய தும்பிக்கையை ஒரு பலமான கயிற்றில் கட்டி ஒரு பெரிய இரும்பு கம்பத்தில் கட்டி வைத்து அதன் அருகில் போகப்பிரயத்தனப்பட்டேன். ஆனால் முடியவில்லை. அந்த பெரிய மிருகம் கொஞ்சநேரத்திற்குள்ளாக அந்தக் கயிற்றை அறுத்துப் போட்டது. அதனாலே நான் அந்த யானைக்கு ஒன்றும் செய்ய இயலவில்லை.

இந்தவிதமான ஏற்பாட்டினால் அதற்கு சிகிச்சை செய்யமுடியாமல் போனபடியால், பலாத்காரமாய் அப்பெரிய மிருகத்திற்கு சிகிச்சைசெய்வது கூடாத காரியம் என்று நான் அறிந்துகொண்டேன். இப்படியிருக்க, கடைசியாய் எனக்கு ஒரு நல்ல எண்ணம் உண்டானது. அது என்னவென்றால்: நான் அங்கிருந்த யானை பாகனை கூப்பிட்டு, அவன் தன் கண்களில் ஏதோ நோய் இருப்பதாக சைகையின் மூலமாய் மாரிசம் செய்யும்படி சொல்லிக்கொடுத்தேன். அவன் அப்படியே தன் கண்களில் நோய் இருப்பதைப்போல அந்த யானையின்முன் பாசாங்கு செய்துக்

கொண்டு என்றான் சிங்கன். நான் உடனே அந்த யானையின்முன் அவனுடைய கண்களை சிகிச்சைசெய்து ஒரு துணியினால் அவனுடைய கண்களைக்கட்டி அனுப்பினேன். இப்படியே மூன்று நாள் செய்தேன்; இவைகளையெல்லாம் அந்த யானை அதிக கவனமாய் பார்த்துக்கொண்டே வந்தது.

கடைசியாய் அந்த மனிதன் மூன்றாவது தரம் என்னிடம் வந்தபோது, அவனுடைய கண்களில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்து, கண்களை கழுவிவிட்டு, தனக்கு கண்கள் நன்றாய் சொஸ்தமானதைப்போல் பாசாங்கு செய்யும்படிச் சொன்னேன். அவன் அப்படியே அந்த யானை கவனிக்கும்படியாக பாசாங்கு செய்து, எனக்கு அவன் அதிக நன்றியாய் இருப்பதுபோல் அநேக சலாம் செய்துவிட்டுப் போனான்.

அதன்பிறகு நான் வெகு தைரியத்தோடே அந்த யானைக்கு சமீபம்போய் ஒரு ஏணியைப்போட்டு அதன்மேல் ஏறி, கருக்கான கத்திரிக்கோலால், அதன் கண்ணிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த செப்பைத்துண்டை கத்தரிக்க துவக்கினபோது, அந்த யானை உடனே ஒரு பெருஞ்சத்தம் போட்டது. அந்தமாதிரியான சத்தத்தை நான் கேட்டதே இல்லை. அதனால் நான் அதிகமாய் பயந்து கீழே குதித்து ஓடினேன். கீழே இறங்கி கொஞ்சதூரம் வந்து அதன்பிறகு அந்த யானையை எட்டிப்பார்த்தபோது, நான் கத்தரிக்கத் துவக்கின அந்த கத்திரிக்கோல் அந்த யானையின் செப்பையின் மேலேயே தொங்கிக்கொண்டிருந்தது. அதன்பிறகு, திரும்பவும் அந்த யானையின் அருகாமையில் போய் அதன்மேல் ஏறி என் உயிரை கெட்டியாய் பிடித்துக்கொண்டதுபோல வெகு பயத்தோடு கத்தரித்தேன். நான் ஆரம்பித்த என் வேலையில் முற்றும் ஜெயமடைந்தேன். ஆகையால் அதன்பிறகு அதற்கு சிகிச்சை செய்யவும், அதன் கண்களை கழுவவும் ஆரம்பித்து எல்லாவற்றிலும் சித்தி அடைந்தேன்.

இவ்விதமாய் அதற்கு சிகிச்சை செய்ய சிலகாலமாய் தினந்தோறும் அந்த யானையிடம் போனேன். அதற்குள்ளாக அந்த யானை என்பேரில் அதிக பிரீதியுள்ளதாகவும் நன்றியுள்ளதாகவும் காணப்பட்டது. நான் அந்த யானைக்கு சிகிச்சை செய்ய போகும்போதெல்லாம், அது தன் முழங்காலை மடக்கி தன் தலையை குனிந்து காட்டும். நான் இவ்விதம் பலாத்காரமாய் சிகிச்சை செய்கிறதற்குப் பதிலாக, உபாயத்தால் அதற்கு சிகிச்சைசெய்து சித்திபெற்றேன். நான் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை இந்த யானையை பார்க்கப் போகிறதுண்டு. நான் போகும்போதெல்லாம் அந்த யானை என்னை அறிந்துக்கொண்டு, தன் சிநேகிதனை என்னை அங்கிகரிக்கிறது.

---

## ANY THING HE MIGHT TOUCH WOULD TURN TO GOLD.

## தொட்டதெல்லாம் தங்கமானது.

---

கிரேக்க தேசத்தில் ஒரு கதை சொல்லுவார்கள். அது என்னவென்றால்: ஒரு காலத்தில் ஒரு இராஜன் இருந்தானாம். அவனுடைய பெயர் மிடாஸ். அவன் எதைவிரும்பிக் கேட்டாலும், அவன் கும்பிட்டுவந்த தேவதை தருமாம். ஆகையால், அவன் ஒருநாள் தன் தேவதையினிடம் சென்று, தான் தொட்டதெல்லாம் தங்கமாகவேண்டுமென்று வேண்டிக்கேட்டானாம். அப்படியே, அந்த ராஜனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அந்த தேவதை வரம் கொடுத்ததாம். இந்தவித வரத்தை அவன் பெற்றதால் அவன் தன் ஜீவகாலத்தில் அறியாத துன்பத்தை அநுபவித்தான். இவன் கல்லுகளையும் மரங்களையும் தங்கமாக்கி கடைசியாய் இவைகளை எல்லாம் பார்த்து: "சீ இவைகள் எல்லாம் இருந்து எனக்கு என்ன பிரயோஜனம், எனக்கு சாப்பிட ஆகாரம் இல்லையே, எனக்கு அதிக பசி எடுக்கிறதே" என்றான். ஏனென்றால், இவன் தொட்டதெல்லாம் தங்கமாக மாறினது. இவன் சாப்பிடும்படி தொட்ட ஆகாரம் தங்கம், குடிக்க எடுத்த தண்ணீர் தங்கம், இவனண்டை வந்த பிள்ளைகளை முத்தமிட்டவுடனே அவர்களும் தங்கம், இவனுடைய மனைவியை தொட்டவுடனே அவளும் தங்கம், எல்லாம் தங்கம். கடைசியாக, இந்த ஐசுவரியத்தால் வெகு பாடுபட்டு திரும்பவும் தன் தேவதையிடம் சென்று, தனக்கு அளித்த அந்த வரத்தை எடுத்துவிடும்படி பிரார்த்தனை செய்தானாம்.

---

## THE GOOD NEED NOT FEAR DEATH.

## பக்தன் மரணத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை.

---

இவ்விருத்தாந்தத்தில் சொல்லப்படுகிற ஒரு விருத்தாப்பியனைப்போல் நம்மிலே யார் மரணத்தைப்பற்றி சொல்லக்கூடும்?

விருத்தாப்பியமான ஒரு மனுஷன் தன்னுடைய எழுபத்தைந்தாம் வருஷத்தை முடித்தபிறகு, தன் சிநேகிதனுக்கு எழுதிய ஒரு கடிதத்திலுள்ள அவருடைய சொந்த வார்த்தைகளை இங்கெடுத்து காட்டுவோம்:



"நான் இன்று எழுபத்தைந்து வயதுடையவனாய் இருக்கிறேன். இவ்வளவு வயதுடையவனாய் இருக்கிறேனே என்பதைப்பற்றி எனக்கு கொஞ்சமேனும் அச்சமும் பயமும் இல்லை. நான் அறிந்தமட்டும் இன்னும் பத்து வருஷம் அல்லது அதற்குமேலே ஜீவிப்பேன் என்று சொல்லக்கூடும். நான் அப்படி ஜீவிக்கும்போது நான் என்னையே கவனித்துக்கொள்ள சக்தியும், நான் நேசிக்கிறவர்களுக்கு உதவியும் செய்யக்கூடுமானால் நான் அப்படி ஜீவிக்க சந்தோஷப்படுவேன். இதோடுகூட, எனக்கு முன்னாலே என்னை விட்டு பிரிந்துபோய் இருக்கிறவர்களை பார்க்கும்படி நான் அதிகமாய் வாஞ்சிக்கிறேன். இதினிமித்தியம் மரணம் எனக்கு ஒரு பயங்கரமானதல்ல. நான் ஒரு மகிமையான ஜீவியத்தில் பிரவேசித்து நாவினால் சொல்லக்கூடாத சந்தோஷத்தை அநுபவிக்க, மரணமானது ஒரு வாசலைப்போல் அதற்குள் வழி நடத்துகிறது என்று அறிந்திருக்கிறேன்.

நான் மரணத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒரு நிச்சயமான ஆறுதல் எனக்கு உண்டாகிறது. அது என்னவென்றால், எப்படியிருந்தாலும் நான் மரணதூதனை சந்திப்பேன், அவன் என்னை தன் கட்கத்தினால் வெட்டுவான், அப்பொழுது நான் அந்த யுத்தத்திலிருந்து ஜெயம்பெற்று நித்திய ஜீவனில் பிரவேசிப்பேன் என்று சந்தேகமில்லாத மன உறுதி எனக்குள் நிலைகொண்டிருக்கிறது."

## WEDDINGS IN AFRICA.

## ஆப்பிரிக்கா தேசத்தில் விவாகம் முடிக்கிற விதம்.

ஆப்பிரிக்கா தேசத்தில் ஒருமனிதன் தனக்கு மனைவியை சம்பாதிக்க வேண்டுமானால், அவளுக்குகாக ஒரு தொகையை கொடுக்கவேண்டும். தெரிந்துக்கொள்ளப்படுகிற மனைவி நல்லவயதுடையவளும், பலமுள்ளவளும், புருஷனுடைய சொந்த வேலைகளை செய்வதில் அவனுக்கு பிரயோசனமுள்ளவளாய் இருக்கவேண்டும். ஒரு மனைவியை நியாயப்பிரகாரம் சம்பாதிக்க பணமோ பொருளோ இல்லாமல் போனாலும், அல்லது வேறே எந்தக் காரணத்தாலோ பணம் கொடாமல் ஒரு பெண்ணை எடுத்து அவளோடு ஜீவித்து, அவர்களுக்கு பிள்ளைகள் பிறக்கிறபோது அப்பிள்ளைகள் தாய்க்கும் தகப்பனுக்கும் சொந்தமானவர்களல்ல. அத்தாய்தகப்பன்மார் அப்பிள்ளைகள்மேல் யாதொரு உரிமையும் பாராட்டக் கூடாது.

ஆப்பிரிக்கா தேசத்தில் பெண்களை வீட்டிலேயே போட்டு அடைத்து வைக்கிற வழக்கம் கிடையாது. பெண்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் எங்கும் நடமாடலாம். அச்சமயங்களில் வாலிபன் தன் மனத்திற்கு தகுந்த மனைவியை தெரிந்துக் கொண்டு, தன் தாயினிடம்போய், தான் தெரிந்துக்கொண்ட பெண்ணை விவாகம் செய்துமுடிக்கத் தக்க ஏற்பாடுகளை செய்யும்படி வேண்டிக்கொள்ளுவான். இவன் இப்படி தன் பிரியத்தை தன் தாயினிடம் சொன்ன பிறகு, தாய் அப்பெண்ணின் தாயிடம் போய் தன் விருப்பத்தை வெளியிடுவாள். அதன் பிறகு அப்பெண்ணின் தாய் இந்த விஷயத்தை தன் வீட்டிலுள்ள எல்லாருக்கும் சொல்லுவாள். இதைக் கேட்ட எல்லாரும், அந்தமாப்பிள்ளை அப்பெண்ணுக்கு தக்க புருஷனாய் இருப்பான் என்று ஒத்துக்கொண்டால், பிறகு இந்த இரண்டுதாய்மார்களும் விவாக காரியத்தை யோசித்து, அதற்குறிய ஏற்பாடுகளை ஒழுங்குசெய்வார்கள்.

இவ்வளவு ஏற்பாடுகள் ஆகிற வரையிலும் பெண்ணுக்கு ஒன்றுமே சொல்லமாட்டார்கள். விவாகத்துக்குறிய எல்லாக் காரியங்களையும் ஒழுங்கு செய்துக்கொண்டு, அதன்பிறகு மாப்பிள்ளையை பெண்ணுக்கு காண்பித்து அவன் தான் உன் புருஷன் என்று சொல்லுவார்கள். சிலசமயங்களில், மாப்பிள்ளையின்மேல் இஷ்டமில்லாததினால், பெண் கதறவும் தடைசெய்யவும் நேரிடுகிறதுண்டு. ஆனால் அவைகளையெல்லாம் பெற்றோர் கவனிக்கமாட்டார்கள். அவளுடைய இஷ்டம் ஒன்றுக்கும் செல்லாது.

விவாகத்திற்கென்று நாள் குறிக்கப்படும் அப்போது மாப்பிள்ளை பெண்ணுக்காக கொடுக்கவேண்டியதை ஆயத்தம் செய்வான். அப்படி கொடுக்கப்படுகிற பொருட்கள் எவையென்றால்: மண்வெட்டி முதலிய நிலங்களைக்கொத்துகிற சாமான்கள் ஏறக்குறைய் தொகையில் இருபது இருக்கவேண்டும். சீட்டி துணி, மணி, நகைகள், பணம், விருந்துக்காக ஒன்று அல்லது இரண்டு ஆடுகள், இவைகளை எல்லாம் மாப்பிள்ளை தன்வீட்டில் சேகரித்துவைத்தபிறகு பெண்ணின் தாயும் இன்னும் சில பெண்களும் போய் இந்த சாமானங்களை பெண்ணின் வீட்டிற்கு கொண்டு வருவார்கள். அப்போது மாப்பிள்ளையும் அவனுடைய தோழர்களும் அவர்களை பின்தொடர்ந்து போவார்கள்.

சில தினங்களாய் பெண்ணின் சொந்தக்காரர் கலியாணத்திற்கு வருவார்கள்.



அப்போது, அவர்கள் ஒவ்வொருவரும் மாப்பிள்ளையிடமிருந்து, சில வெகுமதிகளை எதிர்பார்ப்பார்கள். விவாக காலத்திலெல்லாம், மாப்பிள்ளையை வந்தவர்களெல்லோரும் பரியாசம்செய்து திட்டிக் கொண்டேயிருப்பார்கள், இப்படியே இரவும்பகலுமாய் நடந்துக்கொண்டிருக்கும்.

அவனிடத்தில் ஏதாகிலும் தகாத நடத்தை இருக்குமானால் அவைகளையெல்லாம் வெளியே கொண்டுவந்து அவமானப்படுத்துவார்கள்.

அவர்கள் எல்லாரும் இவ்விதமாய் திட்டி தூஷிக்கிறதை மாப்பிள்ளைக் கேட்டு சகிக்கமுடியாமல் போனால், அவன் அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் இவர்கள் பேசி முடியுமட்டும் ஒழிந்திருப்பான். கடைசியாக அவன் போட்டிருக்கும் வஸ்திரங்களையெல்லாம் உறிந்துக்கொள்ளுவார்கள். இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கையில் பெண் எந்த விஷயத்திலும் பிரவேசிக்காமல் பேசாமல் இருப்பாள். ஆனால் அவளுடைய பந்துக்கள் அவளை வெகுநாளாய் சாப்பிட விடமாட்டார்கள். இப்போது மாப்பிள்ளை தன்னை விவாக புருஷனாக ஏற்றுக்கொள்ள அந்தப் பெண்ணை சம்மதிக்கச் செய்யவேண்டும். சில சமயங்களில் இவளை சம்மதிக்கச் செய்யும்படி ஒரு மாதம் அல்லது ஒரு வருஷங்கூடச் செல்லும். கடைசியாய் அந்தப்பெண் இந்த மாப்பிள்ளையோடு வாசம்பண்ண சம்மதப்படாமல்போனால், வெகுநாள் பொறுத்து பிறகு அந்த மாப்பிள்ளை தகுதியான ஆளை அவளிடம் அனுப்பி, அவளை பலாத்காரமாய் தூக்கிக்கொண்டு வரும்படிச் செய்வான். சில சமயங்களில் பெண் புருஷனுடைய வீட்டில் போய் வாழ பிரியப்படாவிட்டால், புருஷன் பெண் வீட்டில்போய் வசிப்பான். புருஷன் பெண்வீட்டில் குடியிருப்பது மாப்பிள்ளைக்கு பிரியமிருக்கிறதில்லை. ஏனென்றால், மாப்பிள்ளை எப்போதும் மாமியார் எதிரில் உட்காரவேக்கூடாது. மாமியாரை தன் கண்ணினால் ஏறிட்டுப்பார்க்கவும் கூடாது. மாமியாரை எப்போதும் அதிகமாய் கனப்படுத்தவேண்டும்; ஏனென்றால், அவள் தன் மனைவியை பெற்றுக்கொடுத்தபடியால். பெண் புருஷனோடுகூட போக இஷ்டப்படாமலிருப்பது, அவன்மேல் உள்ள வெறுப்பினால் மாத்திரமல்ல, பெண்ணுக்கு புருஷன்மேல் இஷ்டமிருந்தாலும் அவனோடு உடனே போவது ஒரு வெட்கமான காரியம் என்று நினைப்பார்கள். ஒருவேளை தப்பிதவறி பெண் புருஷனோடு உடனே போய்விடுவாளானால், எல்லாரும் அவளை அவமானப்படுத்தி சிலசமயங்களில் துன்பப்படுத்துவார்கள். அதினாலேதான் பெண் அதிலேசாய் புருஷனோடு போகிறதில்லை.

இப்படிப்பட்ட வழக்க பழக்கங்களால் மேற்கொள்ளப்படுகிற தேசத்தார் முற்கூறிய வழக்கங்களை ஒத்துப்பார்த்து யோசிப்பது மிகவும் உசிதம்.

## MAN'S MASTERY OF THE AIR AS A ROADWAY.

## ஆகாயத்தில் பாதைபோட மனுஷனுக்குண்டான வெற்றி.

ஆகாய விமானம் அல்லது பறக்கிற இயந்திரம், ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்கு போகத்தக்க ஏதுவான கருவியாய் ஸ்திரப்பட்டுவிட்டதென்று காணப்படுகிறது ஏறக்குறைய இரண்டு வருஷத்திற்கு முந்திதான் ஒரு பிரான்சுக்காரன், தன் ஆகாய விமானத்திலேறி,

ஆங்கில நீர்க்கால்களை கடந்து பிரயாணஞ் செய்து தன் தைரியத்தை வெளிப்படுத்தி உலகத்தார் எல்லாரையும் ஆச்சரியத்தால் வியக்கும்படி செய்தான். ஜூலைமாதம் கடைசியில் ஒருநாள் பதினேரு பேர் மேல்படி கால்வாய்களை யாதொரு சேதமும் ஆபத்தும் நேரிடாதபடி சுகமாய் கடந்து போனூர்கள். அவர்களில் ஒருவன் ஒரு பிரயாணியைகூட தூக்கிக்கொண்டு போனான். அமெரிக்கா தேசத்தின் சமீபமான இடத்தில் ஒரு துரைமகன் தன் ஆகாய விமானத்திலேறி, பாஸ்டனிலிருந்து புறப்பட்டு, கொஞ்சதூரம் ஒரு பட்டணத்தின் வழியாய் போகும் போது, அங்கே சில மாணக்கர்கள் போட்டி பந்தயமிடுகிறதை ஆகாய விமானத்தில் இருந்துக்கொண்டே, ஒரு பறவை தன் இறக்கைகளை அடித்துக்கொண்டு வட்டமிடுகிறதைபோல் செய்து அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு, அதன்பிறகு நியுயார்க் என்கிற இடத்திற்கு வந்து, திரும்பவும் அந்த இடத்திலிருந்து அநேக ஸ்தலங்களுக்கு சுற்றுப்பிரயாணஞ்செய்தார். அவரும், ஒரு பிரயாணியை அவரோடு கூட்டிக்கொண்டு போனார். ஒரு அபாயமும் கஷ்டமும் நேரிடவில்லை.

இதினுலே, ஆகாய விமானம் கூடிய சீக்கிரத்தில் ஒரு சாதாரண கருவியைப் போல் அபாயமில்லாமல் தானாய் இயங்கும் இயந்திரம்போலாகும்.

---


**Tamil Books and Tracts Published by**

**Methodist Publishing House**

**Mount Road, Madras**

| | | |
|---|---|---|
| வில்லியம் கார்லேடோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | ரு. 0 | அ. 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு | 0 | 8 |
| குருடனை தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100 க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசக்தியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| பசிதாகம் அடைந்தவன் போனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உபமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ஜான்-இல்-வானைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| வாலிபப் பெண்களை மருத்துக்கொண்டு உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்களுக்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |


31

# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௧௨ ௵ டிசம்பர் ௴. இல. ௬.

## HIS LOWLY ESTATE.

இராகம், நாட்டை. சாப்புத்தாளம்.

### கண்ணிகள்.

1. சுந்தரப்பராபரனே,—பரி—சுத்தன் கிறிஸ்தெனும் நித்தியனே,
மைந்தனாய்ப் பிறந்தீரோ?—சுவாமி,
மாம்சத்தில் உருவானீரோ?

2. வானதூதர் போற்றிடவே,—உம்மை—வாழ்த்திப் புகழ்ந்து கொண்டேத்திடவே,
கானத்தொனி எற்றிருந்த—சுவாமி,
காட்டு மடத்தில் உதித்ததென்ன?

3. ஆசை மிகும் ஆபிரகாம்—உரு—வாரும் முன் விண்தல மீதிருந்தும்,
நேசமுடன் பிள்ளை தந்தும்,—அந்த
நீதியான் வங்கிஷம் ஆனதென்ன?

4. ராஜன் தவீ தாண்டவனும்,—அவன்—நன்னும் பல தீமையில் மீண்டவனும்,
தாசன் மகன் ஆனதும் ஏன்?—சுவாமி,
தாவீதின் சந்ததி மேவினதேன்?

5. பொங்கு பல ராசனனே,—விண்ணோர்—போற்றிப் புகழுஞ் சிம்மாசனனே,
தங்குதற் கிடம் இல்லையோ?—சுவாமி,
தாபரிக்க ஒரு ஊர் இல்லையோ?

FLORENCE NIGHTINGALE.

END OF THE WAR AND HOME-GOING.

## பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள் யுத்தமுடிவும், வீட்டுக்குப் போகுதலும்.

5-ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

படுகாயப்பட்டு படுக்கையில் கிடக்கிற வீரர்களுக்கு உதவி செய்கிறதிலும், அவர்கள் படுகிற கஷ்டத்தை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அதற்கேற்ற சிகிச்சை செய்கிறதிலும் இன்னும் பல கடிதங்களை எழுதுகிற விஷயத்திலும் நைற்றிங்கேல் அம்மாளுக்கிருந்த வேலை கொஞ்சமல்ல. இப்படிப்பட்ட இடங்களில் நர்ஸ்மார்களுக்கு தாங்கக்கூடாத அதிக பளுவான வேலையிருக்கும். அதிக பலமுள்ள ஸ்திரீகள்கூட தாங்கமாட்டார்கள். ஆனால் நைற்றிங்கேல் அம்மாள் தேகத்தில் அதிக புஷ்டியும் பலமுள்ளவர்களல்ல. அந்தம்மாள் எடுத்துக்கொண்ட வேலையோ அதிக பளுவானது. அதோடுக்கூட நைற்றிங்கேல் அம்மாளுக்கும் அவர்களைச் சேர்ந்த நர்ஸ்மார்களுக்கும் துக்கமான சந்தர்ப்பங்கள் நேரிட்டுக்கொண்டேவந்தது. அதாவது, நர்ஸ்வேலை செய்யும்படியாக இவர்களோடுக்கூட புறப்பட்டுவந்த சில அருமையான சிநேகிதிகள், இந்த கஷ்டமான வேலையின் நிமித்தம் தங்கள் உயிரை இழக்க நேரிட்டது. இந்த துக்கமான சந்தர்ப்பங்களையும் அவர்கள் பொறுக்கவேண்டியதாயிருந்தது. நைற்றிங்கேல் அம்மாளோடுக்கூடயிருந்து உதவி செய்துக்கொண்டுவந்த ஒரு அழகான வாலிப நர்ஸ் திடீரென்று ஜுரம் கண்டு மரித்துப்போனாள். அவளை அதிகனத்தோடு நல் அடக்கம் செய்தார்கள். நைற்றிங்கேல் அம்மாளுக்கு அதிக அருமையானவள், ஏறக்குறைய இந்தம்மாள் குணத்தையே அவள் வகித்திருந்தாள். இப்படியே இன்னும் சில நர்ஸ்மார்கள் மரித்துப்போனார்கள். நைற்றிங்கேல் அம்மாள்கூட அதிகமாய் வியாதியில் விழுந்தார்கள், ஆனால் படிப்படியாய் கடவுளுடைய கிருபையால் சுகம் உண்டானது. இந்தம்மாள் இன்னும் நெடுங்காலம் மற்றவர்களுக்கு பிரயோசனமாய் இருக்கும்படி கர்த்தர் இந்தம்மாளுடைய ஜீவனைக் காப்பாற்றினார்.

நாள் ஆக ஆக வேலை குறைந்துக்கொண்டே வந்தது. ஆனால் கனமும் மதிப்புக்குரிய நல்ல வேலையை அந்த ஆஸ்பத்திரியில் செய்தார்கள். நைற்றிங்கேல் அம்மாள் ஆஸ்பத்திரியில் வந்து நல்ல வேலைசெய்ய ஆரம்பித்து ஒரு வருஷம் ஆன பிறகுதான் இந்தம்மாளுடைய வேலையை புகழ்ந்து பேசவும் சாக்ஷி கொடுக்கவும் நேரிட்டது.

ஆஸ்பத்திரியில் செய்யப்பட்ட சிறந்த ஏற்பாடுகளினாலும், தாதிமார்கள் எடுத்துக்கொண்ட அரும்பிரயாசத்தினாலும், மருந்து சிகிச்சையினாலும், இடம் அதிக விசாலமாகவும் சுத்தமாகவும் வைத்திருந்ததினாலும், அங்குள்ள வியாதியஸ்தர்கள் சுகப்பட்டுக்கொண்டே வந்தார்கள். அங்குள்ள ஏற்பாட்டைப்பற்றி குறை சொல்லக்கூடாமற்போனது. இந்த ஆங்கில சேனைகளோடுக்கூடச் சேர்ந்துயுத்தம்புரிந்த பிரான்சு சேனைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஆஸ்பத்திரியில் இவ்வளவு நேர்த்தியான ஒழுங்கில்லை. இந்த ஏற்பாட்டிற்கும், இங்குள்ள ஜெயத்திற்கும் அவை முற்றும் விரோதமாயிருந்தது. இங்கிலாந்து தேசத்திலிருந்து தங்களுடைய அருமையானவர்களை யுத்தத்திற்கு



அனுப்பின ஜனங்கள் எல்லாருக்கும் நைற்றிங்கேல் என்கிற பெயரைக் கேட்கும்போதெல்லாம், அந்தம்மாளைப்பற்றி அவ்வளவு நம்பிக்கையும், தைரியமும், ஆறுதலும் உண்டாயிருந்தது. யுத்தத்தில் படுகாயப்பட்டு விழுந்துகிடக்கிற வீரர்களின் மனைவிகளும், தாய்மார்களும், நைற்றிங்கேல் அம்மாளுடைய பாதுகாப்பு இல்லாமலிருந்திருக்குமானால் தங்களுடைய அருமையானவர்களின் உயிருக்கு ரிய மோசம் நேரிட்டிருக்கும்; அந்தம் ளாலேயே, அநேகர் மோசத்திலிருந்து க்ஷிக்கப்படுகிறார்கள் என்று நினைத்தார் ள். இங்கிலாந்திலிருந்து ஸ்திரீகளிட ருந்து ஏராளமான கடிதங்கள் நைற்றிங் கல் அம்மாளுக்கு வந்துக்கொண்டே ருந்தது. வியாதியஸ்தர்களைப்பற்றி திய அதிக ஆவலாய் காத்துக்கொண் ருந்த அந்த ஸ்திரீகளுக்கு பதிலாய் ழுதிய கடிதங்களில் அடங்கியிருந்த றுதல்களை விவரிக்க முடியாது. அவ் ளவு நேர்த்தியான ஆறுதலடங்கிய கடி ங்களை அவர்களுக்கு எழுதிக்கொண்டே ந்தார்கள். சில சமயங்களில், இந்தம் ள் சில ஸ்திரீகளுக்கு எழுதும் கடிதங் ளில் துக்கமான சங்கதிகள் இருக்கும், லும் அந்த கடிதங்களில் இந்தம்மா டைய மன உருக்கமான அநுதாபங்க ம் ஆறுதல்களும் அடங்கியிருக்கும்.

கடைசியாக யுத்தம் நிறுத்தப்பட்டு மாதானம் உண்டானது. அதினாலே நைற்றிங்கேல் அம்மாள் சீக்கிரம் கப்பல் ஏறி இங்கிலாந்து தேசம் போக நேரிட்டது. அவர்கள் அவ்விதமாய் போகும்போது இந்தம்மாளுடைய ஊழியத்தில் கிடைத்த சிறந்த வெற்றியைப்பற்றி வழியில் ஜனங்கள் அங்கங்கே வெற்றியைச் சிறந்து பேசவும் பார்க்கவும் வருவார்கள் என்று இந்தம்மாளுக்கு தெரிந்திருந்தபடியினாலும், அப்படிப்பட்ட புகழ்ச்சியை அவர்கள் கருதாமலிருந்ததினாலும், அதையெல்லாம் ஒருவாறு ஒழித்துவிடும்படி ஒரு சாதாரண ஸ்திரீயைப்போலவும், தன் பெயரை சிமித் அம்மாள் என்று மாற்றிக்கொண்டார்கள். இதினாலேயே இந்தம்மாளுடைய தாழ்மையை காட்டுகிறது மாத்திரமல்ல; அதோடு புகழ்ச்சியையும், வீண் ஆடம்பரத்தையும் கருதாதவர்களென்று விளங்குகிறது. இந்தம்மாள் இவ்வித உபாயமெடுத்து பிரயாணம் செய்தபடியால் இந்தம்மாளை பார்த்தவர்களெல்லாரும் அது யாரோ என்று சொல்லத்தக்க விதமாய் கவனிக்க இடமில்லாமலிருந்தது. இவ்விதமாய் அந்தம்மாளுக்கு வழியில் யாதொரு தொந்தரவும் சந்தடியுமில்லாமல் சுகமாய் இங்கிலாந்து தேசம் வந்தார்கள். ஆனால் இவ்விதமாய் அநேக நாளாய் அந்தம்மாள் தங்களை மறைத்துவைக்க முடியுமா? ஜனங்கள் அந்தம்மாளை இன்னார் என்று கண்டுபிடித்துக் கொண்டார்கள். அநேக ஜனங்கள் இந்தம்மாளை பார்க்கவும் தங்கள் தங்கள் நன்றியையும் அன்பையும் காட்டும்படி அதிக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள். அந்த ஜனங்கள் தங்கள் நன்றியை காட்டும்படி என்னத்தைக் கொடுப்பார்கள்? அதுதான் ஒரு பெரிய கேள்வி. இதற்கு தக்க விடையை சீக்கிரத்தில் கொடுக்கமுடியாது. ஏனென்றால், நைற்றிங்கேல் அம்மாள் இந்த ஊழியத்தில் பணத்தை கருதவில்லை, கனத்தையும் தேடவில்லை, புகழ்ச்சியையும் விரும்பவில்லை. இந்தம்மாள் அரும்பிரயாசையோடு இவ்வித சிறந்த ஊழியஞ்செய்தது கடவுளைப்பற்றிய அன்பினாலும், அந்த ஜனங்கள் பேரிலுள்ள அன்பினாலுமேயல்லாமல் வேறல்ல. அந்தம்மாள் தன்

ஆழியாத்திலே எங்குமில்லாத நன்மைகளையும் எதிர்பாராமல் தவறுதல் இருப்பதையும் அதற்கு மிஞ்சியதாய் அதிக உதாரத்தை [illegible] இருப்பது வந்தார்கள். அப்படியிருந்தபோதிலும் அம்மாள் இங்கே வந்தவுடன் ஒரு பெரிய [illegible] அளிக்கப்பட்டது. அந்த வெகுமதியை இந்த அம்மாள் ஒரு சிறந்த பரிசாக அங்கீகாரம் செய்திருக்க வேண்டும். ஏனென்றால் அதிலே இரண்டு முக்கிய காரியம் அடங்கியிருக்கிறது. முதலாவது அளிக்கப்பட்ட அந்த பரிசு அம்மாளுடைய சிறந்த வல்லமையைக் காட்டினது. இரண்டாவது அந்த பரிசு வந்த இடம் சிறப்பு மதிப்புக்குரிய இடம். காலஞ்சென்ற நமது சக்ரவர்த்தினியாகிய விக்டோரியா அவர்களை அதிக விலையுள்ள ஒரு ஆபரணத்தைச் செய்து தங்கள் அம்மாளுக்குப் பரிசாக கொடுத்தார்கள். இந்த வெகுமதியை அதிக [illegible] கீர்த்தி செய்தார்கள். [illegible] தங்களுடைய கண்ணியத்தை காட்டும்படி அந்த அம்மாளுக்கு கொடுத்த வெகுமதிகளை ஒன்றுபோலவே அதிகமாய் மதித்தார்கள். இவ்விதமாய் ஜனங்கள் கொடுத்த வெகுமதியினால் ஜனங்களுடைய அன்பையும், ஜனங்கள் இந்த அம்மாளின் மேல் வைத்திருந்த மதிப்பையும், இந்த அம்மாள் அறிந்து கொண்டார்கள். அவ்வித வெகுமதி இன்னும் சிறந்த வழியத்தை செய்யும்படி உற்சாகப்படுத்தி [illegible] இருக்கும். இங்கிலாந்திலுள்ள [illegible] [illegible]

வான்களும், வித்வான்களும், தாய்தகப்பன்மாரும் பிள்ளைகளும், யாருமுடைய புருஷர்களும், தகப்பனுக்கும் இந்த அம்மாள் உதவி செய்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒன்று கூடி, தங்களால் இயன்றதைக் கொடுக்கும்படி காணிக்கையாகப் போட்டார்கள். இப்படி சேர்க்கப்பட்ட தொகையை நைட்டிங்கேல் அம்மாளுடைய அன்பான காரியத்தில் தங்களுடைய நன்றியறிதலோடு அக்காணிக்கையைக் கொடுத்தார்கள். இப்படி அவர்கள் தங்கள் இருதயத்திலிருந்து பொங்கி செய்ததற்குக் காரணம் என்னவென்று நம் எல்லாருக்கும் தெரியும். அந்த அம்மாள் தன்னை முற்றிலும் வெறுத்து அந்த போர்வீரருக்குச் செய்த உதவிதான். இவ்விதமாய் இச்ஜனங்கள் சேர்த்து கொடுத்த தொகை ஏறும்படி, ஆயிரம் பவுன். ரூபாயாய் சொல்லவேண்டுமானால் 750,000 ரூபாய் ஆகிறது. இந்த ரூபாயினால் அந்த அம்மாளுடைய பேர் எப்போதும் இருக்கும்படி அந்த அம்மாளுடைய பெயரால் ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டும்படி இப்பெருந்தொகை கொடுக்கப்பட்டது. இந்த கட்டடத்தில், வியாதியஸ்தர்களை எவ்விதமாய் பாதுகாக்க வேண்டும் என்கிற முறைமை மற்றவர்களுக்கு படித்துக்கொடுக்க வேண்டும். இந்த புஸ்தகத்தில் படிப்பிக்கிறவர்கள் நம்முடைய ஆண்டவர் "இவர்களுக்கு என்னத்தை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று சொன்ன வார்த்தைகளை நினைவுகூர்ந்து, வியாதியஸ்தர்களை [illegible] முறைகளை [illegible] [illegible]



FAMINE.

பஞ்சம்.

இந்தியாவில் பல இடங்களில் பஞ்சத்தைப்பற்றி அதிக பயங்கரமாயிருக்கிறது. சில இடங்களிலுள்ள கழனிகள் ஒன்றுமில்லாமல் மொட்டையாய் விடப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆடுமாடுகள் தங்கள் ஜீவனத்திற்குரிய புற்களைத்தேடியும் அகப்படாமல் போகிறது. அவைகளை உடையவர்களும், தங்கள் ஜீவனத்திற்கான தீனிகளைத் தேடியும் அகப்படாததினால், மிருகங்கள் பசியினால் வருந்துகிறது. இந்தியாவில் சில இடங்களில் மட்டும் நல்லமழை பெய்திருக்கிறது. ஆனால் சில இடங்களில் பெய்த மழையினால், கழனியிலுள்ள பயிர்களை பசுமையாய் வைத்திருந்த போதிலும், நல்ல விளைவைக்கொடுக்கும் என்பதைப் பற்றி நம்பிக்கையில்லை. ஜனங்கள் பற்பல இடங்களில் இன்னும் அதிகமாய் மழை வருமாவென்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். மழை வரும் என்கிற அடையாளம் ஒன்றுமே காணாததினால் அதிகமாய் மனமுறிவடைகிறார்கள்.

மழை வராததைப்பற்றி சில ஜனங்கள் "கடவுள் நம்மை தண்டிக்கிறார்" என்று சொல்லுகிறார்கள். நம்முடைய அன்பு நிறைந்த பரமபிதா ஏன் தம்முடைய ஜனங்களை வதைபடுத்துகிறார் என்பதைப் பற்றித் திட்டமாய் அறியமுடியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நமக்குத் தெரியும். அதாவது, ஜனங்கள் தங்களுக்கு கஷ்டம் வரும்போது மாத்திரம் கடவுளை நினைக்கவும் தேடவும் ஆரம்பிக்கிறார்கள். கடவுள் நல்லவரும், ஞானமுள்ளவர் என்பதும் நிச்சயம். ஆகையால் அவர் துன்பத்தை அனுப்பினாலும் அது நம்முடைய நன்மைக்கென்றே இருக்கும்.

சில ஜனங்கள், இப்படிப்பட்ட பஞ்சம் உண்டாகிறதற்குக் காரணம் இங்கிலீஷ் துரைத்தனத்தின் பலன் என்று சொல்லுகிறார்கள். இது அறியாமையினால் அப்படிச் சொல்லுகிறார்கள்.

இங்கிலீஷ் துரைத்தனம் இந்தியாவுக்கு வருகிறதற்கு முன் கொடிய பஞ்சங்கள் உண்டாயிருந்தது. இப்படிப்பட்ட கொடிய சம்பவங்களைப்பற்றி சரித்திரக் குறிப்பில் தற்காலத்தில் பதிக்கிறமாதிரி முற்காலத்திலே பதிக்கவில்லை. ஆகையால் அதைப்பற்றி நமக்கு திட்டமான அறிவு இல்லை. ஆனபோதிலும், முற்காலத்திலும் அதிக கொடிய பஞ்சங்களிருந்தது என்பது திட்டம்.

அது சிறந்த இங்கிலீஷ் துரைத்தனத்தார் இந்தியாவில் பஞ்சம் உண்டாகாதபடி அவைகளைத் தடுக்க அநேக ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அநேக இடங்களிலுள்ள கழனிகளுக்கு நீர் பாய்ச்சத்தக்க கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்திற்கு முந்திய காலத்தில் இவ்விதமாய் நீர்பாய்ச்சும் கால்வாய்கள் கிடையாது. மழையில்லாவிடில் [illegible] தண்ணீர் கிடையாது.

அநேகர் சர்க்காருடைய [illegible] தில், ஏழை ஜனங்களுக்கு வேலைகளைக் கொடுத்து உதவி செய்கிறார்கள். வேலை செய்யத் திறமையற்றவர்களுக்கு கஞ்சி தொட்டிகளைக் கட்டி, வயதானவர் பல ஏழைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறார்கள்.

பஞ்சக்காலங்களிலே விசேஷமாய் இங்கிலாந்து, அமெரிக்கா, இன்னும் பல இடங்களிலிருந்து, இத்தேசத்து ஜனங்களுக்கு என்றும் எப்போதும் பணமும் ஆகாரமும் அனுப்பப்படுகிறது. [illegible], [illegible] [illegible]

ளாய் ஒருவர்க்குறைவை ஒருவர் நிவிர்த்திச் செய்து ஏழைகளையும் பலஹீனர்களையும் தாங்கும்படிக்கான ஒரு நல்லப் பாடத்தை நமக்குக் கற்றுக்கொடுக்கவே கடவுள் இவ்வித பஞ்சத்தை அனுப்புகிறார் என்று ஒருவாறு சொல்லலாம்.

கடவுள் நமக்களித்திருக்கிற நன்மைகளிலே, தன்னயமற்றவர்களாய் மற்றவர்கள் குறைவில் நாம் பகிர்ந்து கொடுக்கிறதில் உண்டாகிற ஆசீர்வாதத்திற்கு மிஞ்சின ஆசீர்வாதமில்லை.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற பொருட்களெல்லாம் நமக்கு சொந்தமல்ல, அவைகள் யெல்லாம் இறவல் என்றே சொல்லவேண்டும். நாம் அவைகளை கொஞ்சகாலம் உபயோகப் படுத்திக்கொள்ள இறவலாக வாங்கியிருக்கிறோம். அப்படியிருக்க, அப்பொருள்களை யெல்லாம் தன்னயத்தோடும், ஆத்திரத்தோடும் நாமே அநுபவிக்கப் பார்க்கிறதினால் ஆசீர்வாதமல்ல, ஆனால் கடவுளுடைய சாபமே உண்டாகும்.

ஆகையால் இவ்விதமான நல்லபாடங்களை மனுஷர்களுக்குக் கற்றுகொடுக்கவே பஞ்சத்தை கடவுள் அனுப்புகிறார் என்றுச் சொல்லலாம்.

---

TOES USED AS FINGERS.

## கைவிரல்களால் வேலைசெய்கிறதுபோலவே கால்விரல்களிலும் வேலைசெய்தல்.

---

அமெரிக்கா தேசத்தில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு சிறுபெண் நெருப்பினால் அதிகமாய் வெந்துப்போனாள். அச்சிறுப்பெண்ணுக்கு நெருப்பினால் அதிக காயம் உண்டானபடியால் அவள் பிழைப்பாளோ என்கிற பயம் அதிகமாயிருந்தது. கடைசியாக அவளை சிகிச்சைசெய்யும்போது அவளுடைய இரண்டு கைகளையும் எடுத்துவிட நேரிட்டது. இரண்டு கைகள் என்று சொல்லும்போது முழங்கையிலிருந்தல்ல, ஆனால் தோளிலிருந்து இரண்டு கைகளையும் எடுக்க நேரிட்டது. இப்போது அந்த சிறுபெண் ஒரு பெரிய ஸ்திரீயாக இருக்கிறாள். அவள் இப்போது பாதை வழியாய் உட்கார்ந்துக்கொண்டு பிச்சையெடுக்கிறாள் என்று நீ நினைக்கிறாயா? அல்லது அவளுக்கு அந்த இரண்டு கைகளும் இல்லாதினால் உபயோகமற்றவளாய் இருக்கக்கூடும் என்று நினைக்கிறாயா? இல்லை, இல்லை. அநாதப் பிள்ளைகளுக்கும், முடவர்களுக்கும், ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஓர் பள்ளிக்கூடத்திற்கு அந்த ஸ்திரீ பணவிஷயமான காரியதரிசியாகவிருக்கிறாள். இப்படிபட்ட வேலையை அவள் எடுத்து செய்வதால், தன் கணக்கு முதலானவைகளை சரியாய் பதிவுசெய்ய அதிக எழுத்துவேலை உண்டு. இரண்டு கைகளும் இல்லாத ஒரு ஆள் பேனாவை எடுத்து எழுதக்கூடுமா? ஆனால் இந்த ஸ்திரீயால் அப்படி எழுதமுடியும். இந்தம்மாளுடைய பெயர் கிட்டி சிமித். இவள் நெருப்பினால் வெந்து அந்த பயங்கரப்படத்தக்க காயங்களிலிருந்து சொஸ்தமாக்கப்பட்டபிறகு ஒருநாள் அவள் தனக்கு அறிமுகமானவர்களின் மூலமாய், "கையால் வேலைசெய்வதுபோலவே பழக்கினால் பாதத்தினாலும் செய்யக்கூடும்" என்கிற விஷயத்தை கேள்விப்பட்டிருந்தாள். இவள் கேட்ட இந்தவிஷயம் அவள் மனதில் ஆழ்ந்தவிதமாய் பதிந்துக்கொண்டது. ஆகையால் அவள் கேட்டு சும்மாயிராதபடி உடனே அவள் தன் பாதங்களால் பொருட்களை எடுக்கவும், பிடிக்கவும் அப்பியாசஞ் செய்தாள். இந்தியாவில் கைகள் இருக்கிறவர்கள்கூட இவ்விதமாய் தங்கள் பாதங்களால் பொருட்களை எடுக்கவும் பிடிக்கவும் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தலையின்பேரில் சாமானங்களை தூக்கிக்கொண்டு போகும்போது ஏதாவது ஒருவஸ்துவை எடுக்கவாவது பிடிக்கவாவது வேண்டுமானால் குனிந்து செய்யமுடியாது. ஆகையால் பாதத்தாலேயே சாமர்த்தியமாய் எடுக்கவும் பிடிக்கவும் கற்று இருக்கிறார்கள். அதுபோலவே கிட்டி சிமித் என்பவளும் கொஞ்ச கொஞ்சமாய் பழகி சாமர்த்தியமுள்ளவளானாள். அவள் எவ்விதமாய் இப்பழக்கத்தில் தேர்ந்துக்கொண்டாள் என்பதைப்பற்றி நீ இப்பொழுது சுலுவாய் அறிந்துக்கொள்ளக்கூடும்.



கிட்டி சிமித் என்பவள் தன் பாதத்தை அதிகமாய் பழக்கி அப்பியாசித்து வந்தாள். அதினாலே அவள் ஒரு வருஷத்திற்குள்ளாக தன் பாதத்தால் நன்றாய் எழுதும்படி கற்றுக்கொண்டாள். அதோடுகூட கொஞ்சம் தைக்கவும் கற்றுக்கொண்டாள். இவைகளிலெல்லாம் சித்தியடைந்துவரவே சித்திரபடமெழுதவேண்டுமென்று ஆரம்பித்தாள். அநேகமணிநேரங்களாக, பேனாவை தன் பாதவிரல்கள் மத்தியில் வைத்துக்கொண்டு கருப்பு மையினால் சித்திரமெழுதுவாள். அதன் பிறகு அச்சு எழுத்து அடிக்கிற (Type Writer) வேலைக் கற்றுக்கொள்ள பிரயாசைப்பட்டாள். சில மாதத்திற்குள்ளாக அநேக துரிதமாய் கடிதத்தின்மேல் அச்சு எழுத்துகளை அடிக்கக் கற்றுக்கொண்டாள். இப்போது அவள் அதிக துரிதமாய் அடிக்கிறதை பார்க்கிற மற்றவர்கள் பொறாமைப்படுவார்கள். இரண்டு கைகளுள்ளவர்கள்கூட அவளுக்கு மிஞ்சி அடிக்க முடியாது. அவள் அந்த அச்சுகளை அடிக்கும்போது, சாதாரணமான நாற்காலியைவிட சற்று உயரமான நாற்காலியின்மேல் உட்கார்ந்து டைப் றைட்டிங்பெட்டியை காலண்டை வைத்து அழுத்தமாய் பிடித்துக்கொண்டு கால்விரலாலேயே அதிக சாமர்த்தியமாகவும் விரைவாகவும் அச்சுகளை அடிப்பாள். பியானு (Piano) என்கிற கின்னரத்தைக்கூட கொஞ்சம் வாசிக்கமுடியும். அவள் அதை வாசிக்கும்போது படிகள் வைத்திருக்கிற ஒரு ஏணியின்மேல் உட்கார்ந்துக்கொண்டு கின்னரத்தை கால்விரல்கள் படும்படி வைத்துக்கொண்டு விரல்களால் அழுத்தி வாசிப்பாள். கிட்டி சிமித் அம்மாள் ஆயுதங்களை தன் பாதங்களால் எடுத்து மரசாமான் வேலைகளைக்கூட வெகு நேர்த்தியாய் செய்வாள். கைகளையுடைய ஸ்திரீகள் செய்யக்கூடாத விதமாய் சிமித் அம்மாள் பாதத்தாலேயே வாளைப்பிடித்து பலகைகளை அறுப்பாள். சுத்தியைப் பிடித்து ஆணியை மரத்தில் அடிப்பாள். அவள் தன் சாமர்த்தியத்தினால் புஸ்தகங்கள் வைக்கும் தட்டுகளையும், நாற்காலிகளையும், மேஜைகளையும் செய்வாள். அவைகளையெல்லாம் அவள் பார்த்து, "நான் செய்த அநேக பொருட்களைவிட, இந்த சாமானங்களை செய்தபடியால் நான் அதிக பெருமையாய் இருக்கிறேன்" என்று அடிக்கடிச் சொல்லுவாள். ஒரு வேளை இப்படிப்பட்ட சாமானங்களை செய்யக்கூடியவர்கள் வெகு சொற்ப ஸ்திரீகள் மட்டுமே உண்டு, ஆனால் இந்த ஸ்திரீயோ இரண்டு கைகளும் இல்லாமல் செய்த இச்சாமானங்களைப்பற்றி பெருமைபட வேண்டியதாய் அப்படிச் சொல்லி இருக்கக்கூடும்.

[illegible]

## HIS GREAT TREASURE.

## பெரிய பொக்கிஷம்.

[illegible]

... டிருப்பதைக் கண்டு, ஆச்சரியப்பட்டு, ...

[illegible]



[illegible]

“ நீ சொன்னது சரி, ஆனால் உன்னிடத்தில் உள்ள ஒரு விசேஷித்த பொக்கிஷம் ... உன் மனதில் உள்ள ... அந்தப் பொக்கிஷத்தை ... நீ எப்போதும் ... மாய் இருப்பாய் ” என்று அந்த அரசன் அப்பையனைப் பார்த்து புன்னகையோடு சொன்னான்.

[illegible]

## THE FRAGRANT INNER LIFE.

## உள்ளான சுகந்த ஜீவியம்.

[illegible]

... ஒரு உண்மையான புஷ்பம் என்று அறிந்து கொண்டேன். ... அவ்வளவுக்கு ... அவர் உண்மையுள்ளவரென்று அறிந்துகொள்ளக்கூடும். அவரை ... சேருவதால் அவருடைய உள்ளான சுகந்த ஜீவியம் என்னைப் பற்றிக் கொள்ளும் என்று அறிந்துகொண்டேன். ... உண்மையை ... விரும்புகிறதில்லையா? என்று சொன்னான்.

[illegible]

## THE LATE EMPEROR OF JAPAN.

காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி.

[illegible]

வேசிக்க விடுகிறதில்லை. அறுபது வருஷத்துக்கு முந்தி போர் கப்பற்கூட்டத் தலைவனாகிய பெறி என்கிற அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர் முதற்தடவையாக ஜப்பானிலுள்ள முக்கிய துறைமுக பட்டணமாகிய யோக்குகமாவில் பிரவேசித்தார். அவர், அங்கு பிரவேசித்ததின் பலனாக அந்நிய நாட்டார் ஜப்பானுக்குள் பிரவேசிக்கலாம் என்கிற ஒரு சமாதான உடன்படிக்கை உண்டானது. இதற்கு முந்தி ஜப்பான் “துறவி க்ஷேத்திரம் என்றழைக்கப்பட்டது. முட்சுஹிட்டோ சக்கரவர்த்தி 1867-ம் வருஷத்தில் தாம் 15 பிராயமாய் இருக்கும்போது சிம்மாசனம் ஏறினார். அவருடைய அரசாட்சி ஆரம்பித்த காலத்தில் அந்நிய நாட்டாருடைய ஒற்றுமை அதிகமிருக்க வேண்டுமென்று உற்சாகப்படுத்தப்பட்டது. ஜனங்கள் நாகரீகத்திலும் கல்வியிலும் தேர்ச்சியடையத்தக்க பல ஏற்பாடுகள் நடந்தேறினது. ஆளுகையை பலப்படுத்த எல்லா முயற்சியும் செய்யப்பட்டது. ஆரம்பத்தில், இந்த வாலிப சக்கரவர்த்தி செய்ய நினைத்த அநேக நல்ல விஷயங்களுக்கு விரோதமான பல கஷ்டங்கள் நேரிட்டது. பொறுமையோடு அவைகளை சகித்து கடைசியாய் சிறந்த வெற்றியை அடைந்தார். படிப்படியாய் தம்முடைய ஜனங்களை ராஜாங்கத்தில் நன்றாய் உழைக்கத்தக்க உயர்ந்த ஸ்திதிக்கு கொண்டுவந்தார். யுத்த தொழிலில் முதலாவது அபஜெயமாக காணப்படுகிறதைப் போலிருந்தாலும், அதிலும் சிறந்தவராயும் வெற்றியையும் அடைந்தார். இவ்வித எல்லா சிறந்த இலட்சணங்களும் விரதீரமிருந்தபடியால் ஜனங்கள் எல்லாரும் அவரை அதிகமாய் நேசித்து மதித்து வந்தார்கள். அவர் வியாதியில் விழுந்து, அவருடைய சுகவீனம் அதிகரித்து வந்தபோது எல்லா மார்க்கத்தாரும் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்யும்படியாக ஒன்றுகூடி, அவருக்கு நல்ல சுகத்தை அளிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். முட்சுஹிட்டோ சக்கரவர்த்தி 45 வருஷம் ராஜ்ஜியபாரம் புரிந்து, அவருக்கு பிறகு அவருடைய குமாரன் பட்டத்தை வகித்து ஆளும்படி இவ்வுலகத்தை விட்டு பிரிந்து போனார். இவர் முதலாவது ராஜ்ஜியபாரத்தை வகிக்கும்போது ஜப்பான் ஒன்றுமேயில்லாமல் சுத்த சூன்யமாயிருந்து, இப்போதோ அது ஒரு பலமுள்ள ராஜ்ஜியமாயிருக்கிறது.

காலஞ்சென்ற சக்கரவர்த்திக்கு அடிக்கடி ஆலோசனைக்கூறும் கருவியாக இருந்தது அவருடைய அருமை மனைவியே. அவ்வரசின் தூண்டுதலினால் ஜப்பான் தேசத்து அநேக சிறுபெண்கள் அமெரிக்கா தேசம் சென்று கல்விகற்க நேரிட்டது. இவர்களாலேயே ஜப்பானில் உபாத்தினிகளை தேற்றி செய்யத்தக்க நார்மல் ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டது. இவ்வித ஏற்பாடுகளின் மூலமாய் சக்கரவர்த்தினி அவர்கள்கூட தம்முடைய பிரயாசையெல்லாம் செலுத்தி அத்தேசத்தாரை உயர்ந்த அறிவுக்கு ஆளாக்கினார்கள். இவ்வித அருமையான தாய் தகப்பனுக்கு பிறந்த குமாரனும், முன் அரசாட்சியை மாதிரியாக வைத்து ஆளுவாரென்று எதிர் பார்க்கிறார்கள். புதிய சக்கரவர்த்தியாகிய யோஷிஹிட்டோ என்பவர் தகப்பனைப்போலவே இருப்பாரென்று ஜப்பான் தேசத்தார் எல்லாரும் நம்புகிறார்கள்.



## NEWS AND NOTES.

## வர்த்தமானங்கள்.

**டர்க்கியில் ஒரு பெரிய பூகம்பம்.**—சென்ற ஆகஸ்ட்மாதம் 9-ம்தேதி காலை லண்டன் பட்டணத்தில் ஒருவித ஆயுதத்தினால் தொலைதூரமான ஒரு இடத்தில் பலமான பூமி அதிர்ச்சி உண்டாயிருப்பதாக கண்டுபிடித்து தீர்மானித்தார்கள். அதற்கிசைவாக அதே நாளில் டர்க்கியிலும் கான்ஸ்தாந்திநோபிலிலும் ஒரு கொடிய பூமி அதிர்ச்சியுண்டானதாக தந்தியின் மூலமாய் சமாச்சாரம் வந்தெட்டினது. அதைப்பற்றி விசாரித்தறிந்தபோது பெரிய பட்டணங்களிலுள்ள அநேக வீடுகள் நாசமாய் போனதாம். அநேக கிராமங்கள் முழுதும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. பூமி அதிர்ச்சியினால் கீழிருந்து அக்கினி எழும்பி சில கிராமங்களை பட்சித்துபோட்டது. சிலது பூமி வெடித்து அதிலே அமிழ்ந்துபோனது. இரண்டு விளக்குவீடுகள். (Light House) கண்ணுக்கு தென்படாமலேயே மறைந்து போய்விட்டது. அதிர்ச்சியின் சப்தம் கொடியதாய் இருந்தது. யுத்தகப்பல் பேரிலிருந்த ஜனங்கள் என்ன நினைத்தார்களென்றால் எதிரிகள் ஒருவித மின்சாரத்தினால் செய்யப்பட்ட வள்ளத்தினால் கப்பலை தாக்கி எதிர்க்கிறார்களோ என்று நினைத்தார்கள். 3,000 பேர் இந்த அதிர்ச்சியினால் மாண்டு போனார்கள். இதற்கு இரட்டத்தனையான பேர் காயப்பட்டார்கள். 50,000 பேர் வீடுவாசல் இல்லாமல் தெருவில் அலைய நேரிட்டது.

**வெள்ளத்திலிருந்து ஒரு பட்டணம் காக்கப்பட்டது.**—கராச்சி என்ற இடத்தில் அணை உடைந்து, வெள்ளத்தினால் அந்த ஊர் முழுதும் நாசமாய்போக இருந்த சமயத்தில், அங்குள்ள சர்க்கார் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் இந்த அபாயத்தை அறிந்து, உடனே ஆள்களை ஏற்படுத்தி அணைகட்டி ஊர் உள்ளே தண்ணீர் பிரவேசிக்காமல் தடுத்து, அந்த ஊரை காப்பாற்றி இரட்சித்தார்கள். தண்ணீர் பெருகி, ஏற்றம் அதிகமாய் இருந்தபடியாலும் தென்றல்வாடை அடித்துக் கொண்டிருந்தபடியாலும் இவ்வித முயற்சி செய்யாதிருப்பார்களானால் அந்த ஊர் முழுதும் நாசமாய்போய்விடும். இவ்வதிகாரிகள் அச்சமயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசை அதிக சிறந்தவிதமாய் மெச்சிக்கொள்ளப்படத்தக்கது.

**வெகுமதி கொடுத்தல்.**—பம்பாய் பட்டணத்திலுள்ள, ஸ்ரீஜீவதயாஞான பிரசாரக் பண்டிலிருந்து, 500ரூபாய் மதிப்புள்ள 10 வெகுமதிகள் கொடுப்பதாகவெளியிடப்பட்டிருக்கிறது. வெகுமதி பெறுகிறவர்கள் செய்யவேண்டியதாவது: “இந்தியாவில் மாமிசம் புசிக்காமல் மரக்கறிப் பதார்த்தங்களையே புசிப்பதினால் உண்டாகிற நன்மை இன்னதென்று விளக்கிகாட்டுகிற வியாசங்களை எழுதியனுப்பவேண்டும். இப்படிப்பட்ட வியாசங்களை எழுதும் மாணாக்கர்கள், பண்டிதர் அலெக்சாண்டர் எக் என்பவரும், ராபர்ட் பெல் என்பவரும் எழுதின புஸ்தகங்களை ஆதாரமாக வைத்து வியாசங்களை எழுதி அனுப்பவேண்டும்.

**லண்டனில் பெங்காளிக்கு உத்தியோகம்.**—எடின்பரோ சர்வகலாசாலையில் வாசித்துத் தேறிய மிஸ்டர் அமிநார் ராமன் என்கிற ஒரு பெங்காளியை இந்திய மாணாக்கருடைய வித்தியா விஷயமான ஆலோசனைக்கூறும் மந்திரியாகிய மிஸ்டர் ஆர்னால்ட் என்றவருக்கு அசிஸ்டண்டாக உத்தியோகம்புரிய ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**காதாலே கேட்கிற வெளிச்சம்.**—குருடர்கள் தங்கள் காதுகளாலே வெளிச்சத்தை கேட்கும்படியான ஒரு நூதன ஆயுதத்தை கண்டுபிடித்திருப்பதாக வெளிக்கு வந்திருக்கிறது. இந்த ஆயுதத்தின் மூலமாய் குருடர்கள் அறையிலுள்ள ஜன்னல்கள் எத்தனை என்று சொல்லக் கூடுமாம். வெளிச்சத்திலிருந்து உண்டாகிற சப்தத்தைக்கொண்டே இதை அறிகிறார்களாம். இது இன்னும் பூரணப்படவில்லை. இதைக் கண்டுபிடித்தவர் இன்னும் விர்த்திசெய்வதாக சொல்லியிருக்கிறார். இப்படி விர்த்திசெய்யும்போது, இந்த வெளிச்சத்தின் சப்தத்தைக்கொண்டே எழுத்துகளைக் கூட்ட முடியுமாம்.

---


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை: 16 பக். புஸ்தகம் 100-க்கு ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனா என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைமயன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு .... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் நயு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சயமீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ரூன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா லக்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |


37

# மாதர் மித்திரி.


புத். உகூ. கககூ௧௩ ஷ - ஜனுவரிமீ. இல. எ.


### ANNIVERSARY PRAISE.

இராகம், நாசாவந்தி. ஆதிதாளம்.

**பல்லவி.**

இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்திரிப்போமாக.

**அனுபல்லவி.**

நம்மை ரட்சிக்க வந்து தம்மை பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும்— இம்

**சரணங்கள்:**

1. காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப்போல் வடியும்,
கனாவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ்வொன்றும் நிற்கமாட்டாது;
கோலப் பனிமைக்கும் நீர்க் குமிழிக்கும் புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன்— இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும் ஆசையைக் கொன்றோம்,
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்;
காய்ந்த மனதோடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன்— இம்

3. கன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுங்கினதைக் கட்டி,
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்து,
கண் நோக்கி எல்லார்மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை யிதேடொகி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த விநோதமாய்— இம்

FLORENCE NIGHTINGALE.

## பிளாரன்ஸ் நைற்றிங்கேல் அம்மாள்

6-ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

### கடைசி வார்த்தைகள்.

நைற்றிங்கேல் அம்மாள்மேல் சுமத்தப்பட்ட ஊழியம், அவர்களுடைய பலஹீன தேகத்திற்கு கடினமானதாயிருந்தது. அதினால். அந்தம்மாள் அதிக தளர்ச்சியடைந்து ஏதாகிலும் மோசம் நேரிடுமோ என்று பயந்திருந்தார்கள். ஆனால் அதிசயிக்கத்தக்கவிதமாய் அப்படிக்கொன்றும் நேரிடாமல், சாதாரணமாய் மனுஷர்கள் உயிரோடிருக்கிறதைவிட அதிகமான காலம் உயிரோடிருந்தார்கள். நித்திய ராஜ்யத்திற்கு போக அந்தம்மாள் 90 வருஷம் இவ்வுலகத்தில் பிரயாணஞ்செய்தார்கள். அவர்கள் பட்ட பிரயாசத்திற்கு தக்க பலனை நித்திய ராஜ்யத்தில் அடையும்படி இரண்டு வருஷத்திற்கு முந்தி தான் கர்த்தர் அந்தம்மாளை இவ்வுலகத்திலிருந்து அழைத்தார். கிரிமியன் யுத்தம் முடிந்த பிறகு அநேக வருஷங்களாய் அந்தம்மாள் தன்னுடைய பலஹீன தேகத்தோடேயே, அநேக ஆண்களுக்கும் பெண்களுக்கும் தன்னால் கூடிய உதவியை செய்துக்கொண்டு வந்தார்கள்.

அதிக காலம் ஜீவனோடிருந்த அந்தம்மாளுடைய பழுத்த தேகம் கடைசியாக இளைப்பாறும்படி நேரிட்டது. இத்தேகத்தை கல்லறையில் நல் அடக்கம் செய்யும்போது, கிரிமியன் யுத்தத்தில் காயப்பட்டு, இந்தம்மாளுடைய உதவியைப் பெற்ற ஓர் வீரன்மட்டும் இவ்வடக்கத்திற்கு வந்திருந்தான். இவன் அதிக வயோதிபனும் நடக்க ஏலாதவனுமாயிருந்தபடியால், இவ்வடக்கத்தை கேள்விப்பட்ட அவ்வீரன் தன் சிநேகிதர்களைப் பார்த்து நான் ஜெபம்செய்யும்படி அந்தம்மாளுடைய கல்லறையண்டை என்னை எடுத்துக்கொண்டு போங்கள் என்று கெஞ்சினான். அப்படியே அவனுடைய சிநேகிதர்கள் அவனை கொண்டுவந்தார்கள். யுத்தம் முடிவுபெற்ற சமயத்தில் யுத்தத்திற்குப் புறப்பட்டு போயிருந்த உத்தியோகஸ்தர்களெல்லாருக்கும் ஒரு விருந்து செய்யப்பட்டது. அவர்கள் எல்லாரும் உட்கார்ந்து விருந்துண்ணும்போது அவர்களுடைய சம்பாஷணையின் மூலமாய் ஒரு எண்ணம் பிறந்தது. அதாவது, அந்த யுத்தக்களத்தில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு முக்கியமான ஆளை தலைமுறையாக நினைக்கமுடியும்? அப்படிப்பட்ட ஆளின் பெயரைத் தனித்தனியாய் அவரவர்களுடைய மனதில் பட்டப்பிரகாரம் அவ்வாளின் பெயரை ஒரு சின்ன துண்டு கடிதத்தில் எழுதி போடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். அவ்விதமாய் அவர்களெல்லாரும், தங்கள் மனதின்படி ஆளின் பெயரை எழுதி கடிதத்தை குவித்தார்கள். அக்கடிதங்களைப் பிரித்துப் பார்க்கும்போது எல்லாரும் ஒரே மனதாய் நைற்றிங்கேல் என்கிற மாதுதான் என்று எழுதியிருந்தது.

அநேக வருஷங்களுக்குமுன் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைக்கு இசைவாகவே இப்போது நிறைவேறுகிறது. அதாவது, அந்தம்மாள் மரித்தும் இன்னும் அவர்கள் பேசுகிறதினால் உலகத்தில் அநேக பாகங்களில் அந்தம்மாளை நினைவு கூறுகிறார்கள். யுத்தத்திற்குப் போயிருந்த அநேக ஆட்களில், இந்தம்மாளைப்போல் நினைவுகூறப்படுகிறவர்கள் ஒருவரும் இல்லை. இந்தம்மாள் மட்டும், அநேகரால் மதிப்பும் கனமும் பெற்று வருகிறார்கள்.

இவ்விதமாய் ஜனங்கள் எல்லாரும் நினைவுகூறும்படி அந்தம்மாள் செய்ததென்ன? யுத்தகளத்தில், அந்தம்மாள் ஒரு கீர்த்தியையாவது கனத்தையாவது விரும்பாமல், மற்றவர்களால் அவமதிக்கப்படக்கூடிய ஒரு கேவல ஊழியத்தை செய்யும்படி ஏற்றுக்கொண்டு, அதற்கு தன்னையே ஒப்புக்கொடுத்து, இரவும் பகலும் கண்விழித்து, அந்நோயாளிகளின் மத்தியில்செய்த சிறந்த ஊழியமே, ஜனங்களுடைய அன்பையும் மதிப்பையும் பெருக்கச் செய்துவிட்டது; இங்கிலாந்து தேசத்திலுள்ள ஆயிரம் கணக்கான ஜனங்கள் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளுமாய், தங்களால் இயன்ற பணங்களை தாராளமாய்ப்போட்டு அந்தம்மாளுடைய பெயரை ஞாபகப்படுத்தும்படி ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டி அவ்விடத்தில் அநேக நர்ஸ்மார்களை தேர்ச்சிசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கென்று கொடுக்கப்பட்ட பணம் அதிகமாய் சிலாகிக்கக்கூடியது. இப்போது அந்தம்மாளுடைய பெயரால் ஒரு பெரிய ஞாபக மண்டபமிருக்கிறது. அதைப் பார்க்கினும் நாம் எல்லாரும் பார்த்து ஞாபகப்படுத்திக்கொள்ளக்கூடிய அந்தம்மாளுடைய மண்டபம் இன்னொன்று மறைவாக இருக்கிறது. அது எதுவென்றால், அந்தம்மாளுடைய கிரியைகளும், போதனைகளுமே. இவைகளை நாம் எல்லாரும் பார்த்து பின்பற்றக்கூடிய ஒரு சிறந்த விஷயம் என்பதற்கு சந்தேகமில்லை. நைற்றிங்கேல், யுத்தகளத்திலுள்ள ஆஸ்பத்திரியில் கையாடிவந்த சிறந்த மாதிரிகளையும், முறைகளையும், நாம் தற்காலத்தில் உண்டாகிற விஷபேதி முதலான தொத்து வியாதிகள் மத்தியில் கையாடவேண்டியது அதிக அத்தியாவசியம். இப்படிப்பட்ட காலங்களில், அவர்கள் ஏற்படுத்தியிருந்த விதிகளை கவனிக்கவேண்டும். அதாவது, "வியாதிக்கு காரணமானதை அப்புறப்படுத்து, வியாதியுள்ள சுற்றுபுறங்களை சுத்தம்பண்ணு" என்பதே. இந்தம்மாளுடைய ஜீவியத்தில் கையாடின உறுதியான விஷயங்கள் தற்காலத்தில் வியாதியஸ்தர்கள் மத்தியில் அநுசரிக்க அதிக பிரயோசனப்படுகிறது.

அந்தம்மாளுடைய முன்மாதிரியின் மூலமாய், நர்ஸ் வேலையில் செய்யப்படக்கூடிய சிறந்த காரியங்கள் வெளிப்பட்டு அவ்வேலை அதிக பிரயோசனமுள்ளதாய் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த வேலையும், இதைப்போன்ற ஜெயத்தை அடையவில்லை. ஏறக்குறைய இரண்டாயிர வருஷத்திற்கு முந்தி கல்வாரி மலையின் மேல் நாட்டப்பட்ட சிலுவைமரத்தில் நடந்த சம்பவம் இந்தம்மாளை எப்போதும் எழுப்பிவிட்டுக்கொண்டேவந்தது. வியாதி நடமாடக்கூடிய இடங்களில், என்னென்னக் காரியங்கள் செய்யப்படவேண்டுமோ அவ்வித காரியங்களை ஏற்படுத்தும்போது நைற்றிங்கேல் அம்மாளுடைய ஊழியமும், மாதிரியும் சிறந்து தொனிக்கிறது. வியாதி வந்தப்பிறகு தடுப்பதுமாத்திரமல்ல, வியாதி வாராமல் தடுக்கும் முறைகளை அநுசரிப்பதற்கு இந்தம்மாள் ஏற்படுத்திய முறைகளே காரணம். நைற்றிங்கேல் அம்மாள் நம்மெல்லோருக்கும் முன்மாதிரியாய் இருக்கிறார்கள். அந்தம்மாளுடைய உயர்குலத்துக்குரிய மேன்மையான குணமும், மனிதர்கள் மேலுள்ள பரிதாபமும், இரக்கக்குணமும், விடாமுயற்சியும், எவ்வளவு கஷ்டத்திலும் நோயாளிகளைப் பேணி ஜெயத்தை அடையக்கூடிய சக்தியும் அந்தம்மாளிடத்தில் காணப்பட்டது. அம்முன்

மாதிரிகளை நாமும் பின்பற்றி அநேகருக்குப் பிரயோஜனமாய் ஜீவிக்க முயலுவோமாக. யுத்தத்திற்குப்போன அநேக பெரிய மனுஷர்களுடைய பெயர் மறக்கப்பட்டு போனாலும், இந்தம்மாளுடைய பெயர் இன்னும் உயிர் உள்ளதாய் இருக்கிறது. இதற்குக்காரணம், அவர்களுடைய சிறந்த ஊழியமும் குணமுமே.

---

EXPERIENOE OF A JAPANESE LADY.

## ஜப்பான் தேசத்து ஒரு மாதுவின் அநுபவம்.

ஜப்பான் தேசத்து ராஜாங்கத்தை நடத்தும் ராஜகர்ம நிபுணர்களில் ஒருவர் பின்வருமாறு சொன்னார். “ஜப்பான் சிந்தோ மார்க்கத்தையும், புத்த மார்க்கத்தையும் ஆராய்ந்து பார்த்து அவைகளில் குறைவு உண்டென்று கண்டு பிடிக்கப்பட்டது.” அதுபோலவே அங்குள்ள ஓர் ஸ்திரீயினுடைய அநுபவமும் இருக்கிறது. அவ்விஷயத்தை இங்கெழுதுவோம்: இந்த ஸ்திரீ தன் தேசத்தில் கல்வியில் மேன்மைப்பட்ட ஸ்திரீகளில் ஒருவள். இவள் தன் சொந்த பிரயாசையினால் ஸ்திரீகளுக்கென்று டோக்யோ என்கிற இடத்தில் ஒரு சர்வகலாசபை ஏற்பாடாகும்படி செய்தாள். தன் சொந்த ஆஸ்தியிலிருந்து ஏராளமான பணத்தை அச்சர்வகலாசபைக்கு கொடுத்தாள். அந்தம்மாள் சுவாதீன எண்ணத்திலும் திடச்சித்தத்திலும் பேர்பெற்றவள். சமையாசமையங்களில் மார்க்கத்தை ஆராய்ச்சி செய்யும் திறமை யுடையவள். கடைசியாக கிறிஸ்து மார்க்கத்தை தழுவிக்கொண்டாள். அவளைச் சேர்ந்த சிநேகிதர்களுக்கெல்லாம் இது ஒரு பெரிய ஆச்சரியமாய் இருந்தது. அந்த ஸ்திரீ “எனக்கு கிறிஸ்து மார்க்கத்திலே எப்படி விருப்பம் வந்தது” என்கிற விஷயத்தைப்பற்றி ஒரு பத்திரிகையில் பிரசுரஞ்செய்தாள். அந்த விஷயமாவது: “ஜப்பான் தேசத்தில் ஒரு மனுஷனுக்கு 61-வயது பூரணப்படும்போது திரும்பவும் அவனை குழந்தை பருவத்திற்கு திருப்பும்படியான ஒரு பண்டிகையை கொண்டாடுவார்கள். இரண்டு வருஷத்திற்கு முந்திதான் நான் அப்படிப்பட்ட வயதில் பிரவேசித்தேன். ஆனால் ஆவியின் பிரகாரம் நான் ஒரு சிறு குழந்தையைப்போல் பிறந்தேன். நான் மிட்சுயி என்ற வீட்டில் பிறந்து எனக்கு 17-வயது ஆகும்போது இருக்கா ஓசகா என்கிற வீடுகளில் வாழ்க்கைப்பட்டேன். ஜப்பானில் கலகம் உண்டான காலத்தில் மேல் காட்டிய அந்த ஐசுவரியமுள்ள வீடுகள் க்ஷீணதிசைக்கு வந்தது. அதனால் அவர்கள் உலோகம் முதலான நாணய வர்த்தகத்தை எடுத்துக்கொண்டார்கள். இரவும் பகலும் கணக்குபார்க்கிறதிலும், எப்போதும் வேலை ஆட்களுடன் உழைக்கவும் நேரிட்டது. இவ்வித எல்லாத்துன்பத்திலும், எனக்கு கல்வித்தேர்ச்சி யில்லாவிட்டாலும், வாய்ச் சாலத்திலும், திட்டமான அறிவிலும், பேச்சில் மற்றவர்கள் என்னை நிராகரிக்ககூடாத வண்ணமாய் ஜெயம் பெற்றுக்கொண்டு வந்தேன். கிறிஸ்து மார்க்கத்தையோ நான் அதிகமாய் அலக்ஷியம் செய்தேன். கல்விதான் முக்கியமென்று பலமாய் உணர்ந்தேன். அதனால், என்னால் கூடியவரையிலும் அரும்பிரயாசப்பட்டு பெண்களுக்கென்று சர்வகலாசபை ஏற்பாடாகும்படி செய்தேன். நானும் அதிகமாய் வாசிக்கவேண்டும் என்று விரும்பினேன். அதனால் அநேக உபந்நியாசங்களுக்கு போயும், உபந்நியாசங்களை வாசித்தும்



வருவேன். என் இருதயம், ஏர் உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தைபோல் இருப்பதாக உணர்ந்தேன். ஆனால் விதை விதைக்கப்படாத நிலத்தைப்போலிருந்தது. கல்வி களஞ்சியங்களுக்கு போய் அறிவை சேர்க்கிறதில் சந்தோஷமுள்ளவளாய் இருந்தேன். ஆவியின் பிரகாரமான ஜீவியத்தில் எனக்கு திருப்தியில்லை. நான் அநேக வருஷங்களாய் வாதைப்பட்டுக்கொண்டிருந்த ஒரு கட்டியை அறுக்கும்படி நேரிட்டது. நான் அதற்கென்று ஆயத்தம் செய்துக்கொண்டேன். மரணத்திற்கும் துணிந்தேன். அவ்விதமாய் அக்கட்டியை அறுக்கும் சமயத்தில் என்னை முற்றிலும் கடவுளிடத்தில் ஒப்படைத்தேன். நித்திரையை உண்டாக்கும் மருந்தை நான் அருந்தினபடியால் என் உயிர் என் உடலில் இல்லாததுபோல் காணப்பட்டாலும், அந்த சமயத்தில் நான் கடவுளோடே ஒன்றித்துயிருந்ததைப்போல் உணர்ந்தேன். அந்த சமயத்தில் நேரிட்ட ஒவ்வொருக் காரியமும் எனக்கு நன்மையாகவே முடிந்தது. நான் சுகமடைந்த பிறகு அதேமாதிரியான உணர்ச்சியை திரும்பவும் நான் அடைய வாஞ்சித்தாலும், அது கிடைக்கவில்லை. ஆனபோதிலும் காணக்கூடாத ஒரு வல்லமை எனக்குள் இருக்கிறதென்று அறிந்துகொண்டேன். கடவுளோடு ஒன்றித்திருந்த அந்த உணர்ச்சியை திரும்பவும் அடையவேண்டுமென்று வாஞ்சித்துக்கொண்டேயிருந்தேன். ஆவிக்குறிய ஜீவியம் எங்கேயிருக்கிறதென்று நான் கண்டு ஆச்சரியப்பட்டேன். அப்படிப்பட்டதை, புத்தமார்க்கத்திலாகிலும் சிந்தோமார்க்கத்திலாகிலும் கண்டுபிடிக்கக்கூடுமா? அவ்வித மார்க்கங்களைப் பற்றி நான் வேண்டிய மட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். சிந்தோ மார்க்கத்தைப் பார்க்கும்போது, அது நீதிநெறிக்குறிய கோட்பாடுகளுடையதென்றும், புத்தமார்க்கம் அதை ஒருவன் அநுசரிக்கும்போது அதன்மூலமாய் உலகபற்றை ஜெயிக்ககூடுமென்று கண்டாலும், நான் வாஞ்சிக்கிற பிரகாரம் கடவுளோடு சம்பந்தித்திருக்கிற விஷயத்தைப் பற்றி அம்மார்க்கங்கள் எனக்கு ஒன்றும் உதவிசெய்ய முடியவில்லை. கிறிஸ்துமார்க்கத்தையோவென்றால், அதை நான் அதிகமாய் அலக்ஷியம் செய்திருந்தேன் ஆனபோதிலும், அம்மார்க்கத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாமலிருந்ததால், அதை வாசிக்க வேண்டுமென்கிற அபேக்ஷை உண்டானது. அதினால் நான் ஒரு போதகரைப் பார்த்து கிறிஸ்து மார்க்கத்தை போதிக்கும்படி கேட்டுக்கொண்டேன். முதலாவது அக்கோட்பாடின்படி கடவுளைப் பற்றி போதிக்கப்பட்டேன். அச்சமையங்களில் பலவிதமான கேள்விகளைப் போட்டு, அதற்கு தக்க விடைகளை விரும்பினேன். ஆரம்பத்தில் அதிக தர்க்கத்தோடு அம்மார்க்கத்தை வாசிக்க ஆரம்பித்த நான் வர வர என் வாயை மூடிக்கொள்ளநேரிட்டது. ஒவ்வொருதரமும் அதிக மதிகமாய் கற்க கற்க, கிறிஸ்துவினுடைய தன்மையை அறிந்துகொள்ளவும், நான் என்கிற தன்னயத்தின்மேல் சார்ந்திருக்கிற வல்லமையை வெறுக்கவும், நான் குழந்தையைப்போல அறிவற்றவளாயிருக்கிறேன் என்று அறிந்துக்கொண்டேன். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவினுடைய தன்மையைப்போல் ஆகக்கூடும் என்பதையும் அறிந்துக்கொண்டேன். நான் அதையே நோக்கிப் பார்த்திருந்தால், எனக்குள்ளிருந்த தன்

ணயம் உடனே எடுப்பட்டிருக்கும். ஆனால் இன்னும் நான் அப்பா பிதாவே என்று கடவுளை அழைக்கத்தக்க புத்திர சுயாதீனத்தை அடையவில்லை. இயேசு நாதர் தம்முடைய சத்துருக்களுக்காக சிலுவையின்மேல் செய்த ஜெபத்தை நான் அறிவால் அறிந்தும், இன்னும் அவரைப்போல் நடக்கமுடியவில்லை. எப்படியும் அதன்மூலமாய் கிறிஸ்துவினுடைய மேலானத் தன்மையை அறிந்துகொண்டேன். உலகத்தில் விசேஷித்து துலங்குகிற நான்கு போதகர்களில், கண்பூஸியஸ் சாக்றடஸ், கௌதம என்கிற இப்படிப்பட்டவர்களுடைய போதனைகளையும், சாதனைகளையும் நான் சுலுவாய் கைக்கொள்ளக்கூடும். கௌதமனைபோல் உலக ஆசையை காலால் மிதித்து தள்ளக்கூடும். ஆனால், இயேசுகிறிஸ்துவினுடைய உள்ளத்தைப்பார்! என்ன அதிசயம்! அவர் சிலுவை மரத்தில் மரண அவஸ்தைப்படுகிற அந்த சமயத்தில் அவருடைய சத்துருக்களுக்காக பரிதாபப்படுகிற குணம் லேசான குணமா? இது கடவுளுடைய குணம், இயேசுநாதர் இதன் மூலமாய் கடவுளின் உள்ளத்தைக் காட்டுகிறார். நான் அப்படிச் செய்ய இது கூடியக் காரியமா? இவைகளை யெல்லாம் அதிக வெட்கத்தோடும், துக்கத்தோடும் கிறிஸ்துவையே நோக்கிப்பார்த்து, கடைசியாக, கிறிஸ்துவினண்டை தரித்து, பரிசுத்த வேதாகமங்களை வாசித்து, அமரிக்கையாய் ஜெபம் செய்வதினால், கிறிஸ்துவினுடைய மேலான குணம் எனக்குள் உதித்துக்கொண்டுவருகிறது, அதனால் நான் அதிக பரவசமடைகிறேன். கடவுளிடத்திலிருந்து எனக்குள் உதிக்கிற இக்குணங்களை யெல்லாம் நான் உணருகிறேன்."

## CHILDREN'S PAGE.


*(Prize Day.)*

## சிறுவர்களுக்கேற்ற விஷயம்.

(வெகுமதி கொடுத்த நாள்.)

பெங்கால் தேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் மிஷன் ஸ்தாபிதமான இரண்டு பெண் பாடசாலைகள் இருக்கிறது. அப்பாடசாலைகளிலொன்றில் சுமார் நாற்பது பிள்ளைகள் படிக்கிறார்கள். இன்னொன்று இதைப்போல் அவ்வளவு பெரிதல்ல, அந்த இரண்டு பாடசாலைகளையும் பெப்ருவரி அல்லது மார்ச்சு மாதங்களில் ஒன்றுகச் சேர்த்து அந்த நாளை வெகுமதி கொடுக்கிற நாளாக செய்கிறதுண்டு. அக்கிராமங்களிலொன்றில் நேர்த்தியான மிஷன் வீடு ஒன்றிருக்கிறது. அவ்வீட்டிலுள்ள ஒரு பெரிய போஜன சாலையில், பிள்ளைகள் இந்நாளுக்குரிய அப்பியாசம் செய்வார்கள். சரியான மத்தியான நேரத்தில் முதலாவது ஒரு கூட்டமான பிள்ளைகள் நல்ல உடுப்புகளையும், கூடிய வரையிலும் தங்களுக்குண்டாயிருக்கிற ஆபரணங்களையும் தரித்துக்கொண்டு வருவார்கள். பிள்ளைகள் எல்லாரும் வந்து மற்ற எல்லாக் காரியங்களும் தயாராய் இருக்கும்போது அவர்கள் எல்லாரும் உள்ளே போவார்கள். அவர்கள் எல்லாரும் உள்ளே போகும்போது முன் கதவைத் திறந்துபோகாமல் பின்பக்கத்தின் வழியாய் போய் அங்குள்ள கதவைத் திறந்து அப்போஜன சாலைக்குள் போவார்கள். இவர்கள் இப்படிச் செய்யாமல் முன் கதவுபக்கமாய் போனால் ஏராளமான பையன்கள் அங்கு என்ன நடக்கிறதென்று பார்க்கிறதற்கு கூட்டம் கூடிக்கொள்ளுவார்கள். இந்த வருஷம் வெகுமதி கொடுக்கிறதற்கு முந்தியே, அங்குள்ள





ஒரு மிஷனெரி துரைசானி இப்பிள்ளைகளை வெளியே கூப்பிட்டு அவர்களை படம் பிடித்தார்கள். மேலே இருக்கிற படம் தான் அது. அந்தப் பெண்பிள்ளைகள் எல்லாரும் அவரவர்களுடைய இடத்தில் உட்கார்ந்தபோது ஒரு ஜெபம் செய்யப்பட்டது. அதன் பிறகு அவரவர்கள் கற்றுக்கொண்டு வந்திருந்த செய்யுள்களையும், கவிகளையும் சொல்லி, சம்பாஷணைகளைப் பேசி, இன்னும் பலவித அப்பியாசங்களையும் செய்தார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த பெரிய மேஜைகளின் பேரில் பலவிதமான பொம்மைகளும், விளையாட்டு சாமானங்களும், அதனடியில் வைக்கப்பட்ட கூடைகள் நிறைய மிட்டாய்களும், இன்னும் பலவித சாமானங்களும் பிள்ளைகளுக்கு வெகுமதி கொடுக்க குவித்திருந்ததை அப்பிள்ளைகள் யெல்லாரும் பார்த்தார்கள். இப்போது வெகுமதி கொடுக்கிற வேலை ஆரம்பித்தது. பிள்ளைகள் இப்பொழுது வகுப்பு வகுப்பாக அவரவர்களுடைய வெகுமதியைப் பெறும்படி அழைக்கப்பட்டார்கள். இப்போது முதலாவது பெரியபிள்ளைகள் வந்தார்கள். வந்த அப்பிள்ளைகள் ஒவ்வொருவரும், ஒரு நேர்த்தியான பொம்மையும், ஒருபடமும், ஒரு சின்ன ஆபரணமும் பெற்றுக்கொண்டார்கள். இரண்டாவது வந்த பிள்ளைகள், முன்கொடுத்த பொம்மையைப்போலிராமல், அதைப்பார்க்கிலும் கொஞ்சம் சின்னபொம்மைகளையும், சின்னபடங்களையும் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு மணிமுதலான ஆபரணங்களைக் கொடுக்கவில்லை. மற்ற எல்லாச் சின்னப் பிள்ளைகள் முதல்கொண்டு குழந்தைகள் வரையிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொம்மையும், ஒவ்வொரு படமும் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் இந்த பிள்ளைகளுக்கு ஒருவித சிலாக்கியமிருந்தது. அதாவது அங்கே இரண்டு விதமான பொம்மைகளும், இரண்டு விதமான படங்களுமிருந்

தது. ஆகையால் அவரவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு தகுந்தபிரகாரம், அந்தந்த பொருட்களில் ஒவ்வொன்று எடுத்துக் கொள்ளலாம். பொம்மைகள் யெல்லாம் கொடுத்து தீர்ந்தபிறகு அங்குள்ள சில சிறுபையன்களுக்கு ஒவ்வொரு பந்தும், ஒவ்வொரு படமும் கொடுக்கப்பட்டது. சில பையன்களுக்கு வாயில் வாசிக்கிற கின்னரம்கூட கொடுக்கபபட்டது. அந்த பள்ளிக்கூடத்தைப் பார்க்கும்படி வந்த ஒரு துரைசானி அம்மாள்தான் இவ்வித வெகுமதிகளையும் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அவ்விதமாய்க் கொடுக்கும்படி அந்தப்பள்ளிக் கூடத்து மிஷனரி துரைசானி இயற்கனவே கேட்டிருந்தார்கள். பிள்ளைகள் யெல்லாரும் அவரவர்கள் தங்கள் தங்கள் வெகுமதியை பெற்றுக்கொள்ளும்போது அதிக வணக்கத்தோடு வந்தனம் செய்வார்கள். அதன்பிறகு, உபாத்திமார்களும் அங்குள்ள துரைசானிமார்களும், ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு பொட்லம் மிட்டாய்களை கொடுத்தார்கள். இதற்குள்ளாக இராத்திரிநேரம் ஆய்விட்டது. ஆகையால் பிள்ளைகள் சீக்கிரம் வீட்டுக்கு போகும்படி வெகுமதி கூட்டம் கலைந்து விட்டது. பிள்ளைகளெல்லாரும் ஆயாள்மாரோடு அவரவர்கள் சந்தோஷமாய் தங்கள் வீடுகளுக்குச் சென்று அவர்கள் பெற்றுவந்த வெகுமதிகளை தங்கள் தாய்மார்களிடமும், தங்கள் பெரிய சகோதிரிமார்களிடதும் அதிக சந்தோஷத்தோடு காட்டினார்கள்.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானங்கள்

---

கினிமெட்டகிறுப் என்னும் அசையும் படங்களாலும் அக்கியாபனம்.—கண்ணாடியின் மூலமாய் அசையும் படங்களை காட்டும் காக்ஷி இப்பொழுது சாதாரணமாய் விட்டது. பெரிய பட்டணங்களுக் கருகாமையிலிருக்கிற ஜனங்கள் எல்லாரும் இவ்வித படங்களை பார்க்க முடியும். இவ்வித படங்களை பலவித நோக்கத்தோடு காட்டும்படி உபயோகப் படுத்தப்படுகிறது. சிலர் இராக்காலத்தில இவ்வித படங்களை பெரிய சுவர்களின்பேரில் விழும்படிசெய்து தங்கள் வேலைகளையும் கடையிலுள்ள சாமானங்களைப்பற்றியும் பிரசித்தம் செய்கிறார்கள். அப்படி செய்யும்போது ஆயிரம் கணக்கான ஜனங்கள் அங்கு நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். ஆனால் அநேகர், இவ்வித படங்களை காட்டி பணம் சம்பாதிக்கிறார்கள். இப்போது பள்ளிக்கூடங்களில், மாணாக்கர்களுக்கு சில பாடங்களை கற்றுக்கொடுக்கும்படி உபாத்தியாயர்களுக்கு உதவியாய் இருக்கும்படி இக்கருவி உபயோகப்படவேண்டுமென்று கருதப்படுகிறது. கண்களின் மூலமாய் பார்க்கிற காக்ஷி புத்தியில் நன்றாய் பதியக்கூடிய தென்பதைப்பற்றி எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட படங்கள், பொருட்பாடங்களை உண்மையாய் பார்க்கிறது போல் எடுத்துக்காட்டும். சில இடங்களில் இவ்விதமாய் பள்ளிக்கூடங்களில் செய்யப்பட்டு வருகிறது.

கலகத்தாவில் முதலை.—சில தினங்களுக்கு முன் கல்கத்தாவிலுள்ள ஒரு ஆற்றில் ஜனங்கள் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தபொழுது ஒரு பெரிய முதலை அவர்களுக்குத் தென்பட்டது. அதைப் பார்த்தவுடனே ஜனங்களெல்லாரும் பயந்து முதலை, முதலையென்று சத்தம் போட ஆரம்பித்தார்கள். உடனே போலீஸார் வந்து அதை சுட்டு வெளியே எடுத்தபோது, 17 அடி நீளமும், 6 அடி



8 அங்குலம் சுற்றளவு கனதியுமாயிருந்தது. இவ்வளவு பெரிய முதலை இதற்கு முன் கலகத்தாவில் இருந்ததில்லை. ஆகையால், ஒருவேளை இதை சுத்தப்படுத்தி அங்குள்ள மியூஸியத்தில் வைப்பார்கள்.

இங்கிலாந்தில் வெள்ளம்.—இங்கிலாந்தில் கோடைக்காலம் வழக்கபிறகாரமில்லாமல் வித்தியாசப்படுகிறது. இக்காலங்களில் அங்கு அதிக மழை பெய்வதனால் தண்ணீர் பெருக்கெடுத்து அத்தேசம் பலவிதத்தில் கஷ்டப்படுகிறது. காய்ந்த புல்களை அறுத்து கட்டுகளாக அடுக்கி வைத்திருந்தபோது, வெள்ளத்தினால் வயல்களுக்கு அடித்துக்கொண்டு போய் விட்டதாம். இன்னொரு சமயத்தில் சமுத்திரத்திற்கே அடித்துக்கொண்டு போய் விட்டதாக சொல்லப்படுகிறது. வயல்களிலுள்ள பயிர்களெல்லாம் வெள்ளத்தால் மூடப்பட்டு அநேக பாகம் அழிந்தும், மீதியான சிலது பிரயோசனமற்றதாய்க் காணப்படுகிறது. பயிர்செய்யும் குடியானவர்கள் தங்களுக்கு உண்டான நஷ்டத்தைப்பற்றி அதிக ஏக்கம் பிடித்திருக்கிறார்கள். இவர்களுக்கு உண்டான நஷ்டத்தை பூர்த்திசெய்துக்கொள்ள திரும்பவும் அவர்கள் தங்கள் வயல்களில் வேலைசெய்யும்படி சர்க்கார் அவர்களுக்கு பணம் கடனாகக் கொடுத்து, கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுவார்கள்.

ஜர்மன் சக்கரவர்த்தி அதிகாலையில் எழுந்து வேலைசெய்யும் விஷயத்தில் நம்பிக்கையுள்ளவர்.

இந்த சக்கரவர்த்தி காலை 6-மணிக்கு எழுந்து தம்முடைய தினசரி வேலையை ஆரம்பிப்பார். அநேமாதிரி மற்ற ஆபீசுகளிலுள்ள உத்தியோகஸ்தர்களையும் செய்யச்சொல்லுவார். உத்தியோகஸ்தர்கள் இப்படிச்செய்ய இஷ்டபடுகிறதில்லை. அப்போது சக்கரவர்த்தி அவர்களைப் பார்த்து ஒருநாளில், ஒருமணி நேரம் வீணாய் போகுமானல், வருஷ கடைசியில் அநேக நாட்களாகிறதல்லவா என்று சொல்லுவாராம்.

தந்தியின்மூலமாய் படங்கள்.—இத்தாலியா தேசத்தில் மனோஹரமான ஒரு பரீட்சணம் ஸ்திரப்படுத்தப்பட்டது. சமாச்சாரங்களை தந்தியின்மூலமாய் அனுப்புகிறது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், இப்போது இத்தாலியாவில், கையெழுத்துகளையும், யூகாக்ஷரங்களையும், அப்படியே மூலப்பிரதியைப் போலவே, கம்பியில்லாத தந்தியின் மூலமாய் அனுப்புகிறார்கள். அதோடுகூட இன்னொரு விசேஷம் என்னவென்றால், படங்களையும் அப்படியே அனுப்புகிறார்களாம். இவைகளை பெற்றுக்கொள்ளுகிற ஸ்டேஷனில் கையெழுத்துகளும், படங்களும், கொஞ்சங்கூட வித்தியாசமில்லாமல் காணப்படுகிறது. இப்பரீட்சணம் விசேஷித்ததும் சிறந்ததும் என்பதற்கு ஐயமில்லை. இக்காலத்தில் கண்டுபிடிக்கிற அநேக நூதனக் காரியங்களில் இது ஒன்று. விசேஷமாய் இது சாதனைக்கு வரும்போது அதிக பிரயோசனப்படுமென்று கருதப்படுகிறது.

தாசிகளின் ஆட்டம்.—இத்தேசத்து அரசர்களுடைய அரண்மனையில் டர்பார் நடக்கிற சமயங்களிலும், அரசர்களின் பிறப்புநாள், இன்னும் பல கொண்டாட்டங்கள் நடைபெறும் சமயத்தில் தாசிகள் ஆடுகிறது சகஜம். ஆனால் காஷ்மீர் மகாராஜா, இப்படிப்பட்ட தாசிகளுடைய ஆட்டங்கள் தம்முடைய தர்பாரிலும், தம்முடைய பிறப்பு நாள் கொண்டாட்டங்களிலும் இருக்கப்படாதென்று ரத்து செய்துபோட்டார். இது அவருடைய விசேஷித்த குணத்தைக் காட்டுகிறது.

## WONDERS OF THE DEEP

## ஆழ்க்கடலின் அதிசயங்கள்

ஒருபெரிய புகைக்கப்பலின் மூலமாய் அலைகளில் நீந்திச்செல்லும் ஒருவன் சமுத்திரத்தின் ஆழங்களிலிருக்கும் பொருள்களை காண்பது கூடாதகாரியம். நிமிஷந்தோறும் இடம்பெயர்ந்து செல்லுகின்ற அலைகளின் மேற்புறத்தை மாத்திரங் கண்டு அவற்றின் அடியில் ஜலம் எவ்வளவு ஆழமாயிருக்கிறதென்று கண்ணிற்குப்புலப்படும் நீர் நிறத்தினால் ஒருவாறு உத்தேசித்தப்போதிலும், மற்றபடி ஒருவனாகிலும் ஜலத்தின் ஆழங்களில் வசிக்கும் ஜீவ பிராணிகளையும் மற்ற வஸ்துக்களையும் தன் கண்ணால் மாத்திரம் பார்த்து அறிந்துக்கொள்ளும் திறமையுள்ளவனல்லன். ஜலத்தை ஊடுருவிபார்க்க சக்தியற்று பார்த்தக் கண்ணும் பூர்த்துப்போகிறது. அப்படி நாம் இனிபார்க்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், சாஸ்திரிகள் இயற்றிய நவீனக்கருவிகளால் சமுத்திர ஜலத்தில் கண்களுக்கு மறைந்துக்கிடந்த பலஜீவராசிகளும், தாவரவர்க்கங்களும் அறியப்பட்டும் ஆராய்ச்சிசெய்யப்பட்டும் வருகின்றன. அது மாத்திரமன்று, சமுத்திரத்தின் அடித்தளத்தை இக்கருவிகளால் சாஸ்திரிகள் பரிசோதனைசெய்து வருகின்றார்கள். இத்தளம் மேடு பள்ளங்களுடையதும் சராசரி 2½ மையில் ஆழத்தில் பரவியிருப்பதுமான ஓர் அகன்ற சம்பூமியாயிருக்கிறதென்று அறிகிறோம். ஜலத்தில் ஆழ்ந்து கிடக்கும் இத்தரையின் சிலவிடங்களில் பெரும் மலைகளும் சிகரங்களும் தண்ணீர் மட்டத்திற்கு ஆழத்தில் சில நூறு அடி தூரமட்டும் எழும்பியிருக்கின்றன. வேறு சிலவிடங்களில் இத்தரை நீர்மட்டத்திற்கு மேல் தீவுகளாக காணப்படுகிறது. வட பசிபிக்மகாசமுத்திரத்தில் ஓரிடம் 1614 பாகம் ஆழமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது கொஞ்சம்குறைய 6 மையில் ஆழம். இந்த இடத்தில் உலகத்தில் மிகவும் உயர்ந்த மலையாகிய எவறஸ்ற்மலையைக் கொண்டுபோய் ஆழ்த்தினால் இம்மலையின் சிகரத்தின் கொடுமுடிக்குமேல் 2,600 அடி உயரத்திற்கு ஜலம் புரண்டுபோகும். இக்கடல்கள் பூமியின் சூடானபாகத்திலிருந்தபோதிலும், மிகவும் ஆழமான கடல்களில் அடியிலுள்ள ஜலம் கொஞ்சம் குறைய பனிக்கட்டியைப்போல் குளிர்ந்திருக்கிறது. சமுத்திரத்தின் அடிபாகத்தை ஆராய்ந்துபார்த்த சாஸ்திரிகளால் பூமியின் காங்கையான பாகத்திலுள்ள கடலின் அடியிலிருந்து எடுக்கப்பட்ட மண் கையில் வெகுநேரம் பிடிக்கக்கூடாதபடி குளிர்ந்திருக்கக் காணப்பட்டது.

ஆயிர அடி ஆழத்திற்கப்பால் சூரிய வெளிச்சம் செல்லுகிறதில்லை, ஆனபோதிலும் சமுத்திரத்தின் ஆழங்களிலும் ஜீவப்பிராணிகளிருக்கின்றன. இவைகள் நாம் சாதாரணமாய் பார்த்திருக்கும் பிராணிகளில் ஒன்றைப்போலாயினுமிராமல் விகாரமாயிருக்கின்றன. இவைகளில் சிலவற்றின் உடம்பில் மின்மினிப் பூச்சிகளுக்குள்ள ஓர்வித பிரகாசம் உண்டு. இப்பிரகாசம் ஆழங்களின் ஓயா இருளை சற்றே விலக்கி வெளிச்சப்படுத்துகிறது. இங்குள்ள சில பூச்சிகள் கண்ணிற்கு மாத்திரமல்ல, பூதக்கண்ணாடிக்கும் புலப்படாத பிரகாரம் நுட்பமாயிருக்கின்றன. இவ்வித நுட்பமான பூச்சிகள் ஏராளமாக தோன்றும்பொழுதுதான் பூதக்கண்ணாடிக்கொண்டு பார்ப்பவருக்குப் புலப்படும்



## WHO DOES THE PROMOTING?

## மேல்வகுப்புக்கு முன்னேறும்படி யார் செய்கிறது?

பின்வருகிற விஷயம், இந்தியாவிலும் நடந்திருக்கலாம். இதேமாதிரியான விஷயம் நடந்திராவிட்டாலும், கீழே குறித்துகாட்டுகிற ஸ்திரீயைப்போல தாய் தகப்பன்மார்கள் உபாத்தியாயர் செய்யக்கூடாதக்காரியத்தை செய்யும்படி கேட்கிறதுண்டு என்பதைப்பற்றி எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே.

ஒரு நாள் ஒரு துரைசானி நேர்த்தியாய் உடுத்திக்கொண்டு ஒரு பள்ளிக்கூடத்திற்கு வந்து, அங்குள்ள உபாத்தியாயரிடம்போய், அந்தப்பள்ளிக்கூடத்தில் படிக்கும் பேதுருவின் தாயார் என்று சொல்லிக்கொண்டாள். அதன்பிறகு அந்த துரைசானி உபாத்தியாயரைப்பார்த்து: "என்மகன் பேதுரு, தன்னை மேல்வகுப்புக்கு மாற்றமாட்டார்களென்று அதிகமாய் பயப்படுகிறான். அதைப்பற்றி தங்களிடம் வந்து பேசவேண்டுமென்று பலமுறையும் நினைத்தேன். நானும் அவனுடைய தகப்பனாரும் அதைப்பற்றி அதிக ஆவலாய் இருக்கிறோம். அவன் எப்படியாகிலும் மேல்வகுப்புக்குபோக வேண்டும். ஒரு வருஷத்தை அவன் வீணாய் இழந்துபோகக்கூடாது என்று சொன்னாள். அதற்கு அந்த உபாத்தியாயர் "அப்படியா" உபாத்தியாயர் அவனை மேல் வகுப்புக்கு போகாமல்பிடித்து வைக்கவில்லை, பேதுரு, தான் மேல்வகுப்புக்கு போகமுடியாது என்று பயப்படுகிறது சரியான நியாயந்தான். அதற்கு அந்த ஸ்திரீ, உபாத்தியாயரைப் பார்த்து: "எப்படியாகிலும் என்பிள்ளையை மேல் வகுப்புக்கு மாற்றுவீர் என்று நம்புகிறேன். பிள்ளைகள் கீழ்வகுப்பிலேயே அதிககாலம் இருக்கிறது துர் அதிர்ஷ்டம், இவனோ பெரியவனாய் இருக்கிறான்" என்று சொன்னாள். அதற்கு அந்த உபாத்தியாயர் அந்த ஸ்திரீயைப் பார்த்து: நீ சொல்லுகிறதெல்லாம் சரி, பிள்ளைகள் அதிககாலம் ஒரே வகுப்பில் இருக்கிறது நல்லதல்ல, பேதுருவை மேல்வகுப்புக்கு மாற்ற என்னால் கூடுமானால் நான் அப்படிச்செய்வேன். ஆனால், பிள்ளைகள் மேல்வகுப்புக்கு முன்னேறுகிறது நான் செய்கிறதல்ல என்றார். "ஓ, அப்படியா! எல்லா காரியமும் உம்முடைய கையிலேயே ஒப்படைத்து யிருக்கிறதென்று நினைத்தேன். அப்படியானால், நான் யாரிடத்தில் கேட்கவேண்டும்? பேதுருவை மேல்வகுப்புக்கு மாற்றக்கூடியவா யார்" என்று அந்த ஸ்திரீ கேட்டாள்.

அதற்கு உபாத்தியாயர்: "பிள்ளைகள் மேல்வகுப்புக்கு போகவேண்டுமானால் அவர்களே அதை செய்துக்கொள்ளவேண்டும். ஆகையால், நீ பேதுருவைதான் பார்க்கவேண்டும்" என்று சொன்னார். அதற்கு அந்த ஸ்திரீ "நீர் சொல்லுகிற காரியம் என்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றாள். அப்பொழுது உபாத்தியாயர் அவளைப்பார்த்து: பிள்ளைகள் மேல்வகுப்புக்கு போகிற விஷயம் வருஷகடைசியிலே உபாத்தியாயர் செய்யக்கூடிய காரியமல்ல. ஆனால், ஒவ்வொரு பிள்ளையும் வருஷமுழுதும் செய்துக்கொள்ளக்கூடியகாரியம், இங்கே வாசிக்கிற அநேக பிள்ளைகள் தேன் ஈக்களைப்போல் வருஷமுழுதும் அதிக கஷ்டபட்டு, தாங்களே மேல்வகுப்புக்கு போகும்படி தங்களை தகுதியுள்ளவர்களாக்கிக்கொண்டார்கள். பேதுருவும் இன்னும் சிலரோவென்றால் தங்கள் நாட்களையெல்லாம் விளையாட்டில் போக்கி கழித்துவிட்டார்

கள். உனக்கு தெரிந்த பிரகாரம் எத்தனை யோதரம் அவனைப்பற்றி கடிதம் எழுதி என்னை வந்து பார்க்கும்படி சொல்லியிருக்கிறேன்?

"ஆம், அது மெய்தான்; எனக்கு அதிக வேலையிருந்ததினால் உம்மை வந்துபார்க்க நேரம் கிடைக்கவில்லை." "நல்லது, நான் அவனுக்கு செய்யவேண்டியதை யெல்லாம் என்னால் கூடியமட்டும் செய்து இருக்கிறேன். அவனுக்குமாத்திரமல்ல, மற்றபிள்ளைகளுக்கும் அப்படியே செய்தேன், இன்னும் அவர்களுக்கு கூடியதை செய்வேன். ஆனால் வருஷகடைசியில் நான் அவர்களை மேல்வகுப்புக்கு மாற்றுவேன் என்று என்னையே நம்பியிருப்பார்களானால் ஏமாந்துபோவார்கள்" என்று உபாத்தியாயர் சொன்னார்.

இப்படிப்பட்ட காரியங்கள் பள்ளிக்கூடத்தில் மாத்திரமல்ல, உலகத்திலுள்ள அனேக ஜனங்கள், தங்கள் காலங்களை வீணாய் செலவழித்து கடைசியாக அவர்கள் கஷ்டப்படுகிற காலத்தில் மற்றவர்களை நிந்தித்து பேசுவார்கள். இதுசரியல்ல. ஒருவன் உலகத்தில் க்ஷேமமாய் வாழவேண்டுமானால், அதற்கு முன்னதாகவே அவன் கஷ்டப்படவேண்டும். துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. முன்னேறி வருகிறதற்கு ஒவ்வொரு மனுஷனும் அதற்கு தகுதியுள்ளவனாக்கிக் கொள்ளவேண்டும்.

---


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வோசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1: | 0 | .6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசீவியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100 க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ருன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்தக்கொண்டு உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 12 | 0 |



# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௰௩ ௵ - மார்ச்சு ௴. இல. ௯.


## VICTORY.

இராகம், இங்கிலீஷ். ஆதிதாளம்,

### பல்லவி.

ஆமன், அல்லெலூயா! மகத்துவத் தம்பராபரா;
ஆமன், அல்லெலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த ஸ்தோத்திரா.

### அனுபல்லவி.

ஆம் ஆறுதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே! ஆமன்

### சரணங்கள்;

1. வெற்றிகொண் டார்ப்பரித்து,—கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,—முரித்து;
பத்ராசனக் கிறிஸ்து—மரித்து,
பாடுபட்டுத்தரித்து, முடித்தார். ஆமன்

2. வேதம் நிறைவேற்றி,—மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,—பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,—கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார். ஆமன்

3. சாவின் கூர் ஒடிந்து,—மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து—விழுந்து;
ஜீவனே விடிந்து,—தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது. ஆமன்

4. தேவ கோபந் தீர்ந்து,—அலகையின்
கிமை எலாஞ் சோர்ந்து,—முடிந்தது;
ஆவலுடன் சேர்ந்து,—பணிந்துகொண்
டாடும், களிகூர்ந்து மகிழ்ந்து. ஆமன்

## WHAT ONE WOMAN CAN DO.

## ஒரு ஸ்திரீ என்ன செய்யக்கூடும்.

பதினைந்து வருஷத்திற்கு முந்தி பாரிஸ் பட்டணத்திலுள்ள ஒரு தனவான் தன்னுடைய ஆஸ்தியைப்பற்றி ஒரு உயில் எழுதி அவருடைய ஆஸ்தியில் ஒரு பெருந்தொகையை ஒரு விசேஷித்த காரியத்திற்கென்று பிரித்து வைத்திருந்தார். அதாவது, எந்த ஒரு மனிதன் அல்லது ஒரு ஸ்திரீ யுத்தத்தை அமரச்செய்து எந்த இடத்திலும் சமாதானத்தை உண்டுபண்ணுகிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு, அப்பெரும் தொகையிலிருந்து வருஷாந்திரம் நல்ல வெகுமதி கொடுக்கப்படவேண்டும் என்பதே.

அந்த தனவான் இவ்வித உயில் எழுதி சுமார் 9-வருஷமான பிறகு, 1905-ம் வருஷத்தில் ஒரு ஸ்திரீக்கு மேற்கூறிய வெகுமதி அளிக்கப்பட்டது. இந்த ஸ்திரீதான், முதலாவது அந்த விசேஷித்த வெகுமதியை பெறுவதற்கு அத்தனவானுடைய மனதை எழுப்பிவிட்டவள். அது எப்படியென்றால், அச்சமயத்தில் நேரிடக்கூடிய ஒரு பெரும் சண்டை சமாதானம் அடைந்ததற்கு இவ்விஸ்திரீயே அதற்கு கருவியாய் இருந்தாள்.

அத்தனவானுடைய பெயர் ஆல்பிரட், நோபில், வெகுமதி பெற்ற அந்த ஸ்திரீயின் பெயர் பரோனஸ் வொன்சட்னர். உலகத்தில் கன்னியம் பொருந்திய ஸ்திரீகளில் இவள் ஒருத்தியாக எண்ணப்பட்டாள். இவளுடைய இளமை பருவத்தைப்பற்றிய சரித்திரம் ஒன்றும் தெரியாது. ஆனால் அவள் பரோனஸ் வொன்சட்னர் என்கிற ஒருவரை மணம்புரிந்து அவருக்கு விசுவாசமுள்ளவளாய் நடந்துவந்தாள் என்பது அங்குள்ள அநேகருக்கு தெரிந்த விஷயம்.

இந்தம்மாள் தன் ஜீவியத்தில் செய்யப்போகிற ஒரு சிறந்த வேலையைப்பற்றி அபட்சமுடையவளாய் இருந்தாள். இந்தம்மாளுக்கு 40-வயதாகிறமட்டும், எத்தனையோ யுத்தங்களைப்பற்றி கேள்விப்பட்டாலும், யுத்தம் செய்வது தீமை என்பது அந்தம்மாள் மனதில் படவில்லை. கடைசியாக அந்தம்மாள் திடுக்கிடும்படி, ஐயோ யுத்தம் செய்வதில் தீமையில்லை என்று நினைக்கக்கூடிய மனுஷர்கள் உண்டா? யுத்தம் செய்வதில் எவ்வளவு தீமையிருக்கிறது என்று அறிந்துகொண்டார்கள். இந்தம்மாள் சில குறிப்புகள் அடங்கிய கையெழுத்து பிரதிகளை எழுதி வைத்திருந்தாள். அப்புஸ்தகங்களெல்லாம் பெயர் இல்லாமல் அச்சிடப்பட்டது. அதை வாசித்தவர்கள் எல்லாரும் இந்த புஸ்தகம் ஒரு சாமர்த்தியமுள்ள ஒரு மனுஷன் எழுதியிருக்கவேண்டும், மற்றபடி ஒரு ஸ்திரீ அல்ல என்று நினைத்தார்கள். அச்சமயத்தில் ஒரு சங்கத்தில் சில மனுஷர்கள் கூடி, யுத்தம் உதவாது, சமாதானம் எப்போதும் நல்லது என்று வழக்காடி வந்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய எண்ணத்திலும் வேலையிலும் இந்தம்மாள் அதிக பிரியமுள்ளவளாய் இருந்தாள். அதோடுகூட அவர்களுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யவேண்டும் என்பதே இந்தம்மாளுடைய ஆசை. இந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டுமென்றே அந்தம்மாள் ஒரு புஸ்தகத்தை எழுதினார்கள். அப்புஸ்தகத்தின் பெயர் "உன்னுடைய ஆயுதத்தைக் கீழேபோடு" அல்லது "ஆயுதத்தை புறம்பாக்கு" என்பதே.

இப்புஸ்தகத்தை அச்சிடும்படி அச்சிடுவோன் ஒருவன் இந்தம்மாளுக்குக் கிடைப்பது அதிக கஷ்டமாயிருந்தது. அந்தம்மாள் கையால் எழுதி அனுப்பப்பட்ட புஸ்தகங்களை அச்சிடாமல் அச்சாபீஸ்காரர் திரும்ப திரும்ப அந்தம்மாளுக்கு அனுப்பிவிட்டார்கள். யுத்தத்தைப்பற்றி கண்டித்து பேசுகிற வாக்கியங்களையெல்லாம் எடுத்துவிட்டால் அச்சிடுவதாக அந்தம்மாளுக்குச் சொன்னார்கள். அதற்கு அந்தம்மாள் சம்மதிக்கவில்லை. யுத்தத்தைக் கண்டித்து அதை அமர்த்தி சமாதானத்தை உண்டுபண்ணவே இவ்வித புஸ்தகத்தை எழுதினாள். அப்படியிருக்க, யுத்தத்தைப்பற்றி கண்டித்துபேசுகிற வாக்கியங்களையெல்லாம் எடுத்துவிட்டால், இந்தம்மாளுடைய நோக்கமும், பிரயாசையும் விருதாவாக போய்விடும்; அதினாலேதான் அதற்கு சம்மதிக்கவில்லை. கடைசியாக இப்புஸ்தகத்தை அச்சிடும்படி ஒருவன் கிடைத்தான். அதன் பிறகு இப்புஸ்தகம் அச்சிடப்பட்டு வெளிக்கு வந்தவுடனே அநேக இடங்களில் இப்புஸ்தகம் நேர்த்தியான கிரியைசெய்து ஜெயம் அடைந்தது. ஆல்பிரட் நோபில் என்கிற தனவானிடத்தில் இந்த புஸ்தகம் கிடைத்தது, அதை அவர் வாசித்தார். அவர் இந்தம்மாளை முன்னமே அறிந்திருந்தார். அவர் இந்த புஸ்தகத்தை வாசித்தவுடனே பரோனஸ் அம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதி தாம் அந்த புஸ்தகத்தை அதிகமாக மதிப்பதாகச் சொன்னார். அதோடுகூட, அப்புஸ்தகத்தை எல்லா பாஷைகளிலும் அச்சிடப்பட வேண்டுமென்று விரும்பினார்.

அதுமுதற்கொண்டு ஆல்பிரட் நோபில் என்றவரும், பரோனஸ் அம்மாளும் கூடி பற்பல இடங்களிலும் உண்டாகும் யுத்தங்களை அமர்த்தவும், சமாதானத்தை உண்டாக்கவும் அதிகமாய் பாடுபட்டு உழைத்தார்கள். ஆனால் ஆல்பிரட் நோபில் என்றவர் அதன் பிறகு வெகுகாலம் ஜீவனோடிருக்கவில்லை, அவர் சீக்கிரத்தில் மரித்துப்போனார்.

தற்காலத்தில், அந்தம்மாளுடைய பிரயாசத்தினாலும், மற்றவர்களுடைய பிரயாசத்தினாலும், யுத்தகாலத்தில் சமாதானம் என்கிற விஷயம் உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது யுத்தம் நடமாடுகிற சமயத்தில் சமாதானத்தையே நாடவேண்டுமென்று அதிகமாய் வற்புறுத்தி பேசத்தக்க சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யுத்தம் செய்யும் இரண்டு வகுப்பாருக்கும் சரியான உடன்படிக்கைகளும் யுத்தம் உண்டாகாதபடி சமாதானத்தை நாடும்படியான விஷயங்களும், பற்பல இடங்களில் நடைபெற்று வருகிறது. யுத்தம் நடக்கிறபோது, கமிட்டியாராக சேர்ந்து எந்த தீர்மானத்தை செய்கிறார்களோ அதற்கு யுத்தம்செய்கிற இரண்டு வகுப்பாரும் கீழ்படிந்து, அவர்களுடைய தீர்மானத்தின்படி சமாதானத்தையே நாடி யுத்தத்தை ஓயப்பண்ணுகிறார்கள். இரண்டு கட்சியாரும் கமிட்டியார் செய்கிற தீர்மானத்திற்கு இணங்கி கையொப்பமிடுவார்கள். இந்தமாதிரியான முறைகள் பற்பல இடங்களில் நடந்து வருகிறது. அதிக யுத்தம் நடந்த இடங்களிலெல்லாம், இந்த முறைகளை அனுசரிப்பதால் வெகுவாய் சமாதானமே உண்டாகிறது. அநேக மனுஷர்களுடைய உயிரை காப்பாற்றுகிறதற்கு இது ஒரு அதிசயமான வழி. இதன் மூலமாய் அநேக தீமைகளையெல்லாம் ஒழிக்க காரணமாய் இருக்கிறது. இந்த நல்ல ஏற்பாடு உலகமுழுவதும் நடைபெறும்படி எல்லாராலும் விரும்பப்படுகிறது. அப்படியே இந்த விஷயம் உலக முழுவதிலும் ஒற்றுமையாய் அங்கிகரிக்கப்பட்டு நடைபெறுமென்றால், இதற்கென்று பிரயாசையோடு உழைத்த அந்த ஸ்திரீயைப்பற்றி நாம் பெருமைபடவேண்டும்.

THE BIBLE.

## சத்தியவேத புஸ்தகம்.

இங்கிலாந்து தேசத்து அரசர்களில் ஒருவனை, ஒரு பெரிய அரசராக அழைக்காவிட்டாலும், அவருடைய பெயர் இன்னும் அநேகருடைய ஞாபகத்திலிருக்கிறது. சிலர் விசேஷித்த அறிவுடையவர்களாய் காணப்பட்டாலும் அப்படிப்பட்டவர்களை இலகுவாய் மறந்து போகிறோம். இந்த அரசனுடைய பெயர் அநேகருடைய ஞாபகத்தில் பதிந்திருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அது என்னவென்றால், அந்த அரசனுடைய பெயர் ஒரு விசேஷித்த புஸ்தக சம்பந்தமாய் வருகிறபடியால்தான். அந்த புஸ்தகம் பற்பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத்திலுள்ள மற்ற புஸ்தகங்களைப் பார்க்கிலும் விசேஷித்தபிரகாரம் பரவியிருக்கிறது. அந்த புஸ்தகம்தான் சத்திய வேதம். மிஷனரிமார்கள் உலகத்தின் கீழ்திசையிலுள்ள மிலேச்ச பாஷைகளிலும், இன்னும் பற்பல பாஷைகளிலும் சத்தியவேதாகமத்தை மொழிப்பெயர்ப்பதற்கு முன்னதாகவே இப்புஸ்தகம் சிலரால் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டு புஸ்தகம் எபிரேய பாஷையிலும், புதிய ஏற்பாட்டு புஸ்தகம் கிரேக்க பாஷையிலும் எழுதப்பட்டிருந்தது. அவைகள் லத்தீன் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இங்கிலாந்திலிருந்த ஜனங்கள் இந்தவிதமான சத்தியவேத புஸ்தகத்தைதான் அநேக வருஷங்களாக வைத்திருந்தார்கள். இங்கிலாந்து தேசத்திலிருந்த சில ஜனங்கள் மட்டும் அந்த பாஷையை கற்றிருந்தபடியால் அப்புஸ்தகத்தை வெகு சொற்ப பேர் படிக்கவும், அறிந்துக்கொள்ளவும் கூடியவர்களாயிருந்தார்கள். மற்றபடி எல்லாருக்கும் அது பிரயோசனமாய் இருக்கவில்லை.

அநேக வருஷங்கள் சென்றபிறகு சில பக்திமான்கள் அவ்வேதாகம புஸ்தகம் தங்கள் சொந்த பாஷையில் இருக்கும்படி விருப்பமுடையவர்களாய் அதற்கென்று பிரயாசப்பட்டார்கள். அப்படிப் பிரயாசப்பட்ட பக்திமான்களில் ஒருவர் வில்லியம் டின்டேல் என்பவர். இவர் நல்ல பக்தியுள்ளவரும், படிப்பாளியுமாயிருந்தார். இவர் தம் இளம்பிராயத்திலிருந்து ஜனங்கள் தங்கள் சொந்தபாஷையில் சத்திய வேதத்தை வாசித்து அறிந்துகொள்ள வேண்டுமென்று அதிக அவாவுடையவராய் இருந்தார். ஆகையால், சத்திய வேதத்தை எப்படியாகிலும் அத்தேசத்து பாஷையில் மொழிபெயர்க்கவேண்டுமென்று ஆவலாய் இருந்தார். அப்படி மொழிபெயர்ப்பது லேசான காரியமல்ல. இக்காலத்திலுங்கூட மொழிபெயர்ப்பது சுலுவாய் இருக்கிறதில்லை ஏனென்றால் முற்காலத்தில் உதவி கிடைக்காமல் கஷ்டப்பட்டதுபோலவே இக்காலத்திலும் சரியான வார்த்தையில் உதவி கிடைக்காமல் கஷ்டப்பட நேரிடுகிறது. ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் மொழிபெயர்க்கும்போது ஒன்றுக்கொன்று எந்த விஷயத்திலும் வித்தியாசப்படாமல் ஒரேமாதிரியான கருத்தை அதன் ஊடேசெலுத்தி மொழிபெயர்க்கிற விஷயம் அதிக கஷ்டத்தையும் பிரயாசையையும் கொடுக்ககூடியது. ஒரே மனுஷன் இவ்வித வேலையை எடுத்துசெய்ய ஆரம்பிப்பானானால், இது மகாபெரிய வேலையாயும், அதிக கஷ்டத்தை கொடுக்கக்கூடியதாயும் இருக்குமென்பதற்கு சந்தேகமில்லை. டின்டேல் என்பவருக்கு இவ்வித



162068

கஷ்டங்கள் இருந்தபோதிலுங்கூட, வேத புஸ்தகத்தை இன்னொரு பாஷையில் மொழிபெயர்க்கக்கூடாதென்று இங்கிலாந்து தேசத்தில் சர்க்கார் சட்டமும் இருந்தது. இதினாலே வில்லியம் டின்டேல் என்பவருக்கு சத்தியவேதாகமத்தை இங்கிலீஷ் பாஷையில் மொழிபெயர்க்கவேண்டுமென்கிற அதிக ஆவல் இருந்தபடியால், இங்கிலாந்து தேசத்தில் இக்காரியத்தைச்செய்ய அவருக்கு வசதியில்லாதபடியால், அவர் இங்கிலாந்து தேசத்தை விட்டு ஐரோப்பாவுக்குப் போனார். அங்கேபோய் வெகு சீக்கிரத்தில் புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தை மொழிபெயர்த்து அச்சிட்டு, அநேக புஸ்தகங்களை இரகசியமாக இங்கிலாந்துக்கு அனுப்பினார். ஆயிரம் கணக்கான புஸ்தகங்களை அச்சிட்டு இங்கிலாந்து தேசமுழுமையும் கொடுத்தும் அப்புஸ்தகங்களில் இப்பொழுது மூன்றே மூன்று புஸ்தகமாத்திரம் இருக்கிறது. டின்டேல் என்பவர், வேதாகமத்தை முழுமையும் மொழிபெயர்க்கிறவரையில் உயிரோடிருக்கவில்லை. அவர் புதிய ஏற்பாடு முழுவதையும் மொழிபெயர்த்து முடித்தார், அதன் பிறகு, பழைய ஏற்பாட்டு புஸ்தகத்தில் சில பாகங்களை மொழிபெயர்த்திருந்தார். அதிலிருந்தே பலவிதமான மொழிபெயர்ப்புகளும், திருத்தங்களும் உண்டானபோதிலும், டின்டேல் என்பவருடைய மொழிபெயர்ப்பே தற்காலத்திலிருக்கும் இங்கிலீஷ் வேதாகம புஸ்தகத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. தற்காலத்தில் உபயோகப்படுகிற அநேக இங்கிலீஷ் வேதாகம புஸ்தகங்கள் ஜேம்ஸ் அரசர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அவருடைய காலத்தில், வேதாகமத்தை மொழிபெயர்க்க உத்திரவுகொடுத்தபடியால், அதைக் குறித்துகாட்டும்படி அவருடைய பெயர் வேதாகமத்தின் முகப்பில் வருகிறது.

இதினாலேயே அவருடைய பெயர் இன்னும் மறக்கப்படாமல் அநேகருடைய ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பு சுமார் 300-வருஷங்களுக்கு முன் உண்டானது. இதை சரியான மொழிபெயர்ப்பு என்று சொல்வதைவிட திருத்தம் என்று சொல்லலாம். ஏனென்றால் விசேஷமாய் டின்டேலுடைய மொழிபெயர்ப்புதான் அதில் அதிகமாய்க் காணப்படுகிறது. இங்கிலீஷில் எழுதப்பட்ட வேதாகமம், கீர்த்தியான விதமாய் ஜனங்கள் பேசும் பாஷையில் எழுதப்பட்டிருப்பதால், அதை வாசிக்கிறவர்கள் பாஷையின் மகத்துவத்தைப் பார்த்து அகமகிழாதிருக்கமாட்டார்கள். இவ்வித பாஷையில் எந்தபுஸ்தகமும் அப்படி எழுதப்படவில்லை. அந்த புஸ்தகத்தில் காட்டிய சத்தியங்களும், போதனைகளும் மனுஷர்களுடைய இருதயத்தில் பதியத்தக்கது.

இந்தியாவிலும் இந்த வேதாகமம் பற்பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கும்படி முதல் முதல் பிரயாசை எடுத்துக்கொண்ட மிஷனெரிமார் தகுந்த விதமாய் ஆவியை பெற்றவர்கள் என்பதற்கு சந்தேகமில்லை. இந்தியாவில் முதல் முதல் வேதாகம மொழிபெயர்ப்பு உண்டாகி சுமார் நூறு வருஷமாகிறது. நூறு வருஷத்திற்கு முந்தி இந்தியாவுக்கு வந்த பாப்திஸ்து மிஷன் மிஷனெரிகளாகிய கேரி, மார்ஸ்மன், வார்ட் என்பவர்கள் இந்திய பாஷையில் மொழிபெயர்க்கும் வேலையை எடுத்துக்கொண்டவர்கள், சீன பாஷையிலும் மொழிபெயர்க்க பிரயாசப்பட்டார்கள், தற்காலத்தில் வேதாகம புஸ்தகத்தில் ஒரு பாகம் ஒருபைசா

வுக்கு வாங்கக்கூடியும். புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தின் விலை கால் அணா மாத்திரந்தான். முழு புஸ்தகத்தையும் ஒரு ரூபாய்க்கு வாங்கக்கூடும். இந்தியாவில் ஸிராம்பூர் என்ற ஊரில் முதல் தடவை வேதாகம புஸ்தகம் அச்சிடப்பட்டது. அந்தகாலத்தில் அச்சிடப்பட்ட புதிய ஏற்பாட்டு புஸ்தகமொன்றின் விலை இரண்டரை ரூபாய். அப்படி விற்கப்பட்ட அதன் கிரயம் வெகுநயம் என்று நினைக்கப்பட்டது.

தற்காலத்தில் வேதாகம புஸ்தகத்தை கிறிஸ்தவர்கள்மாத்திரம் வாசிக்கிறார்கள் என்று நினைக்க காரணமில்லை. ஆனால், அநேக ஹிந்துக்களும், மகமதியர்களும் வாசித்து வருகிறார்கள். எத்தனையோ லக்ஷக் கணக்கான புஸ்தகங்கள் செலவாகிக்கொண்டு வருகிறது. வாசிக்கிறவர்கள் தங்கள் அநுபவத்தில் வேத புஸ்தகம் கற்றுக்கொடுக்கிற மாதிரியான போதனைகள் மற்ற எந்த புஸ்தகத்திலும் இல்லை என்று உரைக்கிறார்கள்.

---

THE ABORIGINES OF AMERICA.

## அமெரிக்கா தேசத்து பூர்வ குடிகள்.

---

அமெரிக்கா தேசத்திலிருந்து வந்திருக்கும் மிஷனெரிமார்கள் தங்கள் சொந்த நாடுகளில் எந்த பாஷைகளை பேசுகிறார்கள் என்று இந்நாட்டு பள்ளிக்கூடங்களில் படிக்கும் சில பிள்ளைகள் கேட்பதுண்டு. அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது, அமெரிக்கா தேசத்திலிருந்து வந்திருக்கிற மிஷனெரிமார்களுக்கு தங்கள் சொந்த நாட்டிற்குரிய சுயபாஷை வேறே இருக்கவேண்டும். இங்கிலீஷ் பாஷை அவர்கள் கற்றுக்கொண்ட பாஷை என்றும், இந்தியர்கள் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொண்டு பேசுகிறதுபோலவே, அமெரிக்கா தேசத்து மிஷனெரிமார்களும் அப்படியே பேசுகிறார்கள் என்று அப்பிள்ளைகள் நினைக்கிறார்கள். அமெரிக்கா தேசத்திலிருக்கிற வெள்ளைக்காரர் ஐரோப்பாவிலிருந்து அத்தேசத்தில் குடியேறினவர்களென்றும், அவர்கள் அந்ததேசத்துக்கு போகும்போது தங்களுடைய சொந்த இங்கிலீஷ் பாஷையை தங்களோடு கொண்டுபோனார்கள் என்பதைப் பற்றியும் ஒருவேளை அப்பிள்ளைகளுக்கு தெரியாதிருக்கலாம். அமெரிக்காவில் இங்கிலீஷ் பாஷைதான் சர்வஜன பாஷையாயிருக்கிறது. 1492-ம் வருஷத்தில் இந்த புதிய உலகம் கிறிஸ்டொபர் கோலம்பஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தேசத்தில் ஒருவித ஜாதியார் பூர்விக குடிகளாய் இருந்தார்கள். அவர்கள் பற்பல விஷயங்களிலும் நடை உடை பாவனைகளில் விசித்திரமுள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். அவர்கள் கருப்பு நிறமும், கருப்பு மயிரும், உயரமாயும், நல்ல வடிவமும், பலசாலிகளுமாய் இருந்தார்கள். விசேஷமாய் அவர்கள் வேட்டையாடுவதும் மீன்பிடிப்பதுமே அவர்களுடைய ஜீவனத் தொழிலாய் இருந்தது. அங்குள்ள பற்பல ஜாதியார் ஒருவரோடொருவர் யுத்தம் செய்வது சகஜமாய் இருந்தது.

அவர்கள் வாசஞ்செய்து வந்த தேசம் காடுகளும் புதர்களும் நிறைந்ததாயிருந்தது. அத்தேசத்து ஜனங்கள் இந்தியர்கள் என்று ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்டார்கள்.

அடர்த்தியும் விஸ்தாரமுமான அந்த காட்டில் வழியை கண்டுபிடித்து போவது



கூடாத காரியம். ஆனால் அங்கிருந்த இந்தியர்கள் காடுகளுக்குள் நுழைந்து சரியான திக்குகளை கண்டுபிடித்து வழி நடப்பதில் மகா சாமர்த்தியமுள்ளவர்கள். காட்டுக்குள் நுழைந்தவுடனே ஒரு மரம் உடைந்து சாய்ந்திருந்தாலும், சில இலைகள் கீழே விழுந்திருந்தாலும் இப்படிப்பட்ட அடையாளங்களைக்கொண்டு அங்கே என்னகாரியம் நடந்திருக்கும், யார் அல்லது என்ன மிருகம் அப்பக்கம் சென்றிருக்கக்கூடும் என்கிற காரியங்களைக் கண்டுபிடிப்பதில் மகா விவேகமுள்ளவர்கள். அதோடுக்கூட அவர்கள் ஆகாயத்தைப் பார்த்து சில அடையாளங்கள் மூலமாய் சில உறுதியானக் காரியங்களை அவர்களால் சொல்லமுடியும். புசல்காற்று அடிப்பதும் அடிக்காததும், நல்ல மழை பெய்வதும் பெய்யாததுமான இவ்வித காரியங்களை முன்னதாகவே அறிந்துசொல்லுவார்கள். காடுகளைப்பற்றி சொல்ல அவர்களுக்கு விஸ்தாரமான அறிவுண்டு. அவர்கள் ஒருவிதமான குடிசைகளைப் போன்ற கூடாரவாசிகள். புருஷர்கள், வேட்டையாடுவதிலும் மீன்பிடிப்பதிலும் எதிராளிகளோடு யுத்தம் செய்வதுமாகிய இப்படிப்பட்ட வேலைகளிலேயே தங்கள் காலங்களை கழிப்பார்கள். புருஷர்கள் இவ்வித வேலைகளை செய்யும்போது ஸ்திரீகள் வீட்டுவேலையை செய்வதும், வயலில் வேலையிருக்குமானால் அதைசெய்வதும், பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ளுவதுமான பெரிய பளுவான சுமைகளை அவர்கள் சுமக்கவேண்டும்.

அதிக விஸ்தாரம்பொருந்திய அமெரிக்காதேசத்திலுள்ள பூர்வகுடிகள்பற்பல வகுப்பாராய் இருந்தார்கள். அவர்கள் ஒரேவிதமான பாஷையையும் வழக்கங்களையுமுடையவர்களாய் இராமல் இந்தியாவில் எப்படி பற்பல பாஷைகளையுடையவர்களாய் இருக்கிறார்களோ அப்படியே அவ்விடத்திலும் இருந்தது. ஆனால் இந்தியாவில் பற்பல பாஷைகளை பேசினாலும் அதற்குறிய எழுத்துகளும் புஸ்தகங்களுமுடையவர்களாயிருக்கிறதுபோல அத்தேசத்தாருக்கில்லை. அவர்கள் சில படங்கள் மூலமாயும், அடையாளங்கள் மூலமாயும் பூர்வீக சரித்திரங்களை ஞாபகப்படுத்திக்கொள்வார்கள். இதன் மூலமாய் வைக்கப்பட்டிருக்கிற பூர்வ சங்கதியை தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் அறிந்துக்கொள்ளும்படி செய்வார்கள். மற்றபடி எழுத்து வாசனை அறியாதவர்களானபடியால், புஸ்தகங்களின் மூலமாய் பூர்வ சரித்திரங்களை காப்பாற்ற அவர்களால் முடியாது. அத்தேசத்திலிருந்த சில ஜாதியார் கூடைமுடைவதிலும், கம்பளி செய்வதிலும் மகா சாதுரியமுள்ளவர்கள். இவ்வித வேலைகளை வர்ணங்கள் தீட்டி மகா சித்திரத்துடன் செய்வார்கள். கூடை, கம்பளி முதலானவைகளை செய்யும்போது அதனோடே சில கருத்துகளடங்கிய சித்திரங்களையும், அடையாளங்களையும் வைப்பார்கள். இதை பார்க்கும்போதெல்லாம், ஒருவன் அதன்மூலமாய், அதைச் செய்தவனுடைய மனதையும், யோசனையையும் வாசித்து சொல்லலாம்.

இந்த ஜனங்கள் அல்லது இவர்களுடைய சந்ததியாரை, அமெரிக்கா தேசத்தில் சில பாகத்தில் இன்னும் பார்க்கலாம். ஆனால் முற்காலத்தில் விஸ்தாரமாய் ஜீவித்த ஜனங்கள் எல்லாரும் கண்ணுக்கு கிடைக்காமலேயே போய்விட்டார்கள். அத்தேசத்தில் வெள்ளைக்காரர் நிறைந்திருக்கிறார்கள். அப்படிபட்டவர்களில் அநேகர்கூட இப்படிபட்ட இந்தியரைப் பார்த்தது கிடையாது. கூட

ந்துபோன காலங்களில் இச்சாதியார் சர்க்காருக்கு அதிக தொந்தரவை கொடுத்து வந்தார்கள். புலமுறையும் அவர்களை எதிர்த்து யுத்தம் செய்து, வெள்ளைக்காரர்களுடைய் பொருட்களை கொள்ளையடிப்பார்கள். இச்சாதியாருக்கு ஒரு விசேஷித்த ஆசையிருந்தது. அது என்னவென்றால், அவர்கள் தங்களால் கூடுமானவரையிலும் வெள்ளைக்காரனைக் கொன்று தலையை உறித்து மண்டை ஓட்டை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான். இந்த ஜாதியாருக்கு கடவுளைப்பற்றிய மார்க்கமும் இருந்தது. ஆனால், அம்மார்க்கம் சத்துருக்களை நேசிக்கும்படி போதிக்கிறதில்லை. அப்படியிருந்தாலும் அச்சாதியாருக்குள்ளே சில நல்ல குணமுள்ளவர்களும் மனதுள்ளவர்களும் இருந்தார்கள்.

இச்சாதியாருக்கு சர்க்கார் சில நிலங்களை தேசத்துக்கு புறம்பே கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் அவர்கள் பயிரிடும் சமுசாரிகளாக ஜீவிக்கிறார்கள். சிலர் சிறந்த கல்வி தேற்சியடைந்து வருகிறார்கள். அவர்களுடைய வாலிபர்களும் கல்வித்தேற்சி அடைந்து முன்னோத்தக்க நிலைமைக்கு வருகிறார்கள். அவர்கள் கிறிஸ்துமார்க்க போதனைகளைகேட்டு அம்மார்க்கத்தை தழுவியும் வருகிறார்கள். வெகு சீக்கிரத்தில் அவர்கள் நகரவாசிகளாகும் சிலாக்கியத்தையும் பாத்தியத்தையும் அடைவார்கள். இச்சரித்திரம் மனோகரத்தை கொடுக்கக்கூடியது. இவர்கள் எப்படி அத்தேசத்துக்கு வந்தவர்கள் என்கிற குறிப்பு ஒன்றும் கிடையாது. பாரம்பரையாய் சொல்லப்படுகிற சில காரியங்களும், பட்டங்களும், அடையாளங்களும் தவிர வேறொன்றும் கிடையாது.

## MODES OF SALUTATION.

## வந்தனம் செய்யும் விதங்கள்.

சலாம் அல்லது வந்தனம்செய்கிற விதங்கள் பற்பல தேசங்களில் பல பல விதங்களாயிருக்கிறது. ஒரு இடத்தில் மரியாதைக்கு குறிப்பிக்கிற வந்தனத்தின் அடையாளம், இன்னொரு இடத்திற்குறிய வழக்கத்திற்கு முற்றிலும் விரோதமாய் காணப்படுகிறபடியால் சிரிப்புக்கும் ஆச்சரியத்திற்கும் காரணமாய் இருக்கிறது. ஐரோப்பியர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கையைப்பிடித்து குலுக்குகிறது அவர்களுடைய வழக்கம். கையைப்பிடித்து குலுக்காத சமயங்களில் தலையை குனிந்து காட்டுவது வந்தனத்திற்கு அறிகுறியாய் இருக்கிறது. ஐரோப்பியர்கள் கையைபிடித்து குலுக்குகிறதற்கு ஒரு காரணம் உண்டு என்று சொல்லுகிறார்கள். அதாவது முன்காலத்தில் வெள்ளைக்காரர்கள் ஒரு அற்பகாரியங்களுக்கெல்லாம் எரிச்சலடைந்து அதனாலே அவர்களுடைய கைகளில் கத்தியை ஒளித்துவைத்து ஒருவரையொருவர்குத்தி கொல்லுகிறது அவர்களுடைய வழக்கமாம். ஆகையால் அவாகளுக்கு கத்தியைப்பற்றிய சந்தேகம் அதிகமாயிருந்தப்படியால் அதை ஒழிக்கவும், சிநேக சம்பந்தத்தை அநுசரிக்கவும், தங்கள் கையில் கத்தியைப்போன்ற ஆயுதங்கள் ஒன்றுமில்லை என்று காட்டும்படியாக கையைப்பிடித்து குலுக்குகிற வக்கழும் உண்டானதாம். இது எவ்வளவு உண்மையோ இல்லையோ எப்படியிருந்தாலும் சரி, ஐரோப்பியர்களுக்குள் கையைபிடித்து குலுக்கிறது தான் வந்தனத்திற்கு அடையாளம் என்பது திட்டம். இவ்வழக்கம் பற்பல இடங்களிலும் பரவி இவ்வழக்கத்தை அநேகர் அநுசரித்து வருகிறார்கள்.



சீன தேசத்தார் ஒருவர்க்கொருவர் கைக்குலுக்குகிற வழக்கமில்லை. ஒரு சிநேகிதன், இன்னொரு சிநேகிதனை பார்த்தவுடன் அவனவன் தன்தன் சொந்த கைகளை ஆட்டி முருக்கித் தோள்களை தேய்த்துக் கொள்வார்கள். அதன்பிறகு வெகு மரியாதையுடன் ஒருவன் இன்னொருவனைப் பார்த்து: "சாப்பாடு சாப்பிட்டீரா?" "எங்கே போகிறீர்?" "உம்முடைய வேலை என்ன?" "உம்முடைய வயதென்ன?" "உம்முடைய பாதரட்சைகளை தைக்க எவ்வளவு கொடுத்தீர்?" என்று விசாரணைச் செய்வார்கள். இன்னொரு தேசத்தில் அதிகாரிகளை காணும்போது உடனே தொப்பியை கழட்டிவிட்டு, நாக்கை வெளியே நீட்டி சில அடிதூரம் பின்னுக்குப் போவார்கள்.

பர்மா தேசத்தில், ஒருவன் இன்னொருவனைப் பார்த்தவுடன முகத்தை முகருவான். முகம் வாசனையுள்ளதாய் இருக்கிறதுபோலவும் அதற்காக அதை முகருகிறதுபோலவும் பாசாங்கு செய்வார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள சுதேசிகள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது நாக்கை நீட்டிக்கொள்ளுவார்கள்.

தென்சமுத்திர தீவார் ஒருவரையொருவர் சந்திக்கும்போது ஒரு ஜாடியில் தண்ணீரை எடுத்து தலையைசுற்றி எடுப்பதுதான் அவர்களுக்குள்ள மரியாதை. எஸ்கிமோ என்கிற ஜாதியாரில் ஒருவன் இன்னொருவனுடைய மூக்கைபிடித்து இழுப்பது தான் அவர்களுக்குறிய மரியாதை. பலஸ்தீன தேசத்திலுள்ள ஜனங்கள் வந்தனஞ்செய்கிற ஆச்சாரம் அது ஒருவிதமாய் இருக்கிறது. ஒருவன் வந்தனஞ் செய்தபிறகு இன்னொருவன் உடனேபதிலாகச்செய்யவேண்டும். அவர்களில் ஒருவனை ஒருவன் சந்திக்கும்போது வீட்டுக்காரியங்களையெல்லாம் திட்டமாய் விசாரிக்கவேண்டுமாம். அப்படிக்கில்லாமல் வீட்டிலுள்ள ஒரு சிறு பிள்ளையைப்பற்றி விசாரியாமல் மறந்துவிட்டுவிட்டால் அது அவர்களுக்கு அதிக அவமரியாதையாம். அற்பகாரியத்தையும் விடாமல் விசாரிப்பதுதான் அவர்களுக்குறிய மரியாதை. இரண்டுபேர் எதிர் எதிராக பாதையில் நடந்துவரும்போது அரை மயில் தூரத்திற்கப்பாலிருந்துகொண்டே ஒருவரையொருவர் பார்த்து தலைகுனிந்து மரியாதைச் செய்துக்கொண்டே உறத்த சத்தமாய் வந்தனோபசார வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே சந்திப்பார்கள். அதன் பிறகு பலவிதமான கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுவார்கள். அதாவது; "உன் சுகம் எப்படி? உன் தாயார் சுகம் எப்படி? உன் மனைவி சுகம் எப்படி? உன் வேலைகாரி எப்படி? உன் வீட்டு மேல்பார்வைக்காரன் எப்படி? மாட்டுக்காரன் எப்படி? குதிரை சுகமா, மாடு சுகமா, ஆடு சுகமா?" இவ்விதமாய் பலவித விசாரணைச்செய்து, வீட்டிலுள்ள கடைசி வேலைக்காரியையும், நாயையும் மறக்காமல் விசாரிப்பதுதான் அவர்களுடைய ஆச்சாரத்துக்குறிய மரியாதை. இவ்விதமாய் ஒருவன் விசாரித்தபிறகு அதற்கு பதிலாய் ஒன்றையும் விடாமல இன்னொருவன் விசாரிக்கவேண்டும்.

ஐரோப்பியருக்கு, இத்தேசத்தார் வந்தனம்செய்யும் விதம் நூதனமாய்க் காணப்படுகிறதுபோலவே இத்தேசத்தாருக்கும் ஐரோபபியர் செய்கிற வந்தனம் நூதனமாய் இருக்கிறது.

ஒவ்வொரு தேசத்திலும் மாமூலாய் வருகிற வழக்கமாகிய வந்தனம் செய்கிற விதங்களுக்கு ஒரு தகுந்த கருத்திருக்கவேண்டும். ஆகையால் அவைகளிலுள்ள மூல சத்தியங்களை அறிந்துக்கொள்வது நம்முடைய மனதிற்கு மனோகரத்தைக் கொடுக்கக்கூடியது.

## A NOBLE DEED.

## ஒரு மேன்மையான செய்கை.

அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தில் ஒரு மனுஷன் இருந்தான். அவனுடைய பெயர் "பில்லி." அவன் அந்த பட்டணத்தின் தெருக்களில் சமாச்சார பத்திரிகைகளை விற்று ஜீவனம் செய்துவந்தான். அவன் இதற்குமுந்தி ஊர் ஊராய் திரிந்துகொண்டிருந்த நாடோடி. இவனுடைய கால் ஒன்று நொண்டியாயும் பிரயோசனமற்றதாயுமிருந்தது. இவன் தன் காலத்தை சோம்பலில் கழித்து பிச்சை எடுத்து திரிந்தவன். கடைசியாய் இவன் இந்த பட்டணத்தில் சேர்ந்தவுடன் சில முகாந்திரத்தினாலே தன் நாடோடித்தனத்தைவிட்டு நாணயமான ஜீவியம்செய்ய ஆரம்பித்தான். அவன் தெருக்களிலும் மற்ற இடங்களிலும் பத்திரிகைகளை விற்க ஆரம்பித்தபோது அவனுடைய பிரகாசமும், மகிழ்ச்சியும் பொருந்திய முகத்தால் மற்றவர்கள் கவரப்பட்டு, இவனுடைய நாணயமான ஜீவியத்தினால் அப்பட்டணத்திலுள்ள ஜனங்களால் நல்ல மதிப்பை பெற்றுவந்தான். ஆனபோதிலும் இவன் ஒரு எளிமையும் தாழ்மையுமுள்ள மனுஷன். இவன் மரித்துபோனபோது அநேக ஜனங்கள் கூடி ஒரு பெரிய தனவானுக்கும் கனவானுக்கும் செய்கிற மாதிரியான கனத்தை இவனுக்கு செய்தார்கள். அவனைப்பற்றிய கதை பின்வருமாறு சொல்லப்படுகிறது. பில்லி ஜீவனம் செய்துகொண்டிருந்த பட்டணத்தில் ஒரு ஐசுவரியமுள்ள துரைமகள் இருந்தாள். அவளுக்கு சடுதியாய் நெருப்பு விபத்து நேரிட்டு அதிகமாய் வெந்துபோனாள். உடனே அவளை ஒரு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனபோது, அங்கிருந்த டாக்டர் அவளுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் ஒரே ஒரு வழிமாத்திரம் அவருக்குத் தென்பட்டது. அதாவது, அவளுடைய காயம் ஆறும்படி சுகமுள்ள இன்னொரு மனிதனுடைய தோலை அறுத்து காயத்தின்மேல் மூடி ஆறவைக்க வேண்டும் என்பதே. சுகமுள்ள மனிதனுடைய தோலை, துண்டுதுண்டாக கத்தரித்து வெந்துபோன பாகத்தின்மேல் வெகு ஜாக்கிறதையோடு மூடும்போது அந்தப் புண் ஆறிவரும், மற்றபடி இவ்வித சிகிச்சை செய்யாமல் விட்டுவிட்டால் அந்த பெண் சாகத்தான் வேண்டியதாயிருந்தது. இன்னொருவனுடைய தோலை அறுக்கும்போது அவனுக்கு வலியும் மகா கஷ்டமும் உண்டாகும் என்பதற்கு சந்தேகமில்லை. காரியங்கள் இப்படியிருக்கையில் அந்த டாக்டர் அப்பெண்ணை சிகிச்சை செய்யும்படி யாராகிலும் சுகதேகிகள் தங்கள் தோலை கொடுக்க முடியுமாவென்று விளம்பரம் செய்தார். இந்த கஷ்டமான பெரும் உபகாரத்தை செய்ய யாரும் வரவில்லை. கடைசியாக சமாச்சார பத்திரிகைகளை விற்றுவந்த நொண்டியாகிய பில்லி என்கிறவன் தான் தன் தோலை கொடுப்பதாக சம்மதித்து டாக்டர்முன் வந்து நின்று "ஐயா என் நொண்டிக்காலை அந்த துரைமகள் சுகமடைய மனப்பூர்வமாய் கொடுக்கிறேன். தாங்கள் அதை எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம்" என்றான். இவனுடைய வேண்டுகோள் அங்கிகரிக்கப்பட்டது. டாக்டர் அவனை ஆஸ்பத்திரியில் வைத்து வெகு ஜாக்கிறதையாய் அவனுடைய தோலை அறுத்து எடுத்தார். ஆனாலும் என்ன, அவனுடைய தோலை அறுத்ததினால் அவனுடைய பலஹீனமுள்ள தேகம் க்ஷீணதசையடைந்து அதிகமாய் மெலிந்துபோனது. அவனுடைய தேகம் நாளுக்கு நாள் பலஹீனப்படவே, கடைசியாய் நிமோனியா என்கிற வியாதிக் கண்டு மரித்துப் போனான். இந்த ஏழை மனிதனுடைய மனப்பூர்வமான செய்கையைப்பற்றி கேள்விபட்ட எல்லாரும் ஆச்சரியப்பட்டு சிலாகித்து பேசினார்கள். இந்த மனிதன் தனக்கு பேர்பிரஸ்தாபம் உண்டாகுமென்று கருதினவனே அல்ல. தன் ஜீவன் போகக்கூடியதாயிருந்தாலும் இச்செய்கைக்கென்று தன்னை முற்றிலும் சந்தோஷத்தோடும் மனப்பூர்வத்தோடும் ஒப்புக்கொடுத்தான். அவன் மரிக்க கொஞ்ச நேரத்திற்கு முந்தி, "நானும் பிரயோசனப்பட்டேன்." என்கிற வார்த்தைகளை அவன் அதிக மெதுவாய் பேசினதை அங்குள்ள ஜனங்கள் கேட்டிருந்தார்கள். இப்போது அந்த துரைமகள் நாளுக்குநாள் சுகமடைந்து அங்குமிங்கும் நடமாட ஆரம்பித்தாள். பில்லி என்பவன் அதே ஆஸ்பத்திரியில் இருந்தபடியால், அந்த துரைமகள், பில்லியின் மரண படுக்கையண்டைபோய் அவனைப் பார்த்து, மனம் நொருங்கி கண்ணீர் சிந்தி "எனக்காய் இந்த மனுஷன் எவ்வளவு செய்தான்" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னாள். இந்த ஏழை மனிதனுடைய கண்ணியமான செய்கைக்காக அப்பட்டணத்திலுள்ள எல்லா சங்கத்தாரும், சகோதரத் தன்மையுடையவர்களும்; ஏராளமாய் இவனுடைய பிரேத அடக்கத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த ஒரு பெரிய இரும்பு வியாபாரசாலையும் அந்த நாளில் இவனுக்கென்று சாத்தப்பட்டபடியால் ஆயிரம் ஆயிரம் கணக்கான ஜனங்கள் இவனுடைய அடக்கத்திற்கு வந்திருந்தார்கள். இன்னொருவனை இரட்சிக்க தன் உயிரைக் கொடுத்த இந்த மனுஷனுக்கு ஒரு ஞாபக கோபுரம் கட்டப்பட்டது. இந்த கதையை வாசிக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவனும், நீயும், நானும் அழிந்துபோகாதபடி நித்திய ஜீவனை அடையும்படி உயிரைக் கொடுத்த இயேசுநாதரை நினைக்க நேரிடுகிறது. அந்த சிறுபெண்ணுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது. ஆனால் அது நிலையுள்ளதல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்குக்கொடுத்த ஜீவனினால் சொல்லக்கூடாத நித்திய ஜீவனும் சந்தோஷமும் ஆசீர்வாதமும் உண்டாகிறது.



## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**போபல் பள்ளிக்கூடத்தின் பீகம் அம்மாள்.**—இந்தம்மாள் தேற்சியுள்ள இந்திய அதிகாரிகளில் ஒருவர். நமதரசர் டில்லியை சந்தித்த கொண்டாட்ட சம்பந்தத்தை நினைவுகூற ஒரு பெரிய பள்ளிக்கூடம் பெண்பிள்ளைகளுக்கென்று டில்லியில் கட்டப்படும்படி ஏற்பாடானது. அந்தப் பெரிய உத்திரவாதமான வேலையை செய்யும்படி பீகம் அம்மாள் எடுத்துக் கொண்டார்கள். இந்தப் பள்ளிக்கூடத்து வேலை முடிவுபெற தமக்கு உதவிசெய்யும்படி அங்குள்ள மகமதிய பெருமாட்டிகளையும், மகாராணிகளையும், இன்னும் மதிப்புள்ள அநேக ஸ்திரீகளை கேட்டபோது அவர்கள் எல்லாரும் ஒருமித்து மூன்று லக்ஷம் ரூபாய் இப்பள்ளிக்கூடத்திற்கென்று கொடுத்திருக்கிறார்கள். இது நிற்க, இந்தம்மாள் மட்டும் $1\frac{1}{4}$-லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது கையிருப்பு நாலு லக்ஷத்துக்கு

மேலேயே இருக்கிறது. இந்தப் பணமும் போதாதாம். இன்னும் அதிக பணம் தேவையாம். இதுவரையிலும் கேட்கா திருந்தவர்களை இனி பணம்கேட்டு அவர்களிடமிருந்து வசூல் செய்யப்போகிறார்களாம்.

**ஹிந்து ஸ்திரீகளுடைய கூட்டம்.**—டில்லி பட்டணத்திலுள்ள ஸ்ரீ சிக்ஷா சபா சங்க சம்பந்தமாய் ஸ்திரீகளால் ஒரு கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தின் நோக்கம் என்னவென்றால், சில மாதங்களுக்குமுன் நம்முடைய வைஸ்ராயி அவர்களுடைய ஜீவனுக்கு நேரிடயிருந்த ஆபத்தைப்பற்றி துக்கிப்பதாகவும், லேடி ஹார்டிங் அம்மாளுக்கு அநுதாப வார்த்தைகளை சொல்லியனுப்பினார்கள்.

**இங்கிலாந்தில் வெள்ளம்.**—இவ்வருஷ ஆரம்பத்தில் இங்கிலாந்து தேசத்தில் பெரும் வெள்ளங்கள் நேரிட்டதினால் அங்குள்ள குடியானவர்களுக்கு பெரும் நஷ்டம் நேரிட்டது. விளைந்த நல்ல மாகுல்களையெல்லாம் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது.

சென்ற டிசம்பர்மீ தேம்ஸ் ஆற்றில் வெள்ளம் அடித்தபடியால் ஆயிரங் கணக்கான ஏக்கர் நிலங்கள் தண்ணீரால் மூடப்பட்டுப்போனது.

---

**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா 2 பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500 க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலைவன் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... ... | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுயசீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் மோனுனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு... ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| ரூன்-இல்-லாவைக் கட்டிமுடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |




# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௧௩ ௵ - ஏப்ரல்மீ. இல. ௰.


### REJOICING.

இராகம், பூரிகல்யாணி. ஆதிதாளம்.

**பல்லவி.**

மகிழ், மகிழ், மங்கையே, நீ ; அல்லேலூயா ! பரன்
மைந்தன் பரமேறினார், அல்லேலூயா !

**அநுபல்லவி.**

மகிழ், மகிழ் ; பரன் மைந்தன் மகத்வ பரமேறினார் ;
திகழ் திருச்சேனை பாடும் அல்லேலூயா இன்று.— மகிழ்

**சரணங்கள்.**

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினார், அல்லேலூயா !
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவரானார்,
ஞானமுடன் பாடுங்கள் அல்லேலூயா இன்று.— மகிழ்

2. ஏசுபரன் நமக்கு இறையானார் ; இது
எல்லவர்க்குஞ் சந்தோஷம், அல்லேலூயா !
வாசம் நாம் செய்யத் தந்தை வளவில் இடம்பிடித்த
நேசமுன்னத நேசம் ! அல்லேலூயா இன்று !— மகிழ்

3. தந்தை வலபாகத்தில் சத்ய கிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலூயா !
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெயிப்பார் ;
மங்கையே, உந்தனுக்காய் அல்லேலூயா இன்று— மகிழ்

## HOW GOD CARES FOR HIS CHILDREN

## கடவுள் தம்முடைய பிள்ளைகளை எப்படி பாதுக்காக்கிறார்

சில வருஷங்களுக்குமுன் சீனதேசத்தில், அந்நிய நாட்டார்களுக்கு விரோதமாக பாக்ஸர் என்ற மல் வீரர்களால் ஒரு கலகம் எழும்பினது. பாக்ஸர் என்ற கூட்டத்தார் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, அத்தேசத்திலுள்ள அந்நிய நாட்டாரை தேசத்திலிராமல் துரத்திவிடவாவது அல்லது அவர்களை கொன்றுபோடவாவது தீர்மானஞ்செய்துகொண்டார்கள். அவர்களுக்கு இரக்கம் என்பது கொஞ்சமென்கிலும் கிடையாமல் அதிக மூர்க்காவேசங்கொண்டவர்களாய் இருந்தார்கள். அவர்கள் அந்நிய நாட்டாரை கொலைசெய்ய தீர்மானித்தது மாத்திரமல்ல, அவர்கள் ஜாதியிலிருந்து யாராகிலும் கிறிஸ்தவர்களாயிருந்தால் அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துமார்க்கத்தை மறுதலித்து இவர்களுடைய சொந்தமார்க்கத்தைப் பின்பற்றாமல்போனால் அப்படிப்பட்டவர்களையும் பிடித்து கொலைசெய்தார்கள். சொற்ப தொகையானவர்கள் மாத்திரம் இப்படிப்பட்ட கலகநேரத்தில் கிறிஸ்துவை மறுதலித்து அவர்களைப் பின்பற்றிப்போனார்கள். ஆனால் பெருந்தொகையான சீனக்கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்காமல் அதிக தைரியமாய், இரத்தசாட்சிகளாய் மரித்தார்கள். அத்தேசத்தின் ஒரு பாகத்தில் ஆங்கில மிஷனெரிமாரின் குடும்பம் ஒன்று இருந்தது. அக்குடும்பத்தோடுகூட ஒரு மிஷனெரி அம்மாளும் இருந்தார்கள். பாக்ஸர் என்ற கூட்டத்தாரால் அவர்களுக்கு உண்டான துன்பத்திலிருந்து அவர்களுக்குக் கிடைத்த விடுதலை அதிக ஆச்சரியப்படத்தக்கது. மல்வீரர்கள் பற்பல இடங்களில் அந்நிய நாட்டாரையும் கிறிஸ்தவர்களையும் கொலைசெய்கிறார்கள் என்று கேள்விப்பட்டதினால் அந்த இடத்தைவிட்டு ஓடிப்போகும்படி தீர்மானஞ்செய்தார்கள். ஆனால் அவர்கள் எங்கே போகமுடியும்? இவர்களுடைய இடத்திலிருந்து மூன்று மயில் தூரத்திலே ஒரே ஒரு இடமிருந்தது. அந்த இடத்தில் கொஞ்சநாட்களுக்கு மாத்திரம் இடம் கிடைக்கும். அந்த இடம் எங்கே இருந்ததென்றால், ஒரு அஞ்ஞான கோவிலிலுள்ள ஒரு அறைதான். இவர்கள் அவ்விடத்திற்கு போகிறதற்கு முன்னதாக அக்கோவிலை பாதுகாக்கிறவன், இவர்களுக்கு இடம் தேவையான காலத்தில் கொடுப்பதாக வாக்குக்கொடுத்திருந்தான். இவனை நன்றாய் அந்த மிஷனெரி குடும்பத்தார் அறிந்திருந்தார்கள். அப்படியிருந்தபடியால், கொலைக்காரர் அங்குமிங்கும் சுற்றி ஓடிவருகிறார்கள் என்ற சத்தம் கேட்டமாத்திரத்தில், இவர்கள் நடுராத்திரியில் எழுந்து, கொஞ்சம் தின்பண்டங்களையும், வஸ்திரங்களையும், படுக்கைகளையும் எடுத்துக்கொண்டு, தங்களுக்கிருந்த இரண்டு பிள்ளைகளையும் தோளின்மேல் தூக்கிக்கொண்டு குறித்த இடத்திற்குப் போனார்கள். இவர்கள் வீட்டை விட்டு புறப்பட்டுப்போன அடுத்த நாளிலேயே பாக்ஸர் அவ்வீட்டில் நுழைந்து எல்லாவற்றையும் கொள்ளையடித்தார்கள். இச்சமாச்சாரம் இவர்கள் காதில் எட்டினது. நல்லவேளை, நல்ல சமயத்தில் அந்த வீட்டை விட்டு வந்துவிட்டார்கள். இல்லாவிட்டால் பெரிய மோசம் இவர்களுக்கு நேரிட்டிருக்கும். கடைசியாய் இவர்களுக்கு வீடில்லாமல் பரிதபிக்கிற நிலைமையிலிருந்தார்கள். இவர்களுக்குக் கிடைத்த இவ்வொதுக்கிடத்தில் அநேகநாள் தங்க இடங்கிடைக்கவில்லை. இவர்கள்போய் சில தினங்களுக்குள்ளே, இவர்கள் அக்கோயிலுக்குள் மறைந்திருக்கிற சமாச்சாரம் அக்கொடிய துஷ்டர்களுக்கு எட்டினது. அதினாலே, அக்கோயிலைக் காப்போன் அவர்களைப்பார்த்து, தூரத்திலிருக்கிற ஒரு மலை குகையில்போய் ஒளித்துக்கொள்ளும்படி துரிதப்படுத்தினான். அந்த குகையோவென்றால் அதிக ஓதமாயிருந்தது, ஒரு சிறிய பாகமட்டும் காய்ந்திருந்தது, அவர்களிடத்தில் ஆகாரம் கொஞ்சம்மாத்திரம் இருந்தது. அவர்கள் ஈரத்தரையில் வெகு நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தபடியால் அவர்களிடத்திலிருந்த அந்த கொஞ்ச ஆகாரங்கூட குளிர்ந்துபோய்விட்டது. இரண்டு நாள்வரையிலும் இந்த பயங்கரமான குகையிலே ஒளித்துக்கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில் அக்கொடிய துஷ்டர்களாகிய பாக்ஸர்கள் இவர்களை அங்குமிங்குமாய் தேடி திரிந்துகொண்டிருந்தார்கள். ஆனால் கர்த்தர் இவர்களை அக்கொடியவர்களுடைய கண்களுக்கு தென்படாமல் மறைத்து வைத்திருந்தார். சில காலத்திற்குமுந்தி இவர்களிடத்தில் அலுவல் பார்த்துக்கொண்டிருந்த ஒரு மனுஷன் இந்த மிஷனெரி குடும்பம் அந்த இடத்தில் ஒளிந்துகொண்டிருக்கிற சமாச்சாரத்தைக் கேள்விப்பட்டு, கொஞ்சம் கோதுமை ரொட்டிகளை சுட்டு அதோடு கொஞ்சம் வெள்ளரி பழங்களையும் எடுத்துக்கொண்டுபோனான். அதை அவர்கள் வாங்கிப் புசித்து அதிக நன்றியறிதலை செலுத்தினார்கள். அந்த ஓதமான இடத்தில் அநேக நாள் தங்க முடியாமல்போனபடியால் அந்த இராத்திரி அந்த இடத்தைவிட்டு அருகாமையிலுள்ள ஒரு கழனியில் பயிரிடுவோர் குடியிருக்கும்படி கட்டிவைத்திருக்கும் குடிசைக்குப்போனார்கள். அந்த



இடத்தில் இவர்களுக்கு இடம் கிடைத்தது. அவர்கள் அங்கே கொஞ்சநாள் தங்கியிருந்தபோது, அடுத்த மிஷன் ஸ்டேஷனில் இக்கொடிய பாக்ஸர்கள் நுழைந்து அங்குள்ளவர்களை சங்காரஞ்செய்கிறார்களென்று இவர்கள் கேள்விப்பட்டு அதிக மனவேதனை அடைந்தார்கள். இவ்விதமான வேதனைகளும் பாடுகளும் நேரிட்டபடியால் இவர்கள் எல்லாரும் கடோமான வியாதியில் விழுந்தார்கள். காரியங்கள் இப்படியிருக்கையில், இந்த மிஷனெரி குடும்பம் இந்த இடத்தில் ஒளிந்துகொண்டிருக்கிற சமாச்சாரம் பாக்ஸர்களுக்கு எட்டினது. அவர்கள் உடனே இந்த இடத்திற்கு வந்து அவர்களை கொல்லும்படி வரும்போது, அதற்கு முந்தியே அந்த மிஷனெரியை அறிந்த ஒரு மனுஷன் ஓடி வந்து: "ஐயா பாக்ஸர்கள் வருகிறார்கள்" என்று சொன்னான். அவர்கள் உடனே அந்த இடத்தைவிட்டு ஒரு குகையில் போய் ஒளிந்துகொண்டார்கள். அச்சமயத்தில் அவ்வீட்டிலுள்ள ஸ்திரீ உடனே அக்குகையின் வாய்தெரியாமல் மூடி வைத்தாள். அவர்கள் அருகாமையில் வருகிற காலடி சத்தத்தைக் கேட்டார்கள் அக்கொடியர் அதிக மூர்க்கமாய் பேசிக்கொண்டுவருகிற சப்தத்தையும் கேட்டார்கள். அங்குள்ள சிறுபிள்ளைகள் இச்சந்தடியை கேட்டவுடனே அழ ஆரம்பித்தார்கள். அப்பிள்ளைகள் தகப்பனைப்பார்த்து: "அப்பா பாக்ஸர் நம்மை இப்பொழுது கொன்றுபோடுவார்களா?" என்று கேட்டார்கள். அப்போது அந்த வார்த்தைகளைக் கேட்ட தாயும் தகப்பனும் இன்னும் கொஞ்சநேரத்திற்குள்ளாக மரித்துபோவோம் என்று நினைத்தபடியினாலே, அப்பிள்ளைகளைப்பார்த்து: "என் கண்மணிகளே இன்னும் கொஞ்சநேரத்திற்குள்ளாக இயேசுநாதரோடிருப்போம்" என்று

சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் பேசாமல் அந்த குகையிலேயே ஒளிந்துகொண்டு மௌனமாய் இருந்திருப்பார்களேயானால் ஒருவேளை அக்கொடியர் தேடிப் பார்த்துவிட்டு சும்மா போய்விட்டிருப்பார்கள். ஆனால், இந்த மிஷனெரி அப்படிச்செய்யாமல் தன் அருமை மனைவி பிள்ளைகளையும் மற்றவர்களையும் காப்பாற்றும்படி அவர்களுடைய ஜீவனுக்காக அக்கொடிய துஷ்டர்களிடம் பரிந்துபேசும்படியாக வெளியே வந்தார். இவர் வெளியே வந்தவுடனே அப்பொல்லாத மனுஷர் இவரை உடனே சுட்டார்கள். அந்தகுண்டு அடிபட்டவுடனே இவர் கீழேவிழுந்துவிட்டார், ஆனால் காயம் அதிகபலமாய் ஜீவன் போகத்தக்கவிதமாய் படவில்லை. அதன் பிறகு இவர்கள் எந்தவிதத்திலும் ஜீவன் தப்பமுடியாதென்று அறிந்தபடியால் இவர்கள் எல்லாரும் அக்குகையைவிட்டு வெளியே வந்தார்கள். அப்பொழுது இரண்டு மனிதர்கள், கூர்மையும் அதிக நீளமான இரண்டு கத்தியை தங்கள் கைகளில் பிடித்துக்கொண்டு அக்குகைக்குள் போனார்கள். குகைக்குள் வைக்கப்பட்டிருந்த படுக்கைகளையும், அவர்களுடைய வஸ்திர மூட்டைகளையும் எடுத்துக்கொண்ட பிறகு திரும்பவும் மிஷனெரி துரைசானியிடம் வந்து அவர்கள் போட்டிருந்த விவாகமோதிரத்தையும், மூக்குக்கண்ணாடியையும் எடுத்துக்கொண்டார்கள். அதன்பிறகு, இந்த கொடியர் உருவினப்பட்டயத்தோடு அந்த உத்தமர்களை தங்களோடு அழைத்துக்கொண்டுபோனார்கள். இவர்கள் இவ்விதமாய் அக்கொடியவர்களோடு போகும்போது அக்கிராமத்திலுள்ள ஜனங்கள் அநேகர் பார்த்துக்கொண்டு ஐயோ பாவம் இவர்களுக்கு என்ன நேரிடுமோவென்று பரிதாபப்பட்டார்கள். ஆனால் எந்தவிதத்திலும் இவர்களுக்கு உதவிசெய்ய அவர்களால் கூடாமல் போனது. அப்படி அவர்கள் எல்லாரும் அக்கொடியவர்களுடன் போனபோதிலும் அவர்கள் கொல்லப்படவில்லை, அவர்களை விட்டுவிட்டார்கள். ஆனால் இந்த மிஷனெரி தலை கை முதுகுமேல் குண்டுகளால் பட்டகாயம் படுக்கையில் கிடந்துவிட்டது. அதிக நோவை உண்டாக்கினபடியால் ஒரு ராத்திரி முழுதும் மரணபாடுபட்டார்.

இதன் பிறகுக்கூட அவர்கள் அநேகமுறை இக்கொடிய பாக்ஸர்களுடைய கண்களுக்குத் தென்பட்டபடியால், அவர்கள் மரணத்திற்கு வெகு சமீபமாய் இருக்கிறதாகவே எண்ணினார்கள். அவர்கள் இன்னொரு சமயத்தில் ஒரு இடத்தை விட்டு மறைவானயிடத்தில் ஓடி பதுங்கிக்கொள்ள புறப்பட்ட சமயத்தில் இந்த துஷ்டர்கள் இவர்களை சூழ்ந்துகொண்டு துன்பப்படுத்தினார்கள். இவர்கள்மேல் பரிதாபங்கொண்ட சில ஜனங்கள் இவர்களுடைய உயிர் தப்பிபிழைத்து ஓடட்டும் என்று இவர்களை ஒரு படகில் ஏற்றி தூர இடத்திற்கு அனுப்பினார்கள். அப்போதுக்கூட இந்த சங்கதி பாக்ஸர்களுக்கு தெரியவந்தபடியால் அவர்களை வழியிலேயே கொன்றுவிடும்படி அந்த படகுக்காரருக்கு உத்திரவு கொடுத்தார்கள். ஆனால் அந்த மிஷனெரியினுடைய ஒரு பெண்பிள்ளை இந்தப் படகுக்காரர்பேரில் அதிக பக்ஷமுள்ளவளாய் இருந்தபடியால், அதன் நிமித்தியமே அவர்கள் எல்லாரையும் கொல்ல இவர்களுக்கு மனம்வரவில்லை. ஒரு நாள் இந்த மிஷனெரி குடும்பம் ஒரு ஆற்றோரத்திலுள்ள நாணற்புதரில் ஒளிந்துகொண்டிருந்த சமயத்தில் பாக்ஸர்கள் அப்புதரண்டை இங்குமங்குமாக



தேடிக்கொண்டுவருகிற பெரிய இரைச்சலையும், சந்தடியையும் கேட்டார்கள். அந்த மிஷனெரி தன் குடும்பத்தோடு கொசு நிறைந்த இடத்தில் வேதனைப்பட்டுக்கொண்டு தாகத்தோடு இருந்தார்கள். அப்பொழுது ஒரு மழை வந்ததினால் இவர்கள் எல்லாரும் நனைந்துபோய் ஈர வஸ்திரத்தையே போட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியாக அந்த பாக்ஸர் இவர்களை அந்த இடத்தில் கண்டுபிடிக்கவில்லை: இந்த மிஷனெரி குடும்பம் ஜீவன் தப்பிபிழைக்கும்படி இன்னொரு சமயத்தில் ஒரு சிறிய குடிசையில் ஒளிந்துகொண்டிருந்தபோது சிலர் இவர்களை பாக்ஸர்களுக்கு காட்டிக்கொடுத்தார்கள். அப்போது அக்கொடிய துஷ்டர்கள் உள்ளே நுழைந்து அவர்களை அடித்து, மயிரைப்பிடித்து இழுத்து, காலாலே உதைத்து அவர்கள் மேலே காலைவைத்து மிதித்து பண்ணாத அலங்கோலங்களையெல்லாம் செய்து, கடைசியாக கையை காலோடு சேர்த்துகட்டி ஒருபெரிய மூங்கல் தடியில் மாட்டி அதிலே தொங்கவிட்டு ஒரு மிருகத்தை தூக்கிக்கொண்டுபோகிறதைப்போல் எடுத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் அவ்விதமாய் தூக்கிக்கொண்டு முரட்டுதனமாய்போனபோது அந்த மிஷனெரி அம்மாளுடைய தலை ஒரு கல்லின்மேல் மோதப்பட்டு காயமுண்டானது. இவர்கள் இவ்விதமாய் அவர்களை வதைத்தபோது சில ஜனங்கள் அதைப் பார்த்து பொருக்கமுடியாமல், "ஐயோ இதென்ன அநியாயம், இவர்களை அடிப்பார் யாருமில்லையா" என்றுக்கதினார்கள். அப்போது அந்தம்மாளை ஒன்றும் செய்யாமல் விட்டுப்போனார்கள். இந்த மாதிரி ஏழுதரம் மரணத்துக்கு சமீபம் வந்தும் அவர்கள் ஆச்சரியவிதமாக அதிலிருந்து விடுதலை அடைந்தார்கள். அவர்களுக்கு இவ்வித பயங்கர ஆக்கினைகளும் பாடுகளும் நேரிட்ட அந்த சமயங்களில் இவர்கள் எந்தவிதத்திலும் மொறுமொறுக்காதபடி அந்த சமயங்களிலெல்லாம் அவர்களுடைய இருதயத்திலே பூரண சமாதானம் இருந்ததாக அவர்களே சாக்ஷிகொடுத்தார்கள். கடைசியாக இவர்களெல்லாரும் இந்த ஆபத்திலிருந்து விடுதலையடைந்தார்கள். ஆனால் அன்னஆகாரமில்லாமல் காடுமலையெல்லாம் சுற்றி திரிந்தபடியால் ஒரு பெண்பிள்ளைக்கு சில நாள் பொறுத்து சீதபேதி கொடூரமாகக் கண்டு மரித்துபோய்விட்டது. அவ்வளவு சிறிய பிள்ளை இந்த வேதனைகளையெல்லாம் எப்படி சகித்திருக்கவேண்டும்! இது ஆச்சரியமே! இப்பொழுது அந்த மிஷனெரிமார்கள் எங்கேயிருக்கிறார்கள் தெரியுமா? இவ்வளவு ஆபத்தும் கஷ்டமும் நேரிட்ட இடத்தையும், அந்த பொல்லாத ஜனங்களையும் தாங்கள் செய்கிற வேலைகளையும்விட்டு தங்கள் சொந்த நாட்டிற்குபோய் இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அவர்களுக்கு உண்டான துன்பத்தினால் அவர்களுடைய தேக சுகம் கெட்டுபோனபடியால் திரும்பவும் நல்ல சுகம் அடையும்படி அவர்கள் ஒரே ஒரு வருஷம் மாத்திரம் இங்கிலாந்து தேசம்போக அதிக அவசியமாயிருந்தது. அவர்கள் இவ்விதமாய் தங்களுடைய சொந்த நாட்டில் ஒரு வருஷம் தங்கினபிறகு, அவர்கள் திரும்பவும் தங்களுடைய சத்துருக்களின் பேரில் வைத்த அன்பை ஒழித்துவிடவில்லை. இந்த மிஷனெரிமார் திரும்பவும் சீனதேசம் போய் எந்த ஜனங்கள் இவர்களை கொடுமைப்படுத்தினார்களோ அதே ஜனங்கள் மத்தியில் போய், இவர்கள் சேவித்துவருகிற அருமை இரட்சகருடைய அன்பையும் அவர் உலகத்துக்காய் ஏற்படுத்தியிருக்கிற இர

ட்டுப்பின் மார்க்கத்தையும் அந்த ஜனங்களுக்கு அதிக அன்போடு பிரசித்தம் செய்தார்கள். துன்பம் உண்டான அந்த நாளை விட இப்பொழுது சீறு அதிக மாறுதல் அடைந்திருக்கிறது. அந்த ஜாதிக்குள் முன்னிருந்த கிறிஸ்தவர்களைவிட பத்து மடங்கு அதிகமாக கிறிஸ்தவர்கள் பெருகி வருகிறார்கள். அப்பொழுது நேரிட்ட துன்பத்தினால், இப்போது ஜெயம் உண்டாகிறது.

இயேசுவின் மார்க்கம் அதிகமாய் அந்த இடத்தில் அதிகரிக்க அவ்விடத்தில் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட துன்பமே காரணமாயிருக்கிறது.

---

PHYSICAL EXERCISE AND HEALTH

## தேக அப்பியாசத்தினால் உண்டாகும் சுகம்

ஐம்பது வருஷத்திற்கு முந்தி பெங்கால் தேசத்து புருஷர்களுக்குள் தேக அப்பியாசஞ்செய்கிற வழக்கம் இல்லை என்று பெரும்பாலும் சொல்லப்படுகிறது. "நிற்கிறதைப்பார்க்கிலும் உட்காருகிறதும், நடக்கிறதைப் பார்க்கிலும் நிற்கிறது நல்லதென்றும், ஓடுவது அதிக வெறுப்பானதென்றும்" அத்தேசத்தாருக்குள்ளிருந்த எண்ணம் என்றதாக ஒருவர் சொல்லுகிறார். இப்பொழுது அப்படிப்பட்டப் பழைய எண்ணங்களெல்லாம் மாறிவிட்டது. சில நாட்களுக்கு முந்திதான் பெங்காளி புட்பால் டீம் (Food ball team) ஐச்சேர்ந்த சில பெங்காளி வாலிபர்கள், ஐரோப்பிய புட்பால் டீமுடன் விளையாடி செலித்துக்கொண்டார்கள். இந்தியர்களுடைய க்ஷேமத்தை விரும்புகிற ஒவ்வொருவருக்கும் பெங்காளிகளுக்குள் இவ்விதமாய் உண்டாயிருக்கிற தேர்ச்சியைப்பற்றி அதிக சந்தோஷம். நிற்கிறதைப் பார்க்கிலும் உட்கார்ந்துகொண்டிருப்பதையும், நடக்கிறதைப்பார்க்கிலும் நின்றுகொண்டிருப்பதையும் விரும்பி, ஓடுகிறதை சத்திமாய் வெறுக்கிற அப்படிப்பட்ட ஜனங்கள், தங்கள் ஜீவியகாலத்தில் எந்த ஜாதியாரையும் ஜெயிக்க தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இந்த பெங்காளி வாலிபர்கள் தேகத்திற்கு சுகத்தை கொடுக்கக்கூடிய புட்பால் விளையாட்டை கற்றுக்கொள்ளுகிறதைப்பற்றி அறிந்து அதிக சந்தோஷப்படுகிறோம். புருஷர்கள் தங்கள் சுகத்தை நாடி தேக அப்பியாசஞ்செய்ய கற்றுக்கொண்டபோதிலும் ஸ்திரீகளோவென்றால் அதைப்பற்றி மிகவும் பிந்தினவர்களாயிருக்கிறார்கள். வீட்டை விட்டு வெளியே போகாத ஸ்திரீகள் எத்தனை பெயரோ, வீட்டில் சமையல் முதலான சுலபமான வேலைகளை செய்துவிட்டு சும்மாயிருக்கிற ஸ்திரீகள் எத்தனை பேரோ, சும்மா தாழ்வாரத்தில் உட்கார்ந்து அல்லது படுக்கையிலே படுத்து புரண்டும் அல்லது சோம்பலாய் வீணான வார்த்தைகளை அலப்பிக்கொண்டிருக்கிற ஸ்திரீகள் எத்தனைபேரோ, பின்னும் கவைக்குதவாத சில புஸ்தகங்களை வாசித்து காலம் கழிக்கிற ஸ்திரீகள் எத்தனைபேரோ உண்டு. என்னுடைய பெங்காளி சிநேகிதர்களை நான் அடிக்கடி காணும்போதெல்லாம் அவர்களுடைய சுகயீனத்தைப்பற்றி பலமுறையும் முறையிட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பலத்தை விர்த்திசெய்ய யாதொரு அஸ்திபாரமற்றவர்களைப்போல் காணப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய சுகத்தைகோறி மருந்து சாப்பிடுகிறார்கள். சில சமையங்களில் மந்திரங்களை உபயோகித்து தங்கள் தேவர்களுக்கு பொருத்தனை செய்கிறார்



கள். ஆனால் சுகத்திற்கு அத்தியாவசியமானது சுத்த ஆகாயமும், தேக அப்பியாசமும்தான். பிள்ளைகள் ஓடி திரிந்து விளையாடக்கூடும், அதனாலே அவர்கள் சாதாரணமாய் சுகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஸ்திரீகளோ அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இருட்டாகிறதற்கு முன்னே வெளியே உலாவக்கூடாதவர்களுமாயிருக்கிறார்கள். இதுவுமல்லாமல் ஸ்திரீகள் எந்தவிதமான சுறுசுறுப்புள்ள விளையாட்டிலும் சேரக்கூடாது. ஏனென்றால் அப்படிப்பட்ட விளையாட்டில் சேரும்போது வெளியே வரநேரிடுகிறது, அப்படியானால் அதற்கு சிகிச்சை என்ன? வெளியே போகாமலேயே, அவர்கள் தேக அப்பியாசஞ்செய்ய நிச்சயமாய் விரும்பினால் அப்படியே செய்யக்கூடும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் அநேகவிதமான அப்பியாசங்களையும் தேக முயற்சிகளையும் செய்கிறார்கள். அப்படிப்பட்ட அப்பியாசங்களை தினந்தோறும் செய்தால் தேகத்தை சுகமாய் வைத்துக்கொள்ளக்கூடும். மிகவும் லேசான ஒரு அப்பியாசம் என்னவென்றால், நேராய் நின்றுக்கொண்டு இரண்டு கைகளையும் பக்கத்தில் தொங்கவைப்பதுதான். அதன்பிறகு கையை மாற்றி மாற்றி இடுப்புவரையிலும் குனிந்து முழங்காலைத் தொடுவது: இவ்விதமாய் ஒவ்வொரு கையாலும் ஆறுதரம் செய்யவேண்டும், அதன்பிறகு நேராய் நின்றுக்கொண்டு, ஒருக்காலை தூக்கி, எவ்வளவு உயரம் உயர்த்தக்கூடுமோ அவ்வளவு உயரம் உயர்த்தி ஆறுதரம் காலைமாற்றி வீசவேண்டும். தினந்தோறும் இப்படிப்பட்ட அப்பியாசத்தை ஒரு தடவை செய்துக்கொண்டுவந்தால் அதிக நன்மை உண்டாகும்.

இன்னொரு விசேஷித்த அப்பியாசம் எதுவென்றால், மூச்சை மெதுவாய் உள்ளுக்கு இழுத்து அதன்பிறகு கொஞ்சநேரம் அடக்கி பிறகு அந்தமூச்சை மூக்கின் மூலமாய் சீக்கிரம் விடவேண்டும், இந்த வித அப்பியாசத்தை சுத்தமான வெளி ஆகாயத்தில் செய்யவேண்டும், வேறுவிதமான அநேக அப்பியாசங்களை செய்யலாம். இவைகளை தினந்தோறும் செய்வதினால், தேக சுகத்திற்கு அநேக நன்மை உண்டாகும்.

---

KOHINOOR.

## கோஹீநூர் என்கிற விலைமதியா வயிரம்.

கோஹிநூர் என்று சொல்லப்படுகிற இந்த விலைமதியாத வயிரம், பூர்விக காலத்தில் அரசர்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்தபோது, ஜெயம் பெற்ற அரசர்களுக்கு தேவர்களால் பரிசளிக்கப்பட்டதென்று பாரம்பரியமாய் சொல்லப்பட்டு வருகிறது. இந்த சிறந்த வயிரக்கல் உற்பத்தி இந்தியா தேசந்தான். இந்த வயிரம் பூர்விக அரசர்களின் கையில் கிடைத்தபோது, தலைமுறை சொத்தாக பிள்ளைகளின் பிள்ளைகளாக படிப்படியாய் அறும்வியாமல் கைமாறி பலர் கைக்கு போனது. கோஹிநூர் என்கிற இந்த வயிரக்கல் விலைமதியாததும், அதிக உயர்வையுடையதாயிருந்தபடியால் பற்பல அரசர்கள் இதை அபகரிக்க ஆசைப்பட்டு, இந்த வயிரத்தை வைத்துக்கொண்டிருக்கிறவனோடு யுத்தம் செய்தாவது, அல்லது கொன்றுபோட்டாவது, அல்லது திருட்டுத்தனமாகவாவது இப்பொருளை அபகரித்துப் போனார்கள். இப்பொருளின் நிமித்தியம் அநேகர் தங்கள் உயி

ரையும் இழந்தார்கள். இவ்விதமாக அப்பொருள் ஹிந்து இராஜாக்களுடைய காலத்தில் ஒருவருடைய கையிலிருந்து இன்னொருவருடைய கைக்கு பலாத்காரமாய் வந்துக்கொண்டேயிருந்தது. இப்படியிருக்கையில் அல்லாவுதீன் என்றொரு மகமதிய அரசன் இந்தியாவின்மேல்படையெடுத்து கொள்ளை அடித்தபோது இந்த வயிரக்கல் அவனுடைய கைக்குப்போனது. பிறகு படிப்படியாய் இந்த பொருள் மொகல் அரசர்களிடம் டில்லியில் இருந்தது. கடைசியாக இந்தியா தேசத்தில் வெகுகாலமாக இருந்துக்கொண்டிருந்த இந்த வயிரக்கல் பெர்ஷியா தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அதற்குக் காரணம் எப்படி என்றால், பெர்ஷியா தேசத்து அரசனாகிய நாதர்ஷா என்கிறவன் இந்தியா தேசத்தின் ஐசுவரியத்தையும், டில்லி ராஜ அரண்மனையிலுள்ள மயில்வாகன சிம்ஹாசனம் பல விலையுயர்ந்த கற்களை யுடையதாயிருக்கிறதையும் கேள்விப்பட்டு இந்தியாவுக்கு வந்து மொகல் ஜாதியாருக்கு விரோதமாக எழும்பி அங்குள்ள விலையுயர்ந்த பொருட்களை யெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போனான். ஆனால் கோஹினூர் என்று சொல்லப்படுகிற கல் தன் கைக்கு கிடைக்கவில்லை யென்று அதிக விசனப்பட்டு, அதை எப்படியாகிலும் உபாயத்தினால் சம்பாதிக்க வேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்த சமையத்தில்; அந்த வயிரக்கல்லைப்பற்றிய சங்கதி இவனுடைய காதுக்கு எட்டினது. அதாவது, டில்லி அரசன், அந்த வயிரக்கல்லை எப்போதும் தன் தலைபாகையில் ஒளித்து வைத்திருக்கிறான் என்று நாதர்ஷா கேள்விப்பட்டான். அதனாலே அந்த வயிரத்தை சம்பாதிக்கும்படி டில்லி அரசனிடம் அதிக நேசமுள்ளவனைப்போல் மாறி சம்பண்ணி அவனுடைய வீட்டிற்கு விருந்துண்ணும்படி போனான். அப்பொழுது டில்லி அரசன் அவனுக்கு பயந்தபடியால் அவனை அதிக பக்ஷமாய் ஏற்றுக்கொண்டு கடைசியாய் நாதர்ஷாவை வழிவிட்டனுப்புகிற சமையத்தில், நாதர்ஷா டில்லி அரசனுடைய தலைபாகைக்குள் கோஹினூர் வயிரம் இருக்கிறதென்று முன்னமே அறிந்திருந்தபடியால் டில்லி அரசனைப்பார்த்து தான் அவன் பேரில் அன்புள்ளவனாய் இருக்கிறதாக அதை விளக்கும்படி தன் தலைபாகையை டில்லி அரசனுக்கும், அவனுடைய பாகையை நாதர்ஷாவுக்கும் கொடுக்கும்படி கேட்டான். இப்படி நாதர்ஷா கேட்டதினால் டில்லி அரசன் அப்படி தன் தலைபாகையை கொடுக்க விருப்பமற்றவனாய் இருந்தபோதிலும், அப்படிக்கொடாவிட்டால், ராஜமுறைமைக்கு அழகாகக் காணப்படாதென்று மரியாதைக்கு பயந்ததினால் அவன் ஒன்றும் பேசாமல் நாதர்ஷாவுக்கு தன் தலைபாகையை எடுத்துக்கொடுத்துவிட்டான். இவ்விதமாய் பெர்ஷிய தேசத்து அரசனாகிய நாதர்ஷா தந்திரமாய் இந்த வயிரக்கல்லை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். இந்தக்கல் பெர்ஷியா தேசத்து அரசர்களிடம் சில காலம் இருந்தது. நாதர்ஷா காலஞ்சென்ற பிறகு அந்தக்குடும்பத்திலிருந்து ஒருவன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய ஆதீனத்தில் இந்த வயிரக்கல் இருந்தது. இப்படியிருக்கையில் இவனுடைய தம்பி ஒருவன், அண்ணனைக் கொன்றுபோட்டு தான் பட்டத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கமுடையவனாயிருந்தபடியால், இவன் தன் இராச்சியத்தை விட்டு தம்பிக்கு பயந்து ஓடிப்போனான். இவன் இப்படி ஓடிப்போகும்போது இந்த வயிரக்கல்லையும் தன்னோடு எடுத்துக்கொண்டு



போனான். இந்த கல்லை இவனுடைய கையிலிருந்து எடுத்துக்கொள்ளும்படி இவன் தம்பி எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் இவன் அந்தப்பொருள் தன்னிடம் இல்லை என்று ஒரே சாதனையாய் சொல்லிவிட்டு அந்த வயிரத்தை சுவரில் ஒரு பள்ளம் செய்து புதைத்து வைத்திருந்தான். அதன் பிறகு எப்படியோ இவன் புதைத்துவைத்த இடம் இவனுடைய இன்னொரு தம்பியினால் கண்டுபிடிக்கப்பட்டு, அவன் அதை எடுத்துக்கொண்டு காஸ்மீர் தேசத்துக்கு ஓடிப்போனான். இந்த வயிரத்தை இவனுடைய கையிலிருந்து பிடுங்கும்படி பெர்ஷிய அரசன் பிரயத்தனப்பட்டபோது, இந்த மனுஷன் காஸ்மீர் அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்போது காஸ்மீர் அரசனாகிய ரஞ்சித்சிங் இவனுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாதிருக்கும்படி உதவி செய்தான். கடைசியாய் காஸ்மீர் அரசன் இவனோடு நயநயப்பான வார்த்தைகளைப் பேசி மெதுவாய் அவன் கையிலிருந்த கல்லை அபகரித்துக் கொண்டான். இவ்விதமாய் இந்த வயிரம் இந்தியா தேசத்துக்கு திரும்பவும் கொண்டுவரப்பட்டு ரஞ்சித்சிங் என்கிற அரசனுடைய கையில்தான் இருந்தது. அவன் இந்த வயிரத்தைப்பற்றி பற்பல விதமாய் யோசிக்கலானான். அதாவது: இந்தக்கல் தேவர்கள் மூலமாய் அரசர்களுடைய கைக்கு வந்து மூவாயிரம் வருஷமாகிறது. இந்த காலங்களில் இந்தப்பொருள் எத்தனையோ பேர் கையில் மாறிமாறி வந்தது. இது யார் யார் கைக்கு போனதோ அவர்கள் எல்லாரும் க்ஷீணதிசையடைந்து போனார்கள். ஆகையால் இது நம்முடைய கையிலிருந்தால் சாபமாய் இருக்கும் என்றதாக நினைத்தான். அதன்பிறகு ரஞ்சித்சிங் மரணப்படுக்கையில் விழுந்தபோது அவன் தன் மந்திரி பிரதானிகளை அழைத்து: “நான் மரணமடைந்த பிறகு இந்த வயிரத்தை அரண்மனையில் வைக்கக்கூடாது, இதை பூரி ஜெகநாத் கோவிலிலுள்ள விக்கிரகத்திற்கு கொடுத்துவிடும்படிச் சொன்னான்.” ஆனால் அவர்கள் ரஞ்சித்சிங் சொன்னபடி செய்யவில்லை. அதன்பிறகு அந்தப்பொருள் டலிப்சிங் கைக்கு வந்தது. 1849-ம் வருஷத்தில், குயின் விக்டோரியா அரசியாரின் காலத்தில் இந்த வயிரம் லண்டன் பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. சர் ஜான் லாரன்ஸ் கவர்னர் ஜெனரல் அவர்கள் மூலமாய் குயின் விக்டோரியா அரசிக்குக் கொடுக்கும்படி டலிப்சிங் கொடுத்து விட்டான். டலிப்சிங் கையிலிருந்து சர் ஜான் லாரன்ஸ் வாங்கும்போது பலாத்காரமாயாவது, சண்டைபோட்டாவது வாங்காமல் டலிப்சிங் தன் மனோராஜியாய் அவரிடம்கொடுத்தான். சர் ஜான் லாரன்ஸ் குயின் விக்டோரியாவுக்கு கொடுத்தபோது, அந்த அரசி அதைத் தன். கிரீடத்தில் வைத்துக்கொண்டார்கள். சர் ஜான் லாரன்ஸ் என்கிறவர் இந்த வயிரத்தை டலிப்சிங் கையிலிருந்து வாங்கி அவர் தன் சட்டை பையில் போட்டு வைத்தார். அதன்பிறகு அந்த சட்டையை கழட்டிவைத்த பிறகு அந்த சட்டையில் வைத்த கல்லை வெகுநாளாக மறந்துபோனார். பிறகு இந்தக் கல்லைப்பற்றிய பேச்சு வந்தவுடன் தன் ஞாபகத்துக்கு வந்து உடனே பல இடங்களில் தேடியும் அகப்படாமல் அதிக துக்கத்தோடிருக்கும்போது அவருடைய வேலைக்காரன் ஒருவன் வந்து, அவர் தேடுவது என்ன என்று விசாரித்தான். அப்போது அவர் அவனுக்கு சொன்னவுடனே அந்த கிளாஸ்துண்டா? அதோ அது என்னிடத்திலிருக்கிறது என்று அதைக் கொண்டுவந்து தன் எஜமானிடத்தில்கொடுத்தான். அவர் அதன்பிறகு தான் அதை குயின் விக்டோரியா அரசிக்கு கொடுத்தார். 1849-ம் வருஷம் பிரிட்டீஷ் ராஜாங்கத்தார் பஞ்சாபை எடுத்துக்கொண்ட பிறகு அதை அரசாண்டுக்கொண்டிருந்த டலிப்சிங் என்றவனுக்கு வருஷம் எட்டு லக்ஷம் ரூபாய் பென்ஷன் கொடுத்தார்கள். அதனாலேயே

அவன் அதிக சந்தோஷத்தோடு மேல்படி வயிரத்தை சர் ஜான் லாரன்ஸிடம் கொடுத்தான்.

அநேக ஹிந்து இராஜாக்கள், இந்த வயிரம் தேவர்களால் கொடுக்கப்பட்டதென்றும், அந்த வயிரம் யாருடைய கைக்கு போகிறதோ அந்த இடம் விர்த்தியடையாதபடிக்கு சாபமுள்ளதாயிருக்கிறதென்றும் பயந்திருந்தார்கள். அப்படி நினைக்கவும் பயப்படவும் வேண்டியதில்லை ஆனால் ஒரு காரியம் மாத்திரம் தெரிந்தவிஷயம், அதாவது: இந்த வயிரத்தை ஒருவர் கையிலிருந்து ஒருவர் திருட்டளவாய் வஞ்சித்து அபகரித்துக்கொண்டே வந்தபடியால், ஒவ்வொருவருடைய கையிலும் நியாயமான வழியில் வரவில்லை. அதன் நிமித்தியமே அந்த பொருள் சாபமாயிருந்த தென்று சொல்லலாமேயொழிய மற்றபடி அந்த வயிரத்தை வீட்டில் வைப்பதால் சாபம் வராது. இப்போது பிரிட்டிஷ் ராஜ அரண்மனையில் அந்த வயிரம் இருக்கிறது. அது அவர்களுக்கு ஒரு சாபமாய் இருக்கிறதில்லை. இதைப்போன்ற இன்னொரு வயிரம் ருஷியாதேசத்து அரசனிடமிருக்கிறது. இந்த வயிரம் கோஹினூர் வயிரத்தின் ஜோடி யென்றும், இதை ஐரிஷ் வியாபாரி ஒருவன் இந்தியாவிலிருந்து கொண்டுபோய் ருஷியாவில் விற்றுப் போட்டதாக எண்ணப்படுகிறது. ஆகக்கூடி இவ்வயிரங்கள் முன் இருந்த அளவிற்கு குறைந்துக்கொண்டே வருகிறது. அதன் காரணம் என்னவென்றால் பலருடைய கைக்கு இந்த வயிரம் போனபோது அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம், ஆபரணம் செய்ய யோசித்தபோது அதை கொஞ்சம் கொஞ்சம் கத்தரித்தபடியால் அதன் இடை குறைந்துக்கொண்டே வந்திருக்கிறது. இதிலிருந்து நாம் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம் அதாவது: உலகத்திலே நாம் எவ்வளவு விலையுயர்ந்த பொருளை உடையவர்களாயிருந்தாலும், அவைகள் உலகத்தோடே முடிவு பெறுகிறது. உலகபொருள் எல்லாம் இரவல், அவைகள் ஒருவன் கையிலிருந்து இன்னொருவன் கைக்கு செல்லுகிறதாயிருக்கிறது. அழிந்துபோகிற அல்லது நம்மை விட்டு எடுபட்டுப்போகிற பொருள்பேரில் கவனம் வையாமல், என்றும் அழியாத ஆத்ம ஜீவனைப்பற்றி சிந்தையுடையவர்களாயிருந்து அதைப் பெற்றுக்கொள்ளப் பிரயாசைப்பட வேண்டும்.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்

---

ஒரு ஜப்பானியப்பெண்.—மிஸ் ரூரோ ஆராய் என்கிற ஒரு ஜப்பானியப்பெண் நியுயார்க்கிலுள்ள கொலம்பியா சர்வகலாசாலையின் கடைசிப் பரிக்ஷையில் தேறி தத்துவ சாஸ்திர பண்டிதப் பட்டத்தைப் பெற்றாள். அவளுடைய தேசத்தில் இவள்தான் முதல் தடவையாக இந்தப் பட்டத்தைப் பெற்றவள்.

2. ஒரு சிறு பையனுக்குக் கிடைத்த பரிசு.—ஐக்கிய மாகாணத்தின் மேல்பக்கத்தில் வசித்துக்கொண்டிருந்த பென்ஜமன் கார்ட் என்கிற ஒரு சிறுவன் ஆதரமான எலி பிடிக்கும் கண்ணி ஒன்றை கண்டு பிடித்தான். அதன் மூலமாய் யுத்தக் கப்பல்களில் மனுஷர்களுக்கு அதிக தொந்தரவைக் கொடுத்துக்கொண்டிருந்த அநேகக் கணக்கான எலிகளை சங்கரித்ததாகக் கருதப்படுகிறது. இதற்காக அந்தப் பையனுக்கு மூன்று லக்ஷம் ரூபாய் துரைத்தனத்தாரால் வெகுமதி கொடுக்கப்பட்டது. அச்சிறுவன் இன்னும் ஒரு உயர்தரப்பாடசாலையில் படித்துக்கொண்டு வருகிறான்.

3. ஒரு வம்சத்தாரின் விர்த்தி.—சில ஐம்பது வருஷத்திற்கு முந்தி அமெரிக்கா தேசத்து ஐக்கிய மாகாணத்து சில பாகங்களில் அடிமைகளை வைக்கிற வழக்கம் உண்டு. 1863-ம் வருஷம் ஜனுவரி மீ 1-ம் தேதி ஆபிரகாம் லின்கன் என்கிற பிரசிடென்ட் அவர்களால் கொடுக்கப்பட்ட ஒரு விளம்பரத்தினால் இந்த அடிமைகள் விடுதலைப் பெற்றார்கள். அச்சமயத்தில் அடிமைகளும், நீக்ரோ



ஜாதியாரும் யாதொரு பொருளுமற்றவர்களாயிருந்தார்கள். அவர்களில் அநேகம்பேருக்கு படிக்கவும் எழுதவும் தெரியாது. அவர்கள் விடுதலையடைந்து ஐம்பது வருஷம் ஆனப்பிறகு அவர்களிடத்தில் தற்காலத்திலுள்ள ஆஸ்தி ஏறக்குறைய முந்நூறு கோடி ரூபாய் என்று உத்தேசிக்கிறார்கள். இதைவிட அவர்களிடத்தில் காணப்படுகிற விசேஷம் எதுவென்றால், சன்மார்க்கமும், கல்வியும் அவர்களிடத்தில் அதிகமாய் விர்த்தியடைந்துக்கொண்டு வருகிறது. ஐம்பது வருஷத்திற்கு முந்தி அவர்களில் படிக்கத் தெரிந்தவர்கள் நூறில் நாலுபேருக்கு அதிகமாயிருக்கவில்லை, இப்போது படிக்கத் தெரிந்தவர்கள் நூறில் அறுபது பேருக்கு குறைவாயில்லை. இவர்களில் அநேகம்பேர் நன்றாய் கல்வியிலும், வியாபாரத்திலும், இன்னும் மற்ற விஷயத்திலும் பேர்போனவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளில் இருபது லக்ஷம்பேர் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள். முப்பதாயிரம்பேர் உபாத்தியார்களாய் இருக்கிறார்கள். கடந்த வருஷங்களில் பள்ளிக்கூடத்தின் விர்த்திக்காக பதின்மூன்று கோடி ஐம்பது லக்ஷம் ரூபாய் வரையிலும் வரிக்கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த இப்பெரும் தொகை அதிக மேன்மையுடையதாயிருக்கிறது. நீக்ரோ ஜாதியார் அவர்களுடைய அயலகத்தாராகிய வெள்ளைக்காரருக்கு பல விஷயத்திலும் சரிசமானமானவர்களாயிராவிட்டாலும் இவ்வளவு பெரிய தொகையைக்கொடுத்தது அதிக சிரேஷ்டந்தான்.

4. இந்தியாவில் வியாபாரம்.—சென்ற வருஷத்தில் இந்தியாவில் உண்டான ஏற்றுமதி இறக்குமதி பொருள்களில் கிடைத்த லாபம் ஜெர்மன், ஐக்கிய மாகாணம், கிரேட் பிரிட்டன் என்கிற இந்த விசேஷித்த பட்டணங்களைவிட அதிகமாய்க் கிடைத்தது. இதனாலே இந்தியாவில் வியாபார விஷயமாய் வைக்கப்பட்டிருக்கிற தொகை மற்ற தேசங்களைவிட அதிகம் என்றல்ல, இந்தியாவில் சொற்ப தொகையைக்கொண்டு செய்த வியாபாரத்தில், மற்ற தேசங்களைவிட நல்ல லாபம் கிடைத்தது என்பதுதான். இந்தியாவில் இறக்குமதியின் ஒரு பொருளால் ஜனங்களுடைய பழக்கம் மாறிவிட்டதாகக் காணப்படுகிறது. அதாவது இத்தேசத்தில் சாதாரணமாக வழங்கப்படுகிற பித்தளை சாமான்களுக்கு பதிலாக அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியாகிற எனமல் பீங்கான் சாமானங்களை உபயோகிக்கிறார்கள். அதினால் இந்தியாவில் கொஞ்சம் கொஞ்சமாய் வீடுகளில் பித்தளை சாமானங்களின் உபயோகம் குறைந்துக்கொண்டே வருகிறது. இன்னொரு விஷயத்தில்கூட இந்தியா தேசத்து பழக்கம் குறைந்துவிட்டதென்று சொல்லலாம். விசேஷமாய் விளக்குகள் இறக்குமதியாகிறபடியால் முன்னே உபயோகித்துக் கொண்டிருந்த விளக்குகளை யெல்லாம் நிறுத்திவிட்டு கிரோசின் எண்ணை விளக்குகளை விசேஷமாய் உபயோகிக்கிறார்கள். இன்னும் கொஞ்சநாளைக்குள் இந்தியாவில் சமையல் செய்கிறதற்கு தக்க விளக்குகள் கொண்டுவரப்படும் என்று எண்ணப்படுகிறது. அதனாலே, வரட்டி உபயோகம் எடுபட்டுப்போகும். வரட்டி உபயோகம் எடுப்பட்டு போவதால், அவைகளையெல்லாம் எருவாக உபயோகப்படுத்தும் போது நிலங்கள் செழிப்பாகி அதிக தானியங்களை கொடுக்கும்.

5. கடமையை நிறைவேற்றுவதால் உண்டான பலன்.— இப்பத்திரிகையை வாசிக்கிற நமது நேயர்கள் எல்லாருக்கும் சில காலத்திற்கு முந்தி டிட்டானிக் என்கிற ஒரு பெரிய நீராவி கப்பல் முழுகி ஆயிரத்துக்கு மேலான ஜனங்கள் மாண்டார்கள் என்கிற சங்கதியைப்பற்றி ஞாபகமிருக்கும். அந்த சமையத்தில் இன்னொரு கப்பலிலிருந்த, ஒரு காப்டன் அவர்களுக்கு உதவி செய்யும்படி போய் அநேகரை இரட்சித்தான். அவன் மூலமாய் இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் நன்றியறிதலைக் காட்டும்படி ஒரு அழகான கோப்பையை இனமாகக் கொடுத்தார்கள். இதுவுமல்லாமல் உதவி செய்யவந்த

அந்தக் கப்பற்காரர் எல்லாருக்கும் ஒவ்வொரு மெடலை இனாமாகக் கொடுத்தார்கள்.

6. கனத்தை சம்பாதித்த ஒரு வாலிபன். — சென்னைப்பட்டணத்திலிருக்கிற சீ. வி. ஷேவியர் என்கிற ஒரு வாலிபன், பூர்வகாலத்திலும் தற்காலத்திலும் புதிய தாய் குடியேறின ஸ்தலங்களைப்பற்றியும், அவைகளின் விர்த்தியைப்பற்றியும், குடியேறின ஜனங்களின் சொந்த நாடுகளுக்குண்டாயிருக்கும் சம்பந்தத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதினதினால், லார்ட் மீத் என்னும் பந்தய கோப்பையை செலித்தார். இவ்விதமாய் அந்த பந்தயத்தை செலித்தபடியால் அந்த வாலிபனுக்கும் இந்தியாவுக்கும் ஒரு பெரிய கீர்த்தி. ஏனென்றால், இங்கிலாந்திலுள்ள அநேக வாலிபர்களும், குடியேறி இருந்த இதர நாட்டு வாலிபர்களும் இந்த பந்தயத்தை செலிக்கும்படி பிரயாசைப்பட்டார்கள். சீ. வி. ஷேவியர் என்கிற இந்த வாலிபனுக்கு 20-வயது. இவர் முதல் முதல் பெங்களூரிலுள்ள ஒரு மிஷன் பாடசாலையில் படித்தவர். அவர் பரீக்ஷையில் முதல் தரமாகத் தேறினதினால், அவருக்கு உபகார சம்பளம் கிடைத்து F. A. பரீட்சைக்குப் படிக்க வித்தியாசாலையில் சேர்ந்திருக்கிறார்.

---


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசோ என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா ½ பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனை தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் காதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படைக்கால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தலையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| சூசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் ஈவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுய நீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சீமானானது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். 100-க்கு ... | 0 | 8 |
| ருன்-இல்-லாவை கட்டி முடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்து நடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக்கம் புஸ்தகம் 100-க்கு... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| சத்தியவேத புஸ்தகம் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மேன்மையான செய்கை 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |


55

# மாதர் மித்திரி.

புத். ௨௬. ௧௯௱௰௩ ௵ - மே ௴. இல. ௰௧.

### SEND DOWN THE SPIRIT.

இராகம், அமிர்தகல்யாணி. ஆதிதாளம்

**பல்லவி.**

ஆவியை மழைபோல யூற்றும்;—பல
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.

**அனுபல்லவி.**

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்து நீர் பேசியே இரங்கிடச் செய்யும்.— ஆவியை

**சரணங்கள்.**

1. அன்பினால் ஜீவனை விட்டீர்; ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும்.— ஆவியை

2. சிதறுண்டலைகிற ஆட்டைப்—பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான்தான் உன் பர்த்தாவாம் யேசு
பாக்கியமென்றுமே வாக்கையருளும்.— ஆவியை

3. சாத்தானின் கோஷ்டம் அதிகம்;—அவன்
தந்திரக் குணங்களின் சேஷ்டை அதிகம்;
கர்த்தன் கிறிஸ்துவின் காயத்தினாலே
கலகக் குணங்களை ஒழிந்திடச் செய்யும்.— ஆவியை

4. காத்திருந்த பல பேரும்—மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி யூற்றும்.— ஆவியை

5. ஸ்தோத்திரக் கீதங்கள் பாடி—எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரி யூற்றும்.— ஆவியை

## A GREAT BRIDGE.

# ஒரு பெரியப் பாலம்.

ஆறுகளின்மேல் பாலம் போடவேண்டுமானால் இந்தியாதேசத்தில் உண்டாகிற கஷ்டத்தைப்போல் உலகத்தில் எத்தேசத்திலும் இருக்காது. சில இடங்களில் பாலம் இல்லாததினால் உண்டாகிற கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒரு பாலத்தைக் கட்டுவது அத்தியாவசியமாயிருந்தாலும், அதனால் உண்டாகிற கஷ்டத்தினால் கூடாமையாகவிருக்கிறது. அப்படிப்பட்ட கஷ்டமான ஒரு இடம் சாராகாட் என்கிற இடத்தில் இருக்கிறது. பிரயாணிகளுடைய வசதிக்கென்று போடப்பட்டிருக்கும் இருப்புபாதை கல்கத்தாவிலிருந்து டார்ஜீலிங் என்கிற இடத்திற்கு போகவேண்டுமானால் மத்தியில் கங்கா நதியை கடந்து போகவேண்டியதாயிருக்கிறது. அப்படிக் கடந்துபோகவேண்டிய இடத்திற்குதான் சாராகாட் என்கிற பெயர். இந்தியாவிலுள்ள அநேக ஜனங்கள் இப்பாதை வழியாய்ப்பிரயாணஞ்செய்கிறார்கள். அப்பிரயாணிகள் சாராகாட் என்கிற இடத்திற்கு வந்தவுடன் ரெயில்வண்டியைவிட்டிறங்கி அங்குள்ள நீராவிக்கப்பலில் ஏறி கங்கா நதியைக் கடந்துபோய் பிறகு ரெயில் ஏறி பிரயாணம் செய்கிற விஷயம் அவர்களுக்கு ஞாபகமிருக்கும். இப்படிப் பிரயாணம் செய்வதால் அதிக கஷ்டத்தை அடைகிறது மாத்திரமல்ல, அதிக நேரத்தையும் கழிக்க வேண்டியதாயிருக்கிறது. அப்படிப்பட்ட கஷ்டங்கள் நேரிடுகிறபடியால், ரெயில் அதிகாரிகள் வெகு காலமாக இந்த இடத்தில் பாலம் கட்ட பிரயாசப்பட்டார்கள். இந்த இடத்தில் பாலம் கட்டுகிறதற்கு உண்டாகிற கஷ்டத்திற்குக் காரணம் எதுவென்றால், அந்த ஆறு எப்போதும் ஒரே மாதிரியாயிராமல் அடிக்கடி இடம் மாறி மாறி ஓடுவதால்தான் அவ்விடத்தில் பாலம் கட்டுவது அதிக கஷ்டமாய் தோன்றுகிறது. தண்ணீர் இடம் மாறி மாறி ஓடி அங்குள்ள மெதுவான கரைகளை அறுத்துவிடுகிறது. ஆகையால் அவ்வாற்றின் தன்மையே அதிக அதிர்ப்தியை உண்டாக்குகிறதாய் இருக்கிறது. ஒரு வருஷத்தில் செலவுசெய்து பாலங் கட்டின பிறகு, மறு வருஷத்தில் தண்ணீர் அப்பாலத்தின் அடியில் ஓடாமல் வேறு பக்கமாய் ஓடுவதால், முன்கட்டின பாலம் பிரயோஜனமற்றதாக காணப்படுகிறபடியால் அதற்கு செய்கிற செலவு வீணாய்ப் போகிறதுமாத்திரமல்ல, அதினால் அதிக அதைரியத்தையும் கொடுக்கிறது. மெதுவான கரைகளை தண்ணீர் அறுக்காமலும், தண்ணீர் ஒரே மாதிரியாய் ஓடுகிற சரியான ஒரு வழியை ரெயில்வே அதிகாரிகள் கண்டுபிடிக்கிறவரையிலும் அந்த இடத்தில் பாலம் கட்டுகிற வேலையை தொடக்கூடாததாயிருக்கிறது. ஆனபோதிலும் கடைசியாக அந்த இடத்தில் வேலை ஆரம்பமாய் விட்டது. இப்போது அந்த இடத்தில் வேலை ஆரம்பமாகி சுமார் மூன்று வருஷங்களாகிறது. எல்லாக்காரியங்களும் ஜெயமாக முடியுமானால் அந்தப்பாலம் கட்டிமுடிய இன்னும் இரண்டு அல்லது மூன்று வருஷம் ஆகும். அப்படிக்கில்லாமல் ஒருவேளை அவ்வேலைக்கு ஏதாகிலும் குந்தகம் நேரிடுமானால், அப்பாலம் கட்டிமுடிய இன்னும் அதிக காலம் செல்லும். கட்டடங்களின் வேலைகளை அறியாதவர்களுக்கு, இப்பாலத்தை கட்டி முடிப்பதற்கு எவ்வளவு கஷ்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும்,



எவ்வளவு வேலைகளை செய்துமுடிக்கவேண்டுமென்றும் விஸ்தரிப்பது லேசானக் காரியமல்ல. இந்த பாலம் கட்டுகிறவேலை நீண்டகாலமாய் இருக்கிறபடியால் முதலாவது அந்த இடத்தில் ஒரு பெரிய ஊரை ஸ்தாபிக்க வேண்டியதாயிருக்கிறது. வேலை செய்கிற ஆட்கள் ஆயிரக் கணக்காய் இருக்கிறபடியால், அவர்கள் குடியிருக்க வீடுகளும், அவர்களுக்கு குடிக்கும்படி தண்ணீர் வசதிகளும், வியாதியில் விழுகிற சமையங்களில் அவர்களுக்கு ஆஸ்பத்திரியும், அவர்கள் சமாச்சாரங்களையும் இன்னும் பலகாரியங்களை அனுப்ப தபால் ஆபீஸ்களும், தந்தி, டெலிபோன் முதலிய பலவித காரியங்களையும் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கிறது. இந்த வேலைகள் முடிந்த பிற்பாடு பாலம் போடப்படுகிற இரண்டு பக்கத்திலுள்ள கரைகளை தண்ணீர் அறுத்துப் போடாதபடிக்கும், தண்ணீர் மாறாமல் ஒரே பக்கத்தில் ஓடும்படிக்கும், கரையை அதிக பலமாய் உறுதிப்படுத்தவேண்டியதாயிருக்கிறது. இதை செய்யும்படி பாலத்தின் இருபக்கங்களிலும் மிகவும் உயரமும் ஸ்திரமுமான அணைகள் போடப்பட்டிருக்கிறது. பிரமாண்டமான கற்கள் வரம்புகளின் ஓரத்திலும் ஆற்றுக்குள் வெகு தூரமட்டும் பதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் இந்த கற்கள் உஷ்ண காலத்தில் ஆற்றுத் தண்ணீர் குறைவாக இருந்தபோது கட்டப்பட்டது. இவ்விதமான வேலைகளை செய்யும்படி அதிகமான கற்கள் வெகு தூரத்திலிருந்து ரெயில் மூலமாக கொண்டுவரப்பட்டது. ஆற்றின் ஓரத்திலும், ஆற்றுக்குள்ளும், அணையைக் கட்டுவதற்கு எவ்வளவு கற்கள் பிடித்திருக்குமென்று ஒரு உத்தேசத்தைக் காட்டுகிறேன். கல்கத்தாவிலிருந்து டார்ஜீலிங் என்கிற இடத்திற்கு சுமார் 370 மையில் தூரம் இருக்கிறது. கல்கத்தாவிலிருந்து டார்ஜீலிங் என்கிற இடத்திற்கு 370-மையில் தூரம் அவ்வளவு நீளமான ஒரு ரெயில் நிறைய கற்களை நிறப்பினால் எவ்வளவு கற்கள் பிடிக்குமோ அவ்வளவு கற்கள் இந்த அணை கட்டுவதற்கு வேண்டியதாயிருக்கிறது. பாலம் கட்ட ஆரம்பிக்கிறதற்கு முந்தி இவைகளெல்லாம் முடிந்து தீரவேண்டும். பாலம் கட்டுவதற்கு அஸ்திபாரங்கள் மிகவும் ஆழமும் எப்போதும் பெயரக்கூடாதபடி அவ்வளவு பலமுள்ளதாய் வெட்டப்படவேண்டும். இந்த அஸ்திபாரங்களுக்காக பிரமாண்டமான 16 கிணறுகள் வெட்டப்படவேண்டியதாயிருக்கிறது. வெட்டப்பட்ட இந்தக் கிணறுகளில் பாலம் மிகவும் உறுதியாய் நிற்கும்படியாக மிகவும் உறுதியான தளவாடங்களை போடவேண்டியதாயிருக்கிறது. இந்த பாலம் சுமார் ஒரு மையிலுக்கு அதிக நீளமுள்ளதாயும் கரையிலிருக்கிற கண்களைத்தவிர, தண்ணீர் உள்ள பாகத்தில் மாத்திரம் பதினைந்து கண்களை உடையதாயிருக்கிறது. உஷ்ணகாலமுழுவதிலும் இதில் வேலை செய்கிறவர்கள் 20,000 பெயர். மழைகாலத்தில் வேலையை அதிகமாக நிறுத்தவேண்டியதாயிருக்கிறது. பாலம் முடிந்த பிறகு அதன்மேல் ரெயில் போகும்படி இரண்டு இருப்புப்பாதை போடப்படும். தண்ணீர் எவ்வளவு உயரத்திற்குவருமோ அந்த இடத்திலிருந்து பாலம் 40 அடி உயரமுள்ளதாயிருக்கும். இந்த பாலத்தை கட்டி முடிப்பதற்கு 4 கோடி ரூபாய் சிலவாகும் என்று உத்தேசிக்கப்படுகிறது.

## WHAT BROUGHT HER TO CHURCH?

## ஒரு ஸ்திரீயை ஆலயத்துக்குப் போகும்படி ஏவினது எது?

ஒரு நாள் ஸ்திரீகளுக்கென்று ஒரு கூட்டம் துடங்கப்போகிற சமையத்தில் அங்கிருந்த ஓர் போதகருடைய மனைவி அக்கூட்டத்து தலைவியிடம்போய், டாக்கிதா என்பவள் கோவிலுக்கு முதல் தடவையாக இங்கே வந்திருக்கிறாள் என்று மெதுவாய் அவளுடைய காதில் சொன்னாள். இவளுடைய புருஷன் டாக்கிதா என்பவர் ஒரு நல்ல குடித்தனக்காரனும், உத்தம புத்த மதானுச்சாரியுமாயிருந்து தன்னுடைய இரண்டு குமாரர்கள் சிறுவர்களாக இருக்கும்போதே இறந்துபோனார். இப்பொழுது வாலிபர்களாயிருக்கிற அந்த இரண்டு பிள்ளைகளின் தாயார் தன் புருஷனுடைய மதத்தையே அநுசரித்து, அந்த மார்க்கத்தினாலே குடும்பத்திற்கு செல்வாக்கு பெருகுகிறதென்று நம்பி வந்தாள். அவளுடைய மூத்தக் குமாரனாகிய வீட்டுக்கு சுதந்தரவாளி, இயேசுகிறிஸ்துவினுடைய போதனையின்மேல் வாஞ்சையைக் காண்பித்தபோது அவனுடைய தாய் அவனைப் பார்த்து, நீ உன் பிதாக்களுடைய தேவர்களை தள்ளிவிட வேண்டாமென்றும், குமாரன் முற்பிதாக்களுடைய ஆவிகளுக்கு செய்யவேண்டிய கடமைகளை மறக்கக்கூடாதென்று கண்ணீரோடு கெஞ்சியும் பயமுறுத்தியும் கேட்டுக் கொண்டாள். ஆனால் அவளுடைய வேண்டுகோள் எல்லாம் வியர்த்தமாய்ப்போனது. எல்லா ஆவிகளுக்கும் மேலான பரமபிதா தாம் இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட காக்ஷியை சிந்தோ என்கிற அந்த வாலிபன் கண்டுபிடித்து உத்தம கிறிஸ்தவனாகி விட்டான். அவனுடைய தாய் இதனாலே அவன்பேரில் அதிக கோபமும், விசனமுங் கொண்டு அவனுக்குரிய சுதந்தரத்திலிருந்து தள்ளி விட்டாள். ஆனாலும் அந்த வாலிபன் தன் ஆண்டவருக்கென்று சகல நஷ்டங்களையும் சந்தோஷமாய் சகித்து தன் தாயைவிட்டு போய் விட்டான். சிந்தோவின் தாயார் தன் சிநேகிதர்களைப் பார்த்து, என் குமாரனாகிய சிந்தோ எல்லா விஷயத்திலும் நல்ல பையனாகவும், எனக்கு கீழ்படிகிறவனாகவும் இருந்தான். ஆனால் இப்போது நான் என்ன சொல்லட்டும், கிறிஸ்து மார்க்கத்தின் போதனையை கேட்டது முதல், நான் என்ன சொன்னபோதிலும் அந்த மார்க்கத்தைவிட மாட்டேன் என்கிறான் என்று புலம்பினாள். ஆகையால் அவளுடைய இளையக் குமாரனாகிய சிந்தாரோ என்பவன் ஆஸ்திக்கு சுதந்தரவாளியாகி, குடும்பத்தின மதானுச்சாரக் காரியங்களுக்கெல்லாம் உரிமையாளன். ஆனால் அந்த வாலிபன் கெட்டக்குமாரனாகி தன் தாயைவிட்டு அந்நிய தேசம் சென்று அக்கிரமமான ஜீவியம் செய்து தன் கையிலிருந்த அநேக ஆயிரம் ரூபாய்களை வீண் விரயம் செய்தான். இப்படி நடக்கிற சமையத்தில், அவனுடைய சகோதரனும் மற்ற கிறிஸ்தவர்களும் அவனுக்காக ஜெபம் செய்தார்கள். ஒரு நாள் சிந்தாரோ என்பவன் ஒரு தூரமான பட்டணத்தின் தெருவழியே நடந்து போய்க்கொண்டிருக்கும்போது ஆரத்திலே பாட்டு சத்தம் கேட்டது. அதனாலே அவன் ஒரு சிறிய ஆலயத்துக்குள்ளே சென்று சுவிசேஷப் போதனையைக் கேட்டான். அப்போது அவ்வாலிபனுக்கு ஒரு விசேஷித்த பிரகாரம் ஒன்றும் மனதில் பதியவில்லை.



அந்த ஆலயத்தில் கிடைத்த ஒரு ஞானப்பாட்டின் காகிதத்தை மடித்து தன் வஸ்திரத்தில் வைத்துக்கொண்டு தன் வழியேபோனான். ஆனால் அவன் அந்த கடிதத்தை அந்த சாயந்திரம் எடுத்து படித்தபோது, அன்றைக்கு அவன் கேட்ட வார்த்தைகள் எல்லாம் அவனுடைய ஞாபகத்துக்குவந்து, அவனுடைய இருதயம் அவனுக்குள் கலங்கி இனிமேல் நல்ல ஜீவியம் செய்யவேண்டுமென்கிற ஆசை பிறந்தது. சில நாட்களுக்குப்பின் அவன் தன் வீடு சேர்ந்து அந்த கிராமத்தில் ரகசியமாய் சில கிறிஸ்தவர்களைப் பார்த்து, கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தான். அப்படி விசாரித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போகையில், ஒரு கோவிலுக்கு வெளியே இருட்டில் தன் சகோதரன், தன்னுடைய இரக்ஷிப்புக்காக தேவனை வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டு அவனுடைய இருதயம் மிகவும் உருகினது. இப்படியிருக்கையில் ஒரு நாள் சிந்தாரோவின் தாயார் தன் வீட்டில் ஒரு வேதாகமபுஸ்தகமிருக்கிறதைக் கண்டு அதிக கோபமடைந்து, "சிந்தாரோ நான் அதிகமாய் வெறுத்து வருகிற இயேசுகிறிஸ்துவினுடைய போதனையின்மேல் நீயும் அதிகப் பிரியப்படுகிறாயோ என்று அதிக கோபத்தோடு கேட்டாள்." அப்போது சிந்தாரோ, தனக்கு கிறிஸ்து மார்க்கத்தினால் கிடைக்கக்கூடிய நல்ல ஜீவியத்தை தன் தாய்க்கு சொல்வதினால் அவளுக்கு மனவருத்தம் நேரிடுமென்று பயந்ததினால் அந்த சமையத்தில் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதவனைப்போல் மறுத்துவிட்டான். அவன் ஒரு நாள் சாயந்திரம் அருகாமையிலிருந்த ஒரு ஆலயத்திற்கு போய் இருந்தான். அப்போது ஆராதனை முடிந்து சில ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த ஒரு வயோதிப போதகர் ஜனங்களைப்பார்த்து: "சிந்தாரோ நமது ஆண்டவரை பற்றிகொண்டான் என்று அதிக சந்தோஷத்தோடே சொன்னார்." அதைக்கேட்ட எல்லா ஜனங்களும் ஆர்ப்பரித்து சந்தோஷப்பட்டார்கள். அது முதல் அவன் கிறிஸ்துவை எந்த இடத்திலும் மறுக்கவில்லை. சிந்தாரோ என்பவன் கிறிஸ்தவனாகி விட்டான் என்கிற சங்கதி இவனுடைய தாயாருக்கு தெரிந்தவுடனே, அவள் அதிக மூர்க்காவேசம் கொண்டு, அவ்வூர் போதகருடைய வீட்டிற்குப்போய் அவருடைய மனைவியைப் பார்த்து இது என்ன அநியாயம்? முதலாவது ஒரு பையனையும், பிறகு இன்னொரு பையனையும் உங்கள் மார்க்கத்திலே இழுத்துக்கொண்டதென்ன? எங்களுடைய மதத்திலிருந்து உங்களுடைய மதத்தில் இழுத்துக்கொள்வது சரியா என்று பலவிதமான கேள்விகளை அதிகக்கோபத்தோடுக் கேட்டாள். அப்போது அந்த போதகருடைய மனைவி வெகு சாந்தத்துடனும், மரியாதையுடனும் டாக்கிதாவைப் பார்த்து: "அம்மா நாங்கள் உன்னுடைய பிள்ளைகளை இழுத்துக்கொள்ளவில்லை. ஜீவனுள்ள கர்த்தராகிய இயேசுநாதர் அவர் தம்முடைய வல்லமையினால் உன்னுடைய பிள்ளைகள் அவருக்கு அடியார்களாகும்படி தம்மிடத்தில் இழுத்துக்கொண்டார். கெட்டுப்போய் இருந்த உன்னுடைய குமாரன் மனம்மாறி நல்ல ஜீவியம் செய்யும்படி நேர்ந்ததும், தாயாரிடத்தில் திரும்பி வந்ததும் கிறிஸ்துவினுடைய வல்லமையால்தான் என்று அதிக சாந்தத்தோடே சொன்னார்கள்."

ஆனபோதிலும் சிந்தாரோவின் தாயாருக்கு வெகு காலமாக ஆறுதல் இல்லை. அவள் தன் சிநேகிதர்களைப் பார்க்கும்போதெல்லாம், "சிந்தாரோ என்னை விட்டு பிரிந்துபோய் இருந்தாலும் அவன் குணம் மாறி திரும்பவும் என்னிடம் வந்து நல்ல பையனாய் இருந்ததைப்பற்றி சந்தோஷப்படுகிறேன், ஆனாலும் என்ன? இன்னொரு சங்கடம் நேரிட்டது. அவன் கிறிஸ்தவனாக போய்விட்டானே" என்று சொல்லி புலம்புவாள். ஆனால் டாக்கிதா படிப்படியாய் இயேசுநாதருடைய அன்பான போதனைகளை அந்த போதகருடைய மனைவியின் மூலமாய் கேட்டுக்கொண்டு வந்தாள். இப்படியே அவள் கேட்டுக்கொண்டு வந்தபடியினால் டாக்கிதாவுக்கு கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றியிருந்த துவேஷம் குறைந்துக்கொண்டேவந்தது. அவள் ஒரு நாள் சிலரைப்பார்த்து: மெய்யாகவே கிறிஸ்துநாதருடைய போதனைகள் தீமை அல்ல என்று சொன்னாள். அதன் நிமித்தமே அவள் முதல் தடவையாக கோவிலுக்குள் வந்தாள். அப்போது அவள் சிந்தாரோவின் குழந்தையை முதுகின்மேல் கட்டிக்கொண்டு அக்குழந்தையை தாலாட்டிக்கொண்டே அங்கே நடக்கிற போதனைகளையெல்லாம் வெகு கூர்மையாய் முற்றிலும் கேட்டாள். அதன் பிறகு கூட்டம் கலைந்தவுடன், யாரும் அவளிடத்தில் பேசுகிறதற்கு முந்தி போய்விட்டாள். ஆனபோதிலும் அங்குள்ள கிறிஸ்தவர்களெல்லாரும், இவள் தன்னுடைய பிள்ளைகள் அடைந்த இரக்ஷிப்பின் சந்தோஷத்தை அவளும் சீக்கிரம் அடையும்படி ஜெபம் செய்துக்கொண்டு வருகிறார்கள்.

## THOUGHTS FOR THE WEEK.

## ஒரு வார தியானம்.

ஞாயிறு.—தேவன் நமக்கு செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் பார்க்கக்கூடுமானால், நம்முடைய இருதயம் பூரித்து, குரல் சப்தம் தொனித்து, கண்கள் பிரகாசமடையும். நாம் ஏறெடுக்கிற ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் தேவனிடத்திலிருந்து உத்திரவு கிடைத்தும் நாம் அதை நம்முடைய அநுபவத்தில் அறியாமலிருக்கிறோம். நாம் கேட்கிற காரியங்களுக்கு அவர் சும்மா இராமல் அதற்குதக்க உத்திரவைக்கொடுக்க அவர் தம்முடைய வேலையை செய்கிறார் என்று நாம் நம்பலாம். ஆனால் அதை நம்முடைய கையினால் தொடவாவது அல்லது கண்களால் பார்க்கவாவது முடியாது. ஆனால் எப்படியும் அவர் தம்முடைய வேலையை துவக்கியாயிற்று. உண்மையான ஜெபம் பலனடையாமல் போகாது.

திங்கள்.—ஜீவகாலமெல்லாம் அதிக துன்பத்தை அடைந்துக்கொண்டு வந்த நாற்பது வயதான ஒரு சிறிய கூனியைப் பற்றி ஒரு மிஷனெரி சொல்லுகிறதாவது: அவர் முதல் தடவையாக அந்த ஸ்திரீயை பார்க்கப்போனபோது அவள் சொன்னதாவது: "ஏன் இந்த மாதிரியாக என் அங்க ஈனத்தினால் பாடு படவேண்டுமென்று தேவனை நோக்கி அடிக்கடி விசாரித்தேன், ஆனால் அவர் எனக்கு உத்தரவு கொடுக்கவில்லை. ஆனாலும் அவர் எனக்கு சொன்னதாவது: என்னுடைய எல்லாப் பாவங்களும் எனக்கு மன்னிக்கப்பட்டது என்பதே. ஆகையால், நான் அதிக சந்தோஷமாயிருக்கிறேன். ஒருவேளை மற்ற காரியங்களை எனக்குப் பிற்பாடு தெரியப்படுத்துவார். பொறு



மையோடு பாடுபட்டு கீழ்படிதலை கற்றுக்கொண்டவருடைய ஜீவியத்தைப் பார்க்கிலும் மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கிற காரியம் எது?

செவ்வாய்.—ஒருநாள் ஒரு ஸ்திரீ தனக்குண்டாயிருந்த கண் நோயினால், கண்களை பரிசோதித்து சிகிச்சை செய்யும் ஒரு வைதியனிடம் போய் தன் கண்களிலுள்ள வியாதியை சோதிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அப்பொழுது அந்த டாக்டர் சொன்னதாவது: உன்னுடைய கண்கள் அதிகமாய் களைத்துப்போனது, ஆகையால் அவைகளுக்கு இளைப்பாறுதல் தரவேண்டும், உன் வீட்டின் சமீபத்தில் ஏதாகிலும் விஸ்தாரமான காக்ஷி உண்டா? என்று கேட்டார். அதற்கு அந்த ஸ்திரீ, ஆம் என்னுடைய வீட்டுக்கு முன்னால் ஒரு பெரிய மலையின் மேன்மையான சிகரத்தைப் பார்க்கக்கூடும். வீட்டுக்கு பின்னாலிருந்து குன்றுகளைப் பார்க்கக்கூடும் என்றாள். அதற்கு டாக்டர் அப்படியானால் அது நல்ல காரியம், அது தான் உனக்கு தேவை. உன் கண்கள் களைத்துபோகும்போது, 10 அல்லது 15 நிமிஷம் வரையிலும் மலையை உற்றுப்பார். உன்னுடைய நீண்டப்பார்வை உன் கண்களுக்கு இளைப்பாறுதலைக்கொடுக்கும் என்றார். அதேமாதிரி மோக்ஷத்தின் உச்சித குன்றுகளை அண்ணாந்துப் பார்ப்பதால், பலவித வேலைகளாலும், கவலைகளாலும் களைத்துப்போன இருதயம் இளைப்பாறுதலையும் புதுபலத்தையும் கண்டடையும்.

புதன்.—ஸ்காட்லாந்து தேசத்தைப் பார்க்கும்படி போயிருந்த ஒரு துரை ஒரு நாள்காலையில் உலாவும்படி வெளியேபோயிருந்தார். அவர் உலாவிக்கொண்டிருக்கும்போது ஒரு விருத்தாப்பியமான ஒரு மனுஷன், கையிலே தொப்பியை பிடித்துக்கொண்டு தலையை குனிந்து ஒரு குன்றின்மேல் நிற்பதைக்கண்டார். அவனைப் பார்த்து அந்த துரை, நீ என்ன செய்கிறாய் என்று கேட்டபோது, அவன் சொன்னதாவது: நான் நாற்பது வருஷகாலமாக ஒவ்வொரு காலையிலும் இந்த இடத்தில் வந்து உலகத்தின் அழகான காக்ஷியை மதிக்கும்படி என் தொப்பியை கழட்டி கனம் செய்கிறேன் என்றான். இந்த விதமாய் நாம் ஒவ்வொரு நாள் காலையிலும் தேவனுடைய கிரியைகளை மதித்து, சிருஷ்டிகரை கனப்படுத்தி வருவோமானால் அந்த நாளின் மாலை சந்தோஷமாய் முடியும்.

வியாழம்.—1833-ம் வருஷத்தில் டார்வின் என்கிற தாபர சங்கம சாஸ்திரி டையிரா டெல்பிஜோ என்கிற இடத்தை பார்த்தபோது அந்த இடத்திலுள்ள ஜனங்களைப்பற்றி என்ன எழுதினார் என்றால், நான் எப்போதும் எதிர்பார்க்காத விதமாய் அந்த ஜனங்கள் அதிக மிலேச்சர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய முகசாயல் மிகவும் கேடாயும், அவர்களுடைய குரலும், அவர்கள் காண்பிக்கிற ஜாடைகளும், நாம் வீட்டில் வளர்க்கிற மிருகங்களைவிட மிகவும் தெளிவற்றதாயுமிருக்கிறது. இவர் இப்படி எழுதி 40-வருஷத்திற்கு பிற்பாடு அந்தத்தீவில் சுவிசேஷம் பரம்பப்பட்டபோது டார்வின் திரும்பவும் அந்த இடத்தை தரிசித்து அங்கே உண்டான மாறுதலைக்கண்டு எழுதுகிறதாவது: "உலகத்திலுள்ள எல்லா மிஷனெரிமார்களும் கூடி இந்த தீவில் எந்தவித மாறுதலையும் உண்டாக்கக்கூடாதென்று நிச்சயமாய் தீர்க்கதரிசனம் சொல்லியிருப்பேன்" என்றார். கடவுள் மனுஷர்களை புதிய ஜீவி

யத்தில் மாற்றுகிற அவருடைய வல்லமைகளிலுள்ள அநேக திருஷ்டாந்தங்களில் இது ஒன்று.

வெள்ளி.—கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன் என்று ஆரம்பிக்கிற 23-ம் சங்கீதத்தின் கருத்தினால் நம்பிக்கை ஜீவனுள்ளதென்று காண்கிறோம்.

ஒரு விருத்தாப்பியமான நீக்ரோ ஸ்திரீயானவள், கஷ்ட வேலைசெய்து ஜீவனம் செய்தாள். ஆனால் அவள் உண்மையும் சந்தோஷமுமுள்ள கிறிஸ்தவளாயிருந்தாள். அவள் இவ்விதமாய் அதிக சந்தோஷமும் உற்சாகமுள்ளவளுமாயிருக்கிறதைப்பார்த்து விளங்கிக்கொள்ளக் கூடாதிருந்த இவளுடைய சிநேகிதி ஒருவள் அவளைப்பார்த்து: "அம்மா, இப்போது உன் காரியம் எல்லாம் சரியாய் இருக்கிறது, ஒருவேளை உனக்கு வியாதி உண்டாகி உன் வேலையை இழந்துபோக நேரிடுமானால், அப்பொழுது என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அந்த விருத்தாப்பியமுள்ள ஸ்திரீ தன் சிநேகிதியைப் பார்த்து போதும் போதும், நிறுத்து, இப்படியிருக்குமானால் அப்படியிருக்குமானால் என்று நான் எப்போதும் உத்தேசம் கொள்ளுகிறதில்லை, ஏன் என்றால், கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; ஆகையால் நான் தாழ்ச்சியடையமாட்டேன் என்று எனக்கு நன்றாய்த் தெரியும் என்றாள்.

ஆகையால் நாம் நம்முடைய உத்தேசங்களையெல்லாம் விட்டு விட்டு; நம் பேரில் அன்பாயிருக்கிற ஆண்டவரை நிச்சயமாய் நம்பவேண்டும்.

சனி.—தேவனைப்பற்றிய நன்றியறிதலான எண்ணமே ஒரு ஜெபமாயிருக்கிறது. தேவன் நமக்கு அநேக நன்மைகளை செய்துக்கொண்டுவருகிறார். அப்படிப்பட்ட நன்மைகள் சிக்குப்பட்டு போவதற்குக் காரணம் எதுவென்றால், நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிராததுதான். கடவுளுக்கு இரண்டு இருப்பிடம் உண்டு, ஒன்று மோக்ஷம், இன்னொன்று சாந்தமும் நன்றியறிதலுமான இருதயம். நம்முடைய அருமை இரட்சகர் நமக்கு எப்போதும் உதவிசெய்ய பிரயாசப்படுகிறார். நம்மோடு பங்கை அநுபவித்து நமக்காக எல்லாக் காரியங்களையும் சகிக்கிறார். எப்போதும் முறையிடுதலை அவர் கேட்கிறதைப்போல, உனக்கும் கேட்க நேரிடுமானால் உனக்கு எப்படி இருக்கும்?

---

THE HIGH COST OF LIVING.

## ஜீவனம்செய்ய அதிக பணம் செலவாகிறதைப்பற்றியது.

தற்காலத்தில், ஜீவனம் செய்யும்படி பணம் அதிகம் பிடிக்கிறதென்று விசேஷமாய் பேசிக்கொள்ளுகிறார்கள். சில வருஷங்களுக்குமுன் செலவாகிக்கொண்டிருந்த அரிசியின் கணக்கை ஒருவாறு சொல்லக்கூடுமானால், இப்போது செலவாகிற அரிசியின் தொகைக்கு அரைபாகம், அல்லது முக்கால் பாகத்திற்கு அதிகமாயிருந்ததில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்ற உணவு பதார்த்தங்களின் விலையும் அப்படித்தானிருக்கிறது. இந்த விதமான காரியங்கள் இந்தியாதேசத்தில் மாத்திரமல்ல, அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும், இன்னும் நாகரீகமடைந்த அநேக தேசங்களிலும் இதேமாதிரியாகத்தான் சொல்லுகிறார்கள். பெரிய ஞானிகளுங்கூட இதன் காரணம் என்னவென்று அறியக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இந்தக்காரியம் அதிக முக்கியமாகி, அநேக ராஜாங்கங்கள் கூடி சர்வதேச சம்பந்த ஆலோசனை சபைகளை ஏற்படுத்தி பற்பல காரணங்களையும், இந்த வித்தியாசமான நிலைமைக்கு தக்கதாக என்ன செய்யலாமென்று விசாரிக்கப்போகிறார்கள். இந்த காரியத்தை நன்றாய் அறிந்தவர்கள் இந்த விதமான நிலைமைக்கு என்ன காரணம் என்று முன்னமே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச்சொன்ன அநேகக் காரணங்களில் பின்வருகிற சில காரணங்களை அநேகர் அங்கிகரிக்கிறார்கள். அதாவது, வெள்ளி பொன் என்கிற விலையுயர்ந்த லோகங்கள் விஸ்தாரமாய் பெருகுகிறது. ஒரு காரணம், இந்த லோகங்கள் சாப்பிட உதவாதபடியால் விசேஷமாக பணமாக உபயோகிக்க வேண்டியதாயிருக்கிறது. இதனாலே பொருளின் விலை அதிகமாகிறது. ஏனென்றால், பணம் அதிகரிக்க அதிகரிக்க அதன் மதிப்பு குறைந்துக்கொண்டேவருகிறது. ஒவ்வொருவருடைய கையிலும் இப்படியே பணம் அதிகரித்திருந்தால் இதைப்பற்றி அக்கறை இல்லை, ஆனால் மெய்யாகவே எல்லாருடைய கையிலும் பணம் இருக்கிறதில்லை.

இன்னொரு காரணம் எதுவென்றால், அநேக ஜனங்கள் தங்கள் ஊரை விட்டு விட்டு பட்டணங்களில் திரள் திரளாகக் கூடுகிறார்கள். ஆகையால் பட்டணங்களில் சாப்பிடுகிறவர்கள் அநேகமாயும், அவர்கள் சாப்பிடுவதற்கு உணவு பொருள்களை சேகரிக்கதக்க ஜனங்கள் ஊர் நாடுகளில் குறைவாயுமிருக்கிறார்கள். ஆனால் இந்த காரணம், மற்ற தேசத்தில் உண்டாகிறது போல இந்த தேசத்தில் அதிகமாய் தோன்றுகிறதில்லை; இருந்தபோதிலும், கொஞ்ச பாகம் இங்கேயும் நடக்கிறது. இதனாலும், இதைப்போன்ற இன்னும் சில காரணங்களாலும் உணவு பதார்த்தங்களின் குறைச்சலினால் விலையும் அதிகரிக்கிறது.

மூன்றாம் காரணம் எதுவென்றால்; பணம் அதிகம் கிடைக்க கிடைக்க ஜனங்கள் செழிப்பாய் ஜீவனம் செய்ய ஆரம்பிக்கிறார்கள், நல்ல சாப்பாடு சாப்பிட்டு நல்ல உடைகளை உடுத்தி கொஞ்சம் மிஞ்சின ஜீவனம் செய்கிறார்கள். ஆனால் இந்த விதமான செலவுகள் அவர்களுடைய சம்பாதனைக்கு மேற்படாவிட்டால் கெட்டதல்ல. ஆனால் அவர்களுடைய சம்பாதனைக்கு மேற்பட்டாலோ, அவர்கள் ஜீவனம் செய்ய கஷ்டம் உண்டாகிறது மாத்திரமல்ல பணச்செலவும் அதிகம் உண்டாகிறது. ஆகையால் இதையெல்லாம் கவனிப்போமாகில் ஜீவனம் செய்யப் பணச்செலவு எப்போதும் அதிகமாகவே இருக்கும்போல் தோன்றுகிறது. இனி பொருள்களின் விலை குறைந்துபோகும், ஆகையால் இப்பொழுது கடன்பட்டு சாப்பிடலாம், பிறகு அக்கடனை அடைத்துக் கொள்ளலாம் என்றதாக நினைத்து, கடன் படாமல் நம்முடைய சம்பாதனைக்குள்ளாகவே செலவுசெய்து ஜீவனம் செய்வது நலம்.

---

AN ANCIENT DOLL.

## பழமையான ஒரு பொம்மை.

உலக முழுவதிலும் பொம்மை என்றால், சிறு பெண்களுக்கு அதிக பிரியம். இந்திய பள்ளிக்கூடத்தில் படிக்கிற சிறு பெண்கள், தங்கள் பாடங்களை படிப்பதினால் ஒவ்வொரு வருஷக் கடைசியிலும் ஒவ்வொரு பொம்மை கிடைக்கும் என்கிற நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறார்

கள். அதினாலே பிள்ளைகளுக்கு பொம்மை என்றால் அதிகப்பிரியம்போல் காணப்படுகிறது. இப்படிப்பட்ட பொம்மைகளை வைத்து பிள்ளைகள் விளையாட எப்போ ஆரம்பித்தார்களென்றும், பொம்மைகள் எந்த காலத்திலிருந்து உபயோகப்பட்டு வருகிறதென்றும் நமக்குத் தெரியாது. லண்டன் பட்டணத்திலுள்ள பிரிட்டிஷ் மியூஸியத்தில அதிக பழமையான ஒரு பொம்மை வைக்கப்பட்டிருக்கிறது. அது சுமார் மூவாயிர வருஷத்திற்கு அதிகமாக பழமையானது என்று சொல்லுகிறார்கள்.

பூர்விக எகிப்தியர்களுக்குள் ஒரு வழக்கமிருந்தது. அதாவது, இறந்துபோன பிரேதங்களை பதனிட்டு பத்திரப்படுத்துவார்கள். அப்படி அவர்கள் பிரேதங்களை பத்திரப்படுத்துவதால், அநேக ஆயிர வருஷங்கள் சென்றபிறகுக்கூட அப்பிரேதங்களின் முகத்தையும் ஆளின் ரூபத்தையும் பார்க்கக்கூடும். அப்பிரேத வற்றல் உயிரோடிருக்கும்போது காணப்படுகிறதுபோல் காணப்படாமல், காய்ந்துபோய், கருகருத்துக் காணப்படும். ஆனபோதிலும் அதன் மூலமாய் அநேகக் காரியங்களை அறிந்துக்கொள்ளக் கூடும்.

மூவாயிர வருஷத்திற்குமுன் 7-வயதுள்ள ஒரு இராஜகுமாரத்தி மரித்துப்போனாள். அவளுடைய பிரேதத்தை பத்திரப்படுத்தும்படி அதற்குறிய வாசனை திரவியங்களால் நிரப்பி, அப்பிள்ளையின் அந்தஸ்துக்குத்தக்கவாறு உயர்ந்த உடுப்புகளால் உடுத்தி விலையுயர்ந்த ஆபரணங்களை பூட்டி வைத்திருந்தார்கள். சவப்பெட்டியின்மேல் அப்பிள்ளையினுடைய பெயர், அந்தஸ்து, வயது முதலான காரியங்களை எழுதி வைத்திருந்தார்கள். அதிலிருந்த ஒரு அதிசயம் என்னவென்றால், செத்துப்போயிருந்த அப்பிள்ளையின் கை ஒரு மர பொம்மையைப் பிடித்துக்கொண்டிருந்தது. அந்தப் பிள்ளை அப்பொம்மையைப் பிடித்துக் கொண்டிருந்தபடியால், ஒருவேளை அந்தப் பிள்ளை மரிக்கும்போது அது தன்கையிலேயே பிடித்துக்கொண்டிருக்க வேண்டும். அந்த பொம்மையைத்தான் லண்டன் பட்டணத்து விநோத காக்ஷிசாலையில் வைத்திருக்கிறார்கள். ஏராளமான பிள்ளைகள் இப்பொம்மையைப் பார்க்கும்படி போகிறார்கள். அப்பொம்மையினுடைய வயதும், அதைப்பற்றிய கதையும் பிள்ளைகளுக்கு விநோதமாயிருக்கிறது.

---

## WHAT THE SPIDER TOLD?

## சிலந்திபூச்சி சொன்னதென்ன?

---

நான் ஒரு சிவந்தி பூச்செடியில் கூடு கட்ட நூற்களை நூற்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிறு பெண், கிழிந்துபோன ஒரு வஸ்திரத்தில் துண்டு போட்டுக்கொண்டிருந்தாள். அப்பெண் கையிலிருந்த நூல் சிக்குப்பட்டது, ஊசி உடைந்து போனது. அப்போது அப்பெண் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து, தன் தாயைப்பார்த்து: அம்மா நான் தைக்கமாட்டேன், என்னால் முடியாது, முடியாது என்று உறத்த சத்தமாய்ச் சொன்னாள். அப்பொழுது அவளுடைய தாய் என்னைப் பார்க்கும்படி சொன்னாள். ஒவ்வொரு தரமும் நான் நல்ல நூலை நூற்த்தேன். அதன் பிறகு கிளையில் ஒட்டும்படி வெகு பிரயாசைப் பட்டேன். நான் இப்படி செய்யும்போதெல்லாம் பலத்த காற்று அடித்து நான் கட்டின அக்கூடை கிழித்துப்போட்டது. இப்படியே பலமுறையும் நேரிட்டது. கடைசியாக ஒரு கூடைக் கட்டினேன். அது காற்றினால் கிழிந்து போகாமல் உறுதியாய் நின்றது. இதைதான் அந்த தாய் என்னைப்பார்க்கும்படி சொன்னாள். அந்தத்தாய் என்னைப்பார்த்து புன்நகைக்கொண்டு "அந்த சிலந்திபூச்சி எவ்வளவு பொறுமையை கையாடுகிறது பார்" என்று சொன்னாள்.



சிறு பெண்ணும் என்னைப்பார்த்து நகைத்தாள். என்னை உற்று பார்த்தவுடனே அச்சிறுபெண் தன் வேலையை திரும்பவும் செய்தாள். பொழுது போகிறதற்குள்ளாக நானும் அந்த சிவந்தி பூச்செடியில் ஒரு நேர்த்தியான கூடை கட்டி முடித்தேன். அச்சிறு பெண்ணும் நேர்த்தியான துண்டுகளைப்போட்டு தன் வேலையை செய்து முடித்தாள்.

---

## LONG HEADED TRIBE.

## நீண்ட தலையுள்ள ஜாதியார்.

---

வான்கௌவர் என்கிற தீவில் அமெரிக்க இந்தியர் என்கிற ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அக்கண்டத்திலுள்ள மற்ற ஜனங்களுக்குள் வித்தியாசமாய்க் காணப்படுவார்கள். அவ்வித்தியாசம் என்னவென்றால், அவர்களுடைய தலைகள் நீண்டு இருக்கும். இப்படிப்பட்ட ஜாதியார் அத்தீவுக்கு சமீபத்திலுள்ள கிராமங்களில் அநேகர் வசிக்கிறார்கள். அவர்களுடைய புருவத்திலிருந்து பினபக்கமுள்ள மண்டைவரைக்கும் பதினேரு அங்குலம் அளவு இருக்கிறது. இது இயற்கையாய் உண்டான தலை அல்ல, ஆனால் குழந்தை பருவத்திலேயே முட்டைவடிவமாக நீண்டிருக்கும்படி கட்டுகிறார்கள். இப்படி நீண்டிருப்பதுதான் அவர்களுக்கு அழகாம்.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானங்கள்.

---

ஒரு நாணயமுள்ள மனுஷன்.—சிக்காக்கோ பட்டணத்தில் ஒரு ஐசுவரியமுள்ள ஸ்திரீ ஒரு நாள் பாதரக்ஷையை பழுது பார்க்கும்படி ஒரு சக்கிலியிடம் கொடுத்துவிட்டுப் போனாள். அவன் அதை பழுதுபார்க்கும்போது, அதன் பெருவிரலில் 15 ஆயிரம் ரூபாய் விலை பெருமான ஒரு வயிரத்தைக் கண்டான். அவன் உடனே, அந்த சொந்தக்காரியின் பெயரைக் கண்டுபிடிக்க எத்தனித்தான். அந்த சமயத்தில் ஒரு வேலைக்காரப்பெண் திடீரென்று கடைக்குள் வந்து மூச்சற்ற விதமாய் அந்த பாதரக்ஷையைப்பற்றி விசாரித்தாள். அப்பொழுது அவன் அவளிடம் அந்த பாதரக்ஷையுடன் வயிரத்தையும் கொடுத்து விட்டான். அப்பொழுது அந்த வேலைக்காரப்பெண் அந்த சக்கிலிக்கு கொஞ்சம் பணத்தை இனாமாக கொடுக்க எத்தனித்தபோது அவன் அதை வாங்க மறுத்துவிட்டு, "நான் என் யதார்த்தத்தில் திருப்தியாயிருக்கிறேன்" என்றான். அதுதான் எல்லா மனுஷருக்கும் போதுமான வெகுமதி.

அமெரிக்காவில் பெருவெள்ளம்.—இந்தியாவில்தான் வெள்ளங்களும் பஞ்சங்களும் பிளேக் வியாதிகளும் உண்டாகிறதென்றும், அதனால் இந்தியர்கள் மற்ற தேசத்தார்களைவிட அதிகமாய் சங்கடப்பட நேரிடுகிறதென்றும் சில சமயங்களில் நினைக்க நேரிடுகிறது.

கொஞ்ச காலத்திற்கு முந்தி வர்த்தமானங்களை படித்தவர்கள் மற்ற தேசத்திலும் இந்த விதமான துன்பங்கள் நேரிடுகிறதென்று கவனித்திருக்கலாம். அமெரிக்க ஐக்கியமாகாணத்திலுள்ள எல்லா நதிகளைப்பார்க்கிலும் மிஸிஸிப்பி என்கிற நதி மிகவும் பெரியது. போன வசந்த கால மாதங்களில், வழக்கமாயிராததைப்போல அதிக பனியும், மழையும் பெய்ததால் அந்த ஆற்றில் எப்பொழுதும் உண்டாகாத பெருவெள்ளம் பெருகினது. அந்த ஆற்றின் கரைகள் தாழ்ந்ததாயும், சில இடங்களில் அணைகட்டுகளால் பத்திரப்படுத்தபட்டதாயுமிருக்கிறது. அநேக இந்தவிதமான அணைகட்டுகளை வெள்ளம் இடித்துப்போட்டு ஊருக்குள் தண்ணீர் பாவினது. இதனால் 30 ஆயிரம் ஜனங்கள் வீடற்றவர்களாய்போனதும் தவிர பெரிய துன்பத்தையும் அதிக பொருள் நஷ்டத்தையும் அடைந்தார்கள். 20 ஆயிரம் சதுர மயிலுக்கு அதிகமான ஊரின்பாகம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ ஜனத்தொகை.—கடைசியாக எடுத்த குடிமதிப்பின்படி இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களின் தொகை 3,574,000 பெயர்களாம். ஒவ்வொரு வருஷமும் கிறிஸ்தவர்களின் தொகை இந்தியாவில் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இங்கிலாந்து தேசத்திலுள்ள இந்திய மாணுக்கர்கள்.—இந்தியாவிலிருந்து இங்கிலாந்து தேசத்துக்கு கல்வியில் முற்றுபெற போகும் இந்திய மாணுக்கர்களுக்கு உதவிசெய்யும்பொருட்டு ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தார், சில முக்கியமான காரியங்களில் இந்திய மாணுக்கர்களுக்கு அநேக உதவிகளை செய்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து தேசத்தில் இந்திய மாணுக்கர்கள் சுமார் 1,700 பெயர் இருக்கிறதாக வெளியிடுகிறார்கள். அவர்களில் லண்டனில் மாத்திரம் 1,000 பெயர் இருக்கிறார்கள், தங்கள் பிள்ளைகளை இங்கிலாந்துக்கு அனுப்பும்படி விரும்புகிற பெற்றோர்கள், அவர்கள் சீமையில் இருக்கும் வரையிலும், போதுமான தகுந்த ஏற்பாடுகளை செய்யும்படி இந்த சங்கத்தார் கோருகிறார்கள். அவர்கள் அப்படி செய்யத்தவறினால் அதிக கெடுதியாய்முடியும்.

---


**Tamil Books and Tracts Published by**

## Methodist Publishing House

**Mount Road, Madras**

| | ரூ. | அ. |
|---|---|---|
| வில்லியம் கார்வொசேர் என்பவரின் ஜீவிய சரித்திரம் 358 பக். புஸ். 1. | 0 | 6 |
| ஒருவன் பிறந்த மார்க்கத்தை மாற்றலாமா ½ பக். 500-க்கு ... | 0 | 8 |
| குருடனான தாவீது 20 பக். 100-க்கு. | 0 | 8 |
| மரண ஜெயம் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| குடிவெறி என்னும் வாதை 16 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 1 | 0 |
| படங்களால் விஸ்தரிக்கப்பட்ட வேதாகம கதை 176 பக். புஸ். 100-க்கு. | 3 | 0 |
| வேதாகம சிறு புஸ்தகங்கள் 500-க்கு. | 3 | 0 |
| உத்தேசித்தல் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இயேசுநாதரின் ஜீவிய சங்கிரகம் 16 பக். புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| அழகிய கைகள் 8 பக். 100-க்கு ... | 0 | 8 |
| மேரி என்னும் சிறுமி 6 பக். 100-க்கு | 0 | 8 |
| மோனு என்னும் பெண்ணின் சரித்திரம் 6 பக். 100-க்கு ... ... | 0 | 8 |
| கடவுள் அருளின வாக்குத்தத்தத்தின் உறுதி 4 பக். 100-க்கு ... | 0 | 8 |
| தைரியசாலியான தமையன் 4 பக்கம் 100-க்கு ... ... ... | 0 | 8 |
| தன்னை வெறுத்தல் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| இன்னமும் அதிக காலம் இருக்கிறது 4 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 4 |
| ஒரு சிறு காரியம் 4 பக். புஸ். 100-க்கு. | 0 | 4 |
| இரண்டு சகோதரிகள் 4 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| ஆசன் என்னும் சிறுமி 4 பக். புஸ்தகம் 100-க்கு ... ... | 0 | 4 |
| கடவுளின் அவு 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| எவ்வளவு நல்ல ஜனங்கள் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| சுய நீதியைச் சார்ந்து நிற்றல் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| ஒரு மனுஷனுடைய விபரீத ஜீவியம் 8 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 8 |
| செங்கல் சுமந்தவன் சிமோனனது 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| குடிவெறியாகிய வாதை 32 பக்கம் புஸ்தகம் 100-க்கு ... ... | 2 | 0 |
| கிறிஸ்துமார்க்க மூலசத்தியங்கள் 16 பக். புஸ். 100-க்கு ... | 1 | 0 |
| ஒரு உவமானம் 8 பக். புஸ். 100-க்கு | 0 | 8 |
| இக்கட்டிலிருப்பவர்களுக்கு தெய்வமே துணை 8 பக். புஸ். 100-க்கு... ... | 0 | 8 |
| மரண ஜெயம் 12 பக். 100-க்கு ... | 0 | 8 |
| ருன்-இல்-லாவை கட்டி முடித்தவன் 20 பக்கம் புஸ். 100-க்கு ... ... | 1 | 0 |
| ராஜா வந்தார் 8 பக். புஸ். 100-க்கு. | 0 | 8 |
| லாகிரிப் பொருட்களை மருந்துக்கென்று உபயோகித்தல் 12 பக். புஸ். 100 | 0 | 12 |
| தெய்வ சித்தத்திற்கமைந்த கடப்பது ஆசீர்வாதமுள்ளது 6 பக். புஸ். 100. | 0 | 8 |
| தாய் வளர்ப்பின் அதிசய சக்தி 8 பக்கம் புஸ்தகம் 100-க்கு... ... | 0 | 8 |
| சிறுவர்க்கேற்ற புத்திமதிகள் 12 பக். புஸ். 100-க்கு ... ... | 0 | 12 |
| சத்தியவேத புஸ்தகம் 8 பக். புஸ். 100-க்கு ... ... ... | 0 | 8 |
| ஒரு மேன்மையான செய்கை 8 பக். புஸ். 100-க்கு ... | 0 | 8 |


61

# மாதர் மித்திரி.

புத். உ௬. க௯௰௩. ஷூ - ஜூன் மீ. இல. ௰௨.

## BLESSINGS OF HIS COMING.

இராகம், அசாவேரி. கும்மிச் சிந்து.

பல்லவி.

எனது கர்த்தரின் ராஜரீக நாள்
எப்போ வருகுமோ?
ஏங்கும் என் கவி நீங்கி மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

அநுபல்லவி.

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும், என்றீரே;
வல்லமையோடு மகிமையாய்த் தோன்றி வருவேன், என்றீரே— எனது

சரணங்கள்.

1. ஜாதிகட்குக் கொடியாய் ஈசாயின் வேரன் றேறுவார்,
சகலரும் அவர் கொடியின்கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்;
நித்தம் பிரபுக்களும் நியாயமாய் துரைத்தனம் செய்வார்.— எனது

2. எருசலேமி லிருந்து ஜீவ நதிகள் ஓடுமே;
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருஷமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே;
வான ராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே.— எனது

3. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே;
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே;
நித்திய ஜீவ னைப்பெற என்றன் மனம் துடிக்குமே.— எனது

4. சீக்கிரமாக வருகிறேன் என்று சொல்லி விட்டாரே;
ஜீவ விருட்சந்தனில் அதிகாரம் தருவேன் என்றீரே;
பாக்கியமுள்ள சுவிசேஷத்தைக் கைக்கொள்ளச் சொன்னீரே;
பார்க்கப், பார்க்க, நல் வேதவாக்கியம் தோன்றும் என்றீரே.— எனது

KEEP THE CHILD WELL.

## குழந்தையை சுகமாய் வை.

குழந்தைகளுக்கு வியாதிவரும்போது அதற்கு என்ன செய்யவேண்டுமென்று அறிந்திருப்பது நல்லது. ஆனால் அதைப் பார்க்கிலும் வியாதிவராமல் தடுக்கும்படி அறிந்திருப்பது மிகவும் நல்லது. குழந்தைகளுக்கு எப்படியும் வியாதிவரும். அச்சமையத்தில் செய்யவேண்டிய காரியம் குழந்தைகளை பத்திரமாய் கவனித்து, நல்ல மருந்துகளைக்கொடுத்து துரிதமாய் சுகப்படுத்தவேண்டுமென்பதே எல்லாருக்குள்ளுமிருக்கிற சாதாரண எண்ணம். ஆனால் அதிலே கவனிக்கத்தக்க ஒருவிஷயம் உண்டு. அதாவது, குழந்தைகள் சுகமாயிருப்பது சகஜம். சுகம் கெட்டு வியாதி வருவது குழந்தைக்குண்டான இயல்பான சுகத்திற்கு விரோதமானது என்பது திட்டம். வைசூரி முதலான வியாதிகள் குழந்தைகளுக்கு வருகிறது சாதாரணம். அப்படிப்பட்ட வியாதிகள் குழந்தை பருவத்தில் வராமலிருந்தால் பெரியவர்களாகும்போது எப்படியும் வரும். வைசூரி, வயசாளிகளுக்கு வரும்போதுதான் அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும். ஆகையால் குழந்தை பருவத்திலேயே வைசூரி வருகிறது நல்லது.

தாய்மார் குழந்தைகள் விஷயமாய் எடுத்துக்கொள்ளுகிற சரியான கவனத்தினால் அவர்களுக்கு வரக்கூடிய அநேக வியாதிகளைத் தடுக்கலாம். குழந்தைகளுக்குச் செய்யக்கூடிய சில சுகாதார ஒழுங்குகளை அநேகத்தாய்மார்கள் அறிந்திருப்பது அரிதாயிருக்கிறது. அநேகத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் மரித்துப்போகும்போது, கவலையினத்தினால் வியாதியுண்டாகி மரித்துபோனதென்கிறசத்தியத்தை மறந்துபோய், "கடவுள் அதிக அநீதியுள்ளவர், என் குழந்தையை எடுத்துக்கொண்டார்" என்று நினைக்கிறார்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப்பற்றி வேணுமென்று கவலையற்றவர்களாயிருக்கிறதில்லை. ஆனால் தங்கள் குழந்தைகளை எப்படி பாதுகாக்கவேண்டுமென்று அறியாமலிருக்கிறபடியால்தான் அநேக குழந்தைகள் இழந்துபோகும்படி நேரிடுகிறது. குழந்தைகளுக்கு சாதாரணமாக வரக்கூடிய வியாதிகளில் ஒன்று சீதளம். இதை ஒரு விசேஷித்த விதமாக யாரும் நினைக்கிறதில்லை. ஆனபோதிலும், இந்தவியாதி தேகத்தை பலஹீனப்படுத்தி பலவித கெடுதிகளையும் தொந்தரவுகளையும் கொண்டுவந்துவிடுகிறது.

குழந்தைகளுக்கு சளி எப்படிப் பிடிக்கிறது, அது எதனால் உண்டாகிறது? இதைப்பற்றி அறியக்கூடுமானால், கூடியவரையிலும் இவ்வித வியாதி குழந்தைகளுக்கு வராமல் தடுக்கலாம். இந்த வியாதி குழந்தைகளுக்குவராமல் தடுக்கவேண்டுமானால் அதற்கு சுத்த ஆகாயம்தான் அதிக அவசியமாயிருக்கிறது. ஆனால் இதைப்பற்றி அநேகருக்கு தப்பிதமான எண்ணமிருக்கிறது. அதாவது, குழந்தைகளானாலும் சரி, அல்லது பெரியவர்களானாலும் சரி, ஆகாயம் பிரவேசிக்கக்கூடிய திறந்த ஒரு அறையில் படுத்து தூங்குவார்களானால் சளி, இருமல் முதலான வியாதிகளுக்கு காரணம் என்று சொல்லுவார்கள். இது மிகவும் தப்பிதமான எண்ணம். கதவை அடைத்து, அசுத்த ஆகாயமுள்ள ஒரு அறையில் நித்திரைசெய்து அவ்வித ஆகாயத்தை உட்கொள்ளுவதால் சளி சீதளம் முதலான வியாதிகள் உண்டாகிறதென்று தேர்ந்த வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். சில சமயங்களில் அழுக்கான ஆகாயம் மூக்கின் வழியாய் அதிகமாய் சென்று மூக்கின் உள்பாகத்தில் சீதளத்தினால் புண்ணாக்கி கெடுதிசெய்கிறது. திறந்த இடத்திலுள்ள ஆகாயத்தைப்பார்க்கிலும், அடைக்கப்பட்ட அறையிலுள்ள ஆகாயம் கெட்டுபோயிருக்கும். அவ்வித அறையிலிருந்து ஒருவன் திறந்த இடத்திற்குப்போனாலும்சீதளம்உண்டாகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், ஒரு இராத்திரியெல்லாம் அசுத்த ஆகாயத்தை சுவாசித்து திறந்த ஆகாயத்துக்கு போகும்போது, அவ்வித ஆகாயம் சுவாசாசயத்தில் பட்டவுடன் சீதளத்தை உண்டுபண்ணக் காரணமாயிருக்கிறது. திறந்த ஆகாயமுள்ள இடத்தில் நித்திரை செய்யவேண்டுமானால் தேகத்தை கொஞ்சம் பத்திரமாய் காத்துக்கொள்ள வேண்டும். அதாவது, கொசுகு முதலான பூச்சிகள் கடிக்காதபடி வலையினால் மூடி வைக்கவேண்டும். அதோடுக்கூட தேகம் அனலாயிருக்கும்படி ஒரு போர்வையால் தேகம் முழுவதும் மூடவேண்டும். தலையையும் மூடலாம், ஆனால் மூக்கை மூடக்கூடாது. மூச்சு, சரியானப் பிரகாரம் விடும்படி பார்க்கவேண்டும். ஒரு கும்பப் பிள்ளைகளை வளர்த்த ஒரு துரைசானி சொல்லுகிறதாவது: "சில பிள்ளைகளை நான் வளர்க்கும்படி என்னிடத்தில் கொண்டுவந்தபோது அவர்களுடைய வயது, சில வாரங்கள்தான். நான் அது முதல்கொண்டு அப்பிள்ளைகளை ஒரு அறையில் படுக்கவைக்காமல் திறந்த ஆகாயத்தில் படுத்து நித்திரை செய்யும்படி செய்வித்தேன். அதோடு அனலாயிருக்கும்படி போர்வையால் மூடிவைத்தேன். அதனால் அவர்களுக்கு எந்த சமையத்திலும் சீதளம் உண்டாகவேயில்லை. அவர்கள் நல்ல சுகமுடையவர்களாய் வளர்ந்து வந்தார்கள்.



அறை எவ்வளவு திறந்ததாயிருந்தாலும் காரியமில்லை. ஒரு திறந்த ஆகாயமுள்ள இடத்திற்கு இணை ஆகாது. திறந்த இடத்திலிருக்கிற சுத்த ஆகாயத்தைப்போல் ஒரு அறையில் இருக்காது. வெய்யில்காலத்தில்கூட குழந்தைகளுடைய வயிறை ஒரு போர்வையால் மூடிவைக்கவேண்டும், அதனால் அதிக அநுகூலம் உண்டு. சாதாரணமாய் போர்வை அடிக்கடி இருக்கிற இடத்திலிருந்து அப்புறப்பட்டு போகிறபடியால், குழந்தைகளுடைய வயிறை ஒரு வஸ்திரத்தால் சுற்றி கட்டிவைப்பது நல்லது, ஆனால் அழுத்தமாய்க் கட்டக்கூடாது. வெயிற்காலத்தில் அதிக அனல் வேண்டியதில்லை; ஆனால் எதாகிலும் ஒரு வஸ்திரத்தினால் சுற்றிவைத்தால் போதும். எல்லாவற்றோடுங்கூட குழந்தைகள் நல்ல ஆகாயத்தை சுவாசிக்கச் செய்யும்படி மறந்துபோகக்கூடாது.

---

ABOUT CHINA.

## சீன தேசத்தைப் பற்றியது.

இந்த சமையத்தில் சீன தேசமானது உலகத்தில் அதிக மனோஹரத்தை கொடுக்கக்கூடிய தேசங்களில் ஒன்றாய் இருக்கிறது. தற்காலத்தில் அதைப்பற்றி அதிகமாய்ப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. அப்படி அத்தேசத்தைப் பற்றி அதிகமாய் பேசவும் எழுதவும் அநேகக் காரணங்கள் உண்டு. சீன தேசமானது அதன் பூர்வீக அரசாட்சியிலிருந்து முற்றிலும் மாறுதலடைந்து தற்காலத்துக்குரிய பிரஜாதிபத்தியத்தையுடையதாயிருக்கிறது. உலகத்தில் அதி பூர்வ துரைத்தனத்தை உடைத்தாயிருந்தது அந்தேசத்தான். பூர்வீகத்தில்

அந்நிய நாட்டார் அத்தேசத்தைக் கைப்பற்றி ஆளுகை செய்தார்கள். இப்படி ஆளுகை செய்த அவர்கள் மேற்றிசை பாகத்திலிருந்து வந்தவர்களல்ல, ஆனால் பக்கத்து தேசத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் கொஞ்சம் மேலானவர்களாயிருந்தபடியால் இத்தேசத்தாரை தங்களுக்குள் அடக்கி அநேக வருஷங்களாய் ஆண்டுவந்தார்கள்.

சீனதேசம் பிரஜாதிபத்தியத்தின் மூலமாய் ஆளும் புதிய முயற்சியைப்பற்றி உலக முழுவதும் அதிக விருப்பமுடையதாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஆளுகையின் ஆரம்பத்தில், பலவித அதைரியமான விஷயங்கள் உண்டாகுமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனபோதிலும் காரியமில்லை, ஏனென்றால், பிரஜாதிபத்தியத்தை அடையப்போகும் ஆரம்பத்தில் சிலருக்கு அதைரியத்தைக் கொடுத்தது போலவே, இவ்வாளுகையின் ஆரம்பத்திலும் கொஞ்சம் அதைரியம் காணப்பட்டாலும் வரவர சரிபட்டுப்போகும். இத்துரைத்தனத்தார் நியாயம், உண்மை என்கிற ஆதாரங்களின்பேரில் ஆளுகை செய்யும் எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் இவ்விதமான உறுதியோடு நிலைத்து நீதியோடு ஆளுகை செய்வார்களானால் எல்லாக் காரியங்களிலும் ஜெயம் அடைவார்கள் என்பதற்கு சந்தேகமென்ன?

சீன தேசத்து வடபாகத்து எல்லைக்குள் பிரயாணிகள் போவார்களானால், கண்களை கவரதக்கவிதமாக அதிக மனோஹரத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு அதிசயம் உண்டு. இந்தியாவில் சில பாகங்களில் இங்கும் அங்கும், பட்டணங்களை பந்தோபஸ்த் செய்யும்பொருட்டு, அப்பட்டணங்களைச் சுற்றிலும் மதில்களை எழுப்பி இருப்பதைப் பார்க்கலாம். தேசங்களை காப்பாற்றுகிறதற்காக, பட்டணங்களைச் சுற்றி பெரிய சுவர்களை எழுப்புகிற விஷயம் ஒரு காலத்தில் சர்வஜன வழக்கமாயிருந்தது. பூர்வகாலத்தில் எந்த பட்டணம் இவ்வித மதில்களால் காக்கப்படாமல் விடப்பட்டதோ, அவ்வித பட்டணங்கள் எல்லாம் சத்துருக்களால் வெகு இலேசாய் அபகரித்துக் கொள்ளப்பட்டன. சில இடங்களில் இப்படிப்பட்ட நோக்கத்தோடு பூர்வகாலத்தில் கட்டப்பட்ட சுவர்கள் இன்னும் இருக்கிறது. ஆனால் சீனத்தேசத்தார்மட்டும் தங்கள் முழு இராஜ்ஜியத்தையும் காக்கும்பொருட்டு பெரிய மதில்களை கட்டியிருக்கிறார்கள். அதைப்போல், இராஜ்ஜியம் முழுவதும் காக்கும்பொருட்டு மதில்களை எழுப்பின கோத்திரம் உலகத்தில் எங்குமில்லை. சீன தேசத்தில் அப்படி கட்டப்பட்டிருக்கிற அச்சுவர்களுக்கு "சீனவின் மா மதில்கள்" என்கிற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. 2,000 வருஷங்களுக்கு முன் அத்தேசத்தை ஆண்ட க்ஷின் என்கிற ஒரு அரசனுடைய கட்டளையினால் இப்பிரமாண்டமான சுவர்கள் கட்டப்பட்டது. க்ஷின் அரசனுக்கு டார்டர் என்கிற ஒரு சத்துரு அத்தேசத்தின் வடபாகத்தில் இருந்தானும். டார்டரும் அவனுடைய சேனைகளும் மகா பலமுள்ளவர்களும், கொடியவர்களுமாய் இருந்தார்கள். டார்டர் என்கிற பெயர் அவனுடைய பயங்கர செய்கைக்காகவே கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட அக்கொடிய மனுஷனுக்கும் அவனுடைய சேனைகளுக்கும் க்ஷின் என்கிற அரசன் அதிகமாய் பயந்திருந்தபடியால், அக்கொடியவர்கள் தன் தேசத்தில் நுழையாதபடி அவர்களை தடுக்கும்படி அவ்வரசன் அநேக ஆயிரங்கணக்கான ஆட்களைக்



கொண்டு அம்மதில்களை கட்டுவித்தான். இப்பெரிய மதில்கள் அத்தேசத்தில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு அதிகமாகவேயிருக்கிறது. இந்த சுவர்கள் எந்த நோக்கத்திற்கென்று கட்டப்பட்டதோ, அதற்கு தற்காலத்தில் பிரயோஜனப்படாமலிருக்கிறது. ஆனபோதிலும், அம்மதில்கள் உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்றாய் இருக்கிறது. அச்சுவரின் நீளம் மாத்திரம் 1,500 மைல். கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குள்ள தூரத்தைப் பார்க்கிலும் அதிக நீளமானது. அந்த சுவரின் உயரத்தையும், பலத்தையும், நினைக்கும்போது, ஆயுதம் தரித்த பகைவர்களுக்கும் அதிக பயத்தை கொடுக்கக்கூடும். அதனாலே அச்சுவர் எப்படிப்பட்டதென்று ஒருவாறு நீயே நிதானித்துக்கொள்ளலாம். அச்சுவர் 20 அடியிலிருந்து 60 அடி உயரமுள்ளது. அதோடுக்கூட அச்சுவர் அதிக அகலமுடையது. அச்சுவரின்மேல் இரண்டு கட்டைவண்டிகளை ஓட்டக்கூடுமானால், அவ்வண்டிகள் ஓடக்கூடிய அவ்வளவு அகலமுடையதாயிருக்கிறது. அச்சுவர்களுக்கு அதிக பலமான கேட் வாசல்கள் உண்டு. அச்சுவர்கள் கட்டப்படுவதற்கு உபயோகித்த சில செங்கல்கள் 3 அடி நீளமுள்ளதாயிருக்கிறது. சில இடங்களில் அச்சுவர் இடிந்துபோய் இருந்தாலும், மனுஷர்களுடைய வேலைபாடுகளை அறிகிறதற்கு உலகத்தாருக்கே அது ஒரு மாதிரி என்று சொல்லலாம்.

---

## A BLESSING IN BLINDNESS.

## கண் தெரியாமையில் ஒரு ஆசிர்வாதம்.

---

குருடு, ஆசிர்வாதமாயிருக்கக்கூடுமென்று ஒருவேளை அநேக ஜனங்களும், விசேஷமாய் அத்துன்பத்தை அநுபவிக்கிறவர்களும் சொல்லமாட்டார்கள். கடவுள் குருடர்களை உபயோகித்ததினால் அவர்கள் மூலமாய் பெரிய நன்மைகள் நடந்திருக்கிறது. அதைப்பற்றி அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. ஒரு மனுஷன் குருடனானதினால், அநேக குருடர்களுக்கு நன்மை செய்யக்காரணமாயிருந்தது. ஒருவேளை, அந்த மனுஷன் குருடனாய் இராவிட்டால், அவனுடைய பார்வையுள்ள நிலைமையில் அவ்வளவு செய்திருக்க முடியாது.

குருடர்கள் ஒருவிதமான அக்ஷர வரியை உபயோகித்து, அதன் மூலமாய் அவர்கள் வாசிக்கும் திறமையுடையவர்களாயிருக்கிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவ்விதமான அக்ஷர வரியை முதல் முதல் கண்டு பிடித்தது யார் என்று சிலருக்கு மாத்திரம் தெரியும். அதைப்பற்றி ஒரு கதை உண்டு. அதாவது: பிரௌன் என்கிற யௌவன வயதையுடைய ஒரு டாக்டர் இருந்தார். அவர் தம்முடைய வைத்திய வேலையில் அதிக சமர்த்தராய் காணப்பட்டு, நல்ல சம்பாத்தியத்தை யுடையவராய் இருந்தார். இப்படியிருக்கையில், அவர் சடுதியாய் இரண்டுக்கண்ணும் தெரியாமல் குருடனாய் போய்விட்டார். அவர் சில காலம் தம்முடைய பரம தகப்பனுடைய அன்பைப்பற்றி பல கேள்விகளைக் கேட்டிருப்பார். கடவுள்பேரில் வைத்த சலியாத அவருடைய விசுவாசத்தினால் அத்துன்பத்தில் வெற்றியடைந்தார். அவர் எப்போதும் கடவுளை நோக்கி: ஓ, பரம பிதாவே; குருடாகிய என் காலத்தை உமக்கு தத்தம் செய்கிறேன் என்று அடிக்கடி ஜெபம் செய்துவந்தார். இவருடைய ஜெபம் கேழ்க்கப்பட்டது. குருடர்கள்

படிக்கத்தக்க அக்ஷரவரியை கண்டு பிடிப்பதில் பிரயாசப்பட இவருடைய குருட்டுத்தனமே அதற்கு தக்க உதவியாயிருந்தது. இவர் செய்த இப்பெருங் காரியத்தினால் நூறு ஆயிரங்கணக்கான குருடர்களுக்கு பிரயோசனப்பட நேரிட்டது. இவர் கண் தெரிகிறவராய் இருந்தால் அநேகருடைய நோயையும், அதன் துன்பத்தையும் நீக்கியிருக்கக்கூடும். ஆனால் குருடராய் இருக்கிற சமையத்தில் அவர் செய்த பெரிய காரியத்தைப்போல், கண் தெரிகிற சமையத்தில் செய்திருக்க முடியாது. ஸ்கோத்லாந்து தேசத்தில் ஒரு வாலிபன் இருந்தார். அவர் குருபட்டம் பெறும்படி இருந்தார். அவருக்குக்கூட கண் தெரியாமல் துன்பப்பட நேரிட்டது. அவர் ஒரு பெண்ணை விவாகம் செய்யும்படி நிச்சயித்துயிருந்தார். அப்படியிருக்கையில் அவ்வாலிபன், தனக்கு கண் சீக்கிரம் கெட்டு குருடாகும் என்று அறிந்தார். ஆதலால் அச்சங்கதியை அப்பெண்ணிடம் போய்ச்சொன்னார். அப்பொழுது அந்த ஸ்திரீ ஒரு குருடனுக்கு நான் மனைவியாக மாட்டேன் என்று மறுத்து விட்டாள். அப்போது அந்த வாலிபனுடைய மனம் உடைந்து துக்கத்தில் மூழ்கி தன் வீட்டுக்குப்போய் ஒரு இடத்தில் உட்கார்ந்து, அதிக எழுப்புதலும், இனிமையுமான ஒரு பாடலை எழுதினார். அந்த பாடல் இந்நாள் வரையிலும் உலகமெங்கும் பாடப்பட்டு வருகிறது.

அப்பாடலின் முன் அடி பின்வருமாறு ஆரம்பிக்கிறது.

ஓ, அன்பு என்னை போகவிடாது
தளர்ந்துபோன என் ஆத்துமாவை
உம்பேரில் நான் இளைப்பாற பண்ணுவேன்.

உலக அன்பு அவ்வாலிபனை ஏமாறச் செய்தபடியால் தன்னை வஞ்சிக்கக்கூடாததும், பிரிக்கக்கூடாததுமான பரம அன்பின்மேல் தன் இருதயத்தை திருப்பி, தனக்கிருந்த துன்பகாலத்தில் மேற்கண்ட அப்பாடலை எழுதினார். இவர் எழுதின அப்பாடல் உலகமெங்கும், அவ்வாலிபனுடைய தாய் பாஷையில் பாடப்பட்டு அதினால் அநேகர் அதிக ஆறுதலையடைந்து வருகிறார்கள்.

இன்னொரு சமையத்தில், இரண்டு கண்ணும் தெரியாத பிறவி குருடாயிருந்த ஒருபெண் அமெரிக்கா தேசத்தில் இருந்தாள். அவள் பாட்டு பாடுவதில் அதிக வல்லமைசாலி. அவளைப்போல் சந்தோஷமும், சுறு சுறுப்பும், மனரம்மியமுமுள்ள பிள்ளைகளிருப்பது அரிது. இவள் இப்படியே வளர வளர, பாட்டு கட்டுவதில் கெட்டிக்காரியானாள். அவள் நூறு கணக்கான பாட்டுகளை செய்தாள். இவள் கட்டின பாட்டுகள்கூட உலக முழுவதும் பாடப்பட்டு, அதினாலே அநேக ஆத்துமாக்கள் பாவத்திலிருந்து விடுதலையடையவும், மரணத்திலிருந்து ஜீவன் பெறவும் காரணமாயிருந்தது.

நமக்குத்துன்பம் வரும்போது அதைப் பற்றி அதிகமாய்க் குறைகூறுகிறோம். நமக்குக் கொடுக்கப்பட்ட துன்பத்தை பொறுமையாய் சகிக்கிறதினால் மேன்மைக்கு பாத்திராயிருக்கிறோமென்று நினைக்கவேண்டும். நமக்கு கொடுக்கப்பட்ட துன்பமே மற்றவர்களுக்கு பிரயோசனப்படக் கூடுமானால் நிச்சயமாக நாம் மதிக்கப்படத்தக்கவர்கள்.

---

## THE REWARD OF HONEST WORK.

## யதார்த்தமான வேலைக்குக் கிடைத்த பலன்.

---

அநேக ஜனங்கள் தங்கள் ஜீவியத்தில் யதார்த்தமற்ற வேலைகளைச் செய்து



அதன் மூலமாய் லாபத்தை அடையலாமென்று பிரயாசைப்படுகிறார்கள். பள்ளிக்கூடத்தில்கூட சில ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் தங்கள் பாடங்களை செவ்வையாய் படிக்காமல் தங்கள் உபாத்திமார்களை வஞ்சிக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்கிறதினாலே ஏதோ ஒரு பெரிய லாபத்தை அதன் மூலமாய் உண்டாக்கிக்கொள்ளுகிறதைப்போல் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது சுத்த தப்பிதம். அவர்கள் அப்படி செய்வதால் அவர்களுடைய உபாத்திமார்களையல்ல, ஆனால் அவர்களையே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். வியாபாரிகள், தங்கள் வியாபாரத்தில் சில நாணயங்கெட்ட முறைகளை கையாடுவதால் அதன் மூலமாய் தங்கள் வாடிக்கைக்காரர்களிடமிருந்து அதிக பணத்தை சம்பாதிக்கலாமென்று நினைக்கிறார்கள். அவர்கள் அப்படி செய்வதினால் தங்களை தாங்களே வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் நம்மை நாமே முதலாவது அதிக கேடாய் வஞ்சித்துக்கொள்ளாவிட்டால் மற்றவர்களை வஞ்சிக்கமுடியாது. யதார்த்தமான வேலைக்குக் கிடைத்த பலனைப்பற்றி ஒரு கதையை ஒருவன் பின்வருமாறு சொல்லுகிறான். "சிலநாட்களுக்கு முன் நான் ஒரு இடத்திற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு வீட்டை விற்பனைச் செய்யும்பொருட்டு ஏலம் கூறினார்கள். ஏலங்கூறுமிடத்தில் ஏலம் போடுகிற அந்த வீட்டை பார்வையிட்டுக் கொண்டிருக்கிற சமையத்தில், அவ்வேலங்கூறுவோன் சொன்ன ஒரு சிறிய காரியம் எல்லாருடைய மனதிலும் பதியும்படி செய்தது. அதாவது, ஏலம் போடும்போது அந்த வீட்டுக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுப்பதாக ஜனங்கள் முன்னேறி கேட்டார்கள். அந்த வீடு ஏறக்குறைய அவ்வளவுதான் மதிப்புப்பெறும். "ஐயாயிரம் ரூபாய் இந்த வீட்டிற்கு கொடுப்பதாக சொல்லுகிறார்கள். இந்த வீடு மக்கவர்ன் என்பவரால் கட்டப்பட்டது. ஐயாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு இதை அவர் எனக்குக் கொடுப்பார்" என்று ஏலங்கூறுவோன் சொன்னான். அதைக் கேட்டிருந்த ஒரு துரை, அது சரிதான் என்று சொல்லுகிறதைப்போல், தலையை அசைத்தார். இவ்விதமாய் அந்த வீட்டைப்பற்றி ஏலங்கூறும்போது அந்த வீடு ஆறாயிரத்து எழுநூறு ரூபாய் வரையிலும் போனது. அக்கட்டடத்தை கட்டினவருடைய பெயரை சொன்னமாத்திரத்தில் ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள அந்த வீடு, ஆறாயிரத்து எழுநூறு ரூபாய்க்கு ஜனங்கள் வெகுத் துரிதமாய்க் கேட்டார்கள்.

அத்திரள் கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்த ஒருவரை கவனித்தேன். அவர் என்னைப் பார்த்து: "ஐயா, நீர் இந்த இடத்திற்கு புதியவர்போல் காணப்படுகிறது, மக் கவர்ன் என்கிற மனுஷன் கட்டடம் கட்டுவதில் அதிக கீர்த்திப் பெற்றவர். இன்னும் அப்படியே அவருக்கு அதிக கீர்த்தி உண்டாகிறது. அவர் ஒரு வீட்டை கட்டுவாரானால் அதன் உச்சியிலிருந்து அடிவரையிலும் யாதொரு மோசமில்லாமல் யதார்த்தமும் நாணயமுமான வேலைப்பாடுகள் அடங்கினதென்று நீர் நிச்சயமாய் நம்பலாம்" என்று சொன்னார். ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள வீட்டுக்கு, ஆறாயிரத்து எழுநூறு ரூபாய் கொடுத்து வாங்கும்படி ஒப்புக்கொண்டது எதற்கென்றால் அவ்வீட்டை கட்டினவருடைய பெயரை கேட்டதினால்தான். மக் கவர்ன் என்

கிறவருடைய யதார்த்தமும் மனசாக்ஷியுமுள்ள வேலைப்பாடுக்காக ஆயிரத்து எழுநூறு ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. இது யதார்த்தமான வேலைக்குக் கிடைத்த ஒரு நல்ல பலன் என்று சொல்லலாம். இதை மிஸ்டர் மக் கவர்ன் கேள்விப்பட்டால் அவருடைய கீர்த்தியைப் பற்றி அதிக சந்தோஷப்பட்டிருப்பார். சில நாள் சென்றபிறகு மிஸ்டர் மக்கவர்ன் என்பவரைப்பற்றி இன்னும் அதிகமாக அறிந்துக்கொள்ள நேரிட்டது. தச்சன் ஒருவன் தன் வேலையில் அதிக திறமையுள்ளவனென்று ஒரு சிபார்ஸ் கடிதத்தை எடுத்துக்கொண்டு மக் கவர்ன் என்பவரைப் பார்த்து அவரிடத்தில் வேலைக் கேட்டான். அப்போது மக் கவர்ன் தன்னுடைய தச்சப்பட்டறையில் வேலை கொடுத்தார். அந்த தச்சன் முதல் நாளில் அவருடைய பட்டறையில் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஒரு ஆணியை எடுத்து ஒரு சிறு பலகை துண்டின் மேல் அடித்துக்கொண்டிருந்தான். அப்போது மக் கவர்ன் அவனுக்குப் பின்னாலேப்போய் அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, நீ இப்போது அச்சிறு பலகை துண்டினால் செய்கிறதென்ன? என்று கேட்டார். அதற்கு அத்தச்சன் "ஐயா, அம்மரத்தின் கேவலத்தை மூடுகிறேன், அப்போதுதான் பார்வைக்கு நல்ல மரம்போல் தோன்றும்" என்றான். அதற்கு மக் கவர்ன், தன் கையிலிருந்த நோட் புஸ்தகத்திலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து சில வரிகளை எழுதி, அக்கடிதத்தை தச்சனிடம் கொடுத்து "இதை எடுத்துக்கொண்டு ஆபீசுக்குப் போ, அங்கே போய் மேஸ்திரியிடம், நீ செய்த வேலைக்காக குறைந்த சம்பளத்தை பெற்றுக்கொண்டு உடனே என் பட்டறையை விட்டு போய்விடு, இப்படிப்பட்ட யதார்த்தமில்லாத வேலைக்காரனை ஒரு நிமிஷமும் என்னிடம் வேலைசெய்ய வைக்கமாட்டேன்" என்றார்.

மக் கவர்ன் என்றவர் தன் யதார்த்தத்தில் உண்மையுள்ளவராய் நடந்துக் கொண்டே வந்தபடியால் அதிக கீர்த்தியையும் கண்யத்தையும் அடைந்துக் கொண்டே வந்தார். அதுவே அவருக்கு ஒரு பெரிய ஆஸ்தியைபோலிருந்தது. பேர் பிரஸ்தாபத்தை யடையவேண்டுமென்கிற நோக்கத்திற்காகவே அவர் யதார்த்தமுள்ளவராயிருந்தார் என்று நான் நம்பமாட்டேன். ஆனால் அவர் நியாயமும் உண்மையும் எதுவோ அதையே செய்வது அவருடைய நோக்கமாயிருந்தது. என்று நிசமாய்ச் சொல்லக்கூடும். நோக்கம் எப்படியிருந்தாலும் சரி, ஒருவேளை நல்ல பெயரை அடைய வேண்டும் என்கிற ஒரு சிறிய ஆசையினாலேயே அவர் யதார்த்த ஜீவியம் செய்தார் என்றபோதிலும், யதார்த்தத்தில் பெரும் நஷ்டம் வரும் என்று நினைக்கிற அநேகருடைய மத்தியில் அவருடைய யதார்த்த ஜீவியம் அவரை அதிகமாக உயர்த்தி கீர்த்தியடையும்படி செய்தது என்று காண்கிறோம். யதார்த்தமும் உண்மையுமாய் ஜீவிக்கவேண்டுமென்று அவர் அதிக ஆழ்ந்த கருத்தும் மேலான எண்ணமுமுடையவராயிருந்தார் என்பதற்கு அச்சமில்லை. சிறு பையனாக இருக்கும்போது அதிக ஏழையாக இருந்து கடைசியாக அமெரிக்க ஐக்கிய மாகாணத்தின் பிரசிடென்டாக வந்த ஒருவர் சொன்னதாவது: "எனக்கு ஒரு ஆள் உண்டு, அந்த ஆளின் தயவைதான் நான் சம்பாதிக்கவேண்டும், மற்றவர்களுக்குப் பிரியம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்



சரி, அதைப்பற்றி எனக்குக் காரியமில்லை. அந்த ஆளுக்குமட்டும் திருப்தியிருந்தால் போதும்; அந்த ஆள்தான் எனக்குள் இருக்கிற மனசாக்ஷியும், புத்தியும்" என்றார்.

## SOLD FOR FOUR PICE.

## நாலு பைசாவுக்காக விற்றது.

கிறிஸ்தவன் திருடலாமா? கிறிஸ்தவன் என்கிற பெயரையுடைய ஒருவன் ஒரு வேளைத் திருடுவான். அவன் அப்படிச் செய்வானானால் அவன் உண்மையுள்ள கிறிஸ்தவனல்ல. அவன் தன் ஆண்டவராகிய கிறிஸ்துவை பின்பற்றினவனல்ல, இயேசுகிறிஸ்து "திருடவேண்டாம்" என்று போதிக்கிறார். இதைப்பற்றி நான் ஒரு கதை சொல்லுகிறேன். ஒருநாள் ஒரு துரை கொஞ்சம் தூரமுள்ள ஒரு கிராமத்திற்கு அலுவலாய்ப் போயிருந்தார். அந்த துரை ஒரு உதவி உத்தியோகஸ்தனை அவரோடுக்கூட அழைத்துப் போயிருந்தார். அந்த உத்தியோகஸ்தன் ஒரு கிறிஸ்தவன். அவர்களோடுக்கூட ஒரு கிறிஸ்தவ வேலைக்காரனும் இருந்தான். அவன் ஒரு காலத்தில் ஹிந்து மார்க்கத்தானாயிருந்தவன். அக்கிராமத்திற்குப்போன துரை அந்த இடத்தில் தன் அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அக்கிராமத்திலுள்ள ஒரு நாட்டாமைக்காரன் அத்துரைக்கு அதிக பக்ஷத்தைக் காண்பித்து, தினந்தோறும் அவன் தன் வேலைக்காரன் மூலமாய் அவருக்கு சாப்பாடு அனுப்பிக்கொண்டு வந்தான். அந்த நாட்டாமைக்காரன் எந்த விதமான பிரதியுபகாரத்தையும் அத்துரையிடமிருந்து எதிர்ப்பார்க்கவில்லை. கடைசியாக அந்த துரை அந்த கிராமத்தைவிட்டு போகிற சமயத்தில், அந்த நாட்டாமைக்காரனுடைய வேலைக்காரனுக்கு ஒரு சிறிய வெகுமதி கொடுக்க விரும்பினபடியால், அவர் தன்னுடைய சட்டை பையில் கையைப்போட்டு நாலு அணா ஒன்றும், நாலு பைசாக்கொண்ட ஒரு அணா ஒன்றையும் எடுத்து, இரண்டையும், தன்னோடுக்கூட வந்திருக்கிற உதவி உத்தியோகஸ்தனிடம் கொடுத்து, அந்த வேலைக்காரனிடம் கொடுக்கும்படி சொன்னார். அந்த உத்தியோகஸ்தன் அந்த துரையினிடமிருந்து, நாலு அணா ஒன்று, நாலு பைசா ஒன்றையும் வாங்கிக்கொண்டு, ஓ அந்த வேலைக்காரனுக்கு நாலு அணாக்கொடுத்தால் போதும், நாலு பைசா அதிகமாகக் கொடுக்கக்கூடாது என்று யோசித்துக்கொண்டே அந்த நாலு பைசாவை அவன் தன் இடுப்பில் சொருகிக்கொண்டு, அந்த வேலைக்காரனிடம்போய், நாலு அணாவை மாத்திரம் கொடுத்துவிட்டு, இந்த நாலு பைசாவை நான் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அதை தன் சொந்த பிரயோசனத்திற்கு வைத்துக்கொண்டான். இவ்விதமாய் அந்த உத்தியோகஸ்தன் அந்த நாலு பைசாவை தன் இடுப்பில் வைத்துக்கொண்டதை, அவர்களோடுக்கூடயிருந்த கிறிஸ்தவ வேலைக்காரன் தூரத்திலிருந்து கவனித்துக்கொண்டிருந்து, அவன் உடனே அந்த நாட்டாமைக்காரனுடைய வேலைக்காரனிடம் போய், "அந்த உத்தியோகஸ்தன் உன்னிடம் எவ்வளவு கொடுத்தான்" என்று கேட்டான். அப்போது அந்த வேலைக்காரன் தன் கையைத் திறந்து, இதோ பார், அவன் என்னிடம் நாலு அணாதான் கொடுத்தான் என்று காட்டினான். அதைப் பார்த்த அக்கிறிஸ்தவ ஊழியக்காரன் தன் உடன்கிறிஸ்தவ சகோதரனாகிய

அந்த உத்தியோகஸ்தனின்மேல் வைத்திருந்த முழுநம்பிக்கையும் கெட்டுப்போனது. இந்த கிறிஸ்தவ உத்தியோகஸ்தன் இப்படிப்பட்டக் காரியத்தை செய்தானே, இவன் இப்படியே மற்றவர்களுக்கும் செய்வான், இவனை நான் இனி ஒருபோதிலும் நம்பமாட்டேன்" என்று அந்த கிறிஸ்தவ வேலைக்காரன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அக்கிறிஸ்தவ உத்தியோகஸ்தன் செய்த அந்த இழிவான காரியத்தை, அந்த கிறிஸ்தவ வேலைக்காரனைத்தப்ப மற்ற யாரும் பார்க்கவுமில்லை, அதைப்பற்றி அறியவும் மாட்டார்கள். ஆனபோதிலும் அவ்விழிவான காரியங்களினால் உண்டான பலன்கள் என்ன என்று பார்க்கலாம்.

முதலாவது.—அந்த உத்தியோகஸ்தன் அற்பமான அந்த நாலு பைசாவை எடுத்துக்கொண்டதினாலே என்ன லாபத்தை அடைந்திருப்பான்? ஒருவேளை, அந்த நாலு பைசாவினால் சில சொற்பமான பொருள்களை வாங்கக்கூடும், வாய்க்கு கொஞ்சநேரம் ருசியைக் கொடுக்கக்கூடிய கொஞ்சம் மிட்டாய் வாங்கக்கூடும், அல்லது இன்னும் சில நயமான பொருள்களை மிகுதியாய் வாங்கக்கூடும். அப்படிக்கில்லாவிட்டாலும், தன் பணத்தோடு அந்த பைசாவையும் போட்டு சேர்த்து வைக்கக்கூடும். எப்படியிருந்தாலும் அந்தத் திருட்டுப்பொருள் ஒரு லாபமாகவே இருக்கிறது. ஆம், அதை அவன் தனக்காக வைத்துக்கொள்ளும்போது, யதார்த்தமற்ற இழிவானக் காரியத்தை செய்கிறான். அதனாலே அவன் எதை விற்கிறான் என்றால், முதலாவது அவனுடைய உடன்கிறிஸ்தவ வேலைக்காரன் இவன்பேரில் வைத்திருந்த நம்பிக்கையையும், மரியாதையையும் விற்றுப்போட்டான்.

இரண்டாவது கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையைப்பற்றி அவன் கொடுக்கிற சாட்சியை விற்றுப்போட்டான். அவன் செய்த செய்கையே அவன் கொடுக்கும் சாட்சிக்கு விரோதமாய் இருக்கிறது: அவன் தனக்கிருந்த சுய மரியாதையை விற்றுப்போட்டான். இனி திருடனை ஒருபோதிலும் யாரும் மதிக்கமாட்டார்கள். அவன் ஒரு திருடன் என்று அவனுக்கே நன்றாய்த்தெரியும். அவன் தனக்கிருந்த சுயாதீனத்தை விற்றுப்போட்டான். இவனுடைய குற்றம் வெளிக்கு வந்துவிடுமோ என்று பயப்படும் சிறைக்கு ஆளானான். அவன் தன் நேர்மையையும், இருதய சுத்தத்தையும் விற்றுப்போட்டு தன்னை பாவத்திற்கு கறைப்படுத்திக்கொண்டான். முற்கூறிய விஷயங்களையும் இன்னும் அனந்தமான சிறந்த காரியங்களையும் விற்றுப்போட்டான், எதற்கு விற்றான்? அற்பமான அந்த நாலு பைசாவுக்கு இவ்வளவு சிறந்த காரியங்களை விற்றுப்போட்டான். இவ்வளவு அற்பமான நாலு பைசாவுக்கு விற்றுவிட்ட காரியங்களை திரும்பவும் பெறும்படி பொன்னைக்கொடுத்தாலும் முடியாது.

ஐயோ! கிறிஸ்தவன் என்கிற நாமத்தை தரித்துக்கொண்டிருக்கிற ஒருவன், தன் ஆண்டவரை இவ்வளவு சொற்ப தொகைக்கு விற்கலாமா?

---

## A REMARKABLE TESTIMONY.

## ஒரு விசேஷித்த சாக்ஷி.

ஹிந்துமார்க்க கோட்பாட்டின் ஆசாரங்களில் அதிக பக்தியுள்ள ஒரு ஹிந்து கனவான் ஒருவர், ஒருநாள் தன்னுடைய சிநேகிதரான ஆங்கில மிஷனெரி ஒருவரிடம்போய், உருடு பாஷையில் எழுதப்பட்ட ஒரு பழைய கையெழுத்து பிரதியை அவரிடம் காண்பித்து, இந்த புஸ்தகம் வெகு காலமாக எங்களுடைய புஸ்தகப்பெட்டியில் இருக்கிறது. என்னுடைய பாட்டனுடைய தகப்பனால் எழுதப்பட்டது. இந்த புஸ்தகம் கிறிஸ்துமார்க்கத்திற்கு சம்பந்தபட்டதைப்போல் காணப்படுகிறது. ஆகையால் தயவு செய்து இப்புஸ்தகத்தின் முழுவிஷயத்தையும் கண்டு பிடிக்கவேண்டும் என்றதாகச் சொல்லி அப்புஸ்தகத்தை அவரிடம் கொடுத்தார். அப்புஸ்தகத்தை எழுதின நூலாசிரியர் அப்புஸ்தகத்திற்கு "இரட்சிப்பின் ஊற்றும், பரிசுத்த கடவுளின் சந்நிதான சாக்ஷியும்" என்றதாக பெயரும் கொடுத்திருந்தார்.



அக்கையெழுத்து பிரதியை பரிசோதித்து பார்த்தபோது, 1832-ம் வருஷத்தில், டில்லியில் மொகல் அரசர்களுடைய கச்சேரியில் ஜாஹீர்டார் அலுவல் பார்த்துவந்த ஒருவரால் எழுதப்பட்டதாக தெரியவருகிறது. அந்த மிஷனெரி அப்புஸ்தகத்தை வெகு கூர்மையாக வாசித்தபோது, அப்புஸ்தகத்திற்கும் நான்கு சுவிசேஷத்திற்கும் அதிக பொருத்தம் இருக்கிறதாகக் கண்டுபிடித்தார். அதாவது நான்கு சுவிசேஷத்திலும் அடங்கியிருக்கிற இயேசுகிறிஸ்து நாதருடைய ஜீவியமும், அவருடைய சுத்தபோதனையும் அதிலே அடங்கியிருக்கிறது. ஆனால் அப்புஸ்தகம் செய்யுளாக நேர்த்தியான உருடு பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. அதோடுகூட அந்நூலாசிரியனுடைய தற்சரித்திரமும் அடங்கியிருந்தது. அப்புஸ்தகம் முழுமையும் பக்திமார்க்கமே அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிலுவையில் அறையுண்டு மரித்த இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் ஜீவனுள்ள விசுவாசத்தைப்பற்றியே அதிக தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவு அந்நூலாசிரியருக்கு ஏறக்குறைய தொண்ணூறு வருஷத்திற்கு முந்தி எப்படி வந்ததென்கிற காரணத்தைப்பற்றி ஒன்றும் திட்டமாய் தெரியவில்லை. ஆனால் அவருடைய புஸ்தகப்பெட்டிகளை பரிசோதிக்கும்போது அவருக்கு இருந்த அநேக புஸ்தகங்களோடுகூட கிறிஸ்தவர்கள் அநுசரிக்கிற சத்தியவேத பகுதிகள் இரண்டும் இருந்தன. அதனாலேயே இப்புஸ்தகத்தை எழுதும் அறிவுடையவரானார் என்று உத்தேசிக்கலாம். டில்லியில் அதிக பிரியமான ஒரு மிஷனெரி அந்த நூலாசிரியனுக்கு அந்த இரண்டு சத்திய வேதாகம பகுதிகளை இனாமாகக்கொடுத்ததாக அப்புஸ்தகங்களின்பேரில் எழுதியிருந்தது. இயேசுகிறிஸ்து நாதருடைய சாக்ஷி அந்நூலாசிரியனுக்கு கிடைத்ததாகவும், அவர் தம்முடைய பரிசுத்த சுவிசேஷத்தை உருடு பாஷையில் எழுதும்படி கட்டளை கொடுத்ததாகவும் அந்நூலாசிரியன் தாமே அக்கையெழுத்து பிரதியில் எழுதிவைத்திருக்கிறார்.

அவர் முதலாவது பர்ஷியன் பாஷையில் எழுதலாமென்கிற எண்ணமிருந்தபோதிலும், கிறிஸ்துநாதர் உருடுபாஷையில் எழுதும்படி கட்டளைக்கொடுத்தபடியினால் அவர் அப்படி செய்தார்.

அந்நூலாசிரியன் இயேசுகிறிஸ்துவுக்கு செய்த சிறந்த ஊழியம், இருதய ஊழியம், அவர் இயேசுகிறிஸ்துவைப் பற்றி சொல்லுகிற சாக்ஷி மிகவும் தெளிவுள்ளதும், விசுவாசம் பொருந்தினதுமாயிருக்கிறது.

---

## NON ALCOHOLIC STIMULANTS.

## மதுச்சாரமற்ற உத்தீபன மருந்து.

வியாதிகளுக்கு மதுச்சாரமுள்ள உத்தீபன மருந்துகளை உபயோகிப்பது தகாது என்று ஆக்ஷேபிக்கிறவர்கள், முற்கூறிய மருந்துகளுக்கு பதிலாக பலன் செய்யத்தக்க வேறு மருந்து எவை என்று அறிய விரும்புவார்கள்.

பிராந்தி என்கிற சாராயத்தை கொடுத்து சுகப்படுத்தக்கூடிய சில வியாதிகளுக்கு, பிராந்தியைக் கொடுக்காமல் அதற்கு பதிலாக உபயோகப்படுத்தக்கூடிய சில மருந்துகளைப்பற்றி லண்டன் பட்டணத்திலுள்ள ஒரு வைதியர் பின்வருமாறு சொல்லுகிறார்.

டிஞ்சர் ஆப் ஜின்ஜர், (Tincture of Ginger) அரமாட்டிக் ஸ்பிறிட் ஆப் அம்மோனியா, (Aromatic Spirit of Ammonia) குளாரிக் ஈத்தர் (Chloric Ether) என்கிற மருந்துகளை ஒவ்வொன்றிலும் சரிபாகமாக கலந்து, இளைப்பு, மூர்ச்சை உண்டாகும்போதும், வயிற்றுவலி, வயிருபோக்கல் சடுதியாக உண்டாகிற வலி முதலானவைகளுக்கு மேற்கூறிய மருந்தில் அரை தேக்கரண்டி அளவு எடுத்து அதற்கு எட்டு பாகம் அதிகமாக சுடுதண்ணீர் அல்லது குளிர்ந்த தண்ணீர் கலந்து, ஒவ்வொரு கால்மணி நேரம், அல்லது அரைமணி நேரத்திற்கு ஒரு முறை வலி நீங்கும் வரைக்கும் உள்ளுக்கு எடுத்துக்கொள்ளலாம். இதைப் பார்க்கிலும் கொஞ்சம் கடூரமான வியாதிகளுக்கு சுடுதண்ணீரும், சூடான பாலும் எப்போதும் சுளுவான பரிகாரமாயிருக்கிறது. சுடுதண்ணீர் குடியின் ஆவலை தணிக்கிறது. அதிக பலமான வலி உண்டாகிற காலங்களில் பால் சர்க்கரை இல்லாத காப்பி சாப்பிட மறக்கக்கூடாது. காப்பி இப்படிப்பட்ட சமையங்களில் அதிக சுகத்தைக் கொடுக்கும். தேகத்தில் வலி, அதிர்ச்சி, தளர்வு உண்டாகிற சமையங்களில், சுக்கு கியாழம் அதிக பிரயோசனத்தை உண்டுபண்ணுகிறது. சுக்குத் தண்ணீரில் கொஞ்சம் சர்க்கரை பால் கலந்து அருந்துவதினால், தேகத்திற்கு அதிக சுகம் கொடுக்கும். இவைகள் எல்லாம் மதுச்சாரமுள்ள மருந்துகளுக்கு பதிலாக உபயோகிக்கலாம்.

---

162068

## CHILDREN'S PAGE.

## பிள்ளைகளுடைய பக்கம்.

---

### THE LITTLE LAME GIRL.

### கோண்டி(ய)ன்ள ஒரு சிறுபெண்.

வியாதி, குடும் முதலிய காரணங்களால் மற்ற (பிள்ளைகளு) பிள்ளைகளைப்போல வெளியி[illegible], விளையாடவாவது கூடாமல் சில பிள்ளைகளிருப்பார்கள். அப்பிள்ளைகள் ஒருவேளை இப்பக்கத்தை வாசிக்கக்கூடும், அப்படிப்பட்ட பிள்ளைகளில் யாராகிலும் ஒன்று இருக்குமானால், நொண்டியாயிருந்த இன்னொருப்பெண் அதிக திருப்தியோடே யாதொரு முறு முறுப்பில்லாமலிருந்து அதிக பிரயோசனமாயிருந்தாள் என்கிறதைப்பற்றி கேழ்க்கும்படி விரும்புகிறேன்.

இந்த முடமான சிறுபெண், தனக்கு ஒன்பது வயதாகிறவரையிலும் உழ்க்கார முடியாது. ஆகையால் அவளை ஒரு நாற்காலியில் வைத்து இடுப்பை நேராய் வைத்து கட்டவேண்டும். அவளுடைய ஜீவகாலமெல்லாம் குதிரை உடுப்பைப் போல் (Harness) எருவினால் செய்யப்பட்ட ஒருவித அணிகலத்தை போட்டிருந்தாள். அதைப்போட்டால்தான் ஏதாகிலும் வேலை செய்யக்கூடும். அதோடுக்கூட கக்க தண்டமில்லாமல் நடக்க முடியாது. ஆனபோதிலும் வலியிலிருந்து அவள் நீங்கினவளல்ல, இந்த விதமான பாடுகளோடுக்கூட தரித்திரம் அதிகமாயிருந்தது. தரித்திரமே அவளை அதிகமாக வாட்டினது.

அப்பெண் தன் ஒன்பது வயதில் பள்ளிக்கூடம்போய் படிக்க ஆரம்பித்து பதினாறு வயதில் பள்ளிக்கூடத்தை விடும்படி நேரிட்டது. ஆகக்கூடி அவள்படித்த காலமெல்லாம் ஐந்து வருஷந்தான். இவள் தன் படிப்பை முடித்தபிறகு, மாதம் ஒன்றரை ரூபாய்க் கொடுக்கக்கூடிய பிள்ளைகளுக்கெல்லாம் பாடம் கற்று கொடுப்பதாக அவள் ஒரு பலகையின் மேல் ஒரு விளம்பரத்தை எழுதி தன் வீட்டுக்கு முன்னால் தொங்க வைத்ததால், அதனால் அவள் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தில் படிக்கும்படி சுமார் இருபது பிள்ளைகள் சேர்ந்தார்கள். அப்பக்கங்களில் அநேக பள்ளிக்கூடங்களிருந்தும், இவளுடைய பள்ளிக்கூடத்திற்கு அவ்வளவு பிள்ளைகள் வந்தது மிகவும் ஆச்சரியம். இவள் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளுக்கு பாடம்